# காவேரி

விக்ருதி · கார்த்திகை NOVEM. 1950





விலை
குறைந்து விட்டது.
குறைந்த
விலையில்
இரு பிரபல
மாடல்கள்
வாக்ஸால்
வெலாக்ஸ் ரூ 10,600.
வைவர்ன் ரூ 9,650.
பம்பாய் விலை
சுந்தரம் மோட்டார்ஸ்
லிமிடெட்,
மௌண்ட் ரோட், சென்னை.
டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்டு
ஸன்ஸ் லிமிடெட்
மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி,
புதுக்கோட்டை
TVSZ-15 TM

# தீபாவளி வாழ்த்துக்கள்



குழந்தைகள் ஓடி விளையாடும் பாத ஒலி கேட்கிறது – ஒருவரை ஒருவர் மங்கள ஸ்நானம் விசாரித்து மகிழ்ச்சித் தும்பப் பேசுகிறார்கள். எங்கும் ஒரே சிரிப்பும், குதூகலமுமான காட்சி — லட்சக் கணக்கான மங்கள தீபங்கள் குளிர்ச்சி மிகுந்த வெளிச்சத்தை வீசுகின்றன. மற்றுமோர் தீபாவளி வந்து செல்கின்றது.

இதுபோன்ற விசேஷ நாட்களில் தேனீர் பானம் ஒரு முக்கிய ஸ்தானம் வகிக்கிறது. இந்தச் சுப தினத்தில் நம் தேசமெங்கும் ஒவ்வொரு குடும்பத்தினரும், கவலையற்ற ஆனந்தத்துடன் **ப்ரூக் பாண்ட்** தேனீரைப் பருகுகிறார்கள்.




## ப்ரூக் பாண்ட் டீ

சகல சமயங்களுக்கும் ஏற்றது



பாரததேசம் முழுவதிலுமுள்ள ஆதரவாளர்களுக்கு பிலிப்ஸ் தனது தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. பிலிப்ஸின் உன்னதமான வேலைத்திறன் அனேக புதிய இல்லங்களில் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் கொடுக்கும் என்ற நம்பிக்கையில், இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு பிலிப்ஸ் சமீபத்திய ரேடியோ பிளேயர்களை அளிக்க முன் வந்திருக்கிறது.
பிலிப்ஸ்
எலக்டிரிகல் கோ. (இந்தியா) லிட்.
2, ஹேய்ஷாம் ரோடு
கல்கத்தா-20.
தீபாவளி வாழ்த்துக்கள்
தி "பில்லெட்டா"
BCA 297 U:
AC/DC;
விலை ரு. 335/-
BCA 197 U:
AC/DC
விலை ரு. 240/-
BCA 198 B:
டிரை பேட்டரி ஸெட்
விலை ரு. 255/-
(பேட்டரி இல்லாமல்)
BX 395 A & U;
AC & AC/DC;
விலை ரு. 535/-
BX
485 U & AV:
AC/DC
விலை ரு. 600/-
AC & 6 V. பேட்டரி
விலை ரு. 695/-
BX 495 A:
AC மட்டும்
விலை ரு. 695/-
BX 685 U:
AC/DC
விலை ரு. 850/-
BX 695 A:
AC மட்டும்
விலை ரு. 895/-
BX 675 V:
6 V. பேட்டரி ஸெட்
விலை ரு. 1,100/-
(பேட்டரி இல்லாமல்)
BX 798 X
20-வது ஆண்டு விழா மாடல்
AC & DC வைபரேட்டருடன் கூட
விலை ரு. 1,500/-
(வைபரேட்டர் இல்லாமல்)
PHILIPS



தீபாவளி வாழ்த்துக்கள்
உங்களுக்கும் உங்களுடைய நண்பர்களுக்கும், பல்லாண்டுகளுக்கு க்ஷேமம் செழிப்பு, ஆரோக்யம், அழகு கிடைக்க இப்புனித நாளில் விரும்புகின்றோம்.
ஆப்கன் ஸ்னோ
ESP
Patanwala
FOR
PERFUMES & COSMETICS
AFGHAN SNOW
ஸோல் ஏஜண்ட்ஸ் :—
பட்டண் வாலா லிமிடெட்,
182-84, அப்துல் ரஹ்மான் தெரு, பம்பாய்-3





லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

**LIVER CURE** Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West).
**BOMBAY 4.**

உங்களுக்கும் உங்கள் நண்பர்களுக்கும் எங்கள் தீபாவளி வாழ்த்துக்கள் உரியன வாகுக

# காவேரி கலர் பிரஸ்

**கும்பகோணம்**

"தீபாவளி (9-11-50) முதல் தென்னாடெங்கும் மகத்தான ஆரம்பம்"




பக்ஷிராஜாவின்

# ஏழை படும் பாடு



லலிதா.. பத்மினி.. சாமா.. பாலையா. துரைராஜ்.. காளி N. ரத்னம்

டைரக்ஷன்
ராம்நாத்

NARAYANAN Co
Release

"தீபாவளி (9-11-50) முதல் தமிழ்நாடெங்கும்"



# காவேரி

## பொருளடக்கம்

| விக்ருதி மலர் 10 | | கார்த்திகை இதழ் 4 |
| --- | --- | --- |

மலர் ஒளி ... 9

அபூர்வ சகோதரிகள் ... 10
ஏ. எஸ். ராகவன்

மணல் மேடு ... 19
மாரார்

கனவுத் தீபாவளி ... 25
கோமதி சுப்ரமணியம்

தெய்வம் தந்தது ... 34
மாயாவி

நியதி ... 48
ர. வேங்கடரத்தினம்

எதற்குப் பிறந்தேன்? ... 52
கு. நாராயணஸ்வாமி

இணையில்லாத் தியாகம் ... 58
ராமகுமார்

வெளியூர்க் கடிதம் – 7 ... 69
சாரி

வெடிக்காத பட்டாசு ... 81
ஆர். எஸ்.

லண்டன் கடிதம் ... 86
லீலா கோபாலன்

ஜெய் ஸோம்நாத் (தொடர் கதை) ... 90
கே. எம். முன்ஷி

பெண்மை ... 107
தி. சேஷாத்திரி

குறிப்பு:
'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திராசிரியர் பொறுப்பாளியல்ல.

# மேன்மையின்

## பெருமை அநேக வருஷ
## உழைப்பிற்குப் பின்னும் விளங்கும்



ஸைக்கிள்கள்

ஸைக்கிள் சாமான்கள்

பெராம்புலேட்டர்கள்

குழந்தை வண்டிகள்

இவைகளில்

உயரிய ரகத்திற்கு



நம்பி வாங்க

# இங்கிலீஷ் சைக்கிள் & மோட்டார்

இம்போர்டிங் கம்பெனி லிமிடெட்

*2/9 பிராட்வே* :: :: *மதராஸ்-1.*

*தந்தி :—''ஸைக்கிள்ஸ்''*

*போன்: 3168*

# காவேரி

| விக்ருதி மலர் 10 | “சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—” பாரதியார் | ~~கார்த்திகை~~ இதழ் 4 |
|---|---|---|


## மலர் ஒளி

எங்கும் தீப ஒளி. மக்கள் மங்களஸ்நானம் செய்து புத்தாடை யுடுத்தி அவ்வொளியில் பிரகாச முகங்களுடன் காட்சி அளிக்கும் தருணம். வீடுதோறும் ஆடவர், பெண்டிர், குழந்தைகள், வயோதிகர்கள்; புதிய பழைய தம்பதிகள் அனைவருமே பூரிப்புடன் ஒளிரும் காலம். வெடிகளும் மத்தாப்புகளும் அம்மலர்ந்த முகங்களை மெருகிட்டுக்காட்டும் சந்தர்ப்பம். இத்தகைய அரிய பெரிய நாளன்று **காவேரி** உங்கள் கண்களையும் உள்ளங்களையும் கவர வருகிறாள், மங்கள ஸ்நானம் செய்து புத்தாடை புனைந்து வரும் அழகிய மாதைப்போல்.

சாதாரணமாக, கார்த்திகை முதல்தேதி அன்றுதான் இவ்விதழ் வெளிவரவேண்டியது. ஆனால் தீபாவளியன்று உங்களை மகிழ்விக்க வேண்டுமென்றே முன்னதாக வருகிறது. தீபாவளிச் செலவில் இம்மலரின் செலவையும் கூட்டவேண்டாம் என்ற நோக்கத்தோடு விலை கூடுதல் எதுவும் இல்லாமல் மலர் உங்களுக்கு அளிக்கப்படுகிறது. ஆனால் மலரின் மணத்துக்குக் குறைவில்லை.

நல்ல நறுமணமுள்ள மலர் என்பதற்கு அத்தாக்ஷி தேவையில்லை. அதன் நூற்றிருபது இதழ்களையும் நுகர்ந்து பார்த்தாலே தெரியும்.

“தெய்வம் தந்தது” என்ற சிறிய தொடரைப் பிரபல எழுத்தாளரான “மாயாவி” இம்மலரில் ஆரம்பித்துள்ளார். மனோதத்துவ சாஸ்திர நிபுணர் டேயைப்பற்றிச் சில இதழ்களுக்கு முன்பே எழுதியுள்ளார் அவ்வாசிரியர். மற்றுமோர் சிக்கலான கேஸைப்பற்றிய வரலாறு இது. வாசகர்கள் இதைத் தொடர்ந்து, வாசிக்கத் தவறமாட்டார்கள் என்று நம்புகிறோம். “ராமகுமார்” எழுதியுள்ள “இணையில்லாத் தியாகம்” என்ற சரித்திரக் கதையை அடுத்தபடியாகக் குறிப்பிடவேண்டும். இந்திய மக்களின் சீரிய பண்பை உலகிற்கு எடுத்துக்காட்டும் சம்பவம். 1857-ல் நிகழ்ந்தது. சிப்பாய் கலகத்தில் பல ஆங்கிலேயர்களை ஓர் வண்டிக்காரனும் மற்றும் சில குண்டாக்களும் தங்கள் உயிரைத் தியாகம் செய்து எப்படிக் காப்பாற்றினார்கள் என்பதை உருக்கமாகச் சித்திரிக்கிறது கதை. ஏ. எஸ். ராகவன் எழுதிய “அபூர்வ சகோதரிகள்” என்ற சிருஷ்டி நூதனமானது. “மணல் மேடு” என்ற தலைப்பில் “மாரார்” இதுகாறும் இரண்டு கட்டுரைகள் எழுதியுள்ளார். இது மூன்றாவது கட்டுரை. ரஸமான விஷயங்களை எளிய நடையில் விவாதிக்கிறார் கட்டுரையில்.

லண்டனிலிருக்கும் லீலா கோபாலன் அவர்கள் இனி தொடர்ச்சியாக மாதா மாதம் ஓர் கடிதம் எழுதுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதழில் லண்டன் பி. பி. ஸி. யில் “தமிழோசை” நிகழ்ச்சியைப் பற்றி விளக்கியுள்ளார்.

“ஜெய் ஸோம்நாத்” தொடர் கதை ரஸமான கட்டத்தில் பாய்கிறது.

தி. சேஷாத்திரி எழுதிய “பெண்மை”, ஆர்.எஸ். எழுதிய “வெடிக்காத பட்டாசு”, சாரி எழுதிய “வெளியூர்க் கடிதம்”, கு. நாராயணஸ்வாமி சித்திரித்துள்ள “எதற்குப் பிறந்தேன்”, ர. வேங்கடரத்தினத்தின் கற்பனைச் சித்திரம் “நியதி”, கோமதி சுப்பிரமணியத்தின் “கனவுத் தீபாவளி” எல்லாம் நல்ல சிருஷ்டிகள். வாசகர்கள் படித்து மகிழ்வார்கள் என்று நம்புகிறோம்.

தீபாவளி யன்று பிரகாசிக்கும் ஒளி என்றும் தங்கி, வாசகர்கள் உள்ளங்களைப் பூரிக்கச் செய்ய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


அபூர்வ
சகோதரிகள்
ஏ.எஸ். ராகவன்



என் கண்களை நம்ப முடியவில்லை. ஆனால் எதிரிலிருந்த செய்தித்தாள் விளம்பரமோ மூவர்ண முகப்புடன் சுலோவின் புன்னகை தவழும் வதனத்தைத் தாங்கியபடி 'இது நிஜம்' என்றது.

கண்கள் மேற்கொண்டு வேலை செய்யவில்லை. ஆனால் மனம் ஆரம்பித்துவிட்டது. பழைய எண்ணங்கள், பழைய நாட்கள் இவை புரண்டு வந்தன. அவற்றை எண்ணிப் பார்ப்பதில் இப்போது ஒரு திருப்தி ஏற்படுகிறது. மலையுச்சியை அடைந்தவன், தான் ஏறிவந்த வழியைப் வியப்பது போல! எவ்வளவோ கஷ்டங்களுக்குப் பிறகுதான் வாழ்வு செப்பனிடப்படுகிறது. காட்டைவெட்டிச் சமதரையாக்குவது போன்ற கடினமான வேலைதான் அது. ஆனால் காட்டை வெட்ட ஆரம்பிக்கும்போது, எவ்வளவு கஷ்டங்கள்!

இப்போது நிம்மதியாக, கிராமத்தில் உட்கார்ந்திருக்கிறேன். அரை வயிற்றுக்குமேல் சாப்பாடு போடும் காணி நிலம் இருக்கிறது. மேல் செலவுக்கு ஒரு சிறு கடை 'சுசீலா ஸ்டோர்ஸ்' என்ற பெயருடன் ஊரின் பிரதான வீதியில் இருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு.........

* * *

ஒரு ஞாயிற்றுக்கிழமை. பகல் வெந்து கொண்டிருந்தது. என் மனைவி லீலா என் தூக்கத்தைக் கலைக்க முயன்றாள். அது பலிக்காமல் போகவே கோபமாகத் தன் சிநேகிதியின் வீட்டுக்குப் போய்விட்டாள். முதல் நாள் சீட்டாட்டத்தில் இழந்த தொகையை மறுபடியும் எப்படியாவது அடைந்துவிடவேண்டும் என்பது என் திட்டம். மயிலாப்பூர் நண்பன் 'புகையிலை ரங்கு'வின் வீட்டில்தான் கச்சேரி. இது எங்களுடைய வழக்கமான 'புரோக்ராம்.'

சீட்டாட்டமும் நானும் நகமும், சதையும் போல ஆகிவிட்டதைக் கண்டு பொறுமைப்பட்டாள் லீலா. அவளுக்கு எவ்வளவோ ஆசைகள். சினிமா, டிராமா, பாட்டு! இவையில்லாவிட்டால் இலவசக் காற்று வாங்க பீச்சாவது! இவைதான். நான் அநேகமாக லீவ் நாட்களில் அவள் ஆசையைப் பூர்த்திசெய்ய வீட்டில் தங்குவதில்லை.

நாலு மணிக்கு அவள் திரும்பி வந்தாள்.

"காபி போட்டாயா?" என்று கேட்டேன்.

"இல்லை," என்று வெடுக்கென்று பதில் வந்தது.

"ஏன்?"

"பால்காரன் வரலை".

"ஏன்? குழாயில் ஜலம் வரவில்லையா?" என்று கேட்டுவிட்டு நான் புறப்பட்டேன்.

லீலா, வழக்கம்போல, "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

எனக்குக் கோபம் வந்துவிட்டது. "சட்! என்ன கேள்வி இது அபசகுனம் மாதிரி!" என்றேன்.

"அடேயப்பா, பெண் பார்க்கவா போகிறீர்கள்? அபசகுனம் மாதிரி! என்கிறீர்களே!" என்று கூறிச் சிரித்தாள் அவள்.

ஆரம்பத்திலேயே இப்படி ஒரு அபசகுனம் நேரிட்டால் அன்றைக்கு ஆட்டம் உருப்பட்டால் போலத்தான் என்பது என் கட்சி. ஆகவே கோபமாக, "அப்படித்தான் வைத்துக்கொள்ளேன்" என்று கூறிவிட்டு நடந்தேன்.

பலவித யோசனைகளுடன் டிராமில் ஏறிக்கொண்டேன். கூட்டம் அதிகம்தான். வேகமும் அதற்குமேல். ஆனால் அதற்காக யாரும் அதை விட்டுவிடுவதில்லையே! கிடைத்த இடத்தில் அமர்ந்திருந்தேன். ஆனால் புருஷ தர்மம் என்று ஒன்று இருக்கிறதே. அதன்படி அடுத்த 'ஸ்டாண்டில் ஏறிய ஸ்ரீமதிகளுக்கு இடத்தைக் காலிசெய்து கொடுத்தேன்.

காபி இல்லாத குறை இன்னும் மறையவில்லை. கோபம் சூடேறிக்கொண்டே தான் இருந்தது. டிராமில் நின்றுகொண்டு ஊசலாடுவது பெரிய வேதனையாய் இருக்கவே கோபமும் அதிகரிக்க ஆரம்பித்தது. பொதுவாக ஸ்திரீகளுக்கு இடம் விடுவது எனக்குப் பிடிப்பதில்லை.

அகஸ்மாத்தாக நான் அந்தப் பெண் உட்கார்ந்திருந்த பக்கம் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அவளும் என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். அந்தப் பார்வையில் எவ்வளவு குளுமை! கொடி போன்ற உடல். கழுத்தில் சிறு செயின். கையில் ஒற்றை வளையல் மட்டும். ஆனாலும் அழகு எப்படிப் பதிந்துவிட்டது அவளிடம்!

மயிலாப்பூரில் இறங்கி நடக்க ஆரம்பித்தேன். அவளுடைய அழகிய உருவம் மனதில் பதிந்திருந்தது. "மிஸ்டர்!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். அவள்தான் நின்றுகொண்டிருந்தாள்.

"என்னையா?" என்று கேட்டேன் நான்.

"நான் ஊருக்குப் புதிசு. இந்த நம்பர் விலாசத்துக்கு 'என்னை அழைத்துச் செல்ல முடியுமா?" என்று கேட்டாள் அவள்.

நான் அவளைக் கவனித்தேன். கண்களில் புரிபடாத ஏக்கம் கவிந்திருப்பதுபோலக் காணப்பட்டது, என் மனது நெகிழ்ந்துவிட்டது. "ஆகட்டும்" என்றேன்,

தெப்பக்குளக் கரையோரமாக அவளுடன் நடக்கும்போது என் உடம்பு ஆகாயத்தில் மிதப்பதுபோலிருந்தது. அவள் தன் கதையைத் தானாகவே கூறினாள்.

"என் பெயர் சுசீலா. என் தகப்பனார் பர்மாவில் உயர்ந்த பதவியில் இருந்தார், நான், என் அக்கா, அண்ணா எல்லோரும் எவ்வளவோ சௌக்கியமாகவும், பிரியமாகவும் வளர்ந்தோம்......ஆனால் திடீரென்று யுத்த வெறி பரவியது. ஜப்பானியர் படையெடுத்த சமயம் அது...என் தந்தை வெடி விபத்தில் காலமானார்...நாங்கள் நிர்க்கதியாக இந்தியாவை நோக்கிப் புறப்பட்டோம். கால்நடையாக...வழியில்...அதை எப்படிச் சொல்வேன்?...என் அண்ணா...அண்ணா..." என்று விசித்து அழ ஆரம்பித்தாள் சுசீலா.

அவள் கதையைக் கேட்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. "என்ன நேர்ந்தது அண்ணாவுக்கு?" என்று கேட்டேன்.

"என் அண்ணா இறந்துவிட்டான்...அந்த அதிர்ச்சி என்னைப் பைத்தியமாக்கிவிட்டது. அண்ணா, நான் பைத்தியமா? நீங்களே சொல்லுங்கள். நீங்கள்தான் இனிமேல் என் அண்ணா" என்றாள் அவள்.

என் மனம் துடித்தது. "சுசீலா, கவலைப்படாதே. நான் உன் அண்ணனாகவே இருக்கிறேன். எனக்கும் கூடப்பிறந்த தங்கை கிடையாது" என்றேன். அவள் சந்தோஷத்தில் பூரித்துப் போனாள்.

"அண்ணன் போய்விட்ட பிறகு எனக்கு எதிலும் மனது பிடிக்கவில்லை. நானும் என் அக்காவும் பெல்லாரியில் ஒரு உறவினரின் ஆதரவில் இருந்தோம்...'ட்ரெயினிங்' படித்துப் பாஸ் செய்தோம்" என்றாள் அவள்.

வழியெல்லாம் இன்னும் என்னென்னவோ விஷயங்களைப்பற்றி, பர்மாவிலுள்ள இந்தியக் கோயில்களைப்பற்றி, பர்மிய மக்களைப்பற்றி எல்லாம் சொன்னாள். அவளுடைய கள்ளங்கபடமற்ற மனதைக் கண்டு எனக்கு அவள் மீது அன்பு அதிகரித்தது. தங்கைப் பாசம் ஊற்றுப்போலச் சுரந்துவிட்டது உள்ளத்தில்.

லீலாவிடம் எல்லாவற்றையும் சொன்னேன். அவள் எதையும் நம்புவதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

மறு நாள் சுசீலா வீட்டிற்கு வந்தாள். 'மன்னி' என்று அழைத்தபடி லீலாவைக் கட்டிக்கொண்டாள். அந்தக் காட்சியைக் கண்டு என் மெய் சிலிர்த்தது. உள்ளத்தில் அலை புரள அன்புக்கடல் கொந்தளித்தது. லீலாவுக்கு மட்டும் கொஞ்சம் சந்தேகம்.

முன்பின் தெரியாத ஒரு சிறுபெண் திடீரென்று என் தங்கையானுள் என்பதை அவளால் எளிதில் நம்ப முடியவில்லை.

என்னாலேயே அதை நம்ப முடியவில்லையே! நினைத்தாலும் உள்ளம் படபடக்கிறதே. உலகில் சகோதரியின் அன்புக்கு இணையாக வேறு எதுதான் இருக்கிறது?

சுசீலா மன்னியிடம் ரகசியமாக ஏதோ சொன்னதைக் கவனித்தேன். "என்ன லீலா, அவ்வளவு ரகசியமாகச் சொல்ரு உன் காதில் மட்டும்?" என்று கேட்டேன்.

அவள் நாணத்தால் தலை குனிந்துகொண்டாள்.

சுசீலாவே பதில் சொன்னுள், "ஒன்றுமில்லை, அண்ணு, எனக்கு ஒரு மருமான் கிடைக்க வேண்டாமா? அதை எடுத்து நான் கொஞ்ச வேண்டாமா?" என்று கேட்டாள் அவள்.

நான் சிரித்தேன். கல்யாணமாகி, பத்து வருஷங்களாகியும் குழந்தை இல்லாத குறை எனக்கும்தான் இருந்து வந்தது. அதைச் சுசீலா எடுத்துக் காட்டியதும் அது மலைபோல என்க்குப்பட்டது.

* * *

நாட்கள் நடந்தன. மாதங்கள் உருண்டன. வருஷம் ஒன்று ஓடிவிட்டது. எல்லாம் கண் இமைப்புப்போல நடந்துவிட்டன.

சுசீலாவை அதற்குப் பிறகு பார்க்கவே முடியவில்லை. ஆனுல் அவள் நினைவு அகலவில்லை. அகதியான அவள் எங்கு அவதிப்படுகிருளோ! எனக்கு வேலையில் மனம் லயிக்க வில்லை. சிறு வயது முதலே தங்கைப் பாசத்தில் விசித்திர பிரேமை எனக்கு. அது கைகூடியதும் கண்ணுக்குத்தெரியாது மறைந்தது பெரிய அதிர்ச்சியாய் இருந்தது.

மன நிலை சரியாயிருந்ததால் லீலாவுடன் அன்று ஒரு சினிமாவுக்குக் கிளம்பினேன், பொழுதுபோக்காக இருக்கும் என்றுதான். வெளியுலகத்தைப் பற்றியே கவலைப்படாதிருந்த நான் அந்தப் படத்தில் நடிக்கும் புது முகமான மோகன குமாரியைக் கண்டதும் திடுக்கிட்டேன். அவள் நடனத்தைக் கண்டு வியக்காதவர்களே இல்லை. திக்கெட்டும் அவளைப் பற்றிய பேச்சுத்தான்.

அவள் நடனமோ, நடிப்போ என்னை அதிசயப்படுத்தவில்லை. ஆனுல் அந்த முகம்......! எங்கோ பார்த்த முகம்!......யோசித்தேன். ஆ! அது சுசீலாவின் முகமல்லவா? நான் துள்ளி உட்கார்ந்தேன். சுசீலா சினிமாவில் நடித்துப் பெயர் பெற்றுவிட்டாளா? சபாஷ்! மேற்கொண்டு படம் பார்க்க முடியவில்லை. இருப்புக் கொள்ளாமல் மனதில் ஒரு குறுகுறுப்பு. இப்பொழுதே ஓடிச்சென்று அவளைப் பார்த்துப் பேசவேண்டும் என்ற ஆசை. ஒரு வருஷம்தான். ஆனுல் அந்த ஒரு வருஷத்தில் அவள் எப்படிப்பட்ட நிலையை அடைந்துவிட்டாள்!

லீலா சினிமா பார்த்து ரசிப்பதில் கைதேர்ந்தவள். சோக கட்டம் வந்தால் இவள் கண் 'மல, மல' வென்று நீர் பெருகிவிடும். சந்தோஷமான சம்பவங்கள் வந்தாலோ இவள் 'கலகல' வென்று சிரிக்க ஆரம்பித்துவிடுவாள், நான் பொம்மை போல உட்கார்ந்திருந்துவிட்டு வெளியே வந்தேன்.

* * *

மோகன குமாரியின் விலாசம் லகுவில் கிடைத்தது. அத்துடன் அவளுடைய வாழ்க்கைக் குறிப்பும் ஒரு பிரபல 'சினிமா மின்மினி' யில் நிருபரால் கைச்சரக்குடன் எழுதப்பட்டிருந்தது. சுசீலா என்னிடம் கூறியிருந்த அதே சம்பவங்கள் தான் அங்கும் காணப்பட்டன. அவள்தான் மோகன குமாரி என்பதற்கு என்ன சந்தேகம்!

மறுநாள் அவளைப் பார்க்க உள்ளம் நிறைந்த ஆனந்தத்துடன் புறப்பட்டேன், பூ, பழம் முதலியவற்றுடன். பெரிய சினிமா நடிகையைப் பார்க்கப் போகிறேம் என்கிற எண்ணமே எனக்கு இல்லை. என் தங்கையைப் பார்க்கும் ஒரே எண்ணம்தான்.

பெரிய பங்களா. சுற்றிலும் அழகான தோட்டம். ஆடம்பரத்திற்குக் குறைவில்லை. அங்கே சென்றதும் ஒரு சேவகன் தடுத்து நிறுத்தி, "ஸார் இப்படி உட்காருங்கள். உங்கள் 'விஸிட்டிங் கார்டை'க் கொடுங்கள்" என்ருன்.

எனக்கு உள்ளூற வருத்தம்தான். என் தங்கையைப் பார்க்கவா இவ்வளவு கட்டுப்பாடு? ஆனுலும் அவளுடைய அந்தஸ்தில் அப்படித்தானே இருந்தாகவேண்டும்! ஆகவே ஒரு காகிதத்தில், "சுசீலா, உன்னைப்பார்க்க விரும்புகிறேன்—உன் அண்ணன்" என்று எழுதிக் கொடுத்தேன்.

தர்வான் திரும்பி வந்து என்னை உள்ளே அனுப்பினுன்.

விசாலமான அறை. எதிரே பெரிய மேஜை. அதன்மேல் அழகான புஷ்பங்களைத் தாங்கிய ஒரு பூக்கிண்ணம் இருந்தது. சுசீலா—அல்ல, அல்ல—மோகனகுமாரி அங்கு உட்கார்ந்திருந்தாள்.

"உங்களுக்கு யாரைப் பார்க்கணும்?" என்று அவள் கேட்டாள்.

நான் அயர்ந்து போய்விட்டேன். "பெயர் தான் மாறிற்றே ஒழிய உள்ளம் மாறி இருக்காது என்றல்லவா நினைத்திருந்தேன். என்னைத் தெரியவில்லையா, சுசீலா!" என்று கேட்டேன்.

அவள் என்னையே கூர்ந்து கவனித்தாள். "நீங்கள் தவறுதலாக யாரையோ தேடுகிறீர்கள். முதலாவதாக என் பெயர் சுசீலா இல்லை. இங்கு அந்தப் பெயருடையவர்கள் யாருமே இல்லை." என்றாள் அவள்.

அவள் பேசும்பொழுது கவனித்தேன். அதே அசைவுகள்தான்! சுசீலாதான் இவள். ஆனால் பதவியும், பணமும் வந்து குவிந்து விட்டபோது அவளுக்கு என் நினைப்பு ஏன் வரப்போகிறது? "அண்ணா, அண்ணா" என்று ஆர்வமுடன் அழைத்த அதே சுசீலாவா இவள்? "என்னை அடியோடு ஞாபகமில்லையா உனக்கு?" என்று கேட்டேன் பரிதாபமாய்.

அவள் மேஜை மணியை அடித்தாள். சேவகன் உள்ளே வந்து என்னை வெளியே அழைத்து வந்தான். நான் உயிரற்ற சிலை போலத் திரும்பினேன். இங்கு வரும்போது என் உள்ளத்தில் ஆசை காட்டாறாகப் பெருக்கெடுத்து ஓடியதே! இப்போது அது வறண்டு பாலைவனமாகிவிட்டதே!

* * *

ஏமாற்றம் இருதயத்தில் பதிந்துவிட்டது. சுசீலாவைப் பற்றி நினைக்கும்போது பரிதாபப்படுவேன் நான். அவள் புகழ் அடைந்து பெருமை அடைந்து என்ன பயன்? தன் மனத்தையே அல்லவா ஏமாற்றிக் கொண்டிருக்கிறாள்?

தனிமையில் எனக்கு எப்பொழுதும் இதே நினைவுகள். அன்றும் இதே நினைவாக நடந்து போய்க்கொண்டிருந்தேன். லீலா பிறந்தகம் போயிருக்கிறாள். எங்களுடைய நெடுநாள் குறை தீர்ந்துவிடப்போகிறது. அழகான பிள்ளைக் குழந்தை பிறக்குமென்று ஜோசியம் கூடக் கூறுகிறது. இப்படி நான் எண்ணமிட்டுக்கொண்டே சென்றபொழுது என்மீது உராய்ந்துவிடுவதுபோல ஒரு மோட்டார் கார் வளைந்துசென்றது. நான் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தேன், அது மோகன குமாரியின் கார் அல்லவா? அவள் இங்கே எங்கு வந்தாள்?

நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். நான் வெகுதூரம் நடந்து கீழ்ப்பாக்கம் அல்லவா வந்துவிட்டேன்? அருகில் பைத்தியக்கார ஆஸ்பத்திரி தெரிந்தது. அதிலிருந்துதான் கார் வெளியே வந்திருக்கவேண்டும். அவள் ஏன் அங்கே வந்தாள் என்பதை அறிய ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தேன். வாசலில் இருந்த காவற்காரன் தூங்கிக்கொண்டிருந்தான். ஆனால் எப்படியோ விழித்துக்கொண்டு "சாமி, சாமி" என்றான்.

"என்னப்பா?" என்று கேட்டேன்.

"நீங்கள் பாட்டுக்குப் போறீங்களே...... யாரைப் பாக்கணும்னு சொல்லுங்க...உத்தரவு வாங்கியாறேன்" என்றான்.

நான் யாரைப் பார்க்க வந்தேன்? அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று புரியாமல், "இல்லேயப்பா...இப்போ ஒரு கார் வந்துதே... அதுதான் சினிமா'நடிகையின் கார்..." என்றேன்.

"ஆமாங்க. அவுங்ககூட எனக்கு மாசா மாசம் ஒரு ரூவா கொடுப்பாங்க..." என்றான் அவன்.

இப்படி இவனுடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது உள்ளிருந்து, "யாரது, சீனுவா? வாப்பா" என்ற குரல் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். என் பால்ய நண்பன் சேஷகிரி நின்றுகொண்டிருந்தான்.

"சேஷகிரி, இங்கேயா இருக்கிறாய்?" என்று கேட்டபடி உள்ளே போனேன்.

"ஆமாம்பா." என்றான் அவன்.

எனக்கு வந்த காரியம் நினைவுக்கு வந்தது. "உன்னிடம் ஒரு சமாசாரம் கேட்க வேண்டுமே!" என்றேன்.

"ஒன்று என்ன, ஆயிரம் கேள். சொல்கிறேன்......வா, போவோம் ரூமுக்கு" என்றான் அவன்.

சேஷகிரி படிப்பில் சூரன். எல்லாப் பரிசுகளையும் பிறருக்கு என்று ஒன்றுகூட வைக்காமல் தானே தட்டிக்கொள்வான். டாக்டர் படிப்புக்கு மேல் நாடுகளுக்குக்கூடச் சென்று வந்தவன். அவன் இந்தப் பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் அகப்பட்டுக்கொண்டது எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. இதைப்பற்றி அவனிடம் கேட்டேன். அவன் சரியாகப் பதில் சொல்லவில்லை. ஆனால் ஏதோ ஒன்றை மறைக்கிறான் என்பது மட்டும் நன்றாகப் புலப்பட்டது. அதைப் பற்றிச் சாவகாசமாகக் கேட்டுக்கொள்வோம் என்று வந்த காரியத்தைத் தொடர்ந்தேன்.

"சேஷகிரி, இப்போது மோகன குமாரி என்ற சினிமா நடிகையின் கார் வந்தது அல்லவா?" என்று கேட்டேன்.

"ஆமாம்...அதற்கென்ன?" என்றான் அவன்.

"கேள், அவசரப்படாதே...அவள் ஏன் இங்கு வருகிறாள் என்ற விவரம் தெரிய வேண்டும்" என்று கேட்டேன்.

சேஷகிரி என்னைக் கூர்ந்து நோக்கினான். பிறகு சிரித்தபடியே, "நீ பெரிய ஆள் தானப்பா!" என்றான்.

நானும் மெல்லச் சிரித்தேன்.

"அவளுடைய தங்கை காந்தா இங்கே சிகிச்சையில் இருக்கிறாள்" என்றான் அவன்.

நான் நிமிர்ந்து உட்கார்ந்தேன். மோகன குமாரியின் தங்கை சிகிச்சையிலிருக்கிறாளா? "என்ன?" என்று கேட்டேன் ஆச்சரியத்துடன்.

"ஆம். அவள் தங்கைதான். ஆனால் இருவரும் ஒரே அச்சில் வார்த்ததைப் போலிருப்பார்கள். கொஞ்சங்கூட வித்தியாசம் கிடையாது இவர்களுக்குள்" என்றான் சேஷகிரி.

நான் பரபரப்புடன் எழுந்திருந்தேன். "சேஷகிரி, அந்தப் பெண்ணை இப்போதே நான் பார்க்கவேண்டும்" என்றேன்.

சேஷகிரி என் பரபரப்பைக்கண்டு ஆச்சரியமடைந்தவன்போல என்னையே சற்றுநேரம் உற்றுப் பார்த்தான். பிறகு "சரி, போவோம்" என்றான்.

என் உடலில் புது வேகம் புகுந்து கொண்டது. மனது படபடவென்று அடித்துக் கொண்டது. 'இந்தப் பெண் சுசீலாவாக இருப்பாளோ!' என்ற ஆசை,

ஒரு விசாலமான அறை. அதன் மூலையில் ஒரு மேஜை இருந்தது. அதற்கருகிலிருந்த ஜன்னல் வழியாக ஒரு பெண் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். பின்புறத்தோற்றம் சுசீலாவினுடையதைப் போலவே இருந்தது. நான் ஆவலுடன் "சுசீலா!" என்று கூப்பிட்டேன்.

அவள் திரும்பிப் பார்த்தாள். நான் அவளை நன்றாகக் கவனித்தேன். ஆம். அவளேதான். என் தங்கை சுசீலாவேதான். அவளுடைய கண்கள் ஒரு கணம் பிரகாசமடைந்தன. அடுத்த கணம் "அண்ணா!" என்று அலறியபடி அவள் என்னை நோக்கி ஓடிவந்தாள்,

நான் அவளைக் குழந்தையைப்போல அணைத்துக்கொண்டேன். அலைபோல்புரளும் கேசத்தை வருடியபடியே, "சுசீலா, நீ இங்கேயா இருக்கிறாய்? உன்னைத்தேடி எங்கெல்லாம் அலைந்தேன் தெரியுமா?" என்றேன்.

சுசீலா என்னை ஏறிட்டுப் பார்த்தாள். "என்ன அண்ணா இது? என் பெயரைக்கூட மறந்து விட்டாயா? என் பெயர் காந்தா இல்லையா?.........அதுபோகட்டும். நீ சின்ன வயசில் என்னை 'நாய்க்குட்டி'ன்னு கூப்பிடுவையே அதை மறந்துட்டாயா?...அப்பா என்னை 'பேபி'ன்னு கூப்பிடுவா...ஆனா நீ மட்டும்..." என்று பேசிக்கொண்டே போனாள்.

நான் தடுத்து, "அப்போதெல்லாம் நீ நாய்க்குட்டியாட்டம் இருந்தாய்...இப்போ சுசீலாவாகி விட்டாய்..." என்றேன்.

சேஷகிரி எங்களைப் பார்த்ததுமுதல் ஏதோ ஒரு பிரச்னையை விடுவிக்க முயல்பவனைப் போலக் காணப்பட்டான். எங்கள் உறவு அவனுக்குப் புரியவில்லை. பாவம்! அவனுக்கு எப்படிப் புரியும்? என் சொந்த மனைவியே புரிந்துகொள்ள வில்லையே!

சேஷகிரியிடம் தனிமையில் எல்லா விவரங்களையும் கூறினேன். அவன் உள்ளம் உருகி விட்டது. இப்படிப்பட்ட சகோதர பாசம் ஏற்படக் கூடியது பெரிய விசித்திரமாக அவனுக்குப்பட்டது. ஆனால் நிரந்தர சாட்சியாக நான் இருக்கும்போது அவனால் எப்படி அதை மறுக்க முடியும்? அவனுடன் பேசியதில் ஒரு விஷயம் புலனாயிற்று. உயர்ந்த படிப்பும் தீவிர முயற்சியும், நல்ல மேதையும் உடைய சேஷகிரி இந்தப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலேயே இருப்பதற்குக் காரணம் இந்தப் பெண் சுசீலாதான். அவளைக் குணப்படுத்திவிடவேண்டும் என்பது அவன் நோக்கம். மேலும் அவள் மீது அவன் காதல் கொண்டிருந்தான். இதைக் கேட்டதும் நான் மிகவும் சந்தோஷமடைந்தேன்,

பேசிக்கொண்டே இருந்தோம். சுசீலாவை குணப்படுத்த அவன் எடுத்துக்கொண்ட முயற்சிகளை எல்லாம் விளக்கினான் அவன். பொதுவாகத் தன் சகோதரனை இழந்த துக்கமே அவளைப் பைத்தியமாக்கி இருக்கிறது என்று அவன் கூறினான். பிறகு கடைசியில், "சீனு, தெய்வாதீனமாக நீ அவளுடைய அண்ணனாக அமைந்துவிட்டாய்...... உன்னால்தான் அவள் குணமாக வேண்டும்...... இதற்காக நீ ஒரு மகத்தான தியாகம் செய்தாகவேண்டும்" என்றான் அவன்.

நான் ஒன்றும் புரியாமல் "என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? அவளுக்காக எதையும் செய்ய நான் தயார்" என்றேன்,

"நீ செய்வாய். எனக்குத் தெரியும். ஆனால் தீர்மானித்துக்கொள். நடுவில் புரளக்கூடாது" என்றான், அவன் பீடிகை போடுவதுபோல,

"இல்லை, சொல்லு, என்றேன்."

"முதலில் நீ உன் வேலையை ராஜீநாமா செய்துவிடவேண்டும்" என்றான் சேஷகிரி.

"என்ன? என்ன......? ராஜீநாமாவா?" என்று கேட்டேன் பதட்டத்துடன்.

"ஆமாம்...... அப்புறம் இங்கேயே உன் தங்கை அருகிலேயே இருந்து அவளுடைய மனப் போக்கின்படி நடக்கவேண்டும்......... உன் அன்பால்தான் அவள் மனப் பிரமை மாறவேண்டும்...... என்ன புரிகிறதா?......" என்று கேட்டான் அவன்.

நான் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. வேலையை ராஜீநாமா செய்துவிடவேண்டும்!...—... பிறகு?......... சுசீலாவின் அருகிலேயே இருக்கவேண்டும்...... அதுசரி... ராஜீநாமா என்றால் மாதம் இருநூறு ரூபாய் வருவாயுள்ள உத்தியோகம் போய்விடும்.

சேஷகிரி தொடர்ந்து பேசினான். "வேலை போய்விட்டால் பிறகு சாப்பாட்டுக்கு என்ன செய்வது என்றெல்லாம் கவலைப்படாதே. மோகன குமாரி தன் தங்கைக்காக எதையும் செய்யத் தயாராயிருக்கிறாள்... அவளிடம் கூறி உனக்கு நிரந்தரமாக ஒரு பெரிய தொகையை நியமிக்கும்படி ஏற்பாடு செய்கிறேன்."

எனக்குக் கடைசியாக அவன் சொன்னதைக் கேட்டதும் கோபம் வந்துவிட்டது. "என்ன சொல்கிறாய் சேஷகிரி! என் சுசீலாவுக்காக நான் எதையும் செய்யத் தயார். எங்கள் அன்பை நீ பணத்தால் பிணைத்துவிட நினைக்கிறாய் போலிருக்கிறது" என்றேன்.

சேஷகிரி சாவதானமாக, "வித்தியாசமாக நினையாதே, சீனு. நான் சொன்னதில் பிசகில்லை......மேலும் நீ ஒரு பைத்தியத்துக்காக உன் வாழ்வையே தியாகம் செய்யப்போகிறாய். ஆகையால் பணம் அதற்கு ஈடு செய்ய முடியாது......என்றாலும் இது உன் பெரும் தியாகத்துக்கு மிகச்சாமான்யமான பிராயச்சித்தம், அவ்வளவே" என்றான்.

*　　　*　　　*

**வே**லையை ராஜீநாமா செய்தேன், ஆனால் இதை லீலாவுக்கு அறிவிக்கவில்லை, அவள் குணம்தான் தெரிந்ததாயிற்றே! இதைக் கேட்டால் அவள் கோபிப்பாள், ஒரு பைத்தியத்துக்காகத் தன் கணவன் வேலையை ராஜீநாமா செய்தது பெரிய அவமானமாகக் கருதுவாள்.

என்னைப்பற்றிப் பிறர் என்ன சொல்வார்கள் என்ற கவலை எனக்கு எழவில்லை. என் ஆசை எல்லாம் சுசீலா மீளவேண்டும் என்பதே. மோகன குமாரி என்மீது தன் நம்பிக்கை பூராவும் வைத்தாள். அவளும் 'அண்ணா' என்றே என்னை அழைக்க ஆரம்பித்தாள்.

நாட்கள் கடந்தன. சேஷகிரியும் நானும் விடாமல் பாடுபட்டோம். இதற்கிடையில் மோகன குமாரியைப்பற்றிச் சில விபரீதமான பேச்சுகள் என் காதில் விழுந்தன. அவளுடன் கூடவே இருந்துவரும் தர்மராஜு என்பவனின் வலையில் அவள் சிக்கி இருப்பதாகப் பேச்சுக் கிளம்பியது. இது வதந்தியோ என்று முதலில் சந்தேகித்தேன். ஆனால் பிறகு நிஜம் என்று என் கண்கூடாகக் கண்டேன்,



அவளுடைய பங்களா, பாங்கியிலுள்ள பூரா பணம் யாவும் அவன் பேரிலிருந்தன. அவர்களிருவருக்கும் விரைவில் பதிவுத் திருமணம்கூடநடக்கப்போவதாகவும் அறிந்தேன். இதைப்பற்றி அவளிடம் எச்சரிக்க எனக்கு ஆசை ஏற்பட்டது. பிறகு ஒருநாள் மெல்ல விஷயத்தை ஆரம்பித்தேன். உடனே அவள், "அதைப்பற்றிப் பேசவேண்டாம், அண்ணா... நல்லதோ கெட்டதோ நடந்துவிட்டதை மாற்ற நான் விரும்பவில்லை... அப்படியே ஏதாவது ஏற்பட்டுவிட்டாலும் என் தங்கையைப் போல நானும் நிம்மதியாகப் பைத்தியமாகி விடுகிறேன்" என்றாள்.

இதற்குமேல் நான் என்ன பேசுவது?

* * *

நற்செய்தி ஒன்று பறந்துவந்தது, எனது நெடுநாள் குறை மறைந்தது. எனக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கும் செய்தியே அது.

சுசீலா ஆனந்தமாகப் பாடிக்கொண்டிருந்தாள். சில நாட்களில் அவளுக்குச் சந்தோஷம் கரை புரளாது, ஏதாவது பாட்டுகள்—சம்பந்தமில்லாத கவிதைகள்—அவளுடைய இனிய குரலில் உருவெடுத்து வரும். ஒரு பைத்தியம் பாடும் பாட்டாகவே அவற்றை மதிப்பிட முடியாது!



"சுசீலா, இதோ பார்......" என்று கூறியபடியே உள்ளே ஓடினேன்.

சுசீலா திடுக்கிட்டு எழுந்திருந்து, "என்ன அண்ணா?" என்று கேட்டாள், அவள் முகத்தில் அசாதாரண அழகு மின்னியது, கண்களில் லேசாக நீர் துளிர்த்து இளம் வெய்யிலில் மின்னியது. கூந்தல் காற்றில் கலைந்து கிடந்தது. என்னை அறியாமல் என் உள்ளம் இப்பேர்ப்பட்ட அழகி பைத்தியமாகவே இருக்க நேர்ந்திடுமோ என்ற விசித்திர பயமும் பரவியது.

"எனக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறதாம், சுசீலா... இதோ பார் தந்தி......உனக்கு மருமான் வேண்டுமென்று ஆசைப்பட்டாயே!" என்றேன்.

சுசீலா என்னையே உற்றுப் பார்த்தாள், முகத்தில் திடீரென்று விசித்திர மாறுதல் ஏற்பட்டது, அடுத்த கணம் "ஹா! என்று அலறலுடன் அவள் கீழே சாய்ந்தாள்.

நான் பிரமித்து நின்றுவிட்டேன். சேஷகிரி சப்தம்கேட்டு ஓடிவந்தான். "என்ன நடந்தது?" என்று கேட்டான். நான் நடுங்கும் குரலில் நடந்ததைச் சொன்னேன்.

குனிந்து அவளைப் பரிசோதித்தான் சேஷகிரி. நான் கவலையுடன் அருகில் நின்று கொண்டிருந்தேன். சிறிது நேரத்துக்குப் பிறகு அவன்

முக மலர்ச்சியுடன் கூறலானான். "சீனு, இனி சுசீலா பைத்தியமல்ல. அவள் மூளை தெளிந்துவிட்டது. நீ கூறிய செய்தி அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. அதன் பலனாகச் சுவாதீனமற்ற மூளை இப்போது தெளிந்துவிட்டது" என்றான்.

எனக்கு ஆனந்தம் புரிபடவில்லை. "நிஜமாகவா?" என்று கேட்டேன்.

"ஆமாம்." என்றான் சேஷகிரி.

இந்தச் சந்தோஷ சமாசாரத்தைத் தெரிவிக்க டெலிபோனை எடுத்தேன். மோகன குமாரியின் பங்களாவை அழைத்தேன். அதற்குள் அங்கிருந்தே "ஹலோ, யார் பேசறது?" என்ற குரல் கேட்டது.

"நான்தான் சீனுவாசன் பேசுகிறேன் ஆஸ்பத்திரியிலிருந்து." என்றேன்.

"ஓ!...இங்கு மோகன குமாரிக்கு எதிர்பாராத விதமாக சித்தப் பிரமை ஏற்பட்டிருக்கிறது. தர்மராஜு பணத்தை எல்லாம் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டதுதான் காரணம்" என்று பதில் வந்தது.

நான் திடுக்கிட்டேன். சுசீலா எழுந்து புன் முறுவலுடன் நின்றாள். சேஷகிரிக்கு ஆனந்தம். அவனைக் கண்டதும் வெட்கத்தால் தலை குனிந்துகொண்டாள் சுசீலா. இந்த நிலையில் அந்தப் பயங்கர தகவலை உடனே நான் வெளியிடவில்லை.

சுசீலாவுக்கு வெகுநாள் வரை அந்த விஷயமே தெரியாது. தன் அக்காவைப் பற்றி அவள் விசாரித்தபொழுதெல்லாம் நாங்கள் ஏதாவது சாக்குப் போக்குக் கூறிவிடுவோம். அவளுடைய சித்தம் நல்ல நிலைமைக்கு வந்த பிறகே இதை வெளியிட்டோம்.

* * *

"என்ன பேப்பரைப் பிரித்தபடி அப்படியே உட்கார்ந்து விட்டீர்களே!" என்று லீலா கூப்பிட்டதும்தான் எனக்குச் சுய நினைவு வந்தது.

"ஒன்றுமில்லை...இந்தப் பேப்பரைப் பார்... நம்ம சுசீலா நடிக்கிறாள்...படத்தின் பெயர் என்ன தெரியுமா? 'அபூர்வ சகோதரிகள்' எப்படி?" என்று கேட்டேன்.

அவள் சிரித்தாள். "அவர்கள் அக்கா, தங்கை இருவருமே அபூர்வ சகோதரிகள் தானே!" என்றாள்.

எனக்கும் அவள் அபூர்வ சகோதரிதான். அவளையும் சேஷகிரியையும் பார்த்துவர விரைவில் போகப் போகிறேன். ●




தீபாவளி வாழ்த்துக்கள்!

ருக்மணி ஸில்க் எம்போரியம்

பட்டு ஜவுளி வியாபாரம்

பெரியதெரு கும்பகோணம்

டெலிபோன் 58

எப்பொழுதும் போலவே இவ்வருஷமும் எங்களுக்கு ஆதரவளித்த வாடிக்கையாளர்களுக்கும், அபிமானிகளுக்கும் மனமார்ந்த திபாவளி வாழ்த்துக்கள்.

RSE

ராதா ஸில்க் எம்போரியம்

பட்டு ஜவுளி வியாபாரம்

மயிலாப்பூர் மதராஸ்-4

டெலிபோன் 84188

முன் இதழ் தொடர்ச்சி

# மணல் மேடு

மாரார்

குருதாஸ் நாயுடு : என்ன விசேஷம் ஐயங்கார்வாள்? சந்தனம் வெற்றிலை பாக்கு அமர்க்களமாய் இருக்கிறதே. விருந்து சாப்பாடு பலம் போலிருக்கு.

சுதரிசனம் ஐயங்கார் : என் தம்பிக்குப் பேரன் பிறந்து இன்று பதினோராம் நாள். குழந்தைக்கும் தாயாருக்கும் ஸ்நானம் செய்வித்தோம். அதற்காகப் புண்ணியாக வாசனம் நடந்தது. பத்துப் பேரைச் சாப்பாட்டுக்கு என் தம்பி அழைத்திருந்தான். அதுதான் வேறு ஒன்றுமில்லை.

ஜாபாலிரத்னம்: உம் அதிர்ஷ்டம் அதிர்ஷ்டந்தான் ஐயா. எங்கே பார்த்தாலும் அரிசிப் பஞ்சம். அரை வயிற்றுக்குச் சாப்பாடு அகப்படுவதில்லை. உமக்கு விருந்து போஜனம் கிடைக்கிறது.

சுதரிசனம்: எப்போதோ வருஷத்துக்கு ஒரு நாள் அபூர்வமாக நல்ல சாப்பாடு கிடைத்தால் அதுகூட உங்களுக்குப் பொறுக்கவில்லையே.

வியாஸாசார்: இன்னும் எத்தனை நாள்களுக்கு இந்த அரிசிப் பஞ்சம் இருக்கும்? இதற்கு ஒரு முடிவு கிடையாதா? என்னைப்போன்ற ஸம்சாரி வீடுகளில் படும் கஷ்டம் சகிக்கமுடியவில்லை. பணம் கொடுத்தாலும் அரிசி அகப்படவில்லையே.

ஜாபாலி: ஏன்? பிளாக் மார்க்கெட்டில் இரண்டு பங்கு பணம் கொடுத்தால் வேண்டிய அரிசி வீட்டுக்குள் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். இந்த உணவுப் பஞ்சம் சமீப காலத்தில் தீருவதாகத் தோன்றவில்லை. பிரஜைகள் மற்ற நாடுகளைக் காட்டிலும் அதிகமாக நம் நாட்டில் விருத்தியாகிக்கொண்டு வருகின்றனர். ஆனால் பூமியோ தானியம் அதற்குத் தகுந்த அளவில் கொடுக்கிறதில்லை. பஞ்சம் வராமல் எப்படி இருக்கும்?

சுதரிசனம்: பத்து இருபது வருஷங்களுக்கு முன் இப்படி அரிசிப்பஞ்சம் இல்லையே. இப்பொழுது மாத்திரம் பிரஜைகளின் எண்ணிக்கை திடீரென்று ஜாஸ்தியாக எப்படி ஆயிற்று?

ஜாபாலி: பத்து இருபது வருஷங்களுக்கு முன் நம் நாட்டில் சாவும் ஜாஸ்தியாக இருந்தது. நகரங்களிலோ, கிராமங்களிலோ, வைசூரியோ, காலராவோ, இன்ப்ளுயன்ஸாவோ வந்தால் ஒரேயடியாய்ச் சூறையாடிவிடும். நூற்றுக் கணக்காக ஜனங்கள் மரணமடைவர். பிறப்பு அதிகம் உண்டானாலும் இறப்பின் மிகுதியால் ஜனஸங்கியை அதிகமாய் விருத்தியாவதில்லை.

குருதாஸ்: இப்போது மாத்திரம் இந்த வியாதிகள் வருவதில்லையா என்ன?

ஜாபாலி: இப்போது ஸர்க்கார் இந்த வியாதிகளைப் பரவாமல் தடுக்கிறார்கள். கிராமங்களிலும் பட்டணங்களிலும் டாக்டர்கள் ஜனங்களுக்கு ஊசி குத்துகிறார்கள். அதனால் வைசூரி, பிளேக், காலரா முன்போல் அவ்வளவு அதிகமாகப் பரவுவதில்லை. பத்து செத்தவிடத்தில் இந்த நாளிலே ஒன்றிரண்டு தான் சாகிறது. அதனால் மேன்மேலும் ஜனத்தொகை விருத்தியாகிறது. ரங்கூனிலிருந்து முன் நாளில் அரிசி இறக்குமதியாகி ஒருவாறு சமாளித்துக்கொண்டோம். இப்போது அங்கேயெல்லாம் கலகமும் குழப்பமும் அதிகமாயிருப்பதால் அரிசி உற்பத்தியும் குறைவு, ஏற்றுமதியும் குறைவு.

வியாஸாசார்: அமெரிக்கா முதலிய தேசங்களில் நமக்கு இருக்கும் முடையைத் தெரிந்துகொண்டு தானியங்






மூன்று தலைமுறைகள்

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

# WOODWARD'S
# GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON, ENGLAND

Agent:— T. T. KRISHNAMACHARI & Co.
12 A, Lingha Chetty Street, — G. T. MADRAS.

களின் விலையைத் தோன்றியபடி ஏற்றி விடுகிறார்கள். புதுவிதமான கலப்பைகள், புதுமுறை, உரம் இவைகளைக் கொண்டு விளைச்சலை ஏன் விருத்தி செய்யக்கூடாது?

ஜாபாலி: என்ன தான் யந்திரங்களைக் கொண்டு உழவு செய்தாலும், எப்படிப் பட்ட உயர்ந்த ஏருப்போட்டாலும், ஒரு எல்லைக்குமேல் பூமி விளையாது. பிரஜைகளோ நம் நாட்டில் எல்லை கடந்து மேன் மேலும் விருத்தியாகின்றன.

குருதாஸ்: அப்படியானால் நமக்குப் பஞ்சம் ஒருநாளும் நிவர்த்தியாகாது என்று சொல்லுகிறீர்களா?

ஜாபாலி: பஞ்சம் இல்லாதிருக்க வேண்டுமானால் பூமியின் விளைவைப் பெருக்குவது மாத்திரம் போதாது. பிரஜைகளின் விருத்தியையும் குறைக்கவேண்டியது அவசியம்.

சுதரிசனம்: பிரஜைகளைக் குறைக்கிறதென்றால் எப்படி? நாட்டிலிருந்து சிலரை ஓட்டிவிடுவதா? வேறு எவ்விதம் குறைக்கலாம்?

வியாஸாசார்: இருபது வருஷத்துக்குமுன் நம் தேசத்திலிருந்து ஜனங்கள் தென் ஆபிரிக்காவுக்கும், லங்கைக்கும், ரங்கூன், பினங், மோரிசு முதலான இடங்களுக்கும், கூலிவேலை செய்தோ, வியாபாரம் செயதோ, சம்பாதிக்கப் போனார்கள். பலர் அங்கேயே வீடு, வாசல், நிலம் வாங்கிக்கொண்டு இருந்துவிட்டார்கள். இப்போது பிற தேசத்தார் இந்தியர் தங்கள் நாட்டுக்கு வந்து குடியேறுவதைத் தடுக்கிறார்கள். அது மாத்திரமல்ல, ஏற்கனவே குடியேறினவர்களையும் அங்கிருந்து துரத்தப் பார்க்கிறார்கள். இங்கிலையில் உள்நாட்டுப் பிரஜைகளை இவ்விதமாகக் குறைக்க முடியாதே.

ஜாபாலி: சரி—வேறு ஒருவழியிருக்கிறது. அதை அனுசரித்தால்தான் ஜனங்களின் ஸங்கியை கணக்குக்குமேல் ஏறாமல் பார்த்துக்கொள்ள முடியும். தம்பதிகள் ஒவ்வொருவரும் தங்களுக்கு இரண்டு குழந்தைகளுக்குமேல் பிறவாதிருக்கும்படி ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டும்.

குருதாஸ்: கர்ப்பத்தடைக்கு வேண்டிய முறைகளைக் கையாளவேண்டும் என்று பச்சையாய்ச் சொல்லுங்களேன். அது பரவாயில்லையா? நம் ஸநாதன தருமத்துக்கு விரோதமில்லையா?

ஜாபாலி: கர்நாடக ஆஸாமியாய் இருக்கிறீரே. எது பாவம், எது புண்ணியம் என்று எப்படித் தீர்மானிக்கிறது? ஒருவன் கர்ப்பத்தடைசெய்து குழந்தைகள் இல்லாமல் இருந்தால் பாவம் என்கிறீர்—ஆனால் காவடிப்பயல் ஒருவன் ஏழு, எட்டுக் குழந்தைகளைப் பெற்றுவிட்டு, அவைகளுக்கு வயிறு நிறையச் சோறு, உடுத்துக்கொள்ளத் துணி, படிப்பு, வைத்தியம் முதலிய சௌகரியங்களைச் செய்யத் தவறினால் அதை விடப் பெரிய பாவம் என்ன இருக்கிறது? குழந்தைகளைச் செவ்வனே பராமரிக்க முடியாதவர் குழந்தைகளைப் பெறுவது மகா பாபம் என்கிறே நினைக்கவேணும்.

வியாஸாசார்: பாவம், புண்ணியம் என்று எவற்றைச் சாஸ்திரம் சொல்லுகிறதோ அவற்றைத்தான் அப்படி எண்ண வேண்டும். இஷ்டப்படி இந்த விஷயங்களில் முடிவுகட்டுவது தப்பு.

ஜாபாலி: கொஞ்சம் புத்தியைச் செலுத்தி யோசித்துப் பாருங்கள். ஒருவன் படிப்புக்காகவோ, பணம் சம்பாதிக்கவோ, பெண்டாட்டியை இங்கே விட்டுவிட்டுப் பிறதேசம் மூன்று வருஷம் போகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவன் பிரஜைகளை உற்பத்தி செய்யாமல் சென்றது பாபமாகுமோ? அது போலவே கர்ப்பமாகாமல் மன உறுதியினாலோ, ஏதோ நவீன முறைகளை அனுசரித்தோ தடுத்தால் அது பாவம் எப்படியாகும்? கருத்தரித்த பிறகு அதைக் கெடுத்தால் அது பாவமாகலாம். சட்டத்துக்கு விரோதமான குற்றமுமாகும்.

சுதரிசனம்: மத்திய சர்க்கார் சுகாதார மந்திரி மாணவர் சங்கம் ஒன்றில் சொன்னதை வாசித்தீர்களா? "நான் இருபத்திரண்டு வயதுக்குட்பட்ட பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதில்லை, என்று நீங்கள் சத்தியம் பண்ணிக் கொள்ளுங்கள் என்றார்." பெண்களுக்கு இருபத்திரண்டு வயதிற்குள் இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்துவிடுகின்

றன. இருபத்திரண்டுக்குள் விவாகம் செய்துகொள்ளாவிடில் இரண்டு மூன்று குழந்தைகள் அந்தக் குடும்பத்தில் கம்மியாகும் இது ஒரு வழியல்லவா?

ஜாபாலி: ஒவ்வொரு நிபுணரும் ஒவ்வொரு முறையைப் போதிக்கிறார்கள். ஆனால் ஒரு கிறிஸ்தவப் பாதிரி சமீபத்தில் கூறினதாகப் பேப்பரில் கண்ட வழி வெகு நூதனமானது. நம்மைப்போல் வயதானவருக்கு அது பிடிக்காது. பித்துப் பிடித்தவர்கள், குஷ்டம் முதலிய ரோகம் வந்தவர்கள், மூளைக் குறைகள் இவர்களை ஸர்க்கார் அப்போதைக்கப் போது பைஸல் பண்ணிவிடவேண்டும் என்கிறார். இப்படிச் செய்தால் பிரஜைகளின் ஸங்கியை கட்டாயம் குறையும். உணவுப் பஞ்சம் வராது என்கிறார்.

வியாஸாசார்: என்ன ஆச்சரியம்? மத குரவர்களும்கூட இப்படிச் சொல்கிறார்களா? கொலை செய்யாதே என்ற தெய்வத்தின் ஆக்கினையை மறந்துவிட்டாரோ?

ஜாபாலி: வெள்ளைக்காரர்கள் குதிரைகள், நாய்களிடத்தில் வெகு அன்பு வைத்து வளர்க்கிறார்கள். ஆனால் அவைகளுக்குக் கொடிய வியாதிகள் வந்து அவஸ்தைப்பட்டால் அவைகளின் கஷ்டத்தைச் சகிக்கமுடியாமல் சுட்டுக் கொன்றுவிடுகிறார்கள். அது போல ஏன் செய்யக்கூடாது என்கிறார்.

சுதரிசனம்: மனிதர்களையும் சுட்டுக் கொல்லவேண்டும் என்று சொல்லுகிறாரா?

ஜாபாலி: சுடச்சொல்லவில்லை. முன்னே நான் சொன்ன பேர்வழிகளை ஓர் அறைக்குள் போய் நாற்காலியில் உட்காரச் சொல்லுகிறது. அந்த அறைக்குள் சுகந்தம் கலந்த குளோரோபார்ம் மாதிரியான ஒரு காற்றைச் செலுத்திக் கதவை மூடிவிடுகிறது. காற்று முதலில் நல்ல வாசனையாகத் தோன்றும். நூறு எண்ணுவதற்குள் காற்று மூக்கு வழியாய்ச் சென்றவுடன் மயங்கிவிடுவார்கள். ஒருவித அவஸ்தையோ நோவோ இராது. ஒன்றுமே தெரியாது. சில நிமிஷங்களுக்குள் ஆள் பைஸல்.

சுதரிசனம்: கிரீஸில் பண்டைக் காலத்தில் ஸ்பார்ட்டாவில் ஸர்க்கார் உத்தியோகஸ்தருக்குக் குழந்தைகளைக் காண்பிப்பார்களாம். குழந்தை பலஹீனமாகவோ, குருடு குரூபியாகவோ இருந்தால் அதை ஒரு மலைமேல் கொண்டு கிடத்திவிட்டு வருவார்களாம், இது சரித்திரத்தில் சொல்லியிருக்கிறது.

ஜாபாலி: அது மாத்திரமல்ல, ஒரு புருஷனுக்கோ பெண்ணுக்கோ வாழ்க்கைக்கு இடைஞ்சல் செய்து, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் அவர் நோய் முதலிய கேடுகள் வரக்கூடும் என்று தோன்றினால் டாக்டர்களைக்கொண்டு அந்தப் புருஷனுக்கோ, பெண்ணுக்கோ குழந்தைகள் பிறவாதிருக்கும்படியான சிகித்ஸை ஸர்க்கார் செய்விக்கவேண்டும் என்கிறார். கிறிஸ்து இப்போது உலகில் இருந்தால் இவைகளுக்கெல்லாம் அனுமதி கொடுப்பார் என்று எண்ணுகிறார்.

வியாஸாசார்: இது என் அபிப்பிராயம் என்று சொல்லட்டுமே. கடவுளையும் கிறிஸ்துவையும் ஏன் இழுக்கிறார்? கடவுளிடம் நம்பிக்கை இல்லாதவர் இது கடவுளுக்குப் பிரீதியாயிருக்கும், இது அவருக்குப் பிடிக்காது என்றெல்லாம் தம் மனதுக்குத் தோன்றிய அபிப்பிராயங்களுக்குச் சப்பைக்கட்டுக் கட்டுகிறார்கள்.

ஜாபாலி: ஜெர்மன் பிரஸித்த விக்ஞானி ஏணஸ்ட் ஹேகல் முப்பது வருஷத்துக்கு முந்தியே தீராத நோய்வாய்ப்பட்டவர்களை மூன்றோ ஐந்தோ உயர்ந்த டாக்டர்களைக்கொண்டு பரிசோதனை செய்யவேண்டும். வியாதி சொஸ்தமாகாது—வியாதிக்காரனுக்குத் துன்பம் சகிக்க முடியாமல் விருத்தியாகும் என்று அவர்களால் தீர்மானிக்கப்பட்டு, அவனுடைய அனுமதியுண்டானால் அவனைத் துன்பத்திலிருந்து விடுவிப்பது கடமை என்று தம் புத்தகம் ஒன்றில் எழுதியிருக்கிறார்.

சுதரிசனம்: சமீபத்தில் மேல்நாட்டில் ஏதோ ஒரு ஊரில் இந்தமாதிரி ஒ

வியாதியஸ்தனை மரணமடையும்படி செய்தற்காகக் கோர்ட்டார் டாக்டரைத் தண்டித்தார்கள் என்று வாசித்ததாக ஞாபகம் வருகிறது.

வியாஸாசார்: இதெல்லாம் அதருமம், மகாபாவம் என்றே சொல்லவேண்டும். நியூட்டன் பிறந்ததும் குழந்தையைப் பார்த்தவர்கள் இது பிழைக்காது, பிழைத்தாலும் கஷ்டம தவிர வேறில்லை என்றார்களாம். பிறகு வயது வந்த வுடன் அவர் ஒரு பெரிய மேதாவியாய் விளங்கினார். எத்தனையோ தத்துவங் களைத் தம் ஆராய்ச்சியினால் அறிந்து வெளியிட்டார். ஸ்பார்ட்டாவில்குழந்தை நியூட்டனைமலைமேல் எறிந்திருப்பார்கள். குருடு, குரூபி, செவிடுகளான சிலர் சில துறைகளில் புலமை பெற்றிருந் தது உலகப் பிரசித்தம். வியாதி சொஸ்தமாகாது என்று ஐந்து டாக் டர் சொல்லிவிட்டால் போதுமா? அவர்கள் ஈசுவரனா என்ன? எத்த னையோ வியாதிகள் பத்து வருஷத் துக்கு முன் அசாத்தியம் என்று வைத் தியர்கள் கைவிட்டவைகளை இப்போது எளிதில் சொஸ்தம் செய்கிறார்கள்.

ஜாபாலி: நீர் சொல்லுகிறமாதிரி சொஸ்த மாகும் கேஸ் லட்சத்தில் ஒன்று இருக் கலாமோ, என்னவோ? எனக்கு ஒரு கொடிய வியாதி வந்திருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் ஏற்படும் உபத்திரவம் சகிக்கமுடிய வில்லை. இராத்தூக்கமில்லை, பகல் தூக்கமில்லை. எப்போதும் முக்கலும் முனகலுந்தான். சர்க்காரோ சர்க்கார் வைத்தியர்களோ அதைச் சொஸ்தம் பண்ண முடியவில்லை. என் வீட்டில் பிள்ளை, பெண்டாட்டி, மாட்டுப்பெண் எல்லோருக்கும் என்னால் வேலையும் கஷ்டமும் அதிகம். நான் படுத்த படுக்கையாயிருப்பதால் அவர்கள் மன துக்கும் உடலுக்கும் வெறுப்பாகப் பல வாறு எனக்கு உதவி செய்யவேண்டி யிருக்கிறது. ஏன் நம்மால் பிறருக்கு இவ்வளவு துன்பம், நமக்கும் இந்த வியாதியின் வேதனையும் பொறுக்க முடியவில்லையே, இதுவரைபிழைத்திருந் தது போதும்—டாக்டரைக் கேட்டுச் சுலபமான ஒரு வழியில் பிரா ணனை விடுவோம் என்றால் டாக்டர் அதற்குத் தகுந்த மருந்து கொடுக்க மாட்டார். கொடுத்தால் அவருக்குச் சர்க்கார் தண்டனை. நான் உயிரைவிட எத்தனித்தேன் என்று தெரிந்தால் எனக்கும் தண்டனை. இது என்ன விப ரீதம்; என் உயிரை நான் விடுகிறேன் என்றால் சர்க்காருக்கு என்ன இதில் பாத்தியம்!

சுதரிசனம்: இப்படியே அனேகர் நினைத் தால் தற்கொலை உலகத்தில் ஜாஸ்தி யாகிவிடாதா?

ஜாபாலி: அந்தப் பயம் வேண்டாம்—மிகவும் கஷ்டப்படுபவனுக்குக்கூட உயிர் வெல் லமாய்த்தான் இருக்கிறது. தற்கொலை செய்யத் துணிகிறவர் கோடியில் ஒருவர்தானிருப்பர்.

வியாஸாசார்: பித்துப் பிடித்தவர், ரோகி கள், மூளைக்குறைகள் இவர்களை மாத் திரம் மணவறையா, பிணவறையா, அதில் தள்ளினால் உணவுப் பஞ்சம் எப்படிக் குறையும்? இப்படிப்பட்ட ஆஸாமிகள் ஆயிரத்துக்கு நாலு, ஐந்து தான் இருக்கலாம். அதனால் சில நிபு ணர்கள் வேறு ஒரு யுக்தி கண்டுபிடித் திருக்கிறார்களாம். எழுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் எல்லோரும் தங்கள் இடத்தைக் காலிசெய்ய வேண்டுமாம்; "நீங்கள் இத்தனை வருஷம் இருந்தது போதும், இனி உங்களால் நாட்டுக்கு எந்தவிதமான சேவையும் செய்யமுடி யாது. அரிசித்துவம்ஸம் தவிர உங்க ளால் வேறொன்றும் பிரயோஜனமில்லை, ஆகையால் நீங்கள் பிணவறையில் பிர வேசிக்கத் தயாராகவேண்டும்" இப்படி இவர்களுக்கு உத்தரவு செய்தால் பிரஜைகளின் சங்கியை நிச்சயமாகக் குறையுமாம்; என்ன சொல்கிறீர்கள் இந்த யுக்திக்கு?

குருதாஸ்: சரி—நம் தலைக்குப் பாக்கு வைக்கப் பார்க்கிறார்கள். எழுபது வய துக்கு மேதப்பட்டவர்கள் நாட்டுக்கு யாதொரு நலமும் செய்ய முடியாது என்று எவன் சொல்வது? இப்போது நம் தேசத்திற்குப் பல துறைகளில் உயர்ந்த சேவை செய்பவர்களில் பலர் வயது சென்றவரே. ஸர்தார் படேலை எடுத்துக்கொள்ளுங்கள். ஸர் எம். விசு

வேசுவரய்யாவுக்குத் தொண்ணூறு வயதாகிறது. அவர் ஞானமும் விக்ஞானமும் எந்த முப்பது வயதுப் பயலுக்கு இருக்கிறது? இப்பேர்ப்பட்ட முதிர்ந்த ஞானம் உள்ளவர்களைச் சில மூடர்கள் வேண்டாம் என்று சொன்னால் அவர்கள் மூடத்தனத்துக்கு என்னதான் சொல்லுகிறது?

ஜாபாலி: நாயுடுகாருவுக்கு வயது அறுபத்து ஒன்பது இப்போது நடக்கிறது. இன்னொரு வருஷம் கடந்தால் நமக்கு இந்த ஆபத்து வருமே என்று பயப்படுகிறார்போலிருக்கிறது. அதனால்தான் கொஞ்சம் கோபமான பேச்சு. சர்க்கார் ஒரு கமிட்டி நியமிப்பார்களாம், அந்தக் கமிட்டியார் எழுபது வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு பேர்வழியின் கேஸையும் செவ்வையாக விசாரிப்பார்களாம்—இவனால் இனிப் பிறருக்குப் பிரயோஜனம் உண்டா என்று கவனித்து, இல்லையென்று தீர்மானித்தால்தான் இடத்தைக் காலிசெய்யும்படி கட்டளை பிறக்கும்.

வியாஸாசார்: கலியுகத்தில் மனுஷ்யரது புத்திக்கோளாறு அதிகமாகும், தருமத்தை அதருமம் என்பார்கள், அதருமத்தைத் தருமம் என்பார்கள், என்று நம் சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. ரொம்ப சரி. ஸ்திரீ புருஷர்கள் இயற்கைக்கு விரோதமாகவும் தருமத்துக்கு விரோதமாகவும் கருப்பத் தடை செய்யும்படி உபதேசம் செய்கிறார்கள். அதனால் ஸ்திரீக்கோ, புருஷனுக்கோ, புத்திக்கோளாறு, ஹிஸ்டீரியா முதலிய வியாதிகள் வரமாட்டா என்று இந்த நிபுணர்கள் சொல்லமுடியுமா?

ஜாபாலி: ஹிஸ்டீரியாவாவது மண்ணாங்கட்டியாவது? பிரான்ஸ் முதலிய மேல் நாடுகளில் புத்திமான்களும் படித்தவர்களும் பலர் தடை முறைகளைக் கைக்கொண்டு குழந்தை பெறுவதைக் குறைத்து வந்திருப்பது பிரஸித்தம். அங்குள்ள ஸ்திரீகளுக்குப் பிசாசோ, பைத்தியமோ, ஹிஸ்டீரியாவோ, நம் நாட்டில் விட அதிகம் என்று யாரும் கணக்கிட்டுத்தரவில்லை. தர்மம், அதர்மம் இவை யிரண்டும் காலத்துக்கும் தேசத்துக்கும் தகுந்தபடி 'மாறிமாறிக் காண்கின்றன. ஆயிரம் வருஷத்துக்கு முந்தி, தர்மம் என்று எண்ணியது இப்போது அதர்மம் என்று எண்ணப்படுகிறது. நீலகிரியிலிருக்கும் தோடர்களுடைய தர்மம் வேறு, நம்முடைய தர்மம் வேறு—ஹிந்துக்களிலேயே மாமனைக் கலியாணம் செய்துகொள்வது தென்னிந்தியாவில் தர்மமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. வட இந்தியாவில் உள்ளவருக்கு இது கோரமான அதர்மமாகத் தோன்றுகிறது.

குருதாஸ்: ஐயர்வாள் தாம் சொல்லுவதற்கு ஏதாவது ஒரு திருஷ்டாந்தத்தைச் சொல்லி நம் வாயை மூடிவிடுகிறார். எங்கள் வீட்டில் ஏழரை மணிக்கு ஒருவர் சாப்பாட்டுக்கு வருகிறார். நான் முந்தியே போகவேண்டும்.

ஜாபாலி: நேரமாய்விட்டது. எல்லோரும் போவோமே.



# கனவுத் தீபாவளி

## கோமதி சுப்ரமணியம்



ஐப்பசி மாதத்து அடைமழை பூமியனைத்தையும் தன்னுள் 'அமுக்க நினைத்தது போல் விடாமல் பொழிந்துகொண்டிருந்தது. அப்பெருவாரி மழையையும் லட்சியம் செய்யாமல் தன் கருமமே கண்ணாக, துணிந்து புறப்பட்டுச் செல்லும் ஓரிருவரைக் கோர முழக்கத்துடன் ஆர்ப்பாட்டம் செய்யும் பேரிடியும் கண்ணைப் பறிக்கத் துணியும் மின்னலின் மின்வெட்டு ஒளியும் தம்மை மறந்து அச்சம் கொண்டு வீடு நோக்கித் திரும்பச் செய்தன.

அவர்களில் ஒருவர் ராமநாதபிள்ளை. சே, இந்த மழையென்ன, மனுஷனை வெளியே போகவிடாது போலிருக்கே! என்று சொல்லிக்கொண்டே வீட்டினுள் நுழைந்தார்.

நடுக்கும் உடலுடனும் நனைந்த உடையுடனும் உள்ளே நுழைந்த தந்தையைக் கண்டு உள்ளம் பதறிப்போனாள் செல்லம்மாள்.

'தள்ளாத வயதில் உடம்பை உடம்பென்று பாராமல் அலைந்துகொண்டு படுத்துக்கொள்ளாதீர்கள் என்று சொல்வதைக் கேட்டால்தானே' என்ற குறையுடன் வரவேற்றாள் மனைவி லக்ஷ்மி அம்மாள்.

"ஏதற்காக அப்பா, இந்த கொட்டுகிற மழையில் புறப்படவேண்டும்?" பரிவு, தோன்றும் தன் கேள்வியால் உபசரித்தாள் தந்தையை.

"எல்லாம் உனக்காகத்தானம்மா" என்று அவர் கூறியது சர்வசாதாரணம், ஆனாலும் செல்லாவின் மனதில் சுறுக்கெனத் தைத்தது.

உனக்காகத்தான்...உன் ஹிம்சைக்காகத்தான்...என் உன்னால் வரும் பேராபத்திலிருந்து மீளவேதான்...என்றெல்லாம் சொல்வதற்கான அர்த்தத்தை அந்த ஒரே வார்த்தையில் அடக்கிச் சொன்னதாகக் கற்பித்துக்கொண்டாள்.

இத்தகைய கற்பனையினால் உள்ளம் புழுங்கிக்கொண்டிருந்த அவளுக்கு அடுத்துக் கூறிய ராமநாதபிள்ளையின் வார்த்தைகளைக் கேட்பதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

எனது எல்லா முயற்சியும் உனது நன்மையின் பொருட்டேதானம்மா என்று அவர் கூறியபோது முன்பு கூறிய அதே வார்த்தையை மீண்டும் ஒருதரம் தன் மனதில் அழுத்திப் பதிவாக்கிக்கொண்டாள்

அடக்கமுடியாத துக்கத்தினால் கண்ணீர் வெள்ளம் கரை புரண்டோடியது.

மகளின் கண்ணீர் தந்தையின் மனதைச் சிதறடித்துவிட்டது.

"ஏதற்காக அம்மா இப்பொழுது கண்ணீர் வடிக்கிறாய். எப்பாடுபட்டும் உனக்குச் செய்யவேண்டியதைச் செய்து போட்டு என் கடமையைத் தீர்த்துக் கொள்கிறேனம்மா."

அவர் கடமை என்றது அவளுக்கு கடன் என்பதாகப் பட்டது. அந்த

வார்த்தை அவள் மனத்துக்கத்தைப்பெரி தும் கிளறிவிட்டது. மாறுபட்ட அந்த வார்த்தையினால் துக்கம் ரௌத்ரமாக மாறிய அதே கணம் தந்தையின்மீது பாயவும் தொடங்கியது.

"என்று பெண்ணைப் பெற்றீர்களோ அன்றே அவளுக்குக் கடன் நிறையத் தொலைக்கவேண்டுமென்பது தெரிந்தது தானே. புத்திசாலித்தனமாக முன் யோசனையுடன், பிறந்த அன்றே கழுத்தை நெறித்துப் போட்டிருந்தால்..."

"செல்லா, இதெல்லாம் என்ன பேச் சென்று" இடைமறித்து அதட்டினாள் லக்ஷ்மி.

"நான் என்ன சொல்லிவிட்டேன் லக்ஷ்மி. எதற்காக இந்தப் பெண் இப் படியெல்லாம் பேசுகிறது." என்று தன் மனைவியிடம் அனுதாபம் நாடிச் சென்றார்.

"இன்னும் என்னத்தைச் சொல்ல வேண்டும். சொல்வதெல்லாம் சொல்லித் தீர்த்துவிடீர்கள். நான் பெண்ணாய்ப் பிறந் ததே உங்களுக்கெல்லாம் பெரும் சுமை தான்" என்று விக்கி விக்கி அழுதாள் மகள்.

"அப்படியெல்லாம் சொல்லாதே செல்லா. ஒரே பெண்ணான உனக்குச் செய்யாமல் அப்புறம் எந்தப் பெண்ணுக் கும் பிள்ளைக்கும் சீர் செய்யப் போகிறேன்" என்று மகளிடம் சமாதான முறையைக் கோரி வந்தார் தந்தை.

"அப்படி நீங்கள் நினைத்திருந்தால்..."

"நினைக்காமலென்னம்மா நினைத்துக்கொண் டுதானிருக்கிறேன். அழகாய்க் குடியிருக்கிற வீட்டை விற்று நகையாய்ச் செய்துபோடுவதில் பிரயோஜனமென்ன வென்றுதான் பார்க்கி றேன்."

"வீட்டைவிற்க மனமில்லாமல்தான் வீட் டோடு என்னையும் வைத்துச் சேர்த்துப் பார்த் துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. உங் கள் மகள் ஊரைப்போல் வாழாமல், வாழா வெட்டி என்ற பட்டத்தைக் கட்டிக்கொண்டு வீட்டோடு அடங்கிக் கிடப்பது உங்கள் கண் ணுக்கு அழகாயிருக்கிறதல்லவா?"

"அவர்கள் புத்திக்கெட்டினதிற்கு நாம் என் னம்மா செய்யமுடியும். என்றைக்கிருந்தா லும் அந்தச் சொத்து உன்னைச் சார்ந்தது தானே. இன்று அதைவிற்று நகையாகச் செய்து போட்டுக்கொண்டாலென்ன? நானே வீடாகவேஎடுத்துக்கொண்டால்தானென்ன?"

"எல்லாம் எனக்கென்று பெயரளவில் சொல் லிக்கொண்டால் போதுமா? இன்று என் வாழ்வுக்கு உதவாத இந்தச் சொத்து, நானே என் சொந்தமாகி நான் அனுபவிக்கப் போவ தென்ன?" என்று விவாதித்தாள்.

"நீ சொல்வது ஒருவகையில் சரிதானம்மா. ஆனால் இருக்கிற ஒரே வீட்டையும் விற்றுவிட் டால் அப்புறம் எங்கள் கதி?" என்று விழித் தார்.

உங்கள் கதி என்னவானால் எனக்கென்ன என்பது போலிருந்தது குரோதம் நிறைந்த அவளது பார்வை.

"உங்கள் சுயநலனுக்காக உங்கள் வீட் டோடு கிடந்து மங்கி மடிய வேண்டியதுதானா" என்கிற கேள்வியை வீசிவிட்டு, அறையினுள் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொண்டாள்.

## 2

"லக்ஷ்மி சற்று வெளியே போய்விட்டு வரு கிறேன்" என்று புறப்பட்டுவிட்டார் தந்தை. அவர் புறப்பட்ட வேகம் அவர் போகுமிடத்தைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது.

எப்படியும் அந்த வீட்டை அடமானமாகக் காட்டி யாரிடமாவது 5000 ரூபாய் வாங்கி வந்து வீட்டில் செல்லாவும் நாலுபேரைப் போல் குடித்தனம் நடத்தத் தொடங்கிவிடு வாள்.

செல்லாவின் கலியாணத்தின்போது வைர நெக்லஸ் வாங்கிப்போடுவதாக நகை ஜாபிதா வில் பதிந்திருந்தது. மாப்பிள்ளை பட்டம் பெற் றவர். உத்தியோகத்திலிருப்பவர் என்பதற்கா கத் தம் சக்திக்கு மீறிய ஜாபிதாவே தயாரித்து விட்டார். ஜாபிதா எதிராளிக் கட்சி வசம் அகப்பட்டுவிட்ட பிறகு அவற்றில் கண்ட தற்குச் சற்றேனும் குறைவாக இருப்பதாகத் தோன்றினாலும் திருமணத்தை நிறுத்தி விடு கிற நிலையிலிருந்தார்கள் பிள்ளை வீட்டார். ஜாபிதாவில் கண்டபடிசெய்து முடிப்பதானால் செல்லாவின் கலியாணத்தின் பிறகு ராமநாத பிள்ளையும் லக்ஷ்மியும் எங்காவது சத்திரம் சாவடி தேடிக்கொண்டு போயிருக்கவேண்டும். அந்நிலையில் காணச் சம்பந்திகள் மனம் சகிக்க மாட்டார்களென்பதற்காகத் தம்மை அந்நிலையி னின்றும் முன் யோசனையுடன் காத்துக் கொண்டிருந்தார் ராமநாத பிள்ளை.

அதன் பலனாக ஐந்நூறு ரூபாய் ரங்கூன்கமல நெக்லஸ் செல்லாவின் கழுத்தையலங்கரிக்க, ஐயாயிரம் ரூபாய் பெறுமான வீடு ராமநாத பிள்ளை குடும்பத்தார் வசிப்பதற்கென எஞ்சி நின்றது.

உண்மையை எத்தனை நாட்களுக்கு மறைத்து வைக்கமுடியும். மாட்டுப்பெண் கொண்டுவந்த சீர்களையெல்லாம் பெருமையுடன் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டும் ஆர்வமுள்ள செல்லாவின் மாமியார் அன்றும் வந்திருந்த தன் சிநேகிதியிடம் மருமகளின் நகைகளைப்பற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தாள்,

இவருக்கு இத்தனை செல்வாக்கில் பெண் கிடைத்து விட்டதே என்று பொருமலில் புழுங்கிக்கொண்டிருந்தாள் வந்தவள். ஏதா வது சொட்டை சொன்னால்தான் தன் மனதிற்குச் சாந்தி கிடைக்கும் என்று ஆராய்ந்து கொண்டிருந்த அந்த அம்மாவுக்குப் போலி வைரம் கண்ணை உறுத்திற்று.

"இந்த நெக்லஸ் அசல் வைரம் இல்லை போலிருக்கே" என்று இழுத்தாள் அந்த அம்மாள்.

"நன்றாய்ச் சொன்னே......!" என்று மேலே ஏதோ சொல்லத் தொடங்கினாள் மாமியார்.

"ஆமாம், அம்மா அது இமிடேஷன் கல்தான்" என்று உண்மையை ஒப்புக்கொண்டாள் செல்லா.

அவ்வளவுதான், பிடி பிடி என்று பிடித்துக் கொண்டாள் செல்லாவை. அன்று அவளுக்கும் அவள் வமிசத்திற்கும் கிடைத்த புரட்டுக்காரப் பட்டம் இன்னும் எட்டு ஜன்மம் எடுத்தாலும் நெஞ்சைவிட்டு அகலாது.

'அத்தனை நெஞ்சத் துணிச்சலாடி உங்களுக்கு. எங்கள் தரம் தெரியாமல் போலியைக் கொடுத்து ஏமாற்றிய உன் அப்பன் காலடியிலேயே கிடந்து பிராணனை விடு. இனி அரைக்கணமும் என் வீட்டில் உனக்கிடமில்லை. ஆகையால் இப்பொழுதே இந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுவிடு, என்று வானத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தாள்.

கணவன் வந்துவிட்டால் தன்னைக் காப்பாற்றிவிடுவார் என்கிற நம்பிக்கையில் அப்படியும் இப்படியுமாகப் பொழுதைக் கடத்திப் பார்த்தாள் செல்லம்மா.

கணவன் வந்தான். வந்தவன் செல்லாவுக்காகத் தாயாருடன் வாதாடுவதற்குப் பதிலாக, செல்லாவை ரயிலேற்றிவிட வந்தான். தாயார் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து தன்னை ரயிலேற்றத் துணிந்த தன் கணவனை இனி ஜன்மாதி ஜன்மத்திற்கும் ஏறெடுத்துப் பார்க்கக்கூடாதென்கிற வெறுப்புணர்ச்சி அவள் இதயமெங்கும் பரவிக் கிடந்தது.

இதுவரை ஒன்றுமே பேசாமல் மௌன விரதத்தை அனுஷ்டித்துவந்த அவன் ரயில் புறப்படப்போகும் சமயம் ஏதோ கூறினான்.

'உன் தந்தை வாக்களித்திருந்தபடி வைர நெக்லஸ் போட்டு அனுப்பினால் உனக்கு எந்த நிமிஷத்திலும் இங்கே வர உரிமையுண்டு. எனது இதயத்தில் உனக்கென ஒதுக்கிவைத்திருந்த இடம் என்றும் உனக்காகவே காத்துக்கொண்டிருக்கும்.'

இந்த மொழிகள் ரயிலில் மட்டுமல்ல. வீட்டோடு வந்து ஆறு மாதத்திற்குப் பின்னரும் இன்று நினைத்தாலும் அவள் மனதிற்கு இன்பமளிப்பதாயிருந்தது. அந்த இன்ப மொழிகளை நினைத்து நினைத்து உவகையில் மூழ்கி விடுவாள். துயரத்தால் நிரம்பியிருக்கும் தன் வாழ்வைச் சீர்படுத்தும் பொன்மொழியெனவே மனனம் செய்து வந்தாள் அன்று சொன்ன வார்த்தைகளை. அதைப் பலப்படுத்துவது போல் எப்பொழுதாவது அவள் கணவனிடமிருந்து வரும் கடிதங்களிலும் அதே கருத்தைக்கொண்ட எழுத்துக்களாகத்தானிருக்கும்.

அப்படித்தான் அன்று வந்த கடிதத்தையும் படித்துப் பார்த்துவிட்டு, தந்தையை வற்புறுத்தினாள். அவளுடைய நச்சரிப்புப் பொறுக்க மாட்டாமல்தான் மழையென்றும் பாராமல் வெளியே புறப்பட்டார்.

வெளியே கொட்டும் மழையைத் தாங்கச் சக்தியற்று உள்ளே நுழைந்தார் ராமநாதபிள்ளை. உள்ளே அவர் மகள் சொல்மாரியைத் தாங்க முடியாமல் மீண்டும் வெளியே புறப்பட்டுவிட்டார்.

## 3

வீட்டை யாருக்கோ எழுதிக்கொடுத்து ஐயாயிரம் பெற்றுக்கொண்டு வந்துவிட்டார். பணத்துடன் வந்துசேர்ந்த தந்தையைக் கண்டு குழந்தைபோல் துள்ளிக் குதித்தாள் களிப்பினால். உள்ளத்தில் பொங்கும் உவகையை மெல்லிய இசையின் மூலம் வெளியே பரவவிட்டபடியே அன்றைய வேலைகளையெல்லாம் வெகு சுறு சுறுப்பாகச் செய்து முடித்தாள்.

நாலு மணிக்கு மனைவியையும் மகளையும் அழைத்துக்கொண்டு நகைக்கடைக்குப் புறப்பட்டார் ராமநாதபிள்ளை.

திரும்பும்போது தன் மகள் வதனத்தில் நில விய இன்ப நிலையைக் கண்டு மனம் மகிழ்ந்தவராய் அவள் கழுத்தை நோக்கினுர்.

அழகே உருவாய்த் திகழும் தன் மகளையும் அந்த அழகைப் பன்மடங்கு சோபையுடன் எடுத்துக்காட்டிய அந்த மாலையையம் கூர்ந்து நோக்கினுர். இந்த அழகுப் பொருள்கள் இரண்டுக்கும் நாமே சிருஷ்டி என்கிற பெருமிதம் அவர் நடையில் துள்ளல் போட்டது.

செல்லாவோ இந்த உலகத்தையே மறந்து கனவு லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தாள். மறுதினமே தன் கணவன் அழைத்துப் போக வந்துவிடுவாரென்றும் இந்த வருஷம் தீபாவளியில் கணவனுடனும் மாமன் மாமியுடனும் களிக்கலாமென்கிற இன்பஎண்ணமும் அவளை இவ்வுலக நினைவையே மறக்கச் செய்தது.

அவள் கடிதத்தில் கண்டபடி மறுதினமே கணவன் வந்து அழைத்துப் போய்விட்டான். சொன்னதை வாங்கிப் போட்டுக்கொண்டு வந்ததற்காக மாமி தன்னைக் கண்ணில் வைத்து ஒற்றிக்கொள்வாள் என்று நினைத்தாள். அதற்குப் பதிலாக அவளைக் கண்ணில் வைத்துக் கரித்துக்கொட்ட மாமி எண்ணங் கொண்டிருக்கிருள்என்பது அவளுக்கு எப்படித் தெரியப்போகிறது.

தன்னைப் பெற்றவர்களைப் பலவந்தப்படுத்தி பல ஹிம்சைக்கும் உள்ளாக்கி அந்நகையைப் பெற்றுக்கொண்டு வந்தாள் பிடிவாதமாக. அதன் பிறகாவது அவள் வாழ்வு வளம் பெற்றதாயில்லை.

அன்று சிநேகிதியின் முன், தான் பட்ட அவமானமே மாமியின் மனதை அரிந்து கொண்டிருந்தது. இன்று மருமகள் அதே நகையைக் கொண்டுவந்துவிட்டாள் ஆனுலும் தான் பட்ட அவமானம் அவமானம்தானே என்கிற எண்ணம் ஆழப் பதிந்துபோயிருந்த அந்த மாமியாரின் மனல், இதன் காரணமாகக் குடும்பத்தில் எப்பொழுதும் சண்டையும் சச்சரவுமே. குடும்பம் இரண்டு கட்சியாகப் பிளவு



பட்டு நின்றது. கணவன் மாமன் மாமி மூவரும் ஒரு கட்சி. அவள் மட்டும் தனிக்கட்சி.

தனியாகி நின்ற அவள் எத்தனையோ கஷ்டத்தையும் சகித்துக்கொண்டு பொறுமையுடன் எப்படியோ காலம் தள்ளிவந்தாள்.

இந்தச் சமயத்தில் அவள் பெற்ருேர் வசிக்கும் ஊரிலிருந்து உறவினர் ஒருவர் வந்திருந்தார். வீட்டை விற்ற பிறகு இராமநாதபிள்ளையின் சொற்பச் சம்பளத்தில் குடியிருக்கவும் செலவழித்துக்கொண்டு குடும்பம் நடத்த முடியாமலும் மிகவும் கஷ்டப்பட்டாராம். அதுவும் சில நாளைக்கே. வயதாகிவிட்டபடியால் இப்பொழுது வேலையுமில்லாமல் அவர்கள் படுகிற அவதியைப்பற்றி ஊரிலிருந்து வந்திருந்தவர் கூறியதைக் கேட்டபோது செல்லாவின் மண்டையில் ஓங்கி அடித்தது போலிருந்தது.

எந்த நகைக்காகப் பெற்ருேர்களைத் துன்புறுத்தி, கஷ்டத்திற்குள்ளாக்கினளோ இன்று அந்த நகையால் அவள் அடைந்த பலன்? மாமியார் அதைத் தன் பெண்ணுக்கு வாங்கிப் போட்டு, புருஷன்வீட்டிற்குஅனுப்பிவிட்டாள்.



நகைதான் தங்காமல் போனுலும் அன்பாவது உண்டா? அதுவுமில்லை. அநுதாபம்கூடக் கிடையாத அவர்களுக்காக இன்று தன் பெற்ருேர்களைத் தெருவில் நிற்கவைத்தது நியாயம் தானு என்று இடித்துக்கூறியது அவள் மனம்.

"ஐயோ! அப்பா இந்த அற்ப நகைக்காக உங்களை என்னபாடு படுத்தினேன்" என்று கதறிவிட்டாள் வாய்விட்டு.

## 4

"ஏண்டி செல்லா! என்ன உளர்றே' கதவைத் திறந்துகொண்டு வந்தாள் லக்ஷ்மி அம்மாள்.

"அப்பா எங்கேம்மா. வீட்டை விற்பதற்காக வெளியே போய்விட்டார்களா அம்மா" என்று பதறிக்கொண்டே கேட்டாள்.

'விற்றுவிட்டே வந்துவிட்டேனம்மா' என்று கதறிக்கொண்டே வந்து சேர்ந்தார் தந்தை.

'வேண்டாம் அப்பா வீட்டை விற்று எனக்கு நகை செய்துபோடவேண்டாமப்பா. பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்' என்று அவள் கூறியதைக் கேட்டு இருவரும் திடுக்கிட்டு நின்றனர்.

'ஏது ஏது, இத்தனை நேரம் என்னை விரட்டுவிரட்டு என்று விரட்டினுய். இப்பொழுது பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடச் சொல்கிருய். கெஞ்சினுல் மிஞ்சுவது மிஞ்சினுல் கெஞ்சுவது என்ற பழமொழி உன்வரையில் சரியாக இருக்கிறதே' என்று சிரித்தார் தந்தை. வீட்டை விற்றுவிட்ட துக்கம் ஒருபுறமிருந்தாலும் மகளின்போக்கு அவருக்குச் சிரிப்பை மூட்டியது.

அன்பினுல் வாழமுடியாத நான் பணத்தினுல் வாழவேண்டிய அவசியமில்லையப்பா. இன்றுவரை நெக்லஸுக்காக வீட்டை விற்றீர்கள். நாளைவரை ஒட்டியாணம் கேட்டால், விற்பதற்கு என்ன இருக்கிறது? இருக்கிற ஒன்றையும் என்பொருட்டு விற்றுவிட்டால் நாளை உங்கள் கதி? மேலே பேசமுடியாமல் துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது.

'என்னைப்பற்றிய கவலை உனக்கெதற்கம்மா'

'அதையே தான் நானும் கேட்க விரும்பினேன். உங்களைப்பற்றிய கவலை எனக்கில்லையா?' என்று மடக்கினுள்.

வாசலில் வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டு மூவரும் திரும்பினர் வாசற் பக்கம். திரும்பிய அவர்கள் ஆச்சரியத்தினாலும் ஆனந்தத்தினாலும் அப்படியே கல்லாய்ச் சமைந்து நின்றனர்.

வண்டியிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்தான் செல்லாவின் கணவன்.

'மாப்பிள்ளை வாருங்கள்' என்று நாக்குழற வரவேற்கும் மாமனாருக்கும் அப்பாலிருந்த அவன் மனைவியை நோக்கி வட்டமிட்டன அவன் கண்கள்.

இப்பொழுதாவது மனம் வந்ததா என்று கேட்பது போலிருந்தது அவள் பார்வையில் தோன்றிய கெஞ்சல் சுபாவம்.

'சாயந்திர வண்டியில் புறப்பட்டுவிடலாம், செல்லா தயாராயிரு' என்று கூறியபோது செல்லாவுக்குத் தான் கேட்டது கனவா நனவா என்றே பிரமையாக இருந்தது.

பெற்றோரை நமஸ்கரித்துவிட்டு வண்டியில் ஏறியபிறகுதான் அவளுக்குத் தான் காண்பது கனவல்ல என்பது உறுதிப்பட்டது. வண்டி சிறிது தூரம் சென்றது. தன்னையே நோக்கிக்கொண்டிருக்கும் கணவனிடம் ஏதாவது பேச்சுக் கொடுக்க நினைத்தவள்.

" நீங்கள் பொல்லாதவர்கள் " என்றாள்.

" இல்லை நீதான்" என்று அவன் திருப்பிச் சொல்லவே திடுக்கிட்டுவிட்டாள்.

" நானா? நான் என்ன செய்தேனாம் உங்களை "

" அடேயப்பா இன்னும் என்ன செய்யவேண்டும். இரண்டு மூன்று நாட்களாக என்னைப் படுத்திவைத்த பாடு."

" நானா? கனவுகண்டீர்களா."

"கனவேதான்கனவில்தோன்றிஎன்னுடைய செய்கைகளை, அம்மாவுக்குப் பயந்து உன்னைப் புறக்கணித்துவிட்டு திருப்பி அழைக்கத் துணிவில்லாமல் கோழையாக நின்ற என்னை இடித்துக் காட்டி......"

" மேலே சொல்லுங்கள்."

" சொல்வதற்கென்ன இருக்கிறது. மறு ரயிலில் புறப்பட்டு வந்து உன்னையும் கூடவே அழைத்துச் செல்லும் துணிவுக்கு வீரனாக்கிவிட்ட உனக்கு என் நன்றியைத் தெரிவிக்க வேண்டாமா" என்று கூறினான்.

ஆனால் அவளோ கணவனுக்கு மனம் மாறும் நிலையிலும், தந்தையை நச்சரித்துக் கொண்டிருந்த தன் மனம் மாறும் அளவுக்கும் தோன்றிய கனவுச் சிருஷ்டிக்குத் தன் மனமார்ந்த நன்றியைச் செலுத்திக்கொண்டிருந்தாள். ●

பார்லி வாட்டரும், கஞ்சியும்
இவ்விதம் சுலபமாகத் தயாரிக்கலாம்




பார்லி வாட்டர்: பியூரிடி பார்லி இரண்டு டீஸ்பூன் மட்டத்திற்கு எடுத்துக்கொண்டு சிறிது ஜலம் சேர்த்துக் கலந்து ஒரு பைன்ட் ஜலம் விட்டு ஐந்து நிமிஷம் கொதிக்கவிடவும். பிறகு ருசிக்குத் தக்கபடி உப்பு சர்க்கரை அல்லது எலுமிச்சம்பழ ரஸம் சேர்க்கவும்.

கஞ்சி: இதை வழக்கம்போலத் தயாரிக்கவும். ஆனால் தயாரிக்க இருபது நிமிஷ நேரம் தான் ஆகும். ஒரு ஸ்பூன் பியூரிடி பார்லி எட்டு ஸ்பூன் சாதாரண பார்லி அரிசிக்குச் சமம் என்பது ஞாபகமிருக்கட்டும்.




அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட், தபால் பெட்டி 664, கல்கத்தா.

APBX-7 TAM

வரலக்ஷ்மிப் போட்டி — ௯ Govt. Regd. No. 816

# பரிசு ரூ 6000



**2-வது பரிசு 2000** **முதற் பரிசு ரூ 3000** **3-வது பரிசு 1000**

பரிசுகள் நிபந்தனைப்படி கியாரண்டியானவை.

இப்போட்டியின் சீலிட்ட விடை சென்னை ப்ரீமியர் பாங்க் ஆப் இந்தியாவில் டிபாசிட் செய்யப்பட்டுள்ளது.

★ **பிரவேசக்கட்டணம் கூப்பன் ஒவ்வொன்றுக்கும் அணு நான்கு மட்டுமே** ★

**முடிவு தேதி 9—12—50**

| | | விடைகள் 1 | 2 |
|---|---|---|---|
| 1 | மனைவி என்றும் மக்கள் என்றும் கவலை உண்டா இவனுக்கு ? | ஆண்டி | ஒண்டி |
| 2 | இந்தக் காலத்திலே இது இருப்பவன்தான் மேலானவனுயிருக்கிறன். | காசு | காணி |
| 3 | இப்படியான பேச்சைக் கேட்க விரும்பமாட்டார்கள் சிலர். | புகழ் | புகார் |
| 4 | தினமும்.........சாப்பிடுவது உடம்புக்குக் கெடுதல்தான். | மருந்து | விருந்து |
| 5 | சிலர் தமது இதை வெளிக்காட்டிக்கொள்ள மிகவும் வெட்கப்படுவர். | வறுமை | மடமை |
| 6 | இதே பெரிது எனக் கருதுபவர்களுமிருக்கிருர்கள் ! | மானம் | தனம் |
| 7 | என்னதான் பெண்கள் ஆண்களுக்குச் சமமேயானுலும் இது குறையாதிராவிட்டால் கெடுதல்தான். | ஒடுக்கம் | ஒழுக்கம் |
| 8 | கணவன் இப்படியானவன் என்ருல் எந்தப் பெண்தான் பெருமை கொள்ள மாட்டாள் ! | அழகு | அன்பு |
| 9 | நுட்பமான யந்திரவேலை செய்கிறவர்களுக்கு நல்ல இது அவசியம் வேண்டும். | கல்வி | கருவி |
| 10 | அதிதிகளுக்கு இது அளித்து உபசரித்தார்கள் நமது முன்னேர்கள். | ஆசனம் | போசனம் |

மேலே உள்ள கட்டத்தில் பத்து குறிப்புகளும் அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு இரண்டு விடைகளும் தரப்பட்டுள்ளன. அதில் குறிப்புக்கு மிகப்பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும். விடைகளைச் சாதா காகிதத்திலும் எழுதலாம். அச்சுக் கூப்பன்களும் தேவையானவர்களுக்கு அனுப்பப்படும். விடைகளை அப்படியே வார்த்தைகளாகவும் எழுதலாம். வார்த்தைகளுக்குப் பதிலாக 1, 2, என்ற எண்களை உபயோகித்தும், எழுதலாம். 'பர்முடேஷன்' (Permutation) முறையும் அனுமதிக்கப்படும்.

கட்டணத்தை மணியார்டர் மூலமேதான் அனுப்பவேண்டும். ம. ஆ. ரசீதும் கண்டிப்பாய் கூப்பன்களுடன் சேர்த்து அனுப்பவேண்டும். ம. ஆ. பாரத்தின் அடிக் கூப்பனிலும் அனுப்புபவரின் முழு விலாசம் எழுதவேண்டும். இப்போட்டியின் சரியான விடை மார்கழி காவேரியில் வெளிவரும். மானேஜரின் தீர்ப்பும் எமது நிபந்தனைகளுமே முடிவானதும் சட்டப்படிக் கட்டுப்படுத்துவதுமாகும். நிபந்தனைகள் வேண்டுவோர் எழுதவும்.

கூப்பனும் கட்டணமும் அனுப்பவேண்டிய விலாசம் :-

**மானேஜர், வரலக்ஷ்மி கம்பெனி**

**"ஸ்ரீவாஸ்" பல்மநேர் P. O. (சித்தூர் ஜில்லா)**

**அறிவிப்பு :** இந்த இதழ், குறிப்பிட்ட தேதியைவிட முன்னதாகவே வெளிவந்துவிட்டமையால், போட்டி 8-ன் சரியான விடையை இதில் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம். ஆயினும் நேயர்கள் யாவருக்கும் விடை தபால் மூலம் அறிவிக்கப்படுகிறது. வழக்கம்போலவே பரிசு விபரமும் ஜாபிதாவும் மற்றும் அடுத்த இதழில் வெளிவரும்.

மானேஜர்.

**மறந்துவிடாதீர்கள் ! வரலக்ஷ்மி போட்டி—8 முடிவு தேதி 10—11—50.**

**வரலக்ஷ்மிப் போட்டி -7-முடிவு.**



வரலக்ஷ்மிப் போட்டி நெ. 7

சரியான விடை

1. மடைந்த ......... 2
2. கட்டடம் ......... 2
3. பழமொழி ......... 2
4. வாசனை ......... 1
5. மானி ......... 1
6. கலை ......... 1
7. புத்தி ......... 1
8. பயிற்சி ......... 1
9. மனம் ......... 2
10. பழமை ......... 2

We hereby certify that the above is the Solution in original deposited with us, by VARALAKSHMI COMPANY on 31-8-50 ...... in a sealed cover which was opend in our presence to day and that a copy of the above solution has been lodged with the bank.

For PREMIER BANK OF INDIA LTD.

V. Ramaswamy 26-X-50.

Agent, (MADRAS.)

**முதற் பரிசு (சரியான விடைக்கு)**
**தலைக்கு ரூ. 20—0—0 வீதமும்**

**2வது பரிசு (ஒரு தப்புள்ள விடைக்கு)**
**தலைக்கு ரூ. 2—0—0 வீதமும்**

**3-வது பரிசு (இரண்டு தப்புள்ள விடைக்கு)**
**தலைக்கு ரூ. 0—8—0 வீதமும்**

பிரித்து வழங்கப்பட்டன.
பரிசுத்தொகைகள் 19-10-50 அன்று அனுப்பப்பட்டன.

பரிசு பெற்றவர்களின் சுருக்கமான ஜாபிதா.

ஆர். சுலோசனா, பெஸண்ட் ரோட், கும்பகோணம். வி. வை. கிருஷ்ணன், வடக்குக் கொட்டையூர், கும்பகோணம். கே. ராமமூர்த்தி கொடவாசல். டி. கே. வேணுகோபால், மஹாதானத்தெரு, மாயவரம். ஆர். ராஜுசிகாமணி, மேலப்புதூர். எஸ். கிருஷ்ணமூர்த்தி, திருவடமருதூர். கே. எஸ். ஜே. லக்ஷ்மணன், தாராபுரம். டி. ரெங்கசாமி, மேடூர், கோவை ஜில்லா. எம். ஆர் நடராஜன், மேடூர். என். ரங்கநாயகி, கரூர். என். கே. வீராசாமி, விஷமங்கலம் எல். சுப்பிரமணியம், விஷமங்கலம். பி. மருதை, கரூர். பி. மாணிக்கம், மதுரை. ஆர். ஆர். ராமசாமி அய்யர், மதுரை. ஏ. என், கிருஷ்ணன், மதுரை. எஸ். என். நாராயணசாமி, மதுரை. என். வி. சுப்பிரமணிய அய்யர், மதுரை. என். எஸ், சங்கர்லால், மதுரை. எஸ். நாகராஜன், மதுரை. எம். முருகானந்தம், மதுரை. ஓ. வி. ஜவஹர்லால், மதுரை. வி சுப்பிரமணியம், மதுரை. பி. திருமலை, மதுரை எல். என். எஸ், குப்புசாமி அய்யர், மதுரை வி, அப்துல்கபூர், பஜார் வீதி, கீரனூர். மதுரை ஜில்லா, என். மீனும்பாள், மதுரை. எஸ். சுப்பலக்ஷ்மி, ஸ்ரீ வைகுண்டம். எஸ், மீனாக்ஷி, ஸ்ரீ வைகுண்டம். ஜி பொன்னப்பன், ரெயில்வே புரோக்கர் செந்திட்டை, திருவனந்தபுரம். வி, வி. வீரபத்திரன், சாத்தூர். ஆர். முத்துராமன், சாத்தூர். ஏ. முத்திருலாண்டி சேர்வை, சாத்தூர். சு. பெரி, சொ, சுப்பிரமணியன், பள்ளத்தூர், ஏ. வைத்தீசுவரன் செட்டியார், புதூர். மிஸஸ். வி. கே. மூர்த்தி, ஆலப்புழை. எம். ராஜேஸ்வரி, சென்னை. இ. தனபால். சென்னை. கே. சுவாமிநாதன், பரங்கிமலை. ஆர். கே. பிரஸாத், சென்னை, என். பாக்யலக்ஷ்மி, சென்னை. கே. கோவிந்தராஜன், ஐ. ஏ. எப். ஆவடி. எம். எஸ். கோபாலசாமி, ஆவடி. இ. டி. நாதன், ஆவடி. டி. ஆர். சௌரிராஜுலு, தலச்சன்காடு, தஞ்சை ஜில்லா. டி. எஸ். பத்மநாபன், உதகமண்டலம். ஆர். வஞ்சுளவல்லி, பங்களூர். கே. வி. வெங்கடராமன், பங்களூர். கே. வி. ஸரோஜா, புதுடில்லி. ஆர். ஜயா, புதுடில்லி. வி. வைத்தியநாதன். கல்கத்தா. எஸ். கமலா, பம்பாய். எஸ். ராதா, பம்பாய்.

[மற்றவர்கள் யாவருக்கும் தபால் மூலம் அறிவிக்கப்பட்டுவிட்டது.]

---

நமது அத்தாட்சிப் பெற்ற கலக்டர்கள்.

**மதுரையில்**

1. ஸ்ரீ என். எஸ், விசுவநாதன், 20, கான்ஸா மேட்டுத்தெரு, மதுரை.
2. ,, வி. என். ராதாகிருஷ்ணன், 10, பால்மால்க்ராஸ் ஸ்ட்ரீட், மதுரை
3. ,, எம். எஸ். கிருஷ்ணன். 132, 133, தெற்கு மாசி வீதி, மதுரை.

**மேட்டூரில்**

4. ,, ஆர். கிருஷ்ணமூர்த்தி, இ. 72, கெமிகல் காலனி, மேட்டூர் டாம்.

**கடலூரில்**

5. ,, பி. மரியதாசை, I. E. அப்பாவு முதலித்தெரு, கடலூர் என். டி.

**பல்மநேர்**

6. ,, ஆர். கிருஷ்ணமூர்த்தி, வியூபேட்.

---

**கூப்பன்களும் கட்டணமும் சேகரித்து அனுப்ப கலக்டர்கள் எங்கும் தேவை**

அழகிய பிரேமாவதி
தன் சருமத்தை
அழகுடன்
வைத்திருக்க ஏன்

# லக்ஸ்
# டாய்லட்
# சோப்பை

தேர்ந்தெடுத்திருக்கிறார்
என்பதை
விளக்கிக்கூறுகிறார்



"என் சருமத்தை மிருதுவாகவும் மாசுமறுக்கள் இல்லாமலும் வைத்துக்கொள்வதில் எனக்கு ஒருபொழுதும் தொல்லையே இல்லை. இதனால் ஒரு சினிமா நட்சத்திரத்திற்கு ஏற்படும் சௌகரியம் சிறிதளவன்று. நான் லக்ஸ் டாய்லட் சோப்பிற்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். ஏனெனில் இந்த அழகிய வெண்மையான சோப்பினால் சருமத்தைப்பாதுகாப்பது மிகவும் சுலபம். அன்றியும் லக்ஸ் டாய்லட் சோப் மிகவும் நேர்த்தியான மனதை மயக்கும் பரிமளத்தோடுகூடினது என்பதையும் நான் அறிவேன்."




★ இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தையும் வசீகரமாக்கச்செய்யும்.

**சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்.**

LTS. 252-172 TM


தெய்வம்
தந்தது



# மாயாவி

டெலிபோன் மணி 'கிரிங் - கிரிங்' என்று ஒலித்தது.

ரிஸீவரை எடுத்து "ஹலோ" என்றேன்.

"மிஸ்டர் ராம், பிளீஸ்"

"ஸ்பீக்கிங்"

"நமஸ்காரம் ஸார்!"

கம்பியின் எதிர் முனையைப் பிடித்திருப்பவர் யார் என்பதை "நமஸ்காரம் ஸார்" என்ற அத்

தமிழ் வார்த்தைகள் எனக்கு உணர்த்தவில்லை. ஆனால், அதைப் பேசியவர் தமிழர் அல்லர் என்பதைக் கொச்சையான அப்பேச்சு நன்கு அறிவுறுத்திற்று.

''நமஸ்காரம்; யார் பேசுவது?''

''நான்தான், டே''

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது; என்னால் நம்பவே முடியவில்லை 'ஹலோ! உண்மையாகவா? டேதானு பேசுவது?''

''இன்னும் சந்தேகமா?''

''டே பாபு, இது உலகின் எட்டாவது அதிசயம்தான். நீங்கள் எப்படி இதற்குள் தமிழ் பேசக் கற்றுக்கொண்டீர்கள்? எங்கே கற்றீர்கள்?''

டே ஆங்கிலத்தில் சம்பாஷணையைத் தொடர்ந்தார். ''ராம்; 'அதற்குள்' என்ற உங்கள் வார்த்தை ஒரு மணி நேரத்தையோ, ஒரு நாளையோ குறிப்பிடவில்லை; இரண்டு மாதங்களை விழுங்கி விட்டிருக்கிறது என்பது நினைவில் இருக்கிறதா? இல்லாவிட்டால் நான் ஞாபகப்படுத்துகிறேன். உங்கள் நண்பர் டேயை நீங்கள் சந்தித்து இன்று சரியாக அறுபத்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன. இதென்ன ராம், இந்த ஏழையிடம் இத்தனை பராமுகமாக இருந்துவிட்டீர்கள்?''

டே பலமாகப் பிடித்துக்கொண்டு 'விளாச' ஆரம்பித்து விட்டார். தவறு என்மீதுதான் இருந்தது. வாரம் தவறாது ஒரு தடவை சனியன்று பிற்பகலில் அவரைச் சந்தித்து வந்தவன், இப்பொழுது நாள்தோறும் அவருடைய நிலைய வாயில் வழியே போய் வந்துகொண்டிருந்தும் உள்ளே நுழையாது சென்றேன் என்றால் அது மகத்தான தவறல்லவா? ஆயினும் அது டேயிடம் வெறுப்போ, அலட்சியமோ ஏற்பட்டதால் நிகழ்ந்ததல்ல; ஆனால்,

மனிதன் நிற்காமல் ஓடும் யந்திரம் அல்லவே? அவன் அலைச்சல்களுக்கும், வேலைகளுக்கும் ஒரு எல்லை வேண்டாமா? முன்பெல்லாம், ஆபீஸ் விட்டதும், வீடு என்ற முறை இருந்து வந்தது. ஆனால், இந்த இரண்டு மாதங்களில் அந்த நியதிக்கு இடையே புதிய வேலை ஒன்று என்னைக் கவர்ந்து இழுத்துவிட்டது. காரியாலயத்தை ஐந்து மணிக்கு விட்டு, அப்புதிய வேலையில் இரண்டுமணி நேரம் என்னை மறந்து ஈடுபட்ட பிறகு, 'ஏழு—பத்து' ரெயிலைப் பிடித்து வீட்டை அடைய ஓடிக்கொண்டிருக்கும்போது, என் உடம்பின் நரம்பு ஒவ்வொன்றும், ''ஏ இரக்கமற்ற பாவி, எங்களுக்குச்சற்று ஓய்வு அளிக்கமாட்டாயா?'' என்று கதறிக் கொண்டிருக்கும்.

டேயின் நிலைய வாயில் வழியாகவே ஸ்டேஷனுக்கு ஓடுவேன். ஆனால் உடம்பும் உள்ளமும் சோர்ந்திருந்த அந்நிலையில் அவரிடம் நாள்தோறும் அகப்பட்டுப் பின்னும் ஒரு இரண்டு மணி அவகாசத்தைப் போக்கிக் கொள்ளத் துணியவில்லை. ஆம்; டேயிடம் அகப்பட்டுக் கொண்டால், அவ்வளவுதான்; வீடு—வாசல் எல்லாவற்றையும் மறந்துவிட வேண்டியதுதான். தலைக்குமேல் குவிந்து கிடக்கும் வேலையினூடே, என்னை ஓர் நாற்காலியில் உட்கார்த்தி வைத்து, 'கிரஷ்'ஷையும், வெற்றிலை பாக்கையும் இரை போட்டுவிட்டு, அங்கும் இங்குமாகப் பேச்சிழுத்துக்கொண்டே இருப்பார். ஏற்கனவே, ஏழுமணி ரெயிலைப்பிடித்து எட்டு மணிக்கு வீடு வருவதற்கு என் மனைவி முணு - முணுத்துக்கொண்டிருந்தாள். அந்த நிலையில், டேயிடமும் சிக்கி இரவு பத்துக்கும், பதினொன்றுக்கும் திரும்பினால் கேட்கவே வேண்டாம்.

ஆனால், டே இந்தச் சமாதானங்களை எளிதில் ஏற்றுக்கொண்டு விடுவாரா, என்ன? இருந்தாலும் அதைச் சொல்லாமல் அவரிடமிருந்து தப்பவும் முடியாது. ''எனவே, பராமுகம் ஒன்றும் இல்லை, டே பாபு; இப்பொழுது வந்து...'' என்று தயக்கத்துடன் இழுத்தேன்.

''என்ன, வந்து - போய்...! டேயை மறந்து விட்டீர்கள்; திறந்து சொல்லுங்களேன்.'' அவர் குரலில் ஆத்மார்த்தமான வருத்தம் தொனித்தது.

''நீங்கள் தவறாக நினைத்துவிட்டீர்கள். பாபூஜி. உண்மை இதுதான்: இப்பொழுது ஆபீஸ் விட்ட பிறகு புதிய வேலை ஒன்றில் தினமும் ஈடுபட்டு விடுகிறேன்.

''மன்னித்து விடுங்கள், மிஸ்டர் டே, போனது போகட்டும்; இனிமேல்......''

''போனது போகவாவது? இத் தவறுக்குச் சரியான தண்டனை அளிக்காமல் விடப் போவதில்லை. அதையும், இன்று, இப்பொழுதே ஆரம்பித்துவிடப் போகிறேன். இன்று ஆறு மணிக்கு அவசியம் உங்களை எதிர்பார்த்திருப்பேன்.''

''டே பாபு, தயவு செய்து......''

''உங்களிடம் தயவு காட்டவே மாட்டேன், ராம்! என்னை இந்த இக்கட்டில் நீங்கள்தான் மாட்டி வைத்தீர்கள். எனவே அதன் அநுபவத்தில் நீங்களும் உரிய பங்கைப் பெறுது

போக்குக் காட்டிவிட முடியாது. பேசாமல் ஏதோ ஒரு காரியாலயத்தில் குமஸ்தாவாக இருந்தவனை நீங்கள் தானே பழைய தொழிலில் இழுத்துப் போட்டீர்கள்? இப்போது அந்த வியூகத்தில் நான் மாத்திரம் சிக்கி அவதிப் படுவதா? உங்கள் பங்கையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.''

'சிக்கலான கேசு ஒன்று அவரிடம் வந்திருக்கிறது. அவ் விஷயமாகப் பேசவே இவ்வளவு அவசரமாக அழைக்கிறார்' என்றுதான் இப் பேச்சிலிருந்து நான் ஊகித்தேன். மேலும், 'கேசு' என்றதுமே என் மனம் மற்றெல்லாவற்றையும் மறந்துவிட்டு அவருடைய மனச் சிகிச்சை நிலயத்தை நோக்கித் தாவி விட்டது. ஆம்; ஒன்றா? இரண்டா? டே தந்த 'டிப்ஸ்'களை வைத்துக்கொண்டு எத்தனை மனத் தத்துவக் கதைகளை எழுதினேன்? அவை ஒவ்வொன்றும் எவ்வாறு என் எழுத்துத் திறமைக்குப் புகழ்ச்சி ஆயின? எனவே அத்தகைய சந்தர்ப்பம் ஒன்றுடன் மீண்டும் அழைக்கிறார் என்று உணர்ந்த போது, தேனைக் கண்டதும் பாய்ந்தோடும் ஈயைப் போலப் பாய்ந்தோடிய மனத்தை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

— 2 —

பின்ஸேயின் சகோதரி ரோகிணியின் தீராத மன நோயை எளிதாகத் தீர்த்துவைத்த பின்னர், டேயின் பெயர் பம்பாயில் பிரபலமாகிவிட்டது. 'மரைன் லைன்ஸி'லுள்ள அவருடைய சிகிச்சை நிலயத்தில் சதா காலமும் நோயாளிகள் வந்துபோனவாறு இருந்தனர். இதனால் எல்லாவற்றையும் இழந்து அகதியாக வந்த டே, செல்வத்திலும் புகழிலும் சிறந்து விளங்கினார்; என்றாலும், தமது உடல், நண்பர்கள், மற்றும் வாழ்க்கைத் தேவைகள் எவற்றையுமே கவனிக்கப் பொழுதுகிட்டாததாயிற்று. சென்ற இரண்டு மாதங்களாக அவரைச் சந்திக்காது இருந்ததற்கு, இதை நான் உணர்ந்து கொண்டதும் ஓர் காரணமாகும். ஆம்; என் பொழுதை வீணாக்கி, அவர் வேலைக்கும் குந்தகமாய் அடிக்கடி அங்கே போய் அரட்டை அடிப்பதில் அர்த்தம் என்ன இருக்கிறது?

ஆனால், இன்று அவருடைய சிகிச்சை நிலயத்தை அடைந்தபோது அங்கே வெறிச் சென்று இருந்தது. மருந்துக்கு ஒரே ஒரு நோயாளியைக்கூடக் காணவில்லை. "இது என்ன, டே பாபு, சிகிச்சை நிலயத்தை மூடிவிட்டீர்களா?" என்று திடுக்கிட்டு வினவினேன்.

"ஆம்; இன்று மாலை ஒருபொழுது மாத்திரம்" என்று அவர் கூறிய பிறகுதான் எனக்குச் சரியாக மூச்சு வந்தது.

"ஏன்? என்ன விசேஷம்?"

"மிஸ்டர் ராம், பக்தன் ஒருவன் இருக்கிறான். அவன் தனது இஷ்ட தெய்வத்தைக் காணப் பலகாலம் தவம் இயற்றுகிறான். கடைசியில், தெய்வம் அவனுக்குக் காட்சிதர இசைந்து ஒரு பொழுதைக் குறிப்பிடுகின்றது. அப்போது அந்தப் பக்தன் ஊர் முழுவதையும் அங்கே கூட்டி, வரும் தெய்வத்தின் கவனத்தைப் பலர் கவர விரும்புவானா? என் நிலயத்துக்கு இன்று தெய்வம் வந்திருக்கிறது. எனவே, அதன் வருகையால் நானே முழுவதும் பயன்கொள்ளக் கருதி, நிலயத்தைக் காலிசெய்து வைத்திருக்கிறேன்." டே இவ்வாறு கூறிவிட்டு என்னைக் கேலியாக நோக்கினார்.

இந்தப் புதிர்ப் பேச்சு எனக்குச் சற்றும் விளங்கவில்லை. 'அவர் தெய்வம் என்று என்னையா குறிப்பிடுகின்றார்? ஐயோ! அப்படியானால், இத்தனை நாட்களாக இங்கே வராது இருந்தது எத்தனை தூரம் அவர் மனத்தைப் புண்படுத்தி யிருக்கவேண்டும்?' என்பவை போன்ற பல கேள்விகள் அகத்தே சுழல, நான் பதிலின்றி நின்றபோது, அந்த மனத் தத்துவப் புரொபசர் என் கவனத்தைச் சட்டென்று வேறொரு திசையில் இழுத்தார். என் கையிலிருந்த பத்திரிகையைப் பிடுங்கிக் கொண்டு, "இதுதானா, உங்களை என்னிடமிருந்து பிரித்துவைத்த பத்திரிகை? பெயர் என்ன? ச - சர் - சர்வோ - த - ய - ம்; ஓஹோ! சர் - வோதயமா? பெயர் கவர்ச்சியாக அமைந்திருக்கிறதே. காந்தீஜீ இயற்றிய பெயரல்லவா, இது?"

டேயின் ஒவ்வொரு வார்த்தையும், செயலும், அன்று என்னை ஆச்சரியப் பெருக்கில் மூழ்கடித்தன. ஆம்; இந்த இரண்டு மாதங்களில், என்னைக் கேலி செய்வதற்கென்று, யாரோ ஒரு தமிழரிடமிருந்து, பழக்கத்துக்குத் தேவையான தமிழ் வார்த்தைகள் சிலவற்றைக் கற்றுக்கொண்டிருக்கிறார் என நினைத்திருக்க, மனிதர் தமிழைப் படிக்கவும் அல்லவா ஆரம்பித்துவிட்டார்.

'டே பாபு, நீங்கள் அதிசயிக்கத் தக்க மனிதர்தாம். பாபூஜி, எப்படி, யார் சிட்சையில் எதற்காக இத்தனை விரைவில், வடக்கத்தியார்கள் கண்டு அஞ்சுகிற தமிழ் மொழியைக் கற்று அறிந்தீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

டே சிரித்துவிட்டுச் சொன்னார்: "அதுவா மிஸ்டர் ராம்? அதன் விடை உங்களுக்கே தெரிந்திருக்க வேண்டுமே? எதற்காக நான் மராத்தியைக் கற்றுக்கொண்டேன்? எதன் பொருட்டுக் குஜராத்தி மொழியை அறிந்தேன்?"

"தொழில் நிமித்தமா?"

"ஆம் ராம், ஆம்; தமிழ் மொழி மாத்திர மல்ல; தமிழர்களின் பழக்க வழக்கங்களைக் கூட ஓரளவு தெரிந்துகொண்டிருக்கிறேன். அதைச் செயலில்—அதாவது தொழிலிலும் புகுத்தி............"

டேயை நான் மேலே பேசவிடவில்லை. அவரிடம் தமிழர் ஒருவர் மனச்சிகிச்சை பெற்று வருகிறார் என்பதை இப்பேச்சு அறிவுறுத்தியபோது என் மனத்தை ஒரு பூரிப்பு உணர்ச்சி ஆட்கொண்டது. இதுவரை எத்தனையோ மன நோயாளிகளின் விசித்திரக் கதைகளை அவர் வாயிலாக அறிந்து அவற்றை என் எழுத்துத் துறைக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். ஆனால், அவற்றைக் கொண்டு கதை அமைக்கும்போது, இத்தனை அபூர்வமான கதைகள் ஒன்றிலாவது தமிழ் நாட்டு நிலைக்களனைப் புகுத்த முடியவில்லையே? ஒரு தமிழனாவது அத்தகைய சந்தர்ப்பத்தை அளிக்க முன்வரவில்லையே? நம் தமிழ்நாடு என்றேனும் மனச்சிகிச்சையில் நம்பிக்கை கொள்ளுமா? கொண்டு அதனால் பயன் அடையுமா? என்று புலம்பியதுண்டு. அந்தப் புலம்பல் தீர இன்று வழி பிறந்திருப்பதை அறிந்ததும் என்னைக் களிப்புச் சூழக் கேட்பானேன்? ஆகவே, டேயின் பேச்சை இடை மறித்து "உண்மையாகவா, மிஸ்டர் டே? தமிழ்க் கேசா உங்களைத் தேடி வந்திருக்கிறது? சொல்லுங்கள் பாபூஜி; உடனே அதன் முழு விவரத்தையும் எனக்குச் சொல்லுங்கள்" என்று அவசரப்பட்டேன்.

ஆனால், டே என் அவசரத்தையோ, ஆச்சரியத்தையோ கவனம் செய்யவில்லை. அவர் என்னிடமிருந்து பிடுங்கிக்கொண்ட பத்திரிகையைப் பிரித்து, அதன் பக்கங்களைப் புரட்டித் தலையங்கங்களை எழுத்துக் கூட்டிப் படிக்கலானார். அந்த இதழில் நான் எழுதியிருந்த பகுதிக்கு வந்ததும், அவர் ஒரே துள்ளாகத் துள்ளி,

"இதோ ராம்; இதோ உங்களின் 'என்ன வேண்டும்?'; இருங்கள்; இதை முதலில் படித்து முடித்துவிட்டுத்தான்......"

"பாபூஜி" என்று கூவினேன், நான்.

"ஏன் ராம்?"

போதும் விளையாட்டு; இந்தப் பத்திரிகையை நீங்களே வைத்துக்கொள்ளலாம், இரவு ஆற அமரத் தடவிப் படியுங்கள், இப்பொழுது எனக்கு அந்தத் தமிழ்க் கேசைப் பற்றிக் கூறுங்கள்."

"ராம், நான் கூறப்போவதில் உங்களுக்கு இருக்கும் ரசனையைப்போலவே உங்கள் எழுத்தில் எனக்கு ஈடுபாடு இருப்பது இயற்கை தானே! சற்றுப்பொறுங்கள்; இதோ, நீங்கள் ஒரு தடவை வெற்றிலை போடுவதற்குள் படித்து முடித்துவிடுகிறேன்."

"டே பாபு, நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்; உங்கள் விலை உயர்ந்த பொழுதை அந்த உபயோகமற்ற விஷயத்தைப் படிப்பதில் விரயமாக்காதீர்கள். அது எனது கதையோ, கட்டுரையோ அல்ல; பம்பாய்த் தமிழர்களின் கவனத்துக்குச் சமர்ப்பித்திருக்கும் ஒரு சிறு வேண்டுகோள், அது"

"வேண்டுகோளா? என்ன வேண்டுகோள்? எதைப்பற்றி?"

"தயவு செய்து பத்திரிகையை மூடுங்கள் டே பாபு; நானே அதைச் சொல்லிவிடுகிறேன்."

அவர் மனமின்றிப் பத்திரிகையை மூடிக் கொண்டு, "சரி, சொல்லுங்கள்" என்றார்.

"பிரமாதமாக ஒன்றுமில்லை; பம்பாயில் தமிழர்கள் குடியேறி முப்பது ஆண்டுகளுக்கு அதிகமாகவே ஆகிவிட்டன. இன்று சுமார் லட்சம் தென்னிந்தியர் இங்கே வசிக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர், மாதுங்காவில் பலகாலமாக வசித்து அதை ஒரு குட்டித் தமிழ்நாடாகவே ஆக்கியிருக்கிறார்கள். ஆயினும், தாங்கள் வணங்கும் தெய்வத்துக்கு ஒரு ஆலயம் அமைக்காது இருக்கின்றனர். அதை எடுத்துக் காட்டி நாம் அனைவரும் ஒன்றுபட்டுக் கோபுரமும், கொடிமரமும் தாங்கிய ஓர் தமிழ்க்கோவிலைச் சமைக்க வேண்டும் என்று ஒரு கோரிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறேன்."

"கோவிலா? தமிழ்க்கோவிலா?" என்று கூவினார் டே. அவர் முகத்தில் அச்சமயம் விரவி நின்ற வியப்பைக்கண்டு நான் திகைத்து விட்டேன், "ராம், என்ன ஆச்சரியம்? உங்கள் உள்ளத்தை உருவாக்கிய அதே அச்சில், பிரமன் என் உள்ளத்தையும் உண்டு பண்ணினானோ? அப்படித்தான் இருக்கவேண்டும், ராம்; இல்லாவிட்டால், உங்கள் மனதில் உதயமான கோரிக்கை, கிட்டத்தட்ட அதே சமயத்தில் எனக்கும் தோன்றுவானேன்? உங்களிடம் எழுந்த அத்தோற்றம், ஏதோ ஒரு நிர்ப்பந்தத்தினால் என்னிடம் செயலாகப் பரிணமிப்பானேன்?"

"அந்த மனத்தத்துவ வைத்தியருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ? அல்லது அவர் வேண்டுமென்று என்னைச் சீண்டி வேடிக்கை

செய்கிறுரோ?" என்றுதான் அப்பொழுது என்னுல் நினைக்கமுடிந்தது. அந்தப் புரியாத உள்ளத்தை ஊடுருவ விரும்புபவன்போல, அவர் முகத்தைக் கூர்ந்து கவனித்தபோது, டே கல-கலவென நகைத்துச் சொன்னுர்: "என்னை நீங்கள் நம்பவில்லை; இல்லையா, ராம்? வாருங்கள் நான் எழுப்பியிருக்கும் தமிழ்க் கோவிலைக் காட்டுகிறேன்."

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. திக்குத் தெரியாத காட்டில் தனித்து விடப்பட்ட பச்சிளங்குழந்தையைப்போல என் மனம் திணறிற்று. இது என்ன வேடிக்கை! லட்சக் கணக்கில் பணத்தைக் கொட்டிப் பலகாலம், பலர் முயற்சிகொண்டு உருவாகவேண்டிய தமிழர் ஆலயத்தை, தமிழ்நாட்டைக் கண்ணுலே கண்டிராத இந்த ஒரு தனி மனிதர் உருவாக்கி விட்டாராம்; அதைக் காட்டவும் போகிருராமே!

இத்தனை உணர்ச்சியால் பித்து அடைந்து நின்ற என்னை, "வாருங்கள் ராம்" என்று கையைப் பற்றி இழுத்துத் தமது பரிசோதனை ஹாலில் கொண்டுபோய் நிறுத்தினுர், டே. நிறுத்திவிட்டு, அந்த ஹாலின் ஜன்னல்களையும் கதவுகளையும் இழுத்து மூடினுர். பிரகாசமான விளக்குகளை அணைத்துவிட்டு, திரைகட்டி மறைக்கப்பட்டிருந்த 'ரகசியச் சோதனை'ப் பகுதியில் மாத்திரம் மங்கலான விளக்கு ஒன்றை எரியச் செய்தார். பிறகு ஒரு ஜாலவித்தைக்காரனைப் போல, அந்தத் திரையண்டை சென்று நின்று, அதை ஒரு கையால் இழுத்து விலக்கிவிட்டு "இதோ ராம், உங்கள் மதுரை க்ஷேத்திரம்" என்ருர்.

நான் மூர்ச்சையடைந்து விழாதது ஆச்சரியந்தான். பின் என்ன? அங்கே மதுரை மீனுட்சி அம்மன் ஆலயத்திலுள்ள சுந்தரேசப் பெருமானின் மூலஸ்தானத்தை அப்படியே கண்டேன். "இதென்ன? தற்கால நாடகத்தில் வரும் 'டர்னிங் ஸீனு?' அல்லது நான் காண்பது சினிமாக் காட்சியின் 'செட்டிங்கா'? அவற்றில்கூட இவ்வளவு தத்ரூபமாக அந்தப் பிரசித்திபெற்ற தெய்வத்தைக் காட்டியிருக்க முடியாதே. இதைத்தானு, சற்று முன்பு 'என் நிலையத்துக்குத் தெய்வம் வந்திருக்கிறது' என்று இவர் குறிப்பிட்டார்? ஆமாம், இதை எப்படி இவர் செய்துமுடித்தார்? எந்த ஓவியன் அல்லது சிற்பியைக்கொண்டு ஆக்கச்செய்தார்?"

என் கண்கள் சுந்தரேசரின் விக்கிரகத்தை விட்டு அகலவே இல்லை. 'கண-கண' வென்று வெண்கல மணிஓசை அந்த ஹாலை—இல்லை; அந்தக் கோவிலை—அதிரச் செய்தது. கைகள் என்னை அறியாமலே கன்னங்களில் போட்டுக் கொண்டன. "ஹரஹர மகாதேவா, சம்போ சுந்தரேசா!" என்று நா வெளியிட்ட தோத்திர மொழிகளை என்னுல் தடையுறுத்த முடியவில்லை. டே மாத்திரம், அச்சமயம் திரையை மூடி, ஹாலின் விளக்குகளையும் போட்டிருக்காவிட்டால், மதுரையில் இருப்பதாகவே எண்ணி, பிரசாதத்துக்குக் கையை நீட்டியிருப்பேனே, என்னவோ?

ஆயினும், அந்த மோனம்—ஆச்சரியமிகுதியால் ஏற்பட்ட உள்ளத்து மயக்கம்—உடனே என்னை விட்டுப்போய்விடவில்லை. டே வந்து அதைக் கலைத்தார். என்னைப் பிடித்து உலுக்கி, "எப்படி ராம், மதுரைக் கோவிலின் கர்ப்பக்கிரகம் போலவே இருக்கிறதா?" என்று கேட்டார்.

"போலவா? அதையே பெயர்த்துக் கொண்டுவந்துவிட்டீர்கள், பாபூஜி."

"சரி, அந்தச் சந்தேகம் நீர்ந்தது. இனி, வாருங்கள்; என் நாடக அரங்கில் இந்தக் காட்சியை எதற்காக ஜோடித்து இருக்கிறேன் என்பதை விளக்குகிறேன்" என்று அவர் என்னை, வெளி அறைக்கு இட்டுச்சென்ருர்.

— 3 —

டே சொன்னுர்; "மிஸ்டர் ராம், என்னிடம் விசித்திரமான கேஸ் ஒன்று வந்திருக்கிறது. சிக்கலான கேசு கூட. பன்ஸேயின் சகோதரி கேசைவிடச் சிக்கலானது. கடந்த ஒன்றரை மாதங்களாக அதன் அடித்தளத்தைக் காண முயன்றும் நான் வெற்றி பெறவில்லை. ஏனெனில் இந்த நோயாளி ஒரு ஆண். சித்தம் கலங்கியவர் அல்லர். தெளிவாகவும் விவேகமாகவும் வாதாடுகிருர். தமக்கு இருப்பது மன நோய்தான் என்பதை ஒவ்வொரு தடவையும் ஒப்புக்கொள்ளுகிருர். அதே சமயம், அதைத் தெய்வத்தாலன்றி எவராலும் போக்க இயலாது என்று திட்டமாகக் கூறுகிருர். 'உங்களால் என் வியாகூல நிலையை மாற்றமுடியுமானுல், நன்ருக முயன்று பாருங்கள். நீங்கள் எத்தகைய சிகிச்சைக்கு உட்படுத்தினுலும் உடன்படுகிறேன்' என்கிருர். நானும் தந்திரமான வழிகளையெல்லாம் கையாண்டு பார்த்துவிட்டேன். ஆனுல், மூலமே இன்னும் அகப்பட்டபாடில்லை. ஏது? இந்தக் கேசில் தோல்வியை அடைந்துவிடுவேனே என்றுகூடச் சிலசமயம் சஞ்சலம் ஏற்படுகிறது. இப்போது இறுதி முயற்சியாக மனமயக்கச் (Hypnotism) சிகிச்சையைப் பிரயோகிக்கத் தீர்மானித்திருக்கிறேன். அச்சிகிச்சைக்காகவே இந்தத் தமிழ்க் கோவில் சிருஷ்டிக்கச் செய்தேன். அந்த நோயாளியின்

பொருட்டே தமிழரின் நடை, உடை, பாவனைகளை அறிந்துகொண்டேன்; ஓரளவு பேசவும் படிக்கவும் அதைக் கற்றேன்."

இவ்வாறு ஒரு சிறு முகவுரையை அளித்துவிட்டு, டே பாபு தொடர்ந்து கூறினர்:

"ராம், கடைசியாக நீங்கள் இங்கு வந்து போனீர்களே; அதை அடுத்த திங்களன்று பகல் பன்னிரண்டு மணி இருக்கும்; காலை சிகிச்சைக்காக வந்த நோயாளிகளைப் பார்த்து அனுப்பிவிட்டுக் கை கால்களைக் கழுவிவர 'பாத்ரூமு'க்குச் சென்றேன். அப்போது வேலைக்காரப் பையன் தாம்லே, "பாபூஜி, கொஞ்சம் வந்துவிட்டுப் போங்கள்; இன்னும் யாரோ இருவர் வந்திருக்கின்றனர்" என்று விளித்தான்.

முறைப்படி சிகிச்சை அளிக்கவேண்டியவர்களைக் கவனித்து அனுப்பிவிட்டதால், வந்திருப்பது புதிய கேசாகத்தான் இருக்கவேண்டுமென்று, சாவகாசமாகவே 'விஸிட்டர்ஸ் ரூமு'க்கு வந்தேன். ஆம், வந்திருந்தவர்கள் புதியவர்கள்தாம்—இளவயதுடைய ஓர் ஆணும், பெண்ணும், முதற் பார்வையில் தம்பதிகளைப் போலவே தோன்றினர்கள். அவளுக்குச் சுமார் பதினெட்டுப் பிராயமிருக்கலாம்; அவனுக்கு நான்கு-ஐந்து அதிகமாக இருக்கும். இருவரையும் கண்குளிரப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும் போலிருந்தது, அவர்களின் ஒருமித்த வனப்பு மிகுந்த தோற்றம். 'அவன் அழகா? அவள் அழகா?' என்று அவர்களைக் காணும் எவரும் சிந்தித்து வியப்புறுது இருக்கமாட்டார்கள்.

ஆனல் ராம், மனித உள்ளத்தைப் பலகாலமாகத் துழாவி வருபவன் என்ற முறையில், அந்த ஜோடியைக் கண்டதும் எனக்குச் சந்தோஷத்துக்குப் பதிலாகச் சங்கடமே ஏற்பட்டது. ஏனெனில் மனத்தத்துவ விதிப்படி உலகில் ஒன்று சேரக்கூடாத கவர்ச்சிகள் சில இருக்கின்றன, அவை ஒன்றை ஒன்று இணைந்தால், அங்கேதான் சௌந்தரிய தேவதை வாசம் செய்வாள் என்று சாதாரண மனிதர்கள் நினைப்பார்கள். ஆனல், எங்கள் நியதிப்படி பார்த்தாலோ, அத்தகைய இணைப்பில் சோபிதம் கொஞ்சங்கூட ஏற்படுவதில்லை; சோகமே பிறக்கிறது.

இதோ, எதிரே தெரியும் இந்த இயற்கையின் அழகைப் பாருங்கள், நீலமயமாகத் தோன்றும் அடிவானமும், பொன்னெளி வீசும் பூமியும் ஏன் ஒன்றை ஒன்று தொடாது நிற்கின்றன? அவை எட்டாத் தொலையில் தொட்டணைந்து நிற்பதாக நமக்கு ஏற்படும் கானல் தோற்றம் ஏன் உண்மையாக இல்லை? அதைச் சிறிது சிந்தியுங்கள். வானத்தின் நீல வண்ணமும், பூமியின் பசும்பொன் மஞ்சளும் இணைந்தால் பிறக்கும் பசுமையான பச்சை நிறத்தைச் சற்றுக் கற்பனைசெய்து பாருங்கள். அந்தக் கற்பனையே உங்களை ஒரு கவிஞனுக்கிவிடும். ஆனல், ஒரு தர்க்க சாஸ்திரியைக் கேட்டால், அவர் என்ன சொல்லுவார், தெரியுமா? "ஆகாயம் என்பது ஜடப்பொருள் அல்ல, அதை எவரும் தொட்டு உணரமுடியாது. அது உருவற்றது; எனவே, அதன் நிறமும் உண்மையானதல்ல. அது போலவே பூமியின் பொன் நிறமும் நிலையற்றது. காலை மாலையில் சிறிதளவு தங்கத் தகைமை பெறுவதையன்றி, பூமியின் வண்ணம் பொன் நிறமானதல்ல. ஆகவே அவை இணையவே முடியாதே" என்பார்.

அவரை விட்டு, விஞ்ஞானிகளைக் கேட்டுப் பார்த்தாலோ? அவர்கள் உங்கள் பசுமையான கற்பனையைப் பஞ்சாகப் பறக்கவிட்டு விடுவார்கள். "ஐயையோ! பூமி ஆகாயத்தைத் தொடுவதா? ஆகாயம் என்பது நெருப்புக் கோளங்களான கிரகங்களுக்கும், குளிர்ந்த பூமிக்கும் இடையிலுள்ள வெளி அல்லவா? அந்த வெளியை நோக்கிப் பூமி ஓரடி நகர்ந்தால் கூடப் போதுமே; உடனே பொசுங்கிச் சாம்பராகிவிடுமே" என்பார்கள்.

எனவே, எந்த அழகும் அழகும் இணைந்தால் ஓர் அற்புதம் நிகழும் என்று நாம் கற்பனை செய்கிறோமோ, அவை, ஒன்று இணைய முடியாதவையாக இருக்கின்றன; அல்லது தவறி இணைந்து தவிடுபொடியாகி விடுகின்றன. தாம்பத்தியப் பிணைப்பிலும் இந்த மோதல் ஏற்பட்டு உறவுநூல் அறுந்து போயிருப்பதை நான் பல கேசுகளில் கண்டிருக்கிறேன். மனத்தத்துவச் சிகிச்சையினுல்கூட ஒட்டவைக்க முடியாத பிளவு ஏதாவது ஒன்று உண்டானல், அது, இதைப்போன்ற கேசுதான். ஆகையால், புதிதாக வரும் கேசுகளைக் கண்டதும் ஏற்படும் உற்சாகம், இந்த ஜோடியைக் கண்டதும் எனக்கு ஏற்படவில்லை. என்னல் இயலாதெனச் சொல்லி அனுப்பவேண்டிய கேசுதான் என்று சுவாரசியமற்றவனுகவே அவர்களைப்பற்றி விசாரிக்கப் புகுந்தேன். ஆனல் கேசின் ஆரம்பமே என்னை ஏமாற்றிவிட்டது.

"ஆம்; அந்த வாலிபன்தான் முதலில் பேசினன்; 'நமஸ்காரம் புரொபசர்; இவள் என் ஒன்றுவிட்ட சகோதரி' என்ருன் அவன்.

"ராம், இதைக் கேட்டபொழுது இதுவரை அடைந்திராத அதிர்ச்சி ஒன்று என்னை வேகமாகத் தாக்கிற்று. நீங்கள்கூட முன்பு பன்ஸேயின் சகோதரி கேசின்போது கேட்டீர்களே;

# தீபாவளிக்கு

இன்சுவை லட்டுகள்

மதுரமான குலாப்ஜாமூன்கள்

சுவைமிக்க பலூஷாகிகள்

முறுகலான ஜிலேபிகள்

உயர்தரமான ஹல்வா

ருசியான கச்சோரிகள்

இன்னும் உங்களுக்கு
பிரியமான எந்த
பதார்த்தத்தையும்...

தயாரிக்கும் முறைகள், குறிப்புகள் இவைகளை
இலவசமாகப்பெற எழுதுங்கள்:

## தி டால்டா
## அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1




HVM. 137-172 TM




## எமது முதல்தரமான

## சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான் களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன!

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண் டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும்!

# கே. சுவாமிநாதன் & கம்பெனி

**24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.**

பிராஞ்சுகள்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.

No. 22, சில்வர் ஜூபிலி பார்க் ரோட், பெங்களூர் ஸிடி.

தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.





## குழந்தைகளுக்கு

## இன்றியமையாத

## டானிக்

# டோங்ரேயின் பாலாம்ருதம்

**K.T. டோங்கரே அண்கோ., பம்பாய்-4.**




நினைவிலிருக்கிறதா— "டே பாபு? நீங்கள் என்ன மனநோய் வைத்தியரா? அல்லது ஜோசியரா?" என்று. மனநோய் வைத்தியர்கள், ஜோசியரைவிடத் திறமைசாலிகளாக இருக்கவேண்டும் என்பதை இப்பொழுது உங்களுக்குக் கூறுகிறேன். அவர்கள் வெறும் மன ஆராய்ச்சியாளர்களாக இருந்தால் மாத்திரம் போதாது; உருவத்திலிருந்து உள்ளத்தை உணரும் ஆற்றல் உடையவர்களாகவும் இருக்கவேண்டும். தங்கள் முன் நிற்பவன், மனநோய் பிடித்தவனாக இருக்கட்டும்; அல்லது இல்லாதிருக்கட்டும்; அவர்களின் உள்ளம், நயனம், செவி, எல்லாப் பகுத்தறியும் உறுப்புக்களும் ஒரு மனிதனைப் பார்த்ததும் அவனைப் பரிசிலனை செய்வதாக இருக்கவேண்டும். அந்தப் பரிசிலனையில் எப்பொழுது ஒருவன் நூற்றுக்கு நூறு சரியாகிறானோ, அப்பொழுதுதான், அவன் மனத்தத்துவ வைத்தியத்தைக் கற்கத் தகுதியுள்ளவனாகிறான்,

"ஆகவே, கடந்த இருபத்து ஐந்து ஆண்டுகளாக ஒரு கேசில்கூட இத்தகைய தலைத்தீர்மானம் தப்பாதிருந்த எனக்கு இக்கேசில் கோணலான முடிவு ஏற்பட்டது என்றதுமே மன அயர்வு தோன்றிவிட்டது. 'இந்தக் கேசில் வெற்றியடைவதை இன்னும் சந்தேகிக்கிறேன்' என்று சொன்னேனே; அதற்கு இதுதான் காரணமாகும். ஆம், முதற்கோணல் முற்றிலும் கோணல்தானே! ஆனால்—

"அந்த வாலிபன் என் ஏமாற்றத்தை அறிந்தவன் அல்லனே. அவன் மேலே பேசிக்கொண்டு போனான். அவன் கொண்டு வந்திருந்த கேசின் விவரம் இதுதான்:

"திருச்சிராப்பள்ளிவாசியான வைத்தியநாத ஐயர் என்பவர் ரிசர்வ் பாங்கின்கராச்சிக் கிளையில் குமாஸ்தாவாகச் சேர்ந்து, தமது உழைப்பினால், உதவி அக்கவுண்டெண்டு பதவிக்கு உயர்ந்தவர். அவர் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. ஊரில் ஒரு வீடும், கொஞ்சம் ஆஸ்தி–பாஸ்திகளும் இருந்தன. ஆனால் உத்தியோகம் ஏற்ற பின்னர், அவற்றை விற்றுவிட்டுப் பெற்றோருடன் கராச்சியிலே நிரந்தரமாகக் குடியேறிவிட்டார்.

"வைத்தியநாத ஐயருக்கு இருபத்து எட்டு வயதில் விவாகம் ஆயிற்று. புது மனைவியுடன் நாகரிகம் மிகுந்த சிந்து மாகாணத்தின் தலைநகரில் அவரது இல்லற வாழ்க்கை இன்பமாகவே சென்றது. ஆனால் அது நெடுங்காலம் ஓடவில்லை. ஐயரின் அன்பைக் கவர்ந்திருந்த மனைவி, ஐந்து வருடங்கள் அவருடன் வாழ்ந்துவிட்டு, அவ் வாழ்வுக்குச் சுவடுவிட்டு வைக்காமலே இறந்து போனாள்.

"ஐயர் சற்று விசித்திரமான சுபாவம் உடையவர், அதாவது இன்றைய உலகில் வெகு துர்லபமாகத் தென்படும் ஒரு மன அமைப்புப் பெற்றவர். அவருக்குப் பெண்கள் என்றால், தெய்வம். சாதுவாக இருக்கட்டும்; அரக்கியாக இருக்கட்டும்; அவர் வரையில் பெண் என்பவள் தெய்வந்தான். எவ்வளவு கெட்டவளாக இருந்தாலும், முகம் அறியாதவளாக இருந்தாலும், எந்தப் பெண்ணையும் எவரும் தம் முன்பு இழித்துப் பேசச் சகிக்கமாட்டார். "பெண் தெய்வத்தைக் கேவலமாகப் பேச ஆணுக்கு வாயுண்டா? உலகில் இன்று நடமாடி இத்தனையும் பேசும் மனித ஜன்மங்களைப் பத்து மாதங்கள் பொறுமையுடன் சுமந்து பெற்று ஆளாக்கிவிட்டவள் பெண் என்ற போதில், ஒருத்தி எத்தனை கொடூரம் நிறைந்தவளானாலும், அந்தக் கொடூரத்தன்மை அனைத்தும், இயற்கை அவள் தலைமீது சுமத்தியிருக்கும், விலக்கமுடியாத மக்கட்பேறு என்ற ஒரு சிரமத்தில் அடிபட்டு அழிந்துபோகுமே" என்பார்.

இத்தகைய உயர்வான மனப்போக்கு உடைய ஐயர், தமது மனைவியிடம் எத்தனை பிரியத்தோடு வாழ்க்கை நடத்தியிருப்பார் என்பதை விவரிக்கத் தேவையில்லை. எனவே அவளைப் பிரிந்த துயரத்தில் தமது வாழ்க்கைத் தேவைகளைக்கூட மறந்துவிட்டு நாட்களைத் தள்ளிவந்தார். ஆனால், மூப்படைந்த அவருடைய பெற்றோர் தங்களது ஒரே மகன் வாழ்க்கைத் தேவைகளை மறந்து, பரதேசியாக இருக்க அநுமதித்துவிடுவார்களா? அவர்கள், ஐயருக்கு மறுமணம் செய்வித்துத் தங்கள் வமிச விருட்சம் பூத்துக் குலுங்குவதைக் கண்டுவிட்டுக் கண்மூட விரும்பினர். ஐயர் மறுமணத்தை அன்றுவரை கருதியவரல்லர்தான். ஆயினும் 'ஜீவராசிகளின் பிறப்பு லட்சியம் மேலும் அந்தப் பிறப்புக்கு உதவுவதில்தான் நிறைவெய்துகிறது; அதிலும் மானிடப் பிறவிக்கு மக்கட்பேறு இல்லாவிட்டால் அது இகபரத்தில் உரிய நிலையை அடைவதில்லை' என்பதைப் பெற்றோர் உணர்த்திய பின்பு, தமது கடமையை நிறைவேற்றத் தயாராகிவிட்டார்.

ஐயர் இரண்டாம் மனைவியை அடைந்தார். அவளிடமும் தமது பாசத்தை இணைத்து வாழ்க்கை நடத்தினர். ஆனால், அவளும் உரியகாலத்தில் வயிறு திறக்கவில்லை. பெற்றோர் ஏங்கினர். அவர்களுக்குமேல் ஐயர் தமது வாழ்க்கைத் தளிரைக்காண ஆசை கொண்டார். அவர் மனைவியோ, உலகத்துத் தெய்வங்கள் அனைத்தையும் ஒருங்கே வேண்டினாள். மந்திரங்கள், தந்திரங்கள், பாவ பரிகாரங்கள், தானம், தருமம், வைத்தியம்,

மருந்து எல்லாம் பரீட்சிக்கப்பட்டன. ஆயி னும், அவர் வமிசப் பூண்டு முளைவிடவே இல்லை.

கடைசியில் நிறைவேறாத ஆசையுடனே ஐயரின் பெற்றோர் மண்ணுலகை நீத்துச் சென்றனர். ஐயரும் மனைவியும் அன்பொழுகப் பழகியும் அமைதியற்ற வாழ்வையே நடத் தினர். வருடங்கள் ஓடிக்கொண்டிருந்தன. அவை ஓட ஓட இவர்கள் உள்ளத்தில் எள் ளளவு தங்கியிருந்த நம்பிக்கையும் கரைந்து போயிற்று. ஐயரின் மனைவி நம்பிக்கைத் துரும்பைப் பிடித்துக்கொண்டாவது குடும்பக் கப்பலைத் தொடர்ந்து மிதக்க விட்டுவிட வேண்டுமென்று விரும்பினாள். ஒரு சிறிது ஒளி தெரியும், இறுதி வழியில் கணவனைப் புகுத்தி, அதையும் பரீட்சித்துவிட ஆசை கொண்டாள். ஆனால் அதற்கான முயற்சி களில் தீவிரமாக ஈடுபடுமுன்பே, அவள் கண வனைப் பிரிந்துவிட வேண்டியதாயிற்று. கராச் சியிலிருந்து ஐயரை விரட்டிய பிரிவினை அமளி, அவர் மனைவியைப் பறித்துக்கொண்டு தனியாளாகத்தான் பம்பாய்க்குக் கப்பலேற்றி விட்டது.

மூன்று வருடங்களுக்கு முன்பு ஐயர் பம்பாய்க்கு வந்தார். அப்போது அவருக்கு வயது நாற்பத்துமூன்று. முதுமையை எட்டி விட்ட பிராயம் இல்லை; எனினும் வாலிப வயது அல்ல. ஆனால் நேர்மையான பழக்க வழக்கங்கள், கணிசமான உழைப்பு, எதையும் சகித்துக்கொள்ளும் மன அமைதி, இவற் றுடன் இருந்ததால் அவரிடம் இளமையும், ஆரோக்கியமும் இன்னும் இருந்தன.

பம்பாய் ரிசர்வ் பாங்கிலே ஐயருக்கு வேலை ஆயிற்று. தமது தனிமை வாழ்வை ஆயாச மின்றியே அவர் தொடர்ந்தார்.

இந்த நெருக்கடியான காலத்தில் பம் பாய்க்குப் புதிதாக வந்து, இடத்துக்கும் வேலைக்கும் அவதியுற்ற அகதிகளின் நிலை ஐய ருக்கு ஏற்படவில்லை. அவருக்குப் பம்பாய்த் துறைமுகத்தில் இறங்குமுன்பே எவ்வாறு வேலை காத்துக்கொண்டிருந்ததோ, அவ்வாறே வசதியான வீடு ஒன்றும் வலியக்கிடைத்தது.

ஐயருடன் பலகாலம் கராச்சியில் ஒன்றாக வேலை பார்த்துவந்த பஞ்சாபகேச சர்மா என்ற நண்பர், மனைவியின் நோய் நிமித்தம், சில வரு டங்களுக்கு முன்பு வேலையைப் பம்பாய்க்கு மாற்றிக்கொண்டு வந்திருந்தார். கடற்கரை ஓரமாக இருந்த படுகைக் கிராமம் ஒன்றில், ஆரோக்கிய வாசத்துக்கேற்ற சிறு வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வசித்துவந்தார். ஆனால், எதன்பொருட்டு அவர் மாற்றலாகிப் பம்பாய்க்கு வந்தாரோ, அந்த மனைவியின் நோய், இந்த இடமாற்றத் தால் மாறிவிடவில்லை. ஐயர் கராச்சியில் தமது மனைவியைப் பறிகொடுத்த அதே சமயத் தில் அவருடைய பம்பாய் நண்பர் சர்மாவும் தமது இல்லாளை நோய்க்கு இரைகொடுத்தார்.

சர்மா, அச்சமயம் 'ரிடையர்' ஆகவேண்டிய காலத்தை நெருங்கிவிட்டிருந்தார். ஆதலால், ஐயர் வந்த இரண்டொரு மாதங்களுக்குப்பிறகு வேலையிலிருந்து விலகி, தாம் வசித்துவந்த வீட்டை ஐயரிடம் ஒப்படைத்துவிட்டு ஊர் சென்றார்.

சர்மாவுக்கு இரண்டே பெண் குழந்தைகள். தாய் நோய்வாய்ப்பட்டதுமுதல் அவ்விரு குழந்தைகளும், அவருடைய பிறப்பிடமாகிய மதுரையில், பெரியப்பா வீட்டில் வளர்ந்து வந்தனர். சர்மாவின் மூத்த பெண் பத்மினி, தாய் இறந்தசமயம் கலியாண வயதை எட்டியிருந்தாள். எனவே, ஊர் திரும்பியதுமே சர்மா அவளது திருமண விஷ யத்தைக் கவனிக்கவேண்டியதாயிற்று.

அவர் செல்வ மிதப்பில் வாழ்ந்தவர் அன்று; அல்லது, பூர்வீக சொத்துக்கள் எவையும் அவ ருக்குக் கிடையா. சம்பாத்தியத்தில் ஓரளவு மீத்து, பெண்களின் கலியாணத்துக்கென ஒரு சிறு தொகையைச் சேர்த்திருந்தார். ஆனால் அதை மனைவியின் நோய் விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டது. ஊரிலிருந்த அவர் அண்ணா வாவது நல்ல நிலையில் இருந்தாரோ என்றால், அதுவும் இல்லை. அவர் பெரிய குடும்பஸ்தர். உள்ளூர் ஹைஸ்கூல் ஒன்றில் உபாத்தியாயர்; பின், அவர் செல்வ நிலையைப்பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது?

ரிடையராகிப் போனபோது சர்மாவுக்குக் கணிசமான புராவிடெண்டு பண்டுத்தொகை ஏதும் கிடைத்துவிடவில்லை. மனைவியின் சிகிச்சைகளுக்காக அதன் மீது வாங்கியிருந்த கடனுக்கு, அது பெரும்பாலும் ஈடு செய்யப் பட்டுவிட்டது. ஆயினும், இத்தனை பொரு ளாதார நெருக்கடியின் இடையில் அவர் நிறைய வரதட்சிணை கொடுக்கச் சம்மதித்து, பணக்கார வரன் ஒருவனைப் பத்மினிக்கு நிச்ச யித்தார் என்றால், அவருக்கு எங்கேயாவது புதையல் கிடைத்திருக்க வேண்டுமென்றுதான் நீங்கள் நினைப்பீர்கள். ஆமாம், புதையல்தான் கிடைத்தது. அந்தப் புதையல் பூமியிலிருந்து கிட்டவில்லை. சர்மாவின் நண்பர் ஐயரிட மிருந்தே வந்தது.

சர்மாவின் குழந்தைகள் கராச்சியில் இருந்த போது, சந்தான பாக்கியம் அற்றுப்போன ஐயர் தம்பதிகள் அவர்களைத் தங்கள் குழந்தை

களாக நேசித்து வளர்த்து வந்தனர். அன்று ஐயர் மனத்தில் ஊறிய பாசம், இன்று சர்மாவின் இக்கட்டான நிலையில் அவருக்குப் பேருதவியாகப் பரிணமித்தது. தமது நண்பரின் நிலையை நன்கு உணர்ந்திருந்ததால், அவர் ஊருக்குக் கிளம்பியபோது, மனைவியர் விட்டுச் சென்ற நகை நட்டுகளையும், பத்மினியின் கலியாணத்துக்கென்று ஒரு பெருந்தொகையையும் கொடுத்து, "பணமுடையினால், குழந்தையைக் கண்ட இடத்தில் வாழ்க்கைப் படுத்திக் கண்ணைக் கசக்க விடாதிர்கள். பத்மினி என் குழந்தைக்கு ஒப்பானவள். ஆண்டவன் அவளைப் போன்றதொரு குழந்தையைப் பெற்றுக் கலியாணம்-கார்த்திகை என்று செய்து களிக்க எனக்கு வாய்ப்பு அளிக்காததால், அவற்றை அவளுக்குச் செய்து திருப்தியுற விரும்புகிறேன். இதோ, இவற்றை என் அன்பின் காணிக்கையாக ஏற்று, அவளைத் தகுந்த வரனுக்கு வாழ்க்கைப்படுத்தவேண்டும்" என்று கூறி அனுப்பினார், ஐயர்.

இவ்வாறு, ஏழைப்பெண் பத்மினிக்கு அதிர்ஷ்டம் அடித்து அவள் நினைத்தே இராத பெரிய இடத்தில், படித்த, அழகான வாலிப மாப்பிள்ளை நிச்சயிக்கப்பட்டான். அந்தக் கலியாணத்தைத் தாமே முன் நின்று நடத்தி வைக்க, ஐயர் ஒருமாதம் லீவு வாங்கிக்கொண்டு மதுரைக்கு வந்தார்,

எல்லா ஏற்பாடுகளும் முடிந்துவிட்டன. விடிந்தால் கல்யாணம். முன்னாள் இரவு திடீரெனச் சம்பந்திகள் கும்பலிலிருந்து ஒரு பூசல் கிளம்பிற்று—தாய்க்கு இருந்த, 'காக்கை வலிப்பு' நோய் பத்மினிக்கும் இருப்பதாகவும், அதை மறைத்துக் கலியாணத்தை முடிக்க யத்தனித்து விட்டதாகவும் சம்பந்தி கோஷ்டியினர் ஆர்ப்பரித்தனர்.

இது முற்றிலும் ஆதாரமற்ற செய்திதான். ஒருவரேனும் பத்மினிக்கு அவ்வியாதி இருப்பது உண்மையென்று சொல்லவில்லை. அண்டை அயலார், சுற்றம், நண்பர்கள் எல்லோரும் அவ்வதந்தி பொய்யெனச் சத்தியம் செய்தனர். ஆயினும், சம்பந்திக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. கலியாணம் நின்றுபோயிற்று.

கலியாணம் நின்றுபோனதுகூட ஆச்சரியமல்ல; ஆனால் இதை யார் கிளப்பிவிட்டார்கள் என்பதுதான் எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் அவ்வூரில் சர்மாவிடமோ, அவர் குடும்பத்தாருடனோ, விரோதம் கொண்டிருந்தவர்கள் எவருமே இல்லை.

எதிர்பாராத அதிர்ஷ்டம் கிடைத்ததெனக் களித்திருந்த பத்மினிக்கு, இச்சம்பவம் எத்தகைய ஏமாற்றத்தை அளித்திருக்கும் என்பதை நீங்களே ஊகித்துக்கொள்ளுங்கள், ராம. ஐயர் தாம், மீண்டும் அவளுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் ஊட்ட முன்வரவேண்டியிருந்தது. "இதோபார், பத்மி! இன்னும் ஒரே மாதத்தில், இதைவிடச் சிறந்த இடத்தில் உன்னை வாழ்க்கைப் படுத்தாவிட்டால், பிறகு இந்த மாமாவைக் கேள்" என்று அவள் உடைந்த உள்ளத்துக்கு ஊக்கத்தை ஊட்டினார், அவர். ஆனால் நினைத்ததுபோல, அவளுடைய கலியாணக் காரியம் அவ்வளவு எளிதில் முடிந்துவிடுவதாக இல்லை. இன்னும் இரண்டு மாதங்கள் லீவை நீடித்து, விடாப்பிடியாக முயன்றும் ஐயரால் சொன்ன சொல்லை நிறைவேற்ற முடியவில்லை.

மிஸ்டர் ராம், வதந்தி என்பது காட்டுத் தீயைப் போன்றதல்லவா? ஒரு இடத்தில் பற்றிக்கொண்டுவிட்டால், கணத்தில் காடு முழுவதையுமே வியாபித்துவிடும். அதன் தன்மையைப் போன்று, பாவம், அந்தப் பெண்ணின் தலையில் வைத்துக் கட்டப்பட்ட இல்லாத நோயைப்பற்றிய செய்தியானது, எப்படியோ அவளைப் பார்க்கவரும் ஒவ்வொரு வரனின் மனத்தையும் பற்றி விரட்டிவந்தது.

ஒன்றைன்றாய்த் தொடர்ந்த இத் தோல்விகளை அடுத்துத் தம் முன்னர் கண்ணீர் சோர வந்து நிற்கும் பத்மினியை, அந் நிகழ்ச்சியை மறந்து களிப்புறச் செய்ய, ஐயர் சொல்லுவார்: "இந்தா பத்மி! இதற்காகவா அழுகிறாய்? போகிறான்கள் இந்த புத்திகெட்ட பயல்கள்; இவர்கள் உன்னைக் கட்டிக்கொள்ளவில்லையென்றால், நான் கட்டிக்கொள்ளுகிறேனடி. எனக்கொன்றும் அப்படி வயதாகிவிடவில்லையே; நாற்பத்துமூன்று வயதும் ஒரு வயதா?"

பத்மினி குபீரென்று சிரித்துவிடுவாள். ஆனால், என்றென்றும் இப்படிச் சிரிப்பும் அழுகையுமாக இருந்தால் போதுமா? ஒன்றா? இரண்டா? கிட்டத் தட்டப் பத்து வரன்கள் வந்து போய்விட்டார்கள். அவள் மனது முறிந்துதான் போயிற்று. "இந்த வாலிபர் உலகமே கோழையானதுதானா? வெறும் வதந்தியின் மீது வசித்துவருவதுதானா? ஒருவனாவது துணிந்து என்னை ஓர் டாக்டரிடம் அழைத்துச் சென்று, அவ்வியாதி உண்டா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள முன் வரமாட்டேன் என்கிறானே! நாங்கள் வற்புறுத்தியும்கூட அதில் சிரத்தைகாட்டாது ஓடி விடுகிறார்களே. இப்படி எத்தனை மாதங்களுக்குத்தான். பாவம், இந்த வேற்று மனிதர் எனக்காகச் சிரமப்படுவார்?" இவ்வாறு ஒரு நாள் தனது விதியை நினைத்துப் புலம்பிக் கொண்டிருந்த அவளுக்குச் சட்டென்று ஒரு எண்ணம் உதயமாயிற்று—"எனக்காக இத்

தனை பாடுபடும் அந்த மாமாவையே நான் ஏன் மணந்துகொள்ளலாகாது?"

சிந்தனை விரிய விரிய அதில் தவறே இல்லை என்று அவள் தீவிரமடைந்தாள். தன் முடிவை மெள்ளத் தந்தையிடமும் வெளியிட்டாள். "போடி பைத்தியம்! இதற்கு நீ இணங்கினாலும் அவர் இணங்க மாட்டாரே?" என்றுதான் சர்மா முதலில் கூறினார். இருந்தாலும் அப்பொழுதை நிலை அவரையும் அப்பிரச்னையை ஆழ்ந்து ஆலோசிக்கச் செய்தது. "அவளே அவரை மணந்துகொள்ளுவதாக வலிய வந்து சொல்லும்போது, அவரிடந்தான் ஒரு வார்த்தை கேட்டுவிடலாமே" என்று. ஒரு நாள் ஐயரிடம் விஷயத்தைப் பிரஸ்தாபித்தார்.

"நல்ல வேடிக்கை ஸார், சர்மா! அவள் சிறுபெண்; ஏமாற்றத்தில் ஏதோ உளறினாள் என்றால், நீங்களும் அதற்குச் சரியாகப் பேசவந்து விட்டீர்களே" என்று கூறி நகைத்தார், ஐயர்.

ஆனால் இவர்கள் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டு உள்ளே நின்ற பத்மினி, உடனேஐயரின் முன்வந்து சொன்னாள்: "வேடிக்கையல்ல, மாமா!



தீவிரமாக, முழுமனத்துடன்தான் சொல்லுகிறேன்: சுய அறிவு அற்ற இந்த வாலிபப் பிண்டங்களுக்கு வாழ்க்கைப்பட்டு அவதிப்படுவதைவிட, உங்களைப்போன்ற அநுபவசாலிகளில் ஒருவருக்கு மனைவி ஆவதால் நான் எவ்வளவோ சந்தோஷமாக இருப்பேன்.''

அவள் வார்த்தைகள் அநுபவத்தின் பின்னர் பிறந்த உண்மை என்பது ஐயருக்கு நன்றாகத் தெரியும். இருந்தாலும் சொன்னார்: "உன்னை என் பெண்ணாகப் பாவித்திருக்கிறேன் பத்மி! அப்படியிருக்கையில்...........?"

சர்மா இடைமறித்தார்: "உங்கள் பெண்ணாகவே ஏற்றுக்கொள்ளுங்களேன். இப்படிப் பொய் வதந்திகளைக் கிளப்பிவிட்டு, அதன் நிமித்தம் எழும் சங்கடங்களில் நாம் சிக்கி அல்லல் படும்போது எள்ளி நகையாடும் சமூகத்தில், பெண்ணுக்கு ஒப்பான வயதுடையவனை மணந்துகொண்டால், அது ஒருபோதும் நகைப்புக்கு இடமாவதில்லை. அந்தச் சமூகத்திடையேதான் நாம் வாழ்ந்து ஆகவேண்டும் என்றிருக்கும்போது, இந்தச் சம்பந்தத்துக்கு எங்கள் சம்மதம் மாத்திரமல்ல; அந்தச் சமூகத்தின் அநுமதியும் இருக்கிறது என்றுதான் நீங்கள் கொள்ளவேண்டும்."

பிரச்னை இப்பொழுது ஐயரிடம் தாவிச் சுழன்றது. கடந்த மூன்றுமாத அநுபவத்தின் பின்னர் பத்மினியின் விவாகத்தை மதுரையில் நடத்துவது இயலாத காரியம் என்பது அவருக்குத் தீர்மானமாகிவிட்டது. அட! வேறு எங்கேனும் தொலைக்குச் சென்று, ஒரு மாப்பிள்ளையைத் தேடி முடித்துவிடுவோம் என்றால், நாளைக்குத் தாலிகட்டியபிறகு எவனாவது அவன் காதுகளில் இந்த வதந்தியை ஓதிவிட்டு, அது விபரீதமாக மாறிவிட்டாலோ? ஒரு பயலுக்காவது, 'அடே, அந்த வதந்தி எவ்வளவு தூரம் உண்மையானது என்பதைப் பரீட்சிக்கவேண்டும்' என்ற துணிவு ஏற்படுவதில்லையே! பெண்ணுக்கு ஒரு. கெட்டநோய் இருக்கிறது என்று கூறக்கேட்டதுமே, என்னவோ பாம்பைக் கண்டுவிட்டது போலல்லவா ஓடுகிறான்கள், இந்தப் பையன்கள்.

ஐயர் மேலும் ஆலோசித்துக்கொண்டே போனார். கடைசியில் என்ன? அந்த ஆலோசனையின் முடிவு அவர் மனத்தைச் சபலம் அடையச் செய்துவிட்டது. எந்தப் பெண்ணுக்குக் கலியாணத்தை முடித்துவைக்கக் கிளம்பி வந்தாரோ, அவளையே மணந்துகொண்டு, தம்பதி சமேதராய்ப் பம்பாய்க்குத் திரும்பிவந்தார்.

(தொடரும்)




Sastry & Sastry

JEWELLERS

33, EAST MADA STREET,
MYLAPORE P. O. MADRAS-4.

# நியதி

ர. வேங்கடரத்தினம்



அது ஒரு வாழைத் தோட்டம். நிறைய வாழை மரங்கள் உள்ளன. தோட்டத்தின் ஒதுப்புறமாக அதன் ஒரு ஓரத்தில், ஒரு வாழைக் குடும்பம்! சுற்றிலும் நான்கைந்து இளம் வாழைகள்—இரண்டொரு நாட்களுக்கு முன்புதான் கிளம்பியவை—நின்றுகொண்டிருக்கின்றன. அவற்றிற்கு நடுவே நடு நாயகமாய்ப் பத்தடி உயரமான தாய் வாழைமரம் நின்றுகொண்டிருக்கிறது. இளந் தென்றல் ஒன்று எங்கிருந்தோ வீசி, மரத்தின் அகண்ட

இலைகளை உராயச் செய்கிறது. 'ச்ச்' என்று அம்மரம் பெருமூச்செறியும் ஓசை தோட்டத்து அமைதியைக் குலைக்கிறது.

ஒரு வாழைக் கன்று தாயைக் கேட்கிறது—அம்மா, நீ இப்போது பெருமூச்சு விட்டாயா? அல்லது, காற்றில் இலை உராய்ந்த சப்தமா?

தாய் மரம்: இரண்டும்தான்! நானும் பெருமூச்சுவிட்டேன். காற்றில்வேறு, இலைகளும் ஓசையிட்டன.

கன்று: எதற்காக, அம்மா, பெருமூச்சு விட்டாய்?

தாய்: உனக்கென்ன கேள்வி அதைப் பற்றி? நான் எதையோ நினைத்துப் பெருமூச்சு விட்டேன்.

கன்று: விஷயம் என்னவென்று சொன்னால் தான், அம்மா, நான் உன்னை விடுவேன். எதை நினைத்துப் பெரு மூச்செறிந்தாய்?

தாய்: நான் பிறந்து ஒரு வருஷம் ஆகி விட்டது. போனவருஷம் இந்நாளுக்கு எப்படி இருந்தேன் என்று நினைத்துப் பார்த்துக் கொண்டேன். உடனே என்னையும் அறியாமல், பெருமூச்சு வந்தது.

கன்று: இது இல்லை நீ பெருமூச்சு விட்டதற்குக் காரணம். நீ பொய் சொல்கிறாய்.

தாய்: நிஜமாய்த் தான்! போன வருஷம் இத்தனை நாளுக்கு எப்படி இருந்தேன் என்று நினைவு வந்தது.

கன்று: இதில் பெரு மூச்சிற்கென்னம்மா இருக்கிறது? போன வருஷம் நீ இப்போதிருப்பதைவிட ஒரு வயசு சிறியவளாய் இருந்திருக்கப் போகிறாய். இப்போது ஒரு வயது கூட ஆகிவிட்டது. இவ்வளவுதானே வித்தியாசம்?

தாய்: குழந்தைகளே, உங்கள் எல்லோரிடமுமே சொல்கிறேன், கேளுங்கள். போன வருஷம் நான் எப்படித் தெரியுமோ, இருந்தேன்? நீங்கள் இப்பொழுது எப்படி பச்சிளங் குழந்தைகளாய்ப் புது மெருகுடன் இருக்கிறீர்களோ, இதே போல இருந்தேன், பிறந்த புதிது. வாழ்க்கை மிகவும் இன்பகரமாய் இருக்கப் போகிறதென்று உற்சாகத்தில் ஆழ்ந்திருந்தேன். போகப் போகத் தானே உண்மை தெரிகிறது?

கன்று: என்ன உண்மை அது? வருஷா வருஷம் ஒவ்வொரு வயது அதிகமாகிறது என்கிற அதிசய உண்மையைக் குறிப்பிடுகிறாயா? எல்லோருக்கும் தான் அப்படி வயது அதிகமாகிக் கொண்டு போகிறது. உனக்குமட்டும் அல்லவே!

தாய்: எனக்கு வயது அதிகமானதோடு மட்டுமில்லை; அந்திக் காலமும் வந்துவிட்டது.

கன்று: நீ சொல்வது வேடிக்கையாய் இருக்கிறதே. இப்போது கொஞ்சநேரம் முன்பு தானே உனக்கு ஒரு வயது ஆகிறது என்றாய்? அதற்குள், அந்திம காலத்துப் பேச்செடுக்கிறாயே?

தாய்: இப்பொழுதுதான் உருவாகி யிருக்கும் குழந்தைகளாகவுள்ள உங்களிடம் நான் அதைச் சொல்லாமல் இருக்கலாம் என்று பார்த்தேன். இருந்தாலும், உண்மையை எவ்வளவு காலம் மறைத்து வைத்திருக்க முடியும்? சொல்லிவிடுகிறேன். நமக்கெல்லாம்—நம் வாழை இனத்தாருக்கே வாழ்வு ஒரு ஆண்டு தான்!

கன்று: ஏன் அம்மா, நாம் ஒரு வருஷத்திற்கு மேல் வாழ்ந்திருக்க ஆசைப்படக் கூடாதா?

தாய்: நன்றாய் ஆசைப்படலாம். ஆனால், அந்த ஆசை நிறைவேறாது.

கன்று: அது ஏன், அம்மா, அப்படி?

தாய்: அதை ஏன் கேட்கிறாய் வயிற்றெரிச்சலை? இம்மாதிரி கேள்விகளுக்கெல்லாம் பதில் என்று ஒன்று உண்டா? கேட்டால், உலக நியதி என்பர்: அவ்வளவுதான்! பிறந்து பன்னிரண்டாம் மாதத்தின் முடிவில், நாம் சாகவேண்டும். ஈசன் நம்மை வெகுக் குரூரமாக வஞ்சித்துவிட்டான். நம் வாழ்வு ஒரு வருஷம் தான்! பிறந்து ஒரே வருஷத்தில் மடியும் நம்மைப் பற்றிக் கேள்வி முறையில்லை. ஆனால் இந்தியனுடைய சராசரி ஜீவன் இருபத்தேழு தான் என்று அவன் அழுகிறான். இதுதான் உலகம்! இது எனக்கு எப்படித் தெரியும் என்றால், அன்றைக்கொருநாள் நம் தோட்டத்து முதலாளி வந்திருந்தபோது சொல்லிக்கொண்டிருந்தார். இருபத்தேழு வயது அவருக்குப் போதாதாம்!

கன்று: அம்மா, நம்மைத் தவிர உலகத்தில் மற்ற எல்லோருமே இப்படித்தான் மனிதனைப் போல் வெகுநாட்கள் ஜீவிக்கிறார்களா?

தாய்: அப்படிச் சொல்ல முடியாது. பிறருக்குப் பணிசெய்து வாழ்பவர்கள், உழைப்பாளிகள் முதலியவர்கள் எப்போதுமே அல்பாயுசுக்காரர்கள்தான்! நாம்தான் இப்படி என்றால், நமக்கு மிகவும் வேண்டியவர்களான தேனீ இனம்மட்டும் என்ன வாழ்ந்தது? அதற்கும் ஆயுள் ஒரு வருஷமோ, என்னவோதான்!

கன்று; அப்படியானல், நாங்கள் எல்லோரும் உன்னைவிட்டுப் பிரிந்துதானு ஆகவேண்டும்?

தாய்; அதற்கென்ன சந்தேகம்? பிறந்து பன்னிரண்டு மாதம் உயிர் வாழ்ந்து, கடைசியில் தாறுபோட்டுவிட்டுச் சாகவேண்டியது நம் கடமை. அதற்கேற்ப, முந்தாநேற்று நான் கருப்பஞ்சாறு தோற்றுவிடும்படியான இனிப்புள்ள நூறு பழங்கள் கொண்ட ஒரு தாறை இட்டு முதலாளிக்கு அளித்தேன். அது என் வாழ்க்கையின் முற்றுப்புள்ளி.

கன்று: பாட்டியும் கடைசியில் அப்படித் தான் செய்தாளா, அம்மா?

தாய்: பாட்டியாவது, பேத்தியாவது? எல்லோரும் அப்படித்தான்! உங்கள் பாட்டி இறக்கும் முன்பு என்னிடம் இரண்டு உறுதி மொழிகள் வாங்கிக் கொண்டாள்.

கன்று: அவை என்னென்ன?

தாய்: எல்லோருமே கேளுங்கள். நான் உங்களிடமும் அவ்வுறுதி மொழிகளை வாங்கிக் கொள்ளப் போகிறேன். நம் வம்சத்தை விருத்தி செய்ய வேண்டும் என்று என் அம்மா கேட்டுக் கொண்டாள். சரியென்று ஒப்புக் கொண்டேன். இதோ நீங்கள் என் எதிரே நிற்கிறீர்கள். அவ்வாக்கை நிறைவேற்றி விட்டேன். இன்னென்று பரோபகாரம். எப்போதும் பலனைக் கருதாது யாருக்கும் உதவ வேண்டும் என்ருள். இதுதான் அவள் என்னிடம் கேட்டுக் கொண்டது. நல்லது, பொல்லாதது எண்ணுமல், பணி செய்து கிடப்பதே நம் கடன். என் காய், கனி, பூ, பட்டை, இலை எல்லாம் போய்விட்டன. இவ்வளவுக்கும் முத்தாய்ப்பு வைத்தாற் போல, நாளைக்கு நானே போகப் போகிறேன்.

கன்று: செத்து விடுவாயா, அம்மா?

தாய்: நான் சாகமாட்டேன் தானுகை. ஆனல் என்னை வெட்டி வீழ்த்திக்கொண்டு போய் விடுவார்கள். நேற்று வந்தபோது நம் முதலாளி சொல்லிக்கொண்டிருந்தார். அவர் வீட்டில் ஏதோ கலியாணம் வருகிறது. அப்போது பந்தல் அலங்காரத்திற்கு என்னை வெட்டிக்கொண்டுபோய்விடுவார்கள், நாளைக்கே!

கன்று: எப்படியோ நாளை நீ தப்பிவிட்டாய் என்ருல், அப்புறம் உயிர் வாழ்வாயல்லவா?

தாய்: நாளைக்குத் தப்பிவிட்டாலல்தானே அந்தப்பேச்சு? நம் இனத்திலேயே இயற்கைச் சாவு துர்லபம். ஒன்று, பந்தல் — வீடு அலங்காரத்திற்கு எடுத்துச் சென்று விடுவார்கள்; இல்லாவிட்டால் ஆடு, மாடு நம்மை நாசம் செய்துவிடும்; வாழைத் தண்டிற்காக, நம்மைக் கழுவேற்றுவது சகஜம்!

கன்று: முதலாளி வீட்டில் கலியாணம் என்று, அங்கு எல்லோரும் சந்தோஷத்தோடு இருக்கையில், நாங்கள் மட்டும் உன்னைவிட்டுப் பிரிந்து அநாதைகளாய்த் தவிக்க வேண்டுமா?

தாய்: அப்படிக் கேட்கக்கூடாது, அவர்களுக்குக் கொண்டாட்டாம்; ஆனல் அது நமக்குத் திண்டாட்டம்தான். பிறருக்காகத் திண்டாடுவதில்தான், நமக்குக் கொண்டாட்டம். விடிய விடிய உபதேசம் கேட்டுவிட்டுக் கடைசியில் இப்படிக் கேட்கிருயே?

இச்சமயம் அங்கே தோட்டத்து முதலாளி தம் மகனுடன் வருகிருர். கூட, மரங்களை வீழ்த்திக்கொண்டு செல்ல, யமகிங்கரர்களும் வந்திருக்கிருர்கள். அவர்கள் ஒவ்வொரு மரமாய்ப் படுக்கவைத்துக்கொண்டு வருகிருர்கள். அதற்குள் முதலாளி. இதுகாறும் பேசிக்கொண்டிருந்த மரத்திற்குப் பக்கத்தில் வருகிருர்.

"டேய், நேற்றுச் சாப்பிட்டாயே அந்தப் பழங்கள் எப்படி இருந்தன?" என்று தந்தை கேட்டு நிறுத்தக்கூட இல்லை.

மகன்: ஜோராய் இருந்தது, அப்பா.

முதலாளி: பார்த்தாயா, இந்த மரத்தினுடைய பழங்கள்தான் நீ சாப்பிட்டது.

மகனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. "இந்த மரமா, அப்பா?" என்று ஆதுரம் பொங்க விசாரிக்கிருன்.

"அப்படியானல், இந்த மரம் மற்ற மரங்களையெல்லாம்விட ரொம்ப நல்ல மரமப்பா. இல்லையா"

"ஆமாம்!"

யம கிங்கரர்கள் மற்ற மரங்களை வீழ்த்திவிட்டு, அங்கு வருகிருர்கள்.

"இதையும் வெட்டிவிடவேண்டியது தானுங்களே, எசமான்?"

"இது என்னடா கேள்வி?"

வேலைக்காரர்கள் மரத்திற்கு அருகே செல்கிருர்கள்.

முதலாளி: ஜாக்கிரதையாய் வெட்டு. பக்கத்தில் உள்ள புதுக் கன்றுகளையும் சேர்த்துச் சாய்த்துவிடாதே.

மகன்: இதையும் வெட்டப் போகிருர்களாப்பா?

முதலாளி: ஆமாம்.

மகன்: வேண்டாம், அப்பா. பாவம், நல்ல மரம். நமக்கு எவ்வளவு நல்ல பழங்கள் தந்த மரம்! இதைப்போய் வெட்டலாமா?

முதலாளி: போடா அசடு. மரத்திலே நல்ல மரம் என்றும் கெட்ட மரம் என்றும் ஒன்று உண்டோ?

மகன்: அதெல்லாம் முடியாது. ஊஹூம், நீ வெட்டச் சொன்னால், நான் அழுவேன்.

முதலாளி: பிள்ளை சொல்கிறதைக்கேட்டு, நீங்கள் ஏன் தயங்குகிறீர்கள்? சும்மா வெட்டுங்கள்.

மகன்: நான் விடமாட்டேன்.

பையன் பிடிவாதக்காரன். செல்லப்பிள்ளை வேறு. அவன் மரத்தடியில் உட்கார்ந்து விடுகிறான். "இந்த மரத்தை வெட்டினால், நான் வீட்டிற்கு வரமாட்டேன். இங்கேயேதான் உட்கார்ந்து அழுவேன்."

முதலாளி: போனால் போகிறது, விட்டு விடுங்கள். என்னவோ பிள்ளை பிடிவாதமாய் இருக்கிறான். மரம் பிழைத்துப் போகட்டும்.

பழையபடி, அவர்கள் போன பிறகு வாழைக் குடும்பத்தில் பேச்சு ஆரம்பிக்கிறது.

தாய்: பார்த்தீர்களா, அந்தப் பையனின் அபிமானத்தை? அவன் பிடிவாதமாய் இருந்து தடுத்திரா விட்டால், நான் இப்போது உங்கள் நடுவே நின்று கொண்டிருப்பேனா? அதனால், அவனுக்கு நீங்கள் எல்லோரும் ஆளுக்கொரு நல்ல தாறாகப் போட்டுக் கொடுங்கள். என்னால்தான் முடியாது; நீங்களாவது செய்துவிடுங்கள்.

கன்றுகள்: ஆகட்டும், அம்மா. நீ பிறப்பெடுத்ததற்குச் செய்யவேண்டிய பணிகள் அவ்வளவும் செய்து முடித்து விட்டாய். இனிமேல் எங்களுக்கு நடுவே, நீ நிச்சிந்தையாய் இரு. அதுதான் எங்கள் ஆசை!

தாய்: ஆகட்டும், குழந்தைகளே!

ஒரு வாரம் கழித்து, வீட்டில் கலியாணமெல்லாம் தீர்ந்த பிறகு, முதலாளி அங்கு வருகிறார். வாழைக் கன்றுகளுக்கு நடுவே இப்போது குப்பை செத்தைதான் இருக்கிறது, அந்த மரம் இருந்த இடத்தில். அவ்விடத்தைக் காட்டி, முதலாளி வேலையாட்களுக்குக் கட்டளை இடுகிறார்:

"அந்தக் கன்றுகளுக்கு உரம் போட வேண்டாம். தாய் வாழையே மக்கிப்போய், நல்ல எருவாய்ச் சேர்ந்திருக்கும். எருவை வேறு போட்டுக் காசைக் கரியாக்க வேண்டாம்."





# எதற்குப் பிறந்தேன் ?

குு. நாராயணஸ்வாமி

“**நா**ராயணி, நாராயணி! இந்தப் புடவை நன்னாயிருக்கா, பாரேன்!”

புடவைத் தலைப்பை விரித்து, முகத்தை மூடிக்கொண்டு படுத்திருந்த நாராயணி தலை

யைத் தூக்கி, "ஊம்! என்னம்மா, பத்மா, சொல்லறே?" என்றாள்.

பத்மா புடவை மூட்டையுடன் உள்ளே நுழைந்து தமக்கை பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

"அப்பா கடைக்காரனைப் பத்துப் புடவை கொண்டுவரச் சொல்லியிருந்தார். எனக்குப் பிடிச்ச ஆறு புடவையையும் பொறுக்கிண்டு வந்திருக்கேன், நீயும் பாரேன்!"

"உனக்குப் பிடிச்சிருந்தால் சரிதான், பத்மா. நீ தானே கட்டிக்கணும்."

"பாரேன்! பார்த்தால் தேஞ்சா போயிடும்? நீ பிடிக்கறதுன்னு ஒரு வார்த்தை சொன்னால் என் மனசுக்கு திருப்தியாப் போயிடும்."

"சரி!" என்று நாராயணி எழுந்து உட்கார்ந்தாள். எண்ணெய் கண்டு வெகு நாளாகி விட்டதால் அவள் தலை பரட்டையாக 'பம்'மென்று இருந்தது. முகம் வாடி வதங்கி, நெற்றியில் திலகமில்லாத குறையை எடுத்துக்காட்டியது.

பத்மா பொட்டணத்தைப் பிரித்தாள்.

"இந்த மேக வர்ணம், டபிள் கலர், இது ரொம்ப நன்னா யிருக்கோல்லியோ, நாராயணி?"

"நன்னா யிருக்கு. பேஷ். அடுத்தது கிளிப் பச்சையா, புனுத் தலைப்பா? தலைப்பைப் பிரி."

"நீயே பிரிச்சுப் பாரேன்!" என்று பத்மா அந்தப் புடவையை அவளுக்கு அருகில் போட்டாள். பாம்பைக் கண்டவள்போல் நாராயணி பின்னுக்கு நகர்ந்துகொண்டாள்.

"ஏன் நாராயணி, தொடமாட்டாயா?" என்று பத்மா அழாத குறையாகக் கேட்டாள்.

"அதுக்கில்லே, பத்மா. நான் தொடக் கூடாது. நீயே பிரிச்சுக் காட்டேன். உன் நல்லதுக்குத்தான் தொடமாட்டேன் என்கிறேன்." அவள் கண்களிலும் நீர் நிரம்பப் பார்த்தது.

பத்மா தரையை வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"பத்மா, நிமிர்ந்து பாரு! கலியாணப் புடவையைப் பார்த்ததும் வெட்கம் வந்துடுத்தா?" என்று நாராயணி தன் தங்கையின் முகவாய்க் கட்டையைப் பிடித்து நிமிர்த்தினாள். முகம் நிமிர்ந்தபோதிலும் கண்கள் பூமியையே நோக்கின.

"கோவிச்சுண்டிட்டியா, பத்மா? நான் புடவையை எடுத்துப் பார்க்கிறேன், போறுமா?" என்று நாராயணி அந்தப் பச்சைப் புடவையை எடுத்துப் பார்த்தாள்.

"ரொம்ப நன்னாயிருக்கே! கோபுர பார்டர். தலைப்பிலே நிறைய சரிகை. இதை எப்படி பத்மா, பொறுக்கி எடுத்தே? பேஷ்!"

பத்மாவுக்குப் பழைய உற்சாகம் வரவில்லை. வாயைத் திறந்து பேசாமல் ஒவ்வொரு புடவையாகப் பாக்கி நான்கையும் எடுத்துக் காட்டிவிட்டு மறுபடியும் காகிதத்தை மடித்து நூலால் கட்டினாள்.

"இந்த ஆறையும் எடுத்துக்கொள்ளு, பத்மா. உன் சிவப்பு உடம்புக்குப் பொருத்தமாயிருக்கும்."

"சரி, நாராயணி," என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டுப் பத்மா வெளியேறினாள்.

கூடத்தில் தட்டான் வந்து நின்றுகொண்டிருந்தான். தாயாரும்தான் இருந்தாள்.

"பத்மா, உனக்கு கைவளை பண்ண, மாதிரி கொண்டுவந்திருக்கான். பார்க்கிறாயா?" என்றாள் தாயார்.

"நீயே பார்த்துச் சொல்லேன், அம்மா! நான் எதுக்கு?" என்று பத்மா மாடிக்கு ஓடும் சத்தம் கேட்டது.

"இதென்னடி பெண்ணே! தட்டான் வந்து காத்திண்டிருக்கான், நல்ல காரியமும் அதுவுமா! ஏண்டி நாராயணி, நீ ஏதாவது சொன்னயோ? இந்தப் பொண்ணு கோவிச்சுண்டு ஓடறதே?"

நாராயணி பதில் பேசவே இல்லை. தாயார் அந்த உள்ளுக்கே வந்துவிட்டாள்.

"ஏண்டி, அந்தக் குழந்தைகிட்டே எதையாவது பொருமி வைச்சயா? உன்னைத்தான் அடைச்சுப் போட்டிருக்கே, தெய்வம், உன் வாயையும் அடைச்சுக்கக் கூடாதோ?"

"நான் ஒண்ணும் சொல்லல்லே, அம்மா. புடவையெல்லாம் கொண்டு வந்து காட்டினாள். நன்னாயிருக்குன்னு சொன்னேன். வேணும்னா நான் போய் கூப்பிட்டுண்டு வரேன். போகட்டுமா?"

"வேண்டாம். வேண்டாம். நகை பண்ண ஆசாரி வந்திருக்கான். உன் முகத்தைக் காட்ட வேண்டாம்!" என்று தாயார் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிவிட்டுப் போனாள்.

நாராயணியின் கண் கலங்கியது. ஆனால் நீர் பெருகவில்லை. அவை வற்றிப்போய்த்தான் எவ்வளவோ நாளாயிற்றே? தாயாரின் குத்தலான மொழிகள் அவள் இருதயத்தைத் தொட்டு அதிர்ச்சி யுண்டாக்கின. ஆனால் காயப் படுத்தவில்லை. அதிர்ச்சி அடங்கியதும், "அவள் சொன்னதும் வாஸ்தவம்-தான். நாமே

தான் வைராக்கியமா புடவையைத் தொடக் கூடாதுன்னு நினைச்சோம் நகையை மட்டும் பார்க்கலாமா?'' என்று நினைக்கத் தொடங்கி னாள்.

பத்மா மாடியிலிருந்து இறங்கி வந்ததாகத் தெரியவில்லை. மாடிமேல் தாயாரின் குரல் இரைந்து கேட்டது. கிழே ஆசாரி "அம்மா!'' என்று கூப்பிட்டவுடன் தாயார் இறங்கி வந் தாள். பின்னாலேயே பத்மாவும் வந்தாள் போலிருக்கிறது. அவள் குரலும் மெதுவாகக் கேட்டது.

"ஆசையாயிருந்தது, காட்டினேன்! காட்டி னால் என்னவாம்? அவளுக்குமட்டும் கலியா ணப் பொறுப்பில் பங்கில்லையோ?''

''அசடு! சும்மா இரேன். தெரிஞ்சாப் போலே பேசாதே. நான் பெரியவள். சொல்ற படி கேளு!'' என்று தாயார் அதட்டினாள்.

அப்புறம் நகைகளைப்பற்றிய பேச்சுக்கள் தான் கேட்டன. நகையென்றால் உற்சாகப் படும் பத்மா. "எல்லாம் போறும்!'' என்று பேச்சுத் தொடங்கினாள்.

நாராயணி இரு காதுகளையும் பொத்திக் கொண்டு பழையபடி உடலைச் சுருட்டிக் கொண்டு படுத்தாள். நல்லவேளையாக அந்த இருட்டறையின் கதவு காற்றில் சாத்திக் கொண்டது.

தான் மூத்த பெண். முப்பது வயதாகப் போகிறது. பத்மாவுக்குப் பதினாறே வயது. அவள் குழந்தையல்லவா? அவள் க்ஷேமத்தில் பெற்றோருக்கு இருக்கும் சிரத்தை தமக்கை யான தனக்கும் இருக்கவேண்டாமா? கலி யாண சமயத்தில் எதையும் சகுனம் பார்த்துக் கைராசி தெரிந்து செய்வார்கள். அந்தச் சமயத் தில் எவ்வளவு ஒதுங்கி யிருந்தாலும் தன் கை பட்டுவிடும் அல்லது கண்ணாவது விழுந்து விடும். அப்பா மட்டும் தன்னைச் சோழராஜ புரத்தில் கொண்டுவிடச் சம்மதித்தாரானால் அங்கேபோய் இருக்கவேண்டும். கலியாண வீட்டில் தனக்கு என்ன வேலை?

நாராயணி மனதில் நிச்சயமாகிவிட்டது. கட்டாயம் சோழராஜபுரத்திற்குப் போய்விட வேண்டும்.

அவளுக்குத் தான் சோழராஜபுரத்திலிருந்து பிறந்தகம் வந்த வைபவம் நினைவுக்கு வந்தது. புருஷன் இறந்துபோன ஒரு மாதத்திற்குள் அவளைத் தாயாரும் தகப்பனாரும் பலவந்தப் படுத்தி, பிறந்தகத்திற்கு அழைத்துவந்தார்கள். தாயார் அப்போதெல்லாம் பொழுதுவிடிந்தால் பொழுது போனால் அதே அறையின் வாசற் படியில் உட்கார்ந்து கண்ணீர் வடித்துக்கொண் டிருப்பாள். பத்மா இப்போதிருப்பதைவிட அப்போது இன்னும் உலகமறியாதவளாக இருந்தாள். நாராயணி 'உம்' மென்றிருக்கி றாள் என்று பயந்துகொண்டு அவள் அந்த அறைப் பக்கமே வரமாட்டாள். போதாத குறைக்குத் தாயார் வேறு கண்ணீரும் கம்பலையு மாக அறை வாசலில் உட்கார்ந்திருந்தாளா?

ஒரு நாள் — மாசம், தேதி ஒன்றும் அவளுக்கு நினைவில்லை— பத்மா தன்னை மறந்து பாடிக் கொண்டிருந்தாள்.

"எனது உள்ளமே நிறைந்த தின்ப வெள் ளமே!''

அவள் குரல் வெகு இனிமையாக இருக்கும். எந்த இசைத் தட்டிலிருந்து கற்றுக்கொண் டாளோ தெரியவில்லை. மிகவும் நன்றாக, சங் கோஜமில்லாமல் பாடினாள்.

அப்போது, "என்ன பாட்டு வேண்டி யிருக்கு? கூடப்பொறந்தவளை உள்ளே முறிச் சுப்போட்டிருக்கு! உனக்குப் பாட்டா? இன்ப வெள்ளம் பொங்கறதோ?'' என்று தாயார் குரோதத்துடன் அதட்டல் போட்டாள்.

"பாடக்கூடாதா அம்மா? நாராயணிக்குத் தான் பாட்டுன்னா பிடிக்குமே?''

"சரிதான்! சும்மாயிருக்கமாட்டே? நம்மாத் திலேதான் பாட்டு, கூத்து ஒண்ணுமில்லாமே அடிச்சுட்டானே?''

பாட்டு நின்றுவிட்டது. பத்மா விம்மிக் கொண்டிருந்தாள்.

அன்றுதான் முதல்தடவையாக நாராயணி அந்தக் கோலத்தில் பகலில் அந்த அறையை விட்டு வெளியே வந்தது. வெகுநேரம் விழுந்து கிடந்த பிறகு எழுந்ததால் தலை கிர்ரென்று சுற்றியது. ஒரு விநாடி கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. மெதுவாகச் சுவரைப் பிடித்துக்கொண்டு வெளியே வந்தாள், அவளைத் திடீரென்று கூடத்தில் கண்டதும் தாயார் திடுக்கிட்டாள்.

"என்னம்மா, வேணும்?''

நாராயணி அதைக் காதில் போட்டுக்கொள் ளாமல் தன் தங்கையிடம் போனாள். அவளைத் தூக்கி நிறுத்தி, தன் புடவைத் தலைப்பால் அவள் கண்களைத் துடைத்தாள்.

"நீபாட்டுக்குப் பாடு பத்மா. அம்மா கிடக்கிறாள். கோபத்திலே ஏதோ சொல்லி விட்டாள். சின்ன பொண்ணா லட்சணமா ஆடிப் பாடிண்டு இருக்கணும் தெரியுமா?'' என்றாள். பிறகு தன் தாயார் பக்கம் திரும்பி, "ஏனம்மா, அவள் குழந்தை. அவள் மனசை ஏன் புண் படுத்தறே? என்னையும் அவளையும் சேர்த்து

ஒரே வாயாலே பேசாதே. அவளாவது சந்தோஷமாய் இருக்கட்டும். ஏன்? அவள் சந்தோஷமா யிருந்தாத்தானே நமக்கும் சந்தோஷம்?" என்ருள்.

பத்மா அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கினுள்.

"நாராயணி, நான் உன்னுேடே பேசல் லேன்னு உனக்கு கோவமில்லையே? எனக்கு பயமாயிருந்தது!" என்று கொஞ்சினுள்.

அந்த நினைவு வந்ததும் நாராயணியின் 'வற்றிப்போன' கண்கள் ஊற்றெடுத்தன. அது சோகக் கண்ணீரல்ல, உணர்ச்சிக் கண்ணீர்!

அன்றிலிருந்தோ என்னமோ தாயாருக்கு நாராயணியின் மேலிருந்த பாசம் பெரிய மாறுதலை அடைந்தது. இரண்டு திருப்பம் திரும்பி எதிர் திசையை நோக்கிச் சென்றது! ஒரு வருஷம் வரை அது அவ்வளவு தெளிவாக இல்லை. பத்மாவுக்குக் கலியாணம் நிச்சயமானதும் ஸ்பஷ்டமாகத் தெரியத் தொடங்கிற்று. பத்மாவையும் அவளையும் எவ்வளவு பிரித்துவைக்க முடியுமோ அவ்வளவு பிரித்துவைக்கத் தாயார் முயற்சி செய்தாள்.

"இப்போது அவளுக்கே சந்தோஷமாயிருக்கும். நான் சோழராஜபுரத்திற்குப் போகிறேன் என்று சொல்லப் போவது!" என்று நாராயணி நினைத்துக்கொண்டாள்.

வெளியில் போயிருந்த தகப்பனுர் வந்தார். "புடவையெல்லாம் பொறுக்கியாச்சா? நகை பண்ணக் கொடுத்தாச்சா?" என்று விசாரித்தார்.

"என்ன பத்மா, ஒரு மாதிரியாயிருக்கே?"

"ஓஹோ! இன்னும் பத்மா சமாதானம் அடையவில்லையா? பாவம், குழந்தையைப் புண்படுத்திவிட்டேன்" என்று நாராயணி நொந்துகொண்டாள்.

இதோ அம்மாவின் புகார்!

"அவள் இருக்காளேல்லியோ? தங்கையெ ஏதோ தகராறு பண்ணியிருக்காள்!"

"பார்த்தாயா? மறந்தே போயிட்டேன். நாராயணி கிட்டே முக்கியமான சமாசாரம் சொல்லணும்."

தகப்பனுர் காலடியோசை கேட்டது. மூடியிருந்த கதவு திறந்தது.

"தூங்கறயா, நாராயணி?"

அவள் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள். "இல்லையப்பா. என்ன வேணும்?" என்று கேட்டாள்.

தகப்பனுர் உள்ளே வந்து தன் பெண்ணை ஏறெடுத்துப் பார்த்தார். பிறகு," உன் மச்சினரும் ஓர்ப்படியும் இந்த ஊருக்கு வந்திருக்கா, அம்மா. இங்கே சாயந்திரம் வறேன்னுர்கள். காலயில் சோழராஜபுரத்துக்குப் போருளாம். உன்னையும் கொஞ்சநாள் அழைச்சிண்டுபோய் வைச்சுக்கணும்னு அவன் சொல்ருன். உன் அபிப்பிராயம் என்ன? உனக்கும் ஆறுதலா யிருக்கும். கலியாணத்துக்கு நாலுநாள் முந்தி யாரையாவது திருப்பி அழைச்சிண்டு வரச் சொல்றேன்," என்ருர்.

அவளுக்குக் 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது' என்ற பழமொழி ஞாபகத்திற்கு வந்தது. கடவுளே பார்த்து அவளைச் சோழராஜபுரத்திற்கு அனுப்புகிருர் போலும்!

"சரியப்பா!" என்று மட்டும் அவள் பதில் சொன்னுள். "கலியாணத்திற்கு நான் வந்து என்ன செய்யப் போகிறேன்" என்று சொல்ல வந்ததை அப்படியே நெஞ்சோடு நிறுத்திக் கொண்டாள்.

* * *

சோழராஜபுரத்தில் நாராயணிக்குச் சற்று சௌகரியமாகவே இருந்தது. மைத்துனரின் பெண்களும் பிள்ளைகளும் "பெரியம்மா, பெரியம்மா!" என்று அவளைச் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பட்சணம் செய்து கொடுப்பதிலிருந்து தலைபின்னுவது வரை அவளே செய்தாள். மனதிற்குச் சாந்தியும் சந்தோஷமும் கிடைத்தன.

மைத்துனன் ஒரு நாள் அவளைத் தேடிக் கொண்டு வந்தார்.

"மன்னி, உன் அப்பா தபால் போட்டிருக்கிருர். நாளன்னிக்குப் பத்மாவுக்கு கலியாணமாம். உன்னை தானே வந்து அழைச்சிண்டு போக சாவகாசம் இல்லாததனுல் என்னையே கொண்டுவிடச் சொல்லி யிருக்கார்."

"நான் போகல்லே! மன்னிக்கு உடம்பு சரியில்லைன்னு எழுதிப் போட்டுடுங்கோ!" என்ருள் நாராயணி.

"ஏன், மன்னி?......" என்று ஏதோ சொல்ல மைத்துனர் வாயெடுத்தார்.

"நான் அங்கேபோய் என்ன செய்யறது சொல்லுங்கோ. இங்கேதான் மனசுக்கு சந்தோஷமாயிருக்கு. அங்கே போனுல் அவாளுக்கும் கஷ்டம், எனக்கும் கஷ்டம், பத்மாவாவது என் கண் படாமே க்ஷேமமாயிருக்கட்டும்," என்று நாராயணி தீர்மானமாகச் சொன்னுள்.

"உன்னிஷ்டம்!" என்று சொல்லிவிட்டு மைத்துனர் நகர்ந்தார்.

நாராயணி தான் கலியாணத்திற்குப் போகாததைப்பற்றி வருத்தப்படவில்லை. ஆனால் கலியாணத்தன்று மட்டும் அவள் மனம் ஒரு மாதிரியாக இருந்தது. "இத்தனை நேரம் மாப்பிள்ளை 'பரதேசி கோலம்' வருவார். பத்மா பச்சைப் புடவை கட்டிக்கொண்டு ஊஞ்சலில் உட்காருவாள். இத்தனை நேரம் தாலி கட்டியாகிவிட்டிருக்கும். பலகாரம் பண்ணுவார்கள்." என்று நிமிஷத்துக்கு ஒரு தரம் நினைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஒரு சமயம், "நான் வரவில்லையென்று பத்மா வருத்தப்படுகிறாளோ என்னமோ? ஏன் போகாமல் போனேனோம்?" என்றிருந்தது. சற்று நேரத்திற்குப் பிறகு, "நல்லவேளையாகப் போகவேண்டாம் என்று தோன்றிற்றே?" என்று ஆறுதல் உண்டாயிற்று. போகாததனால் 'போகவில்லை' என்பதோடு முடிந்துவிட்டது. போயிருந்தால் உள்ளே அடைந்தாலும் குற்றம், வெளியே வந்தாலும் குற்றம்! எல்லோரும் வேடிக்கை பார்ப்பதுபோல் அவளைப் பார்க்க வந்துவிட்டுப் போவார்கள்.

கலியாணதினத்திற்கு அப்புறம் ஒன்று இரண்டு என்று நாட்கள் ஓடின. நாராயணியின் மனதில் 'கூடப் பிறந்த பாசம்' படாத பாடு படுத்திக்கொண்டிருந்தது. ஒரு வார காலமானதும் ஊருக்குப்போய் தங்கையைக் காணவேண்டும் என்று வேகம் உண்டாயிற்று. கூடிய சிக்கிரம் அவள் புக்ககத்திற்குப் போய் விடுவாள் அப்புறம் ஆறு மாசமோ ஒரு வருஷமோ, யார் கண்டது?

மைத்துனரிடம் சொன்னாள். வண்டி ஏற்பாடாகி வாசலில் வந்து நின்றது. குழந்தைகள் அவளைச் சுற்றி நின்றுகொண்டு அழுதன.

ஓர்ப்படி, "மன்னி, நீங்கள் போகவே வேண்டாம். இங்கேயே இருங்கள். உங்களுக்கும் இந்த வீட்டில் பாத்தியதை உண்டோல்லியோ? உங்கள் தங்கை புக்ககம் போகிறபோது இங்கே இறங்கிவிட்டுப் போகட்டுமே? சீயாழி ஸ்டேஷனுக்குப் போக இதுதானே வழி?" என்றாள்.

மைத்துனருக்கும் அவளை அவ்வளவு சீக்கிரம் அனுப்புவதில் இஷ்டமில்லை. குழந்தைகள் தன் மனைவி எல்லோரும் தடுக்கும்போது அவர் மட்டும் "கிளம்பு, மன்னி!" என்று எப்படிச் சொல்லுவார்? "வண்டியைத் திருப்பி அனுப்பி விடட்டுமா, மன்னி? இருந்துவிட்டுத்தான் போயேன்!" என்றார்.

நாராயணி கால் கட்டைவிரலால் தரையைக் கிளறிக்கொண்டிருந்தாள். "அப்போ இன்னும் கொஞ்சநாள் இருக்கட்டுமா?" என்றாள், மெதுவாக.

ஓர்ப்படி பிடித்துக்கொண்டுவிட்டாள்! "இருந்துவிட்டுப் போங்கள் மன்னி. வண்டியைப் போகச் சொல்லுங்கடா. குழந்தைகளா! இன்றைக்கே உங்கள் அப்பாவுக்கு எழுதிப்போட்டு விடுங்கள். பத்மா புக்ககம் போகும்போது இங்கே இறங்கி உங்களைப் பார்த்துவிட்டுப் போகட்டும்." என்றாள்.

வண்டி வாசலைவிட்டு நகர்ந்தது. குழந்தைகள் பெரியம்மாவைச் சுற்றிக் கும்மாளம் போட்டன.

அப்போது வேறொரு வண்டி வாசலில் வந்து நின்றது. எல்லோரும் எட்டிப் பார்த்தார்கள். நாராயணி அது தன் பிறந்தகத்து வண்டி என்பதை உடனே கண்டுகொண்டாள்.

"உங்கள் தங்கைதான் வந்திருக்காள்போலிருக்கு" என்று ஓர்ப்படி விரைவாக வாசலுக்குப் போனாள்.

வண்டியிலிருந்து இறங்கியது நாராயணியின் தகப்பனார் மட்டும்தான். "வண்டியைத் திருப்பி வைத்துக்கொள்" என்று உத்தரவு இட்டுவிட்டு, படியேறி வந்தார்.

"வாருங்கள், வாருங்கள்" என்று நாராயணியின் மைத்துனர் வரவேற்றார்.

வந்தவர் ரேழியிலேயே நின்று, "உட்கார நேரம் இல்லை. நாராயணியைக் கையோடு அழைச்சிண்டு போகலாம்னு வந்திருக்கேன். அவள் அம்மாவிற்கு ராத்திரி முதல் உடம்பு சரியில்லை. வீட்டிலே சமையல் செய்யக்கூட ஆளில்லை, அவளைக் கிளம்பச் சொல்லப்பா!" என்றார்.

மைத்துனர் விஷயத்தைச் சொல்ல உள்ளே போனபோது நாராயணி தன் புடவை மூட்டையை மறுபடியும் கட்டிக்கொண்டிருந்தாள். அவர் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு கூடத்திற்கு வந்தார்.

"உங்கள் இரண்டாவது பெண் இல்லையோ?" என்று மெதுவாகக் கேட்டார்.

"அவள் முந்தாநாளே புக்ககத்துக்குப் போயிட்டாள். உடனே அழைச்சிண்டு போகணும்னு, அனுப்பிட்டேன். அப்போ பட்சணம் செய்த அலுப்புதான் அவள் அம்மாவிற்கு. சரி, நாராயணி கிளம்பிட்டாளா?"

நாராயணி குழந்தைகளை முத்தமிட்டுவிட்டு ஓர்ப்படியிடமும் மைத்துனரிடமும் சொல்லிவிட்டு வேகமாய் வண்டிக்குப் போனாள்.

"வரட்டுமா?" என்று அவள் தகப்பனார் பின் தொடர்ந்தார்.

வண்டியில் போகும்போது நாராயணி எண்ணினாள். "நான் எதற்குப் பிறந்தேன் என்று சிலசமயம் நினைத்துக்கொண்டேனே! இதற்குத்தான் பிறந்தேன் என்று இப்போதல்லவா தெரிகிறது!"

"Use 'Fordson' Major Tractors and Grow More Food"
"போர்ட்ஸ்ஸன்" மேஜர் டிராக்டர்களை உபயோகித்து
உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்



ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்
போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்
202, 203 மவுண்ட்ரோடு, சென்னை-2
கிளைகள் : பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (Dn.)
டெப்போ : கோயமுத்தூர்

# இணையில்லாத் தியாகம்

ராமகுமார்




**1857** ஆம் ஆண்டு, ஜூன் மாதம், பொழுது சாயும் வேளை. இருந்தாலும் ஆதவனின் கிரணங்கள் அக்கினிக் கனலைக் கக்கிக்கொண்டிருந்தன.

உரயியிலிருந்து கால்பி போகும் சாலைவழியாக நான்கு சக்கரங்கள் உள்ள வண்டி ஒன்று சில பிரயாணிகள் சகிதம் புழுதியையும் மண்ணையும் வாரி வீசிக்கொண்டு வெகுவேகமாகப் போய்க்கொண்டிருந்தது. வண்டிக் குதிரைகளின் மீதும் ஒரேபுழுதி படிந்திருந்தது. வேகமாக ஓடும் காரணத்தினால் அவற்றின் வாயில் நுரை தள்ளிக்கொண்டிருந்தது; அதுமட்டும் அல்ல, மேல் மூச்சு கீழ் மூச்சு வேறு வாங்கிக் கொண்டிருந்தன. அவை மிகவும் களைத்துச் சளைத்துப் போயிருந்தன, பாவம்! அப்பொழுதும் வண்டிக்காரனுக்கு அவற்றின் மீது இரக்கம் ஏற்படவில்லை. தன் கைச் சவுக்கினால் அவற்றின் முதுகுகளில் 'பளீர், பளீர்' என்று அடிமேல் அடி அடித்துக்கொண்டிருந்தான்,

வண்டியில் உட்கார்ந்திருந்த பிரயாணிகளின் நிலைமை அந்தக் குதிரைகளைக்காட்டிலும் இன்னும் படுமோசமாக இருந்தது. வண்டியிலோ இடம் மிகக் குறைவு, உட்கார்ந்திருந்த பிரயாணிகளோ மிகவும் அதிகம். ஒருவர் மடிமீது ஒருவர் உட்கார்ந்திருந்தனர் என்றுதான் சொல்லவேண்டும். அவர்களில் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவும் இல்லை; இப்படி அப்படி அசைந்தும் கொடுக்கவில்லை; அவர்களுடைய முகங்களிலே பரபரப்பும் கலவரமும் தாண்டவமாடியன.

பாதையோ மிகவும் கரடுமுரடான பாதை. வண்டி மேடு பள்ளங்களில் இறங்கி ஏறும் பொழுதெல்லாம், அவர்களை மூட்டையைப் போலத் தூக்கித் தூக்கிப் போட்டது. ஒருவர் தலை இன்னொருவர் தலையுடன் மோதிக்கொண்டது. ஆனால் அவர்கள் வாய் திறந்து 'ஆ—ஊ' என்று மூச்சுக்கூடப் பிரியவில்லை. அவர்கள் இந்தக் கஷ்டங்களையெல்லாம்விடப் பெரிய கஷ்டங்களுக்கு இலக்காகியிருந்தனர் போலும்! ஆகவே, அவர்கள் அந்தச் சிரமங்களையெல்லாம் ஒரு பொருட்டாகவே கருதவில்லை.

ஒரு புறத்தில் மூன்று இளைஞர்கள் உட்கார்ந்திருந்தனர். நல்ல கட்டுமஸ்தான சரீரம். கட்டிளங்காளைகளான அவர்கள்கூட அல்லவா வாய் திறவாமல் உட்கார்ந்திருந்தனர்? சூரியன் அவர்களுக்கு நேர் எதிரே இருந்ததால் அவர்கள் தலையில் அணிந்திருந்த தொப்பிகளால்கூடச் சூரிய வெப்பத்தைத் தடுத்து அவர்களைக் காக்க முடியவில்லை. அவர்களில் ஒருவனுடைய மடியில் சின்னஞ்சிறு குழந்தை ஒன்று இருந்தது. பூவுடல் படைத்த அந்தக் குழந்தை பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. வெய்யிலின் வெப்பம் தாளாமல் அந்தக் குழந்தையின் தாமரைபோன்ற முகம் மிகவும் வாட்டமுற்றிருந்தது. அதன் கையில் பப்பாளிப் பழத்தின் துண்டம் ஒன்று இருந்தது. அடிக்கடி அதை வாயில் வைத்துச் சப்பிக்கொண்டிருந்தது. ஒரு இளைஞன் தன் கோட்டை, குழந்தையின் முகத்துக்கு நேரே பிடித்து அதை வெய்யிலிலிருந்து காப்பாற்ற முயன்றுகொண்டிருந்தான். ஆனால் 'ஓ' என்று அடித்துக் கொண்டிருந்த காற்று அவனுடைய பிரயாசையிலே மண்ணைப் போட்டுக்கொண்டிருந்தது.

இன்னொரு புறத்தில் மூன்றுபேர் உட்கார்ந்திருந்தனர். அவர்களில் ஒருவன் வயது முதிர்ந்த கிழவன். ஒருத்தி யுவதி, இன்னொருத்தி நடுத்தர வயது உள்ளவள். யுவதி கிழவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தாள். அந்தக் கிழவனையும் யுவதியையும் பார்க்கும்பொழுது இலையுதிர் காலமும் இளவேனிற் காலமும் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்திருப்பதுபோலத் தோன்றின. யுவதி மிகவும் அழகி. 'மெல்லியலாள்' என்ற அடைமொழியும் அவளுக்கு மிகவும் உகந்ததுவே. ஆனால் இயற்கைக்கு அவள்மீது கொஞ்சமாவது கருணை பிறந்தால் தானே? வேட்கைக் காற்றை வீசி அவள் முகத்தை மிகவும் அலங்கோலமாகச் செய்து வைத்திருந்தது. தலை முழுவதும் ஒரே புழுதி படர்ந்திருந்தது. கண்கள் வேறு கலங்கியிருந்தன. அந்தக் கண்களில் இனந் தெரியாத ஏமாற்றமும் கலவரமும் காட்சி அளித்தன. அவளுடைய அந்தப் பரிதாப நிலையைக் காணும் பொழுது மனத்தை என்னவோ செய்தது. ஒருபுறம் ஆச்சரியம், இன்னொரு புறம் வருத்தம். இரண்டுக்கும் மத்தியிலே இரக்கம்—இப்படியாக மனம் ஊசலாடிக்கொண்டிருந்தது. அவளையும் அவளுடைய கூட்டாளிகளையும் இயற்கை ஏமாற்றிச் சக்கையாகப் பிழிந்து வாட்டிவிட்டது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அவர்களுடைய வெள்ளையான உடல் பாரத நாட்டின் பயங்கர உஷ்ணத்துக்கேற்றவாறு ஆக்கப்படவில்லை என்பது நிதர்சனமாக விளங்கியது.

கால்பிக்கு அருகில் வந்ததும் வண்டிக்காரன் குதிரைகளின் கடிவாளங்களைப் பிடித்து இழுத்தான். கருங்கோடைக்குப் பயந்து நகரம் ஜன சஞ்சாரமின்றி வெறிச்சென்று கிடந்தது. அத்தி பூத்தாற்போல இரண்டொரு தலைகளை மட்டும்தான் இடையிடையே எங்காவது காண முடிந்தது. நான்கு சக்கர வண்டியையும் அதனுள் உட்கார்ந்திருக்கும் பிரயாணிகளையும் கண்டு சிலர், பட்டிக்காட்டான் யானையைக் கண்டகதையாக வாயைப் பிளந்துகொண்டு நின்றனர். வண்டிக்காரன் தன் மேல் துண்டினால் முகத்து வியர்வையை நன்றாகத் துடைத்துக் கொண்டான். பிறகு இரண்டொரு மூச்சு விட்டு உடலையும் உள்ளத்தையும் சிறிது ஆச்வாசப்படுத்திக்கொண்டான். பிறகு, "அடி ஆத்தே! பொழுது சாய்ந்த பின்னும் இப்படி வெய்யில் கொளுத்தித் தொலைக்குதே! ஆள் இப்படி வெய்யில் கொளுத்தினால் எப்படிப் பிழைக்கிறது!" என்று தனக்குத்தானே முணுமுணுத்துக்கொண்டான். அதற்குப்பின் நீண்டு வளர்ந்த தூசி படிந்திருந்த தன் தாடியையும் கிழிந்து தொங்கிக்கொண்டிருந்த தன் பாஜாமாவையும் ஒருமுறை பார்த்துவிட்டு, "அப்பப்பா! என்ன தூசி! ஜான்ஸியிலிருந்து கால்பி வரையில் உள்ள தூசி அத்தனையும் என் தலையில்தான் போலிருக்கிறது!" என்றும் முணுமுணுத்துக்கொண்டான்.

அவ்வழியே வந்துகொண்டிருந்த நகரத்துப் பிரமுகர் ஒருவரைக்கண்டதும் அவன் வண்டியை நிறுத்திவிட்டு, "ஏன் எசமான்! இங்கே பக்கத்தில் எங்கேயாவது தண்ணீர் கிடைக்குமா?" என்று கேட்டான்.

உள்ளே உட்கார்ந்திருந்த பிரயாணிகள் அனைவரும் வருத்தமே உருவெடுத்த சூன்யமான பார்வையில் அவனை ஒருமுறை பார்த்தனர். அவர்கள் பார்த்த அந்தப் பார்வை அவர்கள் வண்டிக்காரனிடம் ஏதோ சொல்ல விரும்புகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டியது.

அந்தப் பிரமுகர் நின்று, "இல்லாமல் என்ன? அதோ கொஞ்ச தூரத்தில் ஒரு

கிணறு இருக்கிறது, பார்! அது குடிதண்ணீர் தான்!" என்றார்.

வண்டிக்காரன் குதிரைகளைத் தட்டி ஓட்டுவதற்காகச் சாட்டையைக் கையில் எடுத்தான். வண்டிக்குள் உட்கார்ந்திருக்கும் பிரயாணிகளைக் கவனித்துவிட்ட அந்தப் பிரமுகர் வியப்புடன், "எங்கே போகிறாய், அப்பா?" என்று வண்டிக்காரனைப் பார்த்துக் கேட்டார்.

"என்னத்தைச் சொல்லுவேனுங்க?"

வண்டிக்காரனுக்கே தான் போகவேண்டிய இடம் சரியாகத் தெரியவில்லை. ஆனால் அந்தப் பிரமுகரின் பெருந்தன்மை வாய்ந்த ஆடை அலங்காரங்களைப் பார்த்துவிட்டு அவன், "ஆண்டவன் விட்ட வழிதானே போகணுமுங்க" என்று சொன்னான்.

அதைக்கேட்ட பிரமுகர் அநுதாபத்துடன், "ஏன் அப்பா! பொழுது சாய்ந்துவிட்டதே! இனிமேல் எங்கே போவாய்? உன் குதிரைகளும் களைத்துச் சளைத்துப் போயிருக்கின்றனவே!" என்றார்.

"என்ன செய்யலாமுங்க? எனக்கும் எங்கேயாவது இளைப்பாற இஷ்டம்தான். ஆனால் தங்குவதற்கு ஒரு இடம் வேண்டாமா? இந்த ஆங்கிலேயர்களைக் கலகக்காரர்கள் பின் தொடர்ந்து வருகிறார்கள். நாங்கள் நேற்றுக் காலையில் ஜான்ஸியைவிட்டுப் புறப்பட்டோம். வழியிலே எங்கும் மூச்சுவிடக்கூட நேரமில்லை. இவர்களைக் காப்பாற்றிக்கொண்டு வருவது பெரும்பாடாகிவிட்டது. ஜான்ஸியிலிருந்து பாண்டேருக்குப் போனோம். அங்கிருந்து புறப்பட்டு இன்று உரயிக்கு வந்திருக்கிறோம். 'யாராவது இவங்களுக்கு ஒளிந்து கொள்ள இடம் கொடுக்கமாட்டாங்களா?' என்று சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்துவிட்டேனுங்க. யாராவது வேண்டுமென்றே விபத்தை விலைக்கு வாங்கிக்கொள்ளுவாங்களா? எல்லோருமே இடம் கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டார்கள். நேற்றுமுதல் பாவம், இவர்கள் பச்சைத் தண்ணி பல்லிலே ஊத்தலீங்க. யாருங்க இவங்களுக்குச் சோறு போடுவாங்க? இன்னிப் பொழுது வெய்யில் பூரா இவங்க தலைமேல்தான். உரயியில் தண்ணீர் குடிச்சாங்க, அங்கே உண்ண ஒண்ணும் கிடைக்கலீங்க. உரயியில் கிளம்பிய வண்டி இங்கேதான் வந்து நின்னுருக்குங்க?" என்றான்.

வண்டிக்காரனின் நீண்ட தாடியையும் தளர்ந்த பாஜாமாவையும் பார்த்தவாறு அந்தப் பிரமுகர், "சாயபு! நீ இந்தப் பக்கமாக இந்த இங்கிலிஷ்காரர்களை அழைத்துக்கொண்டு வந்திருக்கக்கூடாது. இந்தப் பக்கம் எங்கேபோனாலும் உங்களுக்கு ஆபத்துத்தான். அங்கே சாதாரண ஆபத்து என்றால் இங்கே பேராபத்தல்லவா இருக்கிறது? இப்பொழுது கால்பி கலகக்காரர்களின் ஆதிக்கியத்தில் இருக்கிறதே! இரண்டு நாட்களாக ராவ் சாஹிப்புக்கூடக் கால்பிக் கோட்டையில்தான் முகாம் போட்டிருக்கிறார். உண்மையிலேயே நீ இந்த ஆங்கிலேயர்களைக் காப்பாற்ற விரும்புவாயாகில், வந்த வழியே திரும்பிவிடு, அதுதான் நல்லது. இரவில் எங்கேயாவது வழியிலேயே தங்கிவிடுங்கள். எந்தக் கிராமத்துக்குள்ளும் நுழைந்துவிடாதீர்கள்!" என்று எச்சரித்தார்.

வண்டிக்காரனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. தனக்கு வரப்போகும் சாவோலையைக் கேட்டிருந்தால்கூட அவன் அவ்வளவு பயப்பட்டிருக்கமாட்டான். அந்தப் பிரமுகர் சொன்ன வார்த்தைகள் அவனை அப்படியே ஒரு உலுக்கு உலுக்கித்தான் விட்டன. அவனுக்குக் கால்பியைப் பற்றிய செய்தி தெரியாது. தெரிந்திருந்தால் அவன் இந்தப்பக்கம் அடி எடுத்து வைத்திருப்பானா?

"எசமான், இந்த ஏழுபேரும் எனக்கு உயிருக்கு உயிரானவர்கள். இவர்களுக்கு எந்த விதமான தீங்கும் விளையக்கூடாது. இவர்களுக்காக நான் என் உயிரையே லட்சியம் செய்யாமல் இவ்வளவு தூரம் வந்திருக்கிறேன். தாங்கள் இப்பொழுது சொன்ன செய்தி என் மனத்தைக் கலக்குகிறது, இந்த இரவுவேளையில் நான் எங்கே போவது எசமான்? காட்டிலே தங்குவோம் என்றாலோ, அது நடக்காத காரியம். இவர்கள் வசதியாகத் தங்குவதற்கும் உணவு உண்பதற்கும் தகுதியான ஒரு இடம் சொல்லுங்கள், எசமான்! உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு. இவர்கள் சோறு தின்று இரண்டு நாட்களுக்குமேல் ஆகிவிட்டன," என்றான்.

பிரமுகர் அதைக் கேட்டதும் கலக்கமுற்று, "தேவலையே, சாயபு! வழி சொன்னவனையே 'நீ முன்னால் போ!' என்று சொல்லுவது போல் அல்லவா இருக்கிறது நீ சொல்லுவது! உனக்கு நான் எந்த இடத்தைக் காட்டமுடியும்? இங்கே தங்குவதற்கேற்ற தர்ம சத்திரம் கூட இல்லையே; ஒரே ஒரு சத்திரம் இருக்கிறது அதில் நீங்கள் சௌகரியமாக—ஜாக்கிரதையாக—இருக்க முடியாது என்றுதான் தோன்றுகிறது!" என்றார்.

வண்டிக்காரன் வண்டியிலிருந்து கீழிறங்கி அந்தப் பிரமுகரின் காலடிகளிலே விழுந்து பயந்த குரலில், "எசமான்! எசமான்! இந்த ஏழைமீது இரக்கம் காட்டுங்கள், இவர்

ளுக்கு நீங்களே இடம் கொடுத்தாலும் சரி! இல்லை, தப்புவதற்கு வேறு ஏதாவது வழி சொன்னாலும் சரி! உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு. ஆண்டவன் உங்களை நன்றாக வைப்பான்!" என்று வேண்டினான்.

"நான் என்ன அப்பா வழி சொல்லக்கிடக் கிடக்கிறது?" என்றார் பிரமுகர் மீண்டும்.

"மனமிருந்தால் வழி உண்டு, எசமான்! இன்று இராப்பொழுது மட்டும் தங்க ஏதாவது வழி செய்யுங்கள்! என்று கெஞ்சாத தோஷமாகச் சொன்னான்.

பிரமுகர் பேசாமல் சிறிது நேரம் யோசித்தார். 'ஆபத்திலே சிக்கி அல்லலுறும் இந்த ஆங்கிலேயர்களுக்கு அபயம் அளிக்கலாமா, கூடாதா?' என்ற பிரச்னை அவருள்ளத்திலே எழுந்தது. ஆனால் அடுத்த கணமே அவருடைய மனம் மாறிவிட்டது உடனே அவர் "போகாத ஊருக்கு எதற்காகப்பா வழி சொல்லுகிறாய்?" என்று கேட்டார்.

"எசமான்! உங்களுக்கு ஒரு கஷ்டமும் வராது. புண்ணிய காரியத்தைச் செய்யும் பொழுது யாருக்காவது கஷ்டம் நேர்ந்ததுண்டா? எவருக்கும் தெரியாமல் பார்த்துக் கொள்ளுகிறேன். இருட்டிவிட்டது. இரண்டு மூன்று நாட்களுக்கு மட்டுமாவது இவர்களுக்கு உங்கள் வீட்டில் தங்க இடம் கொடுங்கள். ஏதாவது இருட்டறை ஒன்று ஒழித்துத் தந்தால் போதும்!" என்றான் வண்டிக்காரன்.

"என் வீட்டில் எத்தனையோ அறைகள் இருக்கின்றன. இருந்தாலும்......" என்று இழுத்தார் அவர்.

"இருந்தாலும்.........இருந்தாலும் என்று இழுக்காதீர்கள், எசமான்! இவர்களை ஏதாவது ஒரு அறையில் ஒளித்துவையுங்கள். கடவுள் உங்களுக்கு நீண்ட ஆயுளை அளிப்பான், இவர்கள் படும் அவஸ்தையையும் சிரமத்தையும் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இந்த இரண்டு நாட்களாக இவர்கள் சாவைப்பற்றியேதான் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள் கால்பியின் நிலையைப்பற்றித் தாங்கள் சொல்லுவதைப் பார்த்தால் பகவான்தான் இவர்களைக் காப்பாற்றவேண்டும் என்று தோன்றுகிறது" என்றான் வண்டிக்காரன்.

பிரமுகர் பேசாமல் நின்றார். விவரம் தெரிந்தே விபத்தை விலைக்கு வாங்கிக்கொள்ளுவது நல்லதா, இல்லையா என்று கணநேரம் யோசித்தார். அதற்குள்ளாக வண்டிக்காரன், "எசமான், இங்கு நிற்கும் ஒவ்வொரு கணமும் எனக்கு ஒவ்வொரு யுகமாகக் கழிகிறது. எசமான், அதுமட்டும் இல்லை, இவர்களுக்கெல்லாம் தாகம் வேறு தாங்கவில்லையாம்!" என்றான்.

அந்தப் பிரமுகர் சிறிது நேரத்துக்குப்பின் மிகவும் மெதுவான குரலில், "பயப்படாதீர்கள், வாருங்கள்!......ஆமாம், இவர்களை வீட்டு வரை எப்படி அழைத்துப் போவது? ராவ் சாகிப்பின் ஆட்கள் யாருக்காவது இதுவிஷயம் தெரிந்துவிட்டால்......? என் வீடு இருந்த இடம் தெரியாமல் மண்ணோடு மண்ணாகி விடுமே! அதற்குத்தான் யோசனை செய்கிறேன்!" என்றார்.

வண்டிக்காரன் வெகு புத்திசாலி. ஆள் வழிக்கு வந்துவிட்டார் என்பதை உணர்ந்தான். அவனுக்குக் கவலையின் சுமை சற்றுக் குறைந்தவிட்டதுபோலத் தோன்றியது. அவருடன் அதிகப் பேச்சுக்கொடுக்காமல் ஆனந்தமாக ஆங்கிலேயர்களுடன் வார்த்தையாடலானான். அவர்களில் ஒரு ஆங்கிலேயனுக்கு அரைகுறையாக ஹிந்துஸ்தானி பேச வரும். அவன் தன் தோழர்களுக்கு நிலைமையை நன்கு விளக்கிச் சொன்னான். அந்த வெள்ளையர்களுக்குத் தப்பிப் பிழைப்போம் என்ற நம்பிக்கையே இல்லை, மரணத்தின் வாயில் அகப்பட்டுக்கொண்டுவிட்டதாகவே அவர்கள் எண்ணினர். ஏமாற்றம்என்னும் காரிருளில் நம்பிக்கையென்னும் சிறு ஒளி தோன்றவே, அவர்கள் யாத்திரையில் அனுபவித்த அத்தனை கஷ்டங்களையும் கணநேரத்துக்கு மறந்தனர். அவர்கள் பார்த்த நன்றிததும்பிய பார்வை கனவானுக்குக் கட்டியம் கூறுவது போலிருந்தது. ஹிந்துஸ்தானி அரைகுறையாக அறிந்த ஆங்கிலேயன், "உங்களுக்கு நாங்கள் நிறையப் பணம் தருவோம். அத்தனை ரூபாயை நீங்கள் உங்கள் ஆயுளிலே கண்ணால் கூடக் கண்டிருக்கமுடியாது. எங்களை ஏமாற்றி மோசம் செய்யக்கூடாது என்ன, புரிந்ததா?" என்று கேட்டான்.

வண்டிக்காரன், "என்ன, எசமான்! நீங்கள் இப்படித் தெரியாமல் பேசுகிறீர்களே! இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் இந்தியர்களான நாங்கள் எங்கள் ஜன்ம விரோதியையும் கூடக் காட்டிக்கொடுக்க மாட்டோம்" என்று பெருமையாகச் சொன்னான்.

ஆபத்துக்கு ஆளாகியிருந்த அந்த ஆங்கிலேயர்களுக்கு அபயம் அளித்துத் தம் வீட்டிலே இடம் கொடுத்தார் அந்தக் கனவான். எவர் கண்களிலுமே தட்டுப்படாத இடம் ஒன்றில் அவர்களை ஒளித்து வைத்தார். தம்முடைய நம்பிக்கைக்குகந்த பணியாட்களிடம் இவ் விஷயம் யாருடைய காதுகளுக்கும் எட்டக்

கூடாது என்று சொல்லி வைத்தார். 'இந்த வெள்ளையர்கள் நம்மைச் சரண் அடைந்திருக்கிறார்கள். நம் உயிரே போவதாயிருந்தாலும் சரி, இவர்களைக் காட்டிக்கொடுக்கக் கூடாது. சரண் அடைந்தவர்களைக் காக்கவேண்டியது மனிதர்களாகப் பிறந்த நம்முடைய முக்கியமான கடமை' என்று தம் வீட்டில் உள்ளவர்கள் அனைவருக்கும் உபதேசம் செய்தார்.

— 2 —

லாலா ஹர்ஜுமல்லின் மாளிகைக்கெதிரே இருந்த புளியமரத்தடியில் நான்கு ஆசாமிகள் உட்கார்ந்து சுருட்டுப் பிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவனாக அந்த வண்டிக்காரனும் உட்கார்ந்திருந்தான். மற்ற மூவரும் ஹர்ஜுமல்லின் அடியாட்கள், வண்டிக்காரன் அங்கே வந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. இன்று மாலைதான் அவன் சற்று வெளிக் கிளம்பிக் காற்றாட வந்து உட்கார்ந்திருந்தான். அடியாட்களுடன் ஏதோ பேசிக்கொண்டிருந்தான். நால்வரும் மிகவும் சர்வ ஜாக்கிரதையாகச் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டு, ஏதாவது ஆபத்து—கீபத்து ஏற்பட்டுவிடாமல் இருக்கவேண்டுமே என்ற பயத்துடன் மெதுவான குரலில் பேசிக்கொண்டிருந்தனர். கரீம்—அதுதான் அந்த வண்டிக்காரனின் பெயர்—ஜான்ஸியில் நடந்த கலகத்தைப் பற்றித் தன் கண்களால் பார்த்த மயிர்க்கூச்செடுக்கும் சம்பவங்களைப்பற்றி அடியாட்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். எப்படிச் சிப்பாய்கள் கலக விதையை விதைத்தார்கள்? அது எப்படிக் காட்டுத் தீப்போலப் பரவியது? கலகக்காரர்கள் ஆங்கிலேயர்களையும் அவர்களுடைய குழந்தைகளையும் எப்படித் தயை தாட்சிண்யமின்றிக் கொன்றுபோட்டார்கள்? மகாராணி இரக்கப்பட்டு ஆங்கிலேயர்களுக்கும் அவர்களுடைய மனைவி மக்களுக்கும் எப்படியெல்லாம் இடம் கொடுத்து உதவினாள்? கோட்டைக்குள்ளே ஒளிந்திருந்த ஆங்கிலேயர்களுக்கு எப்படியெல்லாம் மறைமுகமாக உணவு கொடுத்து உதவினாள்? அதற்குப்பின் கலகக்காரர்கள் மகாராணியின் அரண்மனையை எப்படிச் சூழ்ந்துகொண்டார்கள்? மகாராணி எப்படித் தப்பி ஓடினாள்? இன்னோரன்ன விஷயங்களையெல்லாம், மயிர்சிலிக்கும் வண்ணம் அவன் கதை கதையாகச் சொல்லிக் கொண்டிருந்தான். இந்த ஆங்கிலேயர்களையெல்லாம் தன் வீட்டு வைக்கோல் போருக்குள் இரண்டு நாட்கள் ஒளித்துவைத்திருந்த விஷயத்தையும் அவர்களைச் சர்வஜாக்கிரதையாக அழைத்துக்கொண்டு இவ்வளவு தூரம் தப்பி ஓடி வந்ததையும்கூடச் சாங்கோபாங்கமாக அவர்களுக்குச் சொன்னான்.

கதை மிகவும் நீண்டுகொண்டே போய்க் கொண்டிருந்தது. அடியாட்கள் அச்சமும் ஆச்சரியமும் ஒருங்கே முகத்தில் தாண்டவமாட, அதைச் சுவாரஸ்யமாகக் காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

அதே சமயம் பின்னால் யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. நால்வரும் ஏககாலத்தில் திரும்பிப் பார்த்தனர். இரண்டு சிப்பாய்கள் அவர்கள் எதிரே வந்து நின்றனர். சிப்பாய்களின் இடுப்பில் வாள் தொங்கிக்கொண்டிருந்தது. ஆள் உயரமுள்ள நல்ல தடிகள் கையில் இருந்தன, நால்வரும் நிலைக் குத்தலிட்டவர்கள்போலச் சிப்பாய்களையே பார்த்தவாறு நின்றனர். தம் சுய நினைவுக்கு வந்து அவர்கள் விவரம் கேட்டுத் தெரிந்து கொள்ள நினைப்பதற்கு முன்பாகவே, வந்த சிப்பாய்களில் ஒருவன் அதிகார தோரணையில், "ஹர்ஜுமல் இருக்கிறாரோ?" என்று கேட்டான்.

அடியாட்களில் ஒருவன், "இல்லையே" என்றான்,

"எங்கே போயிருக்கிறார்?"

"கோபால் புராவுக்கு!"

"எப்பொழுது திரும்புவார்?"

"தெரியாது. ஏதாவது விஷயம் இருந்தால் சொல்லிவிட்டுப் போங்கள். அவர் வந்ததும் சொல்லுகிறேன்" என்றான் அடியாள்.

"விஷயம் ஒன்றும் அவ்வளவு முக்கியமானதில்லை. ஆகவே அவர் இல்லாவிட்டாலும் பாதகமில்லை. இதோ ஒரு வண்டி கிடக்கிறதே, இதில் முந்தாநாள் ஏழு வெள்ளையர்கள் வந்தார்கள். அவர்கள் இப்பொழுது......"என்றான் சிப்பாய்.

அதைக் கேட்டதும் கரீமுக்குப் பூமியே தட்டாமாலை சுற்றுவதுபோன்ற பிரமை ஏற்பட்டது. கண்களுக்கெதிரே பூச்சி பறந்தது. அவன் மூர்ச்சையுற்றுக் கீழே விழாமல் உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்தபடியே இருந்தானே, அதுவே பெரிய காரியம்!

"...இங்கே இருப்பதாக—லாலா ஹர்ஜுமல் அவர்களுக்குத் தங்க இடம் அளித்திருப்பதாக—எங்களுக்கு நம்பகமான இடத்திலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. இந்தக் கணமே அந்த வெள்ளையர்களை எங்கள் முன் ஆஜர் செய்ய வேண்டும். இப்பொழுது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? சொல்லுங்கள்!" என்று மேலும் தொடர்ந்து உறுமினான் அந்தச் சிப்பாய்.

மூன்று அடியாட்களும் அதைக் கேட்டதும் எழுந்து நின்றனர். ஒருவன் முகத்தில் ஆச்ச

ரியக் குறியைப் போட்டுக்கொண்டு கன அழுத்தமான குரலில், "என்ன? வெள்ளையர்களா? இங்கே வந்தார்களா? எதற்காக வந்தார்கள்? நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதே சரியாக விளங்கவில்லையே! உங்கள் ராவ் சாகிப்புக்குக் கிடைத்திருக்கும் தகவல் நம்பகமானதல்ல, எங்கள் எஜமானர் வீட்டில் வெள்ளையர் யாருமே கிடையாது. அப்படியே அவர்களடைக்கலம் அளித்திருந்தாலும் எங்களுக்குத் தெரிந்திருக்க நியாயம் ஏது?" என்றான்.

அதைக் கேட்டதும் சிப்பாய் புருவத்தை நெறித்துக் கொண்டு, "எதற்கப்பா, இந்த வீண் பேச்செல்லாம்? ஹர்ஜூமல் இந்த விஷயத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறாரே என்பதற்காகப் பார்க்கிறோம். இல்லாவிட்டால் உங்கள் வாயாலேயே விஷயத்தைக்கக்கவைக்க எங்களுக்கு வகை தெரியும். அதற்கு வேண்டிய மருந்து எங்களிடம் இருக்கிறது. வாய் வார்த்தையாக விஷயத்தைச் சொல்லிவிடுகிறீர்களா? இல்லை........." என்று ஆரம்பித்தான்.

அடியாள் தன் தடியைத் தயாராகப் பூமியில் ஊன்றிக்கொண்டு, "அதிகம் பேச்சு எதற்கு? வீடு இதோ எதிர்த்தாற்போலத்தானே இருக்கிறது? வேண்டுமானால் நீங்களே தாராளமாகப் போய்ப் பார்த்துக்கொள்ளுங்களேன்! பெண்கள் இருக்கும் அந்தப்புரத்தைப் பார்ப்பது மட்டும் அவ்வளவு நன்றாயிராது. அங்கும் போய்ப் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்று நீங்கள் நினைத்தால் அவர்களை நாங்கள் வெளியே வரச்சொல்லிவிடுகிறோம். அங்கும் போய்ப் பார்த்துக்கொள்ளுங்கள்!" என்றான்.

வந்திருந்த சிப்பாய்களில் இன்னொருவன், "அது சரி, ஆங்கிலேயர்கள் இந்த வீட்டுக்குள் இல்லை என்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் இந்த வண்டி எங்கிருந்து வந்தது? இந்த வண்டியில்தான் அந்த வெள்ளையர்கள் உரயியிலிருந்து ஓடி வந்தார்கள். அதற்கு வேண்டிய தடம் எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அது மட்டும் இல்லை. இந்த வண்டி இவ்வளவு நாட்களாக லாலா ஹர்ஜூமல்லிடமும் இருந்ததில்லை. அதற்கென்ன சொல்லுகிறீர்கள்?" என்று அடியாட்களின் மனோபாவத்தைப் புரிந்துகொள்ளும் நோக்கத்துடன் அவர்களுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தான்.

அடியாள் அதைக் கேட்டதும் அசந்துவிட்டான், ஆனால் கரீம் சமயோசிதமாக


## தீபாவளி பரிசு

ரிஜிஸ்டர் நெ. 4672 **ரூ. 37,500** போட்டி நெ. 10

**எல்லாம் சரியான விடை அனுப்பும் 30 நபர்களுக்கு பகிர்ந்து கொடுக்கப்படும்.**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

எல்லாப் பரிசுகளும் கியாரண்டியானது:—

| | | | | |
|---|---|---|---|---|
| எல்லாம் சரியான ஒவ்வொரு விடைக்கும் | | | ரூ. | 1,250 |
| இரண்டு வரிசை | ,, | ,, | ரூ. | 100 |
| ஒரு வரிசை | ,, | ,, | ரூ. | 20 |

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:- எண் 15-லிருந்து 30 வரை உள்ள எண்களை கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் மொத்த எண் 90 வரவேண்டும். ஒரு எண்ணை ஒரு தடவைக்குமேல் உபயோகிக்கக்கூடாது.

தபால்மூலம் அனுப்பவேண்டிய கடைசீ நாள் 18—11—50 விடை 28—11—50

பிரவேசக்கட்டணம்:- விடை கூப்பன் ஒன்றுக்கு ரூ. 1-0-0. மூன்று கூப்பன்களுக்கு ரூ. 2-0-0 எட்டு கூப்பன் கொண்ட செட்டுக்கு ரூ. 5—0—0.

ஸொல்யூஷன்
மொத்தம் 86

| | | | |
|---|---|---|---|
| 28 | 22 | 15 | 21 |
| 17 | 19 | 26 | 24 |
| 27 | 25 | 16 | 18 |
| 14 | 20 | 29 | 22 |

சென்ற போட்டியின் விடை

நிபந்தனைகள்:- தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கூபனகளை ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பவும். கட்டணத்தை மணியார்டர் அல்லது கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர்கள் அனுப்பவேணடும். டில்லியிலுள்ள ஒரு பிரபல பாங்கியில் ஸீல் செய்து வைத்துள்ள சரியான விடைக்கு ஒப்பாக இருப்பதே சரியானவிடை எனறு ஒப்புக்கொள்ளப்படும். ஆங்கில எண்களைத்தான் உபயோகிககவேண்டும். சரியான விடை வேண்டுவோர் விலாசத்துடன ஸ்டாம்பு ஒட்டப்பட்ட கவர் ஒன்றை உங்கள் விடைகளோடு சேர்த்து அனுப்பிவைக்கவேண்டும், இப்போட்டியை நடத்தும் நிர்வாகியின் முடிவே சட்டப்படி கட்டுப்படுத்துவதாகும். உங்கள் கட்டணத்தையும் கூப்பன்களையும் கீழ்கண்ட விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்:—

The Organizer, **REDFORT TRADING CO., (71) Regd.**
**Post Box 337, Katra Neel, DELHI.**

"எங்கள் எசமான் இதை இப்பொழுது தான் சமீபத்தில் கான்பூரிலிருந்து வாங்கி வந்திருக்கிறார்கள்!" என்றான்.



வந்தவன் 'கடகட' வென்று சிரித்து, "நல்லாச் சொன்னாய், கான் சாஹிப்! ஹர்ஜுமல் கான்பூரிலிருந்தோ, ஜான்ஸியிலிருந்தோ இந்த வண்டியை எந்த வியாபாரியிடமிருந்து வாங்கினாரோ, அந்த வியாபாரியை எங்களுக்குக் காட்டினால் போதும். அப்புறம் நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்" என்றான்.

கரீம் என்ன சொல்வது என்று தெரியாமல் சற்றுத் 'திருதிரு' வென்று விழித்தான். உண்மையைச் சொல்லிவிடு இல்லாவிட்டால் உன் தாடியைப் பிய்த்து விடுவோம்!" என்று இரண்டு சிப்பாய்களும் உறுமினர்.

இதைக் கேட்டதும் மூன்று அடியாட்களும் முன்னேறி வந்தனர். அவர்களில் ஒருவன் தன் தடியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு, "டேய்! நாக்கை அடக்கிப் பேசு! 'ராவ் சாஹிப்'பின் ஆட்கள் ஆயிற்றே!' என்று போனால் போகிறது, 'பிழைத்துப்போ!' என்று விடுகிறேன். இல்லாவிட்டால் எங்கள் எசமானரின் ஆட்களை நீ இவ்வளவு அலட்சியமாகப் பேசுவதைப் பார்த்துக் கொண்டு நிற்க மாட்டேன். இங்கே இங்கிலீஷ்காரனும் இல்லை; கிங்கிலீஷ்காரனும் இல்லை. போய் உங்கள் ராவ்சாகிப்பிடம் சொல்லு!" என்றான்.

வந்தவர்களில் முதல்வன் கொதித்தெழுந்து, "டேய், வாயை மூடு. எங்களை யார் என்று நினைத்தாய்?" என்று சொல்லிக்கொண்டே ஒரு விசித்திரமான குரல் கொடுத்தான். தெருவில் மூலை முடுக்குகளில் ஒளிந்திருந்த இருபது சிப்பாய்கள் ஓடிவந்து அங்கே குழுமிவிட்டனர். கரீமுக்கும் அந்த அடியாட்களுக்கும் உலகமே அஸ்தமித்து விட்டதுபோலத் தோன்றியது. "என்ன சொல்கிறாய், இப்பொழுது?" என்று கர்ஜித்தான் சிப்பாய்.

ஹர்ஜுமல்லின் அடியாள் ஒருவன் "முன்னால் சொன்னதையேதான் இப்பொழுதும் சொல்கிறோம்!" என்றான்.




சிப்பாய் தன் கூட்டாளிகளில் ஒருவனைப் பார்த்து, "ரஜ்ஜப்; ஹர்ஜூமல்லின் வீட்டு மூலை முடுக்குகளில் எல்லாம் தேடிச் கொண்டிருக்க நமக்குப் பொழுது இல்லை. அதோபார்! அந்த வண்டிக்குக் கீழே நிறையக் காய்ந்த புல் கிடக்கிறது. அது போதாது என்றால் எண்ணெய் டின்களை எடுத்துக்கொள். பெண்கள் பாவம், அவர்களை உடனே வீட்டை விட்டு ஓடிவிடுமாறு உத்தரவிட்டுவிட்டு வீட்டிலே நெருப்பை வை. வெள்ளையன்கள் இருக்கிறான்களா, இல்லையா என்பது தானாகத் தெரிந்துபோகிறது!" என்றான்,

அதைக் கேட்டதும் கரீம் கதிகலங்கிவிட்டான். அதற்குள் இன்னொருவன், "அதைவிட நல்லவழி இருக்கும்பொழுது வீட்டைக் கொளுத்துவானேன்? இந்தப் புறங்களை இந்த மரத்தடிக்குக் கொண்டுவா, ரஜ்ஜப், கூடவே நாலு கயிறுகளும்கொண்டுவா. பிணத்தையும் பேசவைக்கும் சக்தி வாய்ந்த மந்திரம் எனக்குத் தெரியும், அப்படியிருக்கும்பொழுது ஹர்ஜூமல்லின் இந்த நான்கு வேலையாட்களும் எந்த மூலைக்கு?' என்றான்.

அதைக் கேட்டதும், மரத்தில் கட்டித் தங்களை உயிருடன் கொளுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்கிறார்கள் என்பதைக் கற்பனைசெய்த மாத்திரத்திலேயே அடியாள்களுக்கு உடல் பதறியது. உள்ளம் பதறியது. அவர்கள் பலியாடு போலப் பேந்தப் பேந்த விழித்தனர். அவர்கள் பார்த்த பார்வை 'என்ன செய்வது?' என்று ஒருவரையொருவர் கேட்டுக்கொள்வது போலிருந்தது. மூவரும் ஏக காலத்தில் வண்டிக்காரன் கரீமின் முகத்தைப் பார்த்தார்கள். அவன் மலர்ந்த முகத்துடன் காட்சி அளித்தான். அவனுடைய அந்த முக மலர்ச்சியில் உயிருடனேயே எரிந்து சாம்பலாகிவிடுவதற்கு வேண்டிய திண்மையும் திடசித்தமும் இருந்தன. அடுத்த கணம் கரீமின் அந்த முக பாவம் அடியாட்களையும் தொத்திக்கொண்டது. அவர்களுடைய பலமிழந்த நெஞ்சுக்குப் பலமும் உறுதியும் உண்டாயின. அவர்கள் உள்ளத்திலும் உயிருடன் எரிந்து சாம்பலாகிவிடுவதற்கு வேண்டிய பொறுமை குடிகொண்டது. மரணத்தின் பரிசுத்தமான எல்லையில் நிற்கும் அந்த மூவருடைய ஊமைப் பார்வையும் கடைசிவரை திடசித்தத்துடனும் நெஞ்சு உறுதியுடனும் இருப்போம் என்று திடப்பிரதிக்ஞை செய்துகொண்டன. அவர்கள் செய்த அந்தப் பிரதிக்ஞை அன்னியன் யாருக்கும் தெரியாமலே பூர்த்தியுற்றது.

கயிறுகள் வந்தன. இருபது சிப்பாய்களுக்கெதிரே நான்குபேர்களால் என்ன செய்ய முடியும்? கலகக்காரர்கள் அந்த நால்வரையும் தலைகீழாகக் கட்டினார்கள். கீழே வைக்கோலையும், புல்லையும், செத்தையையும் குவித்துக் கொளுத்தினார்கள். கோடைக்காலத்துக் காற்றின் உதவியைப் பெற்றுத் தீ 'தகதக' வென்று எரியத் தொடங்கியது. தீச் சுடர் அந் நால்வரையும் சுற்றி வளைத்துக்கொண்டு எரியலாயிற்று. மரத்தின் இலைகள்கூட உஷ்ணம் தாங்காமல் கருகத் தொடங்கின. அந்த மரத்தின் பொந்துகளில் வசித்துவந்த பறவைகள்கூடப் பயந்து பறந்து ஓடின. சுற்றுப்புறமெங்கும் ஓரே புகை மண்டலமாகக் கவிழ்ந்து விட்டது, நால்வரில் மூவரின் அரைகுறையாக வெந்த உடல்கள் கயிறு எரிந்து இற்றுப்போனதால், 'தகதக' வென்று எரியும் வைக்கோல் குவியல்மீது விழுந்து வதங்கலாயிற்று. அப்பொழுதும் அவர்கள் வாய் திறக்கவில்லை, பற்களை இறுகக் கடித்துக்கொண்டு பொறுமையே உருவாகப் பூமாதேவியின் மண்ணோடு மண்ணாகினர்.

கரீம் இன்னும் ஊசலாடிக்கொண்டிருந்தான். கலகக்காரர்கள் அந்தக் குரூர நிலையைக் கடைசிவரை இருந்துமுடித்துவிட்டுத்தான் அப்பால் நகருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு நின்ற இடத்தைவிட்டு அசையாமல் நின்றனர். இந்தக் கிழட்டுக் கரீம் ரகசியத்தைச் சொல்லிவிடமாட்டானா என்ற நம்பிக்கை அவர்களுடைய உள்ளத்திலே கடைசிவரை இருந்தது, ஆனால் கரீம் கடைசிவரை "எனக்கு ஒன்றும் தெரியாது. குரான்மீது வேண்டுமானாலும் ஆணை வைத்துச்சொல்லுகிறேன். எனக்கு எதுவும் தெரியவே தெரியாது!" என்ற அதே வாக்கியத்தைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தான்.

கரீமின் தலைமயிர் பொசுங்கி, காற்றிலே நாற்றம் கலந்தது. புகை மாளிகையின் கடைசி மாடிவரைக்கும் சென்றது. அந்த மாடியின் சாளரத்தின் வழியே இரு பழுப்பு நிறத்துப் பூனை விழிகள் சிறிது நேரம் பார்த்துவிட்டு மறைந்துவிட்டன. அந்தச் சாளரம் இருந்த இருட்டறைக்கு வழி எது என்று யாருக்குமே தெரியாது. அதில் ஏழுபேர் உட்கார்ந்து எம கிங்கரர்கள் தங்களைப் புகை சூழ்ந்து நிற்பதுபோன்ற கற்பனைக் கனவுகள் கண்டு கொண்டு கதிகலங்கிக்கொண்டிருந்தனர். ஒருவன் எழுந்து சாளரத்தின் வழியே பார்த்துவிட்டுத் தலையை உள்ளுக்கு இழுத்துக்கொண்டான். பிறகு உயிருக்கு ஊசலாடும் மனிதனைப் போன்ற தளர்வடைந்த குரலில், "கலகக்காரர்கள் போலிருக்கிறதே!" என்றான்.

அதைக் கேட்டதுதான் தாமதம்; அந்த இருட்டறையில் இருந்தவர்கள் அத்தனைபேருடைய முகமும் சுண்டிவிட்டன.

"கரீமைக் கொளுத்துகிறார்கள்!"

"என்ன? கொளுத்துகிறார்களா?"

"ஆமாம்!"

அவன் ஒன்றும் சொல்லிவிடமாட்டானே! சொல்லிவிட்டால் நம்பாடு திண்டாட்டம்தான். கடவுளே, நீதான் காப்பாற்றணும்!"

"அவன் அப்படிப்பட்ட ஆசாமி இல்லை; தன் உயிரே போனாலும் சொல்லமாட்டான்."

அந்தப் பூனைக்கண்கள் மறுபடியும் சாளரத்தின் வழியே எட்டிப்பார்த்தன.

அதே சமயம் அரைகுறையாக எரிந்த—உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த—உடல் அறுந்து தொப்பென்று விழுந்தது. அவன் உயிரும் உடலைவிட்டு அகன்றது. இரு கண்களும் மறுபடியும் சாளரத்திலிருந்து உள்ளே மறைந்தன. மிகவும் உருக்கமும் பரிதாபமும் நிறைந்த குரலில், "கரீம் செத்துவிட்டான்!" என்ற செய்தியைத் தெரிவித்தான் அவன்.

"என்ன? செத்து விட்டானா? ஐயோ, பாவம்! நமக்காக உயிரையே தியாகம் செய்த கரீமை......" அதற்குமேல் என்ன சொல்லுவது என்றே புரியவில்லை. கரீமைப்பற்றிச் சொல்ல நினைத்தவனுக்குத் தொண்டையைத் துக்கம் அடைத்தது. ஏழுபேரும் ஏககாலத்தில் நீண்டபெருமூச்சு விட்டனர். அந்தப் பெருமூச்சு கரீமுக்குத் தங்கள் நன்றியைத் தெரிவிக்கும் பொருட்டுச் சாளரங்களின் இடுக்கு வழியே வெளிக்கிளம்பி, மறைந்த அவனுடைய ஆத்மாவைப் பின்தொடர்ந்தன; வான வீதியிலே இரண்டறவும் கலந்தன.

# இனாம்



எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லாவிதமான மயிரும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும், இது மயிர்கள் உதிர்ந்துபோவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும், செய்கிறது. புட்டி ஒன்று விலை ரூ. 2—4—0; 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—15—0.

*இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்டுவாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்டு வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.*

*ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.*

## AMRIT PHARMACY (c.k.)

JULLUNDUR CITY. Pb.



# 1950-51ல்

## என்ன நேர இருக்கிறது



*புத்தாண்டாகிய 50-51 க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பினால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12-மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி, மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி. கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள் நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினால் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபாற் செலவு தனி.*

*இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப்படும். இதனால் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒருமுறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.*

## Shri

## Swami Satnarayan Jotish Ashram

(C. K.) HOSHIARPUR.

## ஒரு இளைஞன் மரணத்தினின்றும் காப்பாற்றப்பட்ட விநோதம்!

# ஒரு உண்மையான வாக்குமூலம்

**பிரிய வாசகர்களே !**

நான் ஒரு முனிவரோ அல்லது டாக்டரோ அல்ல. நான் ஒரு சாதாரண மனிதன். என்னுடைய துர்நடத்தை காரணமாகக் கெட்டலைந்தவன் நான். நான் அத்துமீறி, சிற்றின்ப சாகரத்தில் இறங்கிய காரணத்தால் சொற்ப காலத்திற்குள் இரவு நேரங்களில் இந்திரியக் கழிவுகள் ஏற்பட்டு வீரியம் குறைந்து வெறும் ஆள் ஆகிவிட்டேன்.

நாளுக்கு நாள் பலம் குறைந்தது. இருதயத்தின் துடிப்பு அதிகமாயிற்று, தொடர்ந்து மயக்கம்வர ஆரம்பித்தது. மரணவேதனைப்பட்டேன். நான் இப்படி இருப்பதன் காரணங்களை நண்பர்கள் கேட்பார்கள். நானாகவே வலிய தேடிக்கொண்ட இந்த கேட்டைப்பற்றி நான் எப்படி அவர்களிடம் சொல்வேன்? "குணப்படுத்திவிடுவோம்" என்று தம்பட்டமடித்த ஆயிரக்கணக்கான டாக்டர்களையும் ஹக்கீம்களையும் ரகசியமாகக் கலந்து ஆலோசித்தேன். அவர்கள் கொடுத்த மருந்துகளையும், அமிர்தங்களையும் ஒன்றுவிடாமல் சாப்பிட்டேன். ஆனால் பலன் ஒன்றுமில்லை. உயிருடன் இந்த நரகவேதனைப் படுவதைவிட உயிரை விடுவதே மேல் என்ற முடிவுக்கு வந்தேன்.

அதிர்ஷ்டவசமாக நான் காஷ்மீர் செல்ல நேர்ந்தது. வேலை காரணமாகச் சென்றேன். அலைந்து திரியும் ஒரு மஹாத்மாவை (பக்கீர்) சந்தித்தேன். என்னைக்கண்ட உடனே அவர் கேட்ட முதல் கேள்வி நான் ஏன் இப்படி துக்கமே உருவெடுத்து வந்தமாதிரி இருக்கிறேன் என்பதுதான். துன்பப்பட்ட என் பாழும் மனம் மஹாத்மாவிடம் எல்லா விபரத்தையும் சொல்லிவிடும்படி தூண்டிற்று. அதன்படி எல்லாவற்றையும் சொன்னேன். தற்கொலை செய்துகொள்ளத் தீர்மானித்திருப்பதையும் சொல்லிவிட்டேன். மஹாத்மாவின் மனதில் இரக்கம் பிறந்தது. உள்ளுக்குச் சாப்பிடுவதற்கு ஒன்றும் மேலே பூசிக்கொள்வதற்கு ஒன்றும் ஆக இரண்டு மருந்துகள் செய்யும் விதங்களை விவரித்தார். தேவையான சகல மூலிகைகளையும் சேகரித்து அவர் முன்னிலையில் மருந்துகளைச் செய்தேன். உடனே மருந்துகளைப் போடவும், சாப்பிடவும் ஆரம்பித்தேன்.

**என் பிரிய தோழர்களே !**

மருந்துகளை உட்கொள்ள ஆரம்பித்த முதல் தினத்தன்றே மறுமலர்ச்சியின் உதயத்தைக் கண்டேன். கடவுள்மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன். இன்று என் மீறிய வீரிய சக்தியைக் கண்டு நான் பெருமிதம் அடைகிறேன். சிலவேளை மருந்து சாப்பிட்ட உடனே என் சிற்றின்ப வேட்கை அடக்க முடியவில்லை எனினும் மஹாத்மாவின் கட்டளைக்கிணங்க 25 நாட்கள் வெகு கட்டுத்திட்டத்துடன் மருந்து சாப்பிட்டு வந்தேன். தினம் 3 முதல் 4 சேர் பால் ஜீரணிக்க முடிந்தது. என் கண்களில் புது ஒளி பிறந்தது. கன்னங்களில் ஜீவ ஒளி தவழ்ந்தது. இழந்த சக்தியும் பலமும் உடலுக்கு வந்தன. நான் ஊர் திரும்பியதும் மீதமிருந்த மருந்தை கைவிடப்பட்ட சில கேஸ்களுக்குக் கொடுத்தேன். ஈடு இணை இல்லாத சஞ்சீவி இது.

முன் ஜாக்கிரதையுள்ள என் நண்பர்களின் யோசனைக்கிணங்கவும், பொது ஜனங்களின் நலனை உத்தேசித்தும் இதைப்பற்றி நான் விளம்பரம் செய்தேன். பயங்கரமான இந்த வியாதியால் வீரியத்தை இழந்த என் நண்பர்களுக்காகவே இந்த விளம்பரம். அதிக பணம் செலவு செய்தும் குணமடையாத வியாதியஸ்தர்கள் மிகமிகக் குறைந்த செலவில் சொஸ்தம் செய்து கொள்ளலாம். நீங்கள் கொடுக்கும் பணம் விளம்பரச் செலவுக்குக்கூட வராது.

**காஷ்மீர் மறுமலர்ச்சி மாத்திரை 15 நாட்களுக்கு** ரூ. 2—8—0
**பூசுவதற்கு எண்ணெய்** — ரூ. 2—8—0

மாத்திரைகளில் விஷக்கலப்பு இல்லை. ஆகையால் சிறியோர் பெரியோர் யாவரும் வயது வித்தியாசமின்றி எந்தக்காலத்திலும் உபயோகிக்கலாம். எண்ணெய் பூசினால் கொப்புளங்கள் உண்டாகாது.

கடைசியாக நான் சொல்வது என்னவென்றால் இதனால் லாபம் அடையவோ அல்லது என் சுயநலனுக்காகவோ நான் விளம்பரம் செய்யவில்லை. பொது ஜனங்களின் நலம் ஒன்று தான் குறிக்கோள். அயல் தேசத்தவர் அவசியம் முன்பணம் அனுப்பவேண்டும். இந்தமாதிரி வியாதிகளுக்குக் கைகண்ட மருந்து இது.

**உத்தரவாதமான சிகிச்சை:** இந்த மருந்தால் குணமில்லை என்று கண்டால் முழுப் பணத்தையும் வாபஸ் செய்கிறேன். குணமாகவில்லை என்று சத்தியம் செய்தால் போதும். ஆயிரக்கணக்கான வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்படுவது இது.

**முக்கிய அறிவிப்பு:** வீரியமின்மை, சதைத் தளர்ச்சி, நரம்புத் தளர்ச்சி முதலியவைகளுக்குத்தான் இந்த மருந்து. வெள்ளை விழுந்து பலக்குறைவாக இருந்தால் இது ஜீவசஞ்சீவி. சுத்தமான ரத்தத்தை உண்டாக்குகிறது.

**Prof. B. S. Sidhu (C. K.) Halka No. 6, Jullundur City Pb.**

# வெளியூர்க் கடிதம் -7

சாரி

பிரியமுள்ள.........க்கு,

கல்கத்தாவில் இருந்து நேரே பம்பாய்! 1200 மைல் தூரம். அகண்ட இத்தேசத்தின் குறுக்கே ரயில் பிரயாணம் செய்வது ஒரு புதிய அனுபவம், பாதையில் முதல்நாள் நேர்ந்த ஒரு கோளாற்றினால், என் ரயில் இன்னும் 200 மைல் சுற்றிக்கொண்டு வரவேண்டியிருந்தது. பம்பாய்க்கு வந்துசேர 5-மணிநேரம் அதிகமானாலும், இரவுப் பொழுதில் கடந்துவிடும் பாதையைப் பகற்பொழுதில் இனிய காட்சிகளைக் கண்ணுற்ற வண்ணம் தாண்டினேன். சக்ரதாராபூர் சென்றதும் விந்திய மலைக்குகைகளும், அடர்ந்த காடுகளும் உண்மையில் நான் கண்டவைதானோ என இப்போது பிரமிப்புத் தட்டுகிறது. வானுற ஓங்கி வளர்ந்து, பெரும் இலைகளைத் தாங்கிநின்ற அந்த மரங்கள் அவ்வளவும் தேக்கு என்று பின்னால் தெரிந்துகொண்டேன்.

பம்பாய் நமது தேசத்தின் வலது விலாவில் ஒட்டிய சிறு தீவுகள் அநேகம் கொண்ட பட்டணம் என்பதை நீ அறிவாய். பூகோள பாடம் கற்பிக்க ஆரம்பித்து விட்டேனோ என்று பயப்படாதே! இந்நகரத்தில் எந்தத் திசையில் சென்றாலும் கொஞ்சநேரத்தில் சமுத்திர ராஜனைத் தரிசிக்கலாம். ஆனந்தமான கடல்காற்று மாலை நான்கு மணிமுதல் வீசத்தொடங்கும். அதோடு வொர்லி போன்ற நீர்த்தேக்கத்தின் துர்க்கந்தமும் கலந்து சில சமயம் வரும்.

பம்பாய் நகரத்தைச் சீமை என்றுதான் சொல்லவேண்டும்; மேனாட்டைப்போன்ற கட்டிடங்கள், சுத்தம், ஜனங்களின் வாழ்க்கை—கூட்டமும் உயர்ந்த மாடிகளும் நிறைந்த இடங்களில் செல்லும் நாம் அங்கே நடமாடும் ஜனங்களை ஐரோப்பிய உடையில் கற்பனை செய்துகொண்டால், சீமையில் நாம் இருப்பதாகவே பிரமை ஏற்படும். இந்தப் பட்டணததை ஒரு தேவலோகம் என்றுகூடச் சொல்லலாம்; எதை வேண்டுமானாலும், இங்கே காணலாம், வாங்கலாம், எதிர்பார்க்கலாம்!

ஆண்களுக்குச் சமமாய்ப் பெண்கள் இங்கே கார்யாலயங்களில் வேலை செய்வது சர்வ சாதாரணம். ஜனங்கள் தேக ஆரோக்கியமும், சந்துஷ்டியுமுள்ளவராயும், பெண்கள் அழகாயும் இருக்கிறார்கள். முதலில் இங்கே ஏழைகளே கிடையாதோ என்றுகூட நினைத்தேன். அவ்வளவு நாகரிகத்தைச் சாதாரண ஜனங்களிடமும் காண முடிகிறது. யாவரும் காலில் மிதியடியின்றி நடப்பதில்லை. அசிங்கமே வீதிகளில் கிடையாது. கல்கத்தாவைப்போல் தெருவில் மாடுகளை இங்கே காணமுடியாது.

வாடகைக் குதிரை வண்டிகள் ஆயிரக்கணக்கில் மோட்டார்களுடன் போட்டியிட்டுத் தெருவில் நெளிகின்றன. நெருக்கடியான போக்கு வரத்துள்ள இடங்களில் இந்த விக்டோரியாவும் குதிரைகளும் எவ்வாறு அடிபட்டு விழாமல் பிழைக்கின்றன என்பது ஒரு அதிசயம்.

இங்கே டிராபிக் போலீசார் என்ன சாமர்த்தியமாய் வண்டிப் போக்குவரத்தை அடக்குகிறார்கள், தெரியுமோ — ஒருவரிடமும் இவர்களுக்குப் பயமில்லை. இந்த மனுஷனுடைய உத்தரவின்றி லக்ஷம் வண்டிகள் காத்திருந்தாலும், மணிக்கணக்கில் நேரம் ஆனாலும், ஒரு வண்டியும் நகரமுடியாது. மோட்டார் ஓட்டிகளுக்கு இந்தப் போலீசாரைக்கண்டு நடுக்கம்தான். இந்தியாவிலேயே உயர்த்தியானதாமே இங்குள்ள டிராபிக் கண்ட்ரோல் முறை!

பம்பாய் டாக்ஸி மோட்டார்களுக்கு மேலே மஞ்சள், கீழே கறுப்பு வர்ணம் பூசி

எளிதில் வாடகை வண்டி எனப் புரிந்து கொள்ளும்படி செய்திருக்கிறார்கள். சிறிய பேபி டாக்ஸிகளின் வாடகை மலிவுகூட.

மின்சார ரயில் மூலம் போக்கு வரத்து நடந்தபோதிலும், இரட்டை 'டெக்' பஸ் வண்டிகளில் அமர்ந்து நகரத்தைச் சுற்றிப் பார்ப்பது ஒரு தனி ஆனந்தம். பம்பாய்க்கு வருபவர் இதில் ஏறி நகரத்தைக் காணத் தவறக்கூடாது.

பஸ் வண்டிகளில் ஒரு ஆள்கூட அதிகம் ஏற்றுவது கிடையாது. "தீன் ஊபர் - சார் நீசே" என்று கூவி, பஸ் க்யூவில் நிற்பவர் ஏழுபேர் ஏறியதும் 'டக்'கென்று வண்டியை விட்டுவிடுவார்கள். அடுத்த இரண்டே நிமிஷத்தில் இன்னொரு டீசல் பஸ் வந்துவிடும். கல்கத்தாவின் அக்ரமத்திற்குப் பிறகு இங்கே வெளியில் சென்று வருவதே ஒரு அலாதி அனுபவமாக இருந்தது எனக்கு.

பம்பாய் வாசத்தின் பயனாய் என் மனதில் ஆழமாய்ப் பதிந்தது ஒரு விஷயம். எக்காரணத்தினாலோ இங்குள்ளவர், மூக்கால் அழுதுகொண்டு உயிர் வாழவில்லை. வாழ்க்கையின் ரகசியத்தை உணர்ந்து கொண்டவர் மனம் கலங்குவானேன்?,



சௌபாத்தி பீச்—மலபார் ஹில்

'இங்குள்ளவர்' என்று அங்கு மிங்கும் மோட்டாரில் செல்லும் பிரபுக்களை நான் சொல்லவில்லை. ரோட்டில் நடமாடும் உன்னையும் என்னையும் போன்ற உழைப்பாளி மனிதன், அவன் மனைவி மக்கள் என்று வைத்துக்கொள்ளேன். ஜனங்களிடையே ஒருவித அமைதியும் திருப்தியும் காணமுடிகிறது. தென்னிந்தியாவில் உள்ள ரேஷன் கஷ்டம், குடியிருக்க இடமில்லாத் திண்டாட்டம், வேலையில்லாத பணமில்லாத கஷ்டம், இங்கே



ஜ்யூஹு பீச்

மாத்திரம் இல்லையா? வேண்டுமளவு உண்டு. ஆனால் சனி, ஞாயிறு மாலை நேரத்தில் சௌபாத்தி, தாதர், ஜீஹி முதலிய கடற்கரைக்குச் சென்று பாருங்கள். அல்லது கணக்கற்ற சினிமா தியேட்டரில் போய்க் கவனியுங்கள். புருஷன் மனைவி மக்கள் குடும்பம் குடும்பமாய்த் திரண்டு திருநாளைப்போல் வந்து கடல் காற்றுண்டு, படங்கள் பார்த்துக் களித்து, சனா, பேல்புரி வாங்கி உண்டு, 7 மணிக்கு ஆனந்தமாய் வீடு திரும்புகிறார்கள். இவர்களுக்கு மாத்திரம் கவலைகள் கிடையாது என்று சொல்லமுடியுமா? நம் பக்கத்தில் ஜனங்கள், முக்கியமாய்ப் பெண்கள், தங்கள் குடும்பத்தோடு வாழ்க்கையின் எளிய இன்பங்களை அனுபவிக்காதது ஏனோ?

மனித சமூகத்தை ஒருங்கே காணும் போது அருவருப்புத் தட்டும். பம்பாயின் கூட்டம் அத்தகைய உணர்ச்சி தரவில்லை. தாங்கள் தெரிந்துகொண்டே ஆனந்த வாழ்வின் ரகசியத்தை ஏதோ வகையில் நமக்கும் அளித்துவிடுகிறார்கள். தன்னை மறந்து கூட்டத்தின் ஒரு பகுதியில் கலந்துவிடமுடிகிறது.

ஒரு கணபதி உத்ஸவம் நடத்துபவர்களின் தரம் வேடிக்கையாக இருக்கும். குழந்தைகள் கிராமபோன் சங்கீதத்திற்கு நடனம் ஆடிக் களிப்பார்கள்; பெண்கள் ஆனந்தம் பொங்க இதைக் காண்பார்கள்; ஆண்களோ குஷியுடன் சகல ஒத்தாசையும் செய்வார்கள். விஸர்ஜன் நடக்கும் நாளில் கடல்கரையை நிரப்பி, கூட்டம் திரண்டு விழாவை முடிப்பார்கள். இவர்கள் கிராமாந்தர ஜனங்கள் அல்ல



**கணபதி விஸர்ஜன ஊர்வலம்**

வென்பதை மறந்து விடாதே! தெய்வ பக்தி தினசரி வாழ்க்கையோடு பிணைக்கப்பட்டு, அதைத் தழுவியுள்ளது; தெய்வம் ஏதோ கோவிலில் அமர்ந்து குறிப்பிட்ட நாளில் சென்று தரிசிக்க வேண்டியவர் இல்லை. இந்த உண்மையைப் பாபுல் நாத் கோவில், மஹாலக்ஷ்மி கோவில் இந்த இடங்களில் எந்த நாளிலும் எந்த நேரத்திலும் பரீக்ஷித்துத் தெரிந்துகொள்ளலாம். ஏழைகளும் பணக்காரரும் சேர்ந்து தெய்வ வழிபாடு நடக்கிறது இங்கே.

எது எப்படிப் போனாலும். தண்ணீரற்ற வறண்ட பிரதேசம், எண்ணெய் காணாத தலை, உணவுக்குறைவினால் உலர்ந்த சரீரம் இவைகளைக் கிராமங்களிலும், கவலையினால் முதுகு முறிந்து சரீரம் ஒட்டி, சந்துஷ்டியை ஸ்வப்பனத்திலும் காணாத முகங்களை நகரங்களிலும் பார்த்துப் பழகிப் போன என் கண்களுக்கு இங்குள்ளவரின் தோற்றமும் மனப்பான்மையும் சிறிது உற்சாகம் கொடுப்பதாயிருந்தன. இந்தியாவில் இந்த இடத்திலாவது ஜனங்களுக்குச் செலவு செய்யக் கையில் கொஞ்சம் பணமும், சரியான மனப்பான்மையும் பொருந்தியிருப்பதைக் கண்டு, கொஞ்சம் சமாதானம் அடைந்தேன்.

மின்சார ரயில்கள் நகரத்தின் மத்தியில் ஓடுகின்றன. சௌகர்யமான போக்குவரத்தாக இருந்தபோதிலும், சற்றுப் பழக்கமற்றவர் வேகமாய்ச் செல்லும் **Fast train** னுக்கும் **Slow** வுக்கும் வித்யாசம் தெரியாமல் திண்டாடவேண்டிவரும். எங்கள் வேலைக்காரன் ஒரு நாள், தவறான வண்டி ஏறி, அவன் இறங்கவேண்டிய பம்பாய் ஸெண்டிரலைத் தாண்டி நான்குமுறை மேலும் கீழும் சென்று, மாலை 5-மணிக்கு வீடு வந்து சேர்ந்தான். பாஸ் இல்லாமல் போயிருந்தால் அன்று அவன் 5 ரூபாய் வரை செலவு செய்திருப்பான்.

பம்பாய் நகரத்தின் ஷாப்களும், மார்க்கெட்டுகளும் பெயர்போனதன்றோ? அம்மா அப்பாவைக்கூட இங்கே கடையில் வாங்கிவிடலாம். அவரவர் பணப்பையின் கனத்துக்குத் தகுந்த கடைகள் இங்கே உண்டு. அனேகமாய் எந்தக்கட்டிடத்தின் கீழ்த்தளமும் கடைகளாக இருக்கும். இரானியரின் குட்டிக்கடைகள் மூலைக்குமூலை பளிச்சென்று நீலவெளிச்சத்துடன் பிரகாசிக்கும். இவர்கள் வியாபாரஞ்செய்வதில் கெட்டிக்காரர். ஹார்ன்பிரோடு, கிராபோர்டு மார்க்கெட்டு, காதர் கடைகள் இன்னும் அனேக இடங்களில் விதவிதமான அமெரிக்கச் சாமான்களையும் சுதேசி பம்பாய் பிரதேச வஸ்துக்களையும் குவித்து நம்மைத் திக்குமுக்காட வைக்கிறார்கள். சீமையில்கூட இவ்வளவு அழகான வஸ்துக்கள் ஒருங்கே கிடைக்கக்கூடுமென்று நான் நினைக்கவில்லை.

பம்பாய் நகரத்தின் ஒரு முக்கிய காட்சி பம்பாய் ஸெண்டிரல் ரயில்வேஸ்டேஷன். இந்த இடத்தின் விசால அமைப்பு, சுத்தம், அழகு இவற்றை இந்தியாவில் வேறு இடத்தில் நான் காணவில்லை. மூன்றாம் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறைகளுக்கு மின்சார விசிறிகளும், அவர்களுக்கு இலவச ஐஸ் தண்ணீர் குடிக்க வசதியும் வைத்திருப்பது சந்தோஷத்தைக் கொடுக்கிறது. மூன்றாம் வகுப்புப் பிரயாணிகளும் மனிதஜன்மங்கள் என்று நினைக்கிறார்களே, அதுவே பெரி

தல்லவா ? தென்னிந்தியாவிலும் இதே போல் பிரயாணிகளுக்கு இலவசமாய் ஐஸ் தண்ணீர் கிடைக்க வசதி ஏற்படுத்த வேண்டியது மிகவும் முக்கியம். இரவு நேரத்தில் எங்கள் வீட்டு மாடியிலிருந்து



பம்பாய் ஸெண்ட்ரல் ஸ்டேஷன்

பம்பாய் ஸெண்டிரல் ஸ்டேஷனும், அதன் பின்புறம் கம்பாலாகுன்றின் தொடரும் அற்புதமான காட்சி.

பக்ரிட் பண்டிகையை முகம்மதியர் கொண்டாடியதைப் பம்பாயில் நான் கண்ணுற்றபொழுது ஒருமித்துப் பிரார்த்தனை செய்யும் பழக்கம் (**Congregationer Prayers**) ஹிந்துக்களுக்கு மட்டும் ஏன் இல்லை என்று எனக்குத் தோன்றியது.

பம்பாய் வாசிகளில் முக்கியமானவர் மாகாராஷ்டிரியரும், குஜராத்தியரும். இவர்களைத் தவிர பார்சிகளும், இரானியரும் ஏராளமாய் இருக்கிறார்கள். ஆதியில் இருவரும் இரானில் இருந்து வந்தபோதிலும், இரானியர் இஸ்லாம் மதத்தை அனுசரிப்பவரும், பார்சிகள் அக்னி—சூரியனை வணங்குபவரும் ஆவார். இரு ஜாதியாரும் சிவந்த அழகான மேனியுள்ளவர். பார்சிகள் நாகரிகமாய் வாழ்ந்தாலும், தங்களுடைய பழைய வழக்கங்களை விடவில்லை. **தார் போர் வாலா** என்கிற பார்சிக்காரருடைய பெரிய புத்தகக் கடையின் வாசலில் அன்று காலையில் புத்தம் புதிய கோலம் இட்டு இருந்ததைக் கவனித்தேன்! இது இவர்களுடைய தினசரி வழக்கம் என்பது பின்னால் தெரியவந்தது; வேடிக்கையாயில்லை?

இங்குள்ள தென்னிந்தியர் வழக்கம்போல் மாடுங்கா என்கிற ஸ்தலத்தைத் தங்களுடைய பிரதேசமாக்கிக்கொண்டு சிறிய கூண்டுகள் போன்ற **Flat** களில், அடைத்துக்கொண்டு நல்ல காற்றையும் காட்சிகளையும் காணாமலே வாழ்கின்றனர். இங்கு வந்தும் தங்களுக்குள்ளேயே பழக்கம் சிநேகிதம் செய்துகொண்டு தனித்திருப்பது நம் ஜனங்களின் பிரத்யேக உரிமை போலும்! ஒரு கடற்கரைக் கூட்டத்திலும் தென்னிந்தியர் அதிகமாக உலாவுவதை நான் காணவில்லை, தமிழ்ப் பாஷை, தென்னிந்திய பெருங்காயம், காபி பவுடர், பாக்குப்பொடி சீயக்காய் பொடி விற்கும் கடைகள், டப்பா கட்டு வேஷ்டி, மலையாள காபி ஹோட்டல் இதுவே மாடுங்கா! ரேஷனில் கோதுமை போதுமான அளவில் கொடுத்தும் இவர்கள் இதை உபயோகிப்பதை ரசிக்கவில்லை என்று மாடுங்கா கடைத் தெருவில் இரண்டு மாமிகள் பேசிக்கொண்டதில் இருந்து தெரிந்து கொண்டேன். "ஊரில் இருந்து குழந்தை வந்திருக்காளே; வாய்க்கு வேணுமென்பதைப் பண்ணிக் கொடுப்போமென்றால் அரிசி இருந்தால் தானே?"

**பதில் :-** "அதை ஏன் கேக்கறே போ. சப்பாத்தி சப்பாத்தி என்று எப்படித் தான் வெடுக்கென்று அதைச் சாப்பிடறதோம்மா......"! நான்கு மாதங்களாகச் சப்பாத்தியும் காய்கறியும் தவிர மருந்தளவில் கூட அரிசி சாப்பிடாமல் காலந்தள்ளிய எனக்கு உடம்புக்கு ஒன்றும் வரவில்லையே, என்று நான் நினைத்துக் கொண்டேன்.

சினிமா பார்க்க வேண்டுமானால் பம்பாய்க்கு வரவேண்டும். சிறிய தியேட்டர்களில்கூட வசதியான இடம், காற்றோட்டம் உண்டு. ஆனால் எந்தப் படத்திற்கும் முன்னாடி டிக்கெட் வாங்காமற் போனால் இடம் அகப்படாது. டிக்கெட்டில் குறிப்பிட்ட எண் உள்ள நாற்காலியில் போய் உட்காரலாம்; இது சௌகர்யமான ஏற்பாடு. முன்னால் வாங்கி வைத்த டிக்கெட்டுகளை, போக அசௌகர்யம் ஏற்பட்டால் கள்ள மார்க்கெட்டில் விற்பார்கள். போலீசார் கண்டுபிடித்தால் வேடிக்கை நடக்கும். இம்மாதிரி அகப்பட்டுக்கொண்ட ஒருவன்




# Vatni 'வத்னி'

## நம் வட்டனுல் (ஸ்வதேசம்) விரும்பப்படும் சோப்

புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஓர் அலாதி முறையின் நன்மை பயக்கும் அம்சங்கள் புகுத்தப்பட்டதும், பொருக்கி எடுக்கப்பட்ட சோதனைக்குள்ளான பொருள்களால் இந்தியாவிலேயே, இந்தியர்களுக்காக இந்தியர்களால் தயாரிக்கப்பட்ட கோத்ரெஜ் வத்னி டாய்லெட் சோப்புகள் இவ்வரிய குணங்களை உடையன:—

1. முற்றிலும் சிக்கனமுள்ளது. கெட்டியாயிருந்த போதிலும் மிருதுவானது. உபயோகிக்கும் பொழுது உடையாது, வீணாகாது. அதன் கடைசி செதிள் உள்ளளவும் பரிமளங்கமழும் க்ரீம் நுரையை அளிக்கிறது.
2. அது அதிக மிருதுத் தன்மையை உடையது—குழந்தையின் இளஞ் சருமத்திற்கு ரொம்பவும் நல்லது.
3. சுத்தம் செய்வதில் முதன்மையானது.
4. அதிசயிக்கத் தக்க குறைந்த விலையில் விற்கிறது.

**ஒப்புயர்வற்ற சுதேசி ஸோப்**

முற்றிலும் சுத்தமானது.
மிருகக் கொழுப்பற்றதென்பதற்கு உத்தரவாதம்.
விருந்தினருக்கான சிறு கட்டியாயும் கிடைக்கும்




Godrej கோத்ரெஜ் சோப்ஸ், லிட்.
ரிஜிஸ்டர்டு
மதராஸ்: 164, பிராட்வே; கொச்சின்: 6/36, கல்வத்தி.

**தாவர எண்ணைகளினால் ஸோப்பு தயாரிப்பதில் முதன்மையானவர்கள்**

சீட்டுக்களை வாயில் திணித்து மென்று தின்றேவிட்டான்? வேலை நிறுத்தம் செய்யும் சிகப்புக் கொடிக்காரர் போவோரை நிறுத்தி, "ஐயா உங்களுக்கு வெட்கமாயில்லை? எங்களைப் பட்டினி போட்டு, முதலாளிகளின் பணப்பையை நிரப்பலாமா?" என்று கேட்டு ஆர்ப்பாட்டம் செய்வார்கள். சினிமாக்களுக்கு எங்கிருந்து தான் இவ்வளவு கூட்டம் வருகிறது என்று அதிசயப்படுகிறேன். இங்கே சீட்டு வாங்க மாத்திரம் க்யூ என்று நினைக்காதே! இடைவேளையில் கக்கூசுக்குச் செல்பவரின் க்யூ ஒரு பர்லாங்கு நிற்கும்! 'விபர்ட்டி' என்னும் தியேட்டர் மாதிரி இந்தியாவில் எங்கும் இராதென்று நினைக்கிறேன், இங்கே ஹிந்திப் படங்களை மாத்திரம் காண்பிப்பது பாராட்டத்தகுந்தது. இஷ்டம்போல் நகர்ந்து கொடுக்கும் நாற்காலிகளும், விளக்கும் அலங்கரிப்பும் உன்னதமானவை. இதில் அமர்ந்து படம் பார்த்து, பிஸ்கோத்துக் கோப்பையில், வழியும் வெண்ணெய் போன்ற ஐஸ்க்ரீமை உண்பது உனக்கு மிகவும் பிடித்திருக்கும். ஹிந்தியில் படம்பிடிப்பது பலதுறையிலும் முன்னேறியிருப்பதாய் எனக்குத்தோன்றுகிறது. இவைகளில் குறையே இல்லையென்றே, சகல விஷயங்களிலும் இவை மேலானவை யென்றே சொல்வதாக நினைக்காதே. தமிழ் நாட்டைவிட, வட இந்தியாவில் படப்பிடிப்பு, சங்கீதம், கதை இந்த அம்சங்களில் கவனம் செலுத்துவது அதிகம் என்பதையே இங்கே குறிப்பிடுகிறேன். நான் புதிய வெளியீடுகளாய் 10, 12 படங்கள் இங்கே பார்த்தேன்.

பம்பாயில் மூலைக்கு மூலை ஐஸ் க்ரீமும் பாலும் வெண்ணெயும் வியாபாரம் செய்யும் பரிஷியன் டெய்ரிகள் அனேகம் உண்டு. கடையின் உட்புறம் மாடுகளைப் பெரிய ஓவியங்களில்வரைந்து சுவரை அலங்கரித்திருக்கிறார்கள்! கிடைக்கும் வஸ்துக்கள் சுத்தமானதாயும் இருக்கின்றன.

ரேடியோ கோவாதான் முக்கால்வாசி பம்பாய்க்காரர் கேட்பது, இப்பொழுது? இனிய சினிமா கீதங்களைப்பகல் பொழுதில் ஒலிபரப்பி மக்களின் மனதைக்கவருகிறார்கள். நடுநடுவே 'போல்சன்ஸ் மக்கன்' 'பியர்ஸ் சோப்'பின் அருங்குணங்களை விளம்பரமும் செய்கிறார்கள். ரேடியோ கோவா கேளுங்கள் என்று சினிமா விளம்பரங்கள் வற்புறுத்துகின்றன!

1932 ஆம் வருஷத்தில் சீமைசென்று வந்த நம்ம——, ஆத்தில் குழந்தைகளுக்கு யோ யோ (yo yo) என்னும விளையாட்டு வாங்கிவந்தது உனக்கு நினைவிருக்கிறதோ? இன்று பம்பாய் நகரத்தில் யோயோவின் அமர்க்களம் ஒரு வேடிக்கை. பஸ் க்யூவில் நிற்பவர், ஆபீஸில் பங்காவின் கீழ் உட்கார்ந்து வேலை செய்பவர், பெண்கள், குழந்தைகள் அனை



யோ யோ

வரும் யோயோ விளையாட்டில் லயித்துப் போகிறார்கள். இரண்டு அணுவுக்குத் தகர யோயோ முதல் ஒரு ரூபாய்க்குக் கலர் கலரில் விற்கும் பிளாஸ்டிக் யோயோவரை கடையில் கொட்டிக்கிடக்கின்றன.

பம்பாயில் மதுவிலக்கு அமுலுக்கு வந்திருப்பதைப்பற்றி அபிப்ராய பேதம் பலமாக இருக்கிறது; முக்கால் வாசிப் பேருக்குப் பிடிக்கவில்லை. ஏழைகள் குடித்துக் கெட்டுப்போகிறார்கள் என்பதற்காகக் கொழுத்த பணக்காரனுக்கும், மேனாட்டு வழியில் பழகிப் போனவனுக்கும் சாராயம் இல்லாமற் போவானேன்? சர்க்காருக்கு மேனாட்டிலிருந்து ஊர் பார்க்க வருவோரிடமிருந்து பணம் சேர வழியே இல்

லையே என்றெல்லாம் கண்டனம் நடைபெறுகிறது. அது எப்படிப் போனாலும் இந்தியாவைக் காணவரும் வெளிநாட்டார் இந்தியா தங்களுக்கு அளிக்கக்கூடிய வசதிகளின் தரத்தைப் பார்த்து, பெருத்த ஏமாற்றம் அடைவார்கள்; சாப்பாடு, இட வசதி, பொழுது போக்கு, குடி இந்த விஷயங்களில் கவனம் செலுத்தி, வருபவர் மனதைக் கவரும் வண்ணமும் சௌகர்யமாயும் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

சூதாட்டத்தைச் சர்க்கார் தடைசெய்வதில், பணக்காரன் பொழுதுபோக்குக்காக ஆடும் ரம்மி முதலான ஆட்டங்களையும் தடுத்திருக்கிறார்கள். இங்கே 5, 6, வயதுப் பையன்கள் காலணாக்களை அடுக்கி வைத்துக்கொண்டு தெருவில் இனி வரப்போகும் 'கார்'களின் 'மேக்'கை ஜோசியம் சொல்லிச் சூதாடுகிறார்கள்! பீடியும் பிடிக்கிறார்கள்.

பம்பாயில் ரேஷன் ஏற்பாடுகள் வெகு அழகாய் நடைபெறுகின்றன. நாங்கள் ஊரில் வந்து இறங்கின சிலமணி நேரங்களுக்குள் அனைவர்க்கும் சர்க்கரைக்கு உள்பட கார்டுகள் கிடைத்துவிட்டன! R என்கிற கொட்டை எழுத்தின் கீழே ஒவ்வொரு சனிக்கிழமையும் அந்தந்த வாரத்தில் ரேஷனில் ஏற்படும் மாறுதல்கள், பதிவுசெய்துகொள்ள வேண்டிய விதிகள் இவைகளைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்து, 'கத்தரித்து வைத்துக்கொள்ளுங்கள்' என்றும் பிரசாரம் செய்கிறார்கள். புதிய ஏற்பாடுகள் எப்பொழுது அமுலுக்கு வரும், வருகிற வாரத்தில் கோதுமை, அரிசி, ரொட்டி கூபன், சர்க்கரையில் என்ன கூடுதல் குறைவு என்பதையெல்லாம் ஜனங்கள் தெளிவாய்ப் புரிந்துகொள்ளச் சாத்யமாகிறது. தென்னிந்தியாவிலும் இதைச்சிறிது பின்பற்றலாம்.

இந்நகரின் அழகிய அம்சங்களையே புகழ்கிறேனே; அழகற்ற அம்சமே இங்கே கிடையாதோ என்று நீ கேட்கிறாய் அல்லவா? ஐயோ பாவம்! ஏழைகளின் கதி ஒன்று போதுமே இதை எடுத்துக்காட்ட. ஏழைகள் என்றும் ஏழைகள்தான்—ஏசுநாதர் சொன்னதுபோல அவர்கள் நம்முடன் எந்நாளும் இருக்கிறார்கள் என்பது உண்மை. பம்பாயின் சால் அல்லது ஒரே உள் கொண்ட வீடுகளின் கதி பரிதாபகரமானது. அசுத்தம், சௌகர்யம் என்பதை நினைக்கமுடியாத ஸ்திதி, இருட்டு, அருளற்ற வாழ்க்கை — இவைகளையே பிறவித் தனமாய்க் கொண்டவர் இங்கே வாழ்கின்றனர். பம்பாயில் சமீபத்தில் 68 மில்களில் வேலை நிறுத்தம் காரணமாய், ஆயிரக்கணக்கான தொழிலாளிகளின் குடும்பம் மிகக் கேவல நிலைமைக்கு வந்துவிட்டது. எவ்வளவு கஜம் துணி



பம்பாய் சர்ச் கேட்.

தேசத்திற்கு நஷ்டம்! 'ஸ்ட்ரைக்' செய்ய இவர்களைத் தூண்டியவரின் புத்தியை என்னவென்பது? நல்லவேளையாக, நான் புறப்படும் சமயம் நிலைமைமாறி எங்கள் வீட்டெதிரில் கம்பாலா மலைச்சாரலில் உள்ள மில்களில் வேலை தொடங்கியதை, புகை கிளம்பியதின்மூலம், தெரிந்து சந்தோஷித்தேன்.

இந்தப் பட்டணத்தில் ஏழையும் தனக்குத் தகுந்த சில சௌகர்யங்களுடன் வாழமுடியும். ஒரு மொசம்பி ஒரு அணாவென்று அதை நாலு பாகமாய் வகிர்ந்து விற்கும் ஒரு மொசம்பிவாலா லோகல் ரயில்களில் கூடவே வருவான். பால்காரர், காய்கறி விற்பவர் வாங்கி உண்பார். பணக்காரரும் வித்யாசமின்றி இதையே வாங்கி உண்பதும் பம்பாயின் விசேஷம். பால் வரும் ரயில் பிரத்யேகம்; காய்கறிக்குத் தனி வண்டிகள். அன்றாடம் 15, 20 மைல் தூரத்துக்கிராமங்களிலிருந்து நிமிஷமாய்ப் பாலைக் கொணர்ந்து சப்ளை செய்கிறார்கள். குமாஸ்தாக்களின் பிற்

பகல் சாப்பாட்டை எடுத்துக்கொண்டு போய்க் கொடுக்க மாதம் ஒன்றுக்கு, கை வண்டிக்காரர் தலைக்கு ரூ. 2—0—0 என்று காத்திருக்கிறார்கள்; ஒரு வண்டியில் 75 சாப்பாட்டுப் பாத்திரங்கள் போகின்றன. எவ்வளவு சௌகர்யமான ஏற்பாடு?

இனி பம்பாயிலும், வெளியிலும் உள்ள சில இடங்களை உனக்குச் சொல்கிறேன், கேளு.

### மலபார் ஹில் - Hanging gardens.

இந்தக் குன்றின் மீது குடிநீர் ரிசர்வாயர் ஒன்றுகட்டி அதன் மீது 6 இஞ்சு முதல் 2 அடி ஆழம்வரை மண்போட்டு அழகான பூந்தோட்டம் உண்டாக்கியிருக்கிறார்கள். செடிகளை விதம் விதமான உருவங்களில் வெட்டி விட்டிருப்பது ஒரு வேடிக்கை. மலையின் கோடியில் சமுத்திரக் கரையில் கவர்னரின் திரு மாளிகையும் உள்ளது. மலபார் ஹில்லில் உள்ள NAAZ என்கிற சிறிய ஹோட்டல் தளத்தில் அமர்ந்து, கீழே சமுத்திரத்தையும், அதன் கரையோடு போகும் நகரத்தையும் பார்த்துக்கொண்டிருந்தால் இவ்வளவு ரம்யமான காட்சிகளும் உலகில் இருக்கின்றனவா என்று தோன்றும்.

### பிரின்ஸ் ஆப் வேல்ஸ் மியூசியம்

(Prince of Wales Museum) பார்க்கத்தகுந்தது. அங்குள்ள அஜாந்தா சித்திரங்களையும், உயிரற்ற சகல மிருகங்களையும் அதன்தன் இயற்கைச் சூழ் நிலை தயாரித்து நிற்க வைத்திருப்பதையும் பார்க்க, பிரமிப்புத் தட்டுகிறது. ஸர் ரதன் தாதாவின் சிற்ப ஓவியப் பொக்கிஷம் முழுவதுமே இந்தக் காட்சிச் சாலையில் இருக்கிறது. அவற்றுள் நான் பார்த்த 10 அடி உயரமுள்ள ஒரு கடிகாரத்தில் எண்கள் தமிழ் இலக்கத்தில் எழுதப்பட்டு, கடிகாரம் இன்றும் ஓடிக்கொண்டிருந்தது!

### சௌபாத்தி கடற்கரை-ஜுஹு பீச்.

சனி ஞாயிறில் ஏழை பணக்காரர் வித்யாசமின்றி ஒன்றுகூடி யாவரும் சீனா பாதம் உண்டு களிக்கிறார்கள். கடலை ஒட்டி அமைந்துள்ள **Sea View Hotel**ம் பிக்நிக் நூக் என்கிற ஒரு சிறு ஹோட்டலும் ஜுஹுவில் உள்ளன.

சமுத்திரத்தை ஒட்டி நிற்கும் மஹாலக்ஷ்மி கோவிலும் பாபுல் நாத் கோவில் ஒன்றும் இங்கே நான் போய்ப் பார்த்தேன்.

**ஜோகேசுவரி:** இங்குள்ள குகைகளைப் பார்க்க ஒரு நாள் 15, 20 மைல் மோட்டாரில் போய் வந்தேன். ஸத்ய யுகத்தில் பாண்டவரால் கட்டப்பட்ட கோவில் என்று அங்குள்ளவர்கள் சொன்னார்கள். குகையின் சிற்பங்கள் உப்புக் காற்றினால்



ஜோகேசுவரி குகை

தேய்ந்து, உருத்தெரியாமல் இருக்கின்றன. கோவிலுக்குள் பல இடங்களில் தண்ணீர் ஊற்றெடுத்துப் பெருகுகிறது. ஸத்ய யுகத்தில் பம்பாய்ப் பட்டணத்தின் நாகரிகம் எவ்வாறு இருந்திருக்கும் என்று மானசிகக் கற்பனை செய்து பார்த்தேன்.

**வஜ்ரேசுவரி** இதுவும் பஸீன் என்கிற ஊர் வரையில் ரயிலில் சென்று 19 மைல் மலைக்காட்டுக்குள் மோட்டாரில் பிரயாணம் செய்துபார்க்கவேண்டிய இடம். பம்பாயில் இருந்து 50 மைல் இருக்கும். பணக்காரர் நேரே காரில் போய் வரலாம். பஸ்ஸில் ரூ1—1—0 தான் கட்டணம். அழைத்துப்போய் அவர்களே திருப்பிக் கொண்டு வந்து ரயிலில் விடுகிறார்கள். பசிக்கு உணவருந்த ஒரு காப்பி ஹோட்டலும் அங்கே உண்டு—மோட்டார் பாதை நெடுக, ஓங்கி வளர்ந்த மா, பூவரசு, நெட்டிலிங்கம் தேக்கு, ஆல், புளிய மரங்கள் குளிர்ச்சி தருகின்றன. இவ்வளவு பீடிகை போடுகிறேனே, அங்கே என்னவென்று கேட்

கிறாயோ? முக்கிய விசேஷம் **வெந்நீர் ஊற்றுக்கள்.** இதற்கு முன் இயற்கையே தண்ணீரைக் கொதிக்க வைத்து அனுப்பும் இந்த அதிசயத்தை நான் கண்டதில்லை. இந்த மலைக் காட்டுக்குள் 200 ஊற்றுக்கள்



ஜோகேசுவரி குஹை — (2 படம்)

இருப்பதாய்ச் சொல்லுகிறார்கள். நாங்கள் போன இடத்தில் 12 ஊற்றுக்கள் இருந்தன. சுற்றிலும் 10 அடி சதுரத்திற்கு சிமிண்டு மேடை போட்டு இருந்தது. தொட்டிகள் போன்ற இந்த ஊற்றுக்களின் ஆழம் 4 அடிக்கு மேல் இல்லை. சிலவற்றில் ஜலம் தளைத்துக்கொண்டும் சில பொறுக்கும்படியான சூட்டிலும் ஸதா வழிந்துகொண்டு இருக்கின்றன. தொட்டிகளின் நாற்புறமும் ஜில்லென்ற நீரைப் பெருக்கி ஓடைகள் ஓடிவருவது ஒரு அதிசயம். ஊற்றுக்களின் சமீபம் மணல்கறுப்பு நிறமாயும் உஷ்ணமாயும் இருந்தது. இந்தக் காட்சியைப் பார்த்து நான் என்னை மறந்து நின்றுவிட்டேன். "எல்லாரும் வாருங்கள், தைலம் தேய்த்து ஸ்நானம் செய்யுங்கள்; எந்த நேரத்திலும், நடு இரவிலும்கூட, வெந்நீர் தயாரித்து நிரப்பி வைத்திருக்கிறோம்." என்று இயற்கைத் தெய்வமே கூவி நம்மை அழைப்பதுபோல் கற்பனை செய்துகொண்டேன். சீமையில் உள்ள **Spa** வைப்போலவே இந்தக் கந்தக வெந்நீர் ஊற்று ஸ்நானத்தினால் சர்ம ரோகம், பாரிச வாயு சுவஸ்தமாவதமாகச் சொல்கிறார்கள். ஒரு டாக்டர் இங்கே குளிக்கும் அறைகள் கட்டி, ஸ்நான வசதி ஏற்படுத்தியும் இருக்கிறார். புராண சம்பந்தமில்லாத இடம் இந்தியாவில் ஏதேனும் உண்டோ? ஸ்ரீராமபிரானும், லக்ஷ்மணரும் அம்பு எய்ததால் உண்டான இந்தக் குளங்களை ராம்குண்ட், லக்ஷ்மண் குண்ட், ஸீதாகுண்ட் என்று பெயர் இட்டிருக்கிறார்கள். நவநாகரிக பம்பாய் பட்டணத்தின் இவ்வளவு சமீபம் இந்த இயற்கைப் பிரதேசம் இருப்பதை நான் மிகவும் ரசித்தேன்.

பம்பாய்க்கு வெளியில் பொரிவிலியை அடுத்து, **கான்ஹேரி** அல்லது கிருஷ்ணகிரியில் 200 ஏகரா நிலத்தை வளைத்து ஒரு 'இயற்கை' வனம் 'உண்டாக்குகிறார்கள்'! **(Kanheri National Park).** இயற்கையே அமைத்துள்ள குன்றுகள், மரம், செடிகள் குகை, ஓடைகளை அதே நிலையில் அழகுபடுத்தி, சீர்திருத்தி வைப்பதாக ஏற்பாடு —சிறிய சிறிய வீடுகள் கட்டி வாரவிடுமுறையை இங்கே கழிப்பவர்க்கு வாடகைக்கு விடுகிறார்கள்; நீச்சுக்குளங்கள், ஹோட்டல் இவற்றிற்கும் பஞ்சமில்லை. மத்தியில் உள்ள ஒரு சிறு குன்றுக்கு 4 பர்லாங் பாதை கட்டி மேலே மகாத்மா காந்தி ஞாபகார்த்த மண்டபம் அமைக்கிறார்கள்; அங்கங்கே ஸ்தூபிகள் எழுப்பி, காந்தி அடிகளின் வாழ்க்கையின் முக்ய அம்சங்களை அதில் எழுதிவைக்கப் போகிறார்களாம்; தற்சமயம் மண்டபமும், குன்றிலே ஏறும் வழியும் கட்டப்படுகின்றன;



வஜ்ரேசுவரி —

மற்றவை ஆரம்ப ஸ்திதியில் இருந்த போதிலும் **Kanheri National Park** நிர்மாணம் முடிந்ததும், பம்பாய்க்கு வருபவர், அவசியம் போய், தரிசித்து வரவேண்டிய ஸ்தலங்களில் ஒன்றாகும் என்பதில் ஐயமில்லை.

பம்பாய் நகரத்தில் பெண்கள் முன்னேற்றம் எல்லாத் துறைகளிலும் அதிகமென்று மொத்தமாய்ச் சொல்லலாம். கணக்கற்ற மஹிளா ஸமாஜங்கள் தங்கள்



காந்திஜி ஞாபகார்த்த மண்டபம் உள்ள குன்றுக்கு ஏறும் வழி

சேவையைப் பிறர் அறியாமல் செய்து தொண்டாற்றுகின்றன. பட்டதாரிப் பெண்கள் இலவசமாய் இங்கே பெண்களுக்குப் படிப்பு, சங்கீதம், தையல், கைத்தொழில் கற்பிக்கின்றனர்; ஊதியம் பெறுவதில்லை. குடும்பத்துப் பெண்களே ஆனாலும் பகல் 11 மணி முதல் மாலை 4 மணிவரை தங்கள் படிப்பையும் நேரத்தையும் இந்த உபயோகமான சேவையில் செலவழித்து ஏழைச் சகோதரிகளைக் கைதூக்கி விடுகின்றனர். இந்த நேரங்களில் சமாஜங்கள் பெரிய தொழிற்சாலை மாதிரி வேலை செய்கின்றன. இதில் ஒன்று **அவந்திகாபாய் கோகலே மகிளாஸமாஜ்** - மக்கள் இல்லாத ஒரு தம்பதி இதை நிறுவி, தங்கள் வீடு. செல்வம், நேரம் எல்லாவற்றையும் சமாஜத்தின் சேவைக்கு அர்ப்பணித்துள்ளார்கள். கணக்கற்ற ஏழைப் பெண்கள் இதனால் முன்னேறியிருப்பது சொல்லாமலே விளங்கும். நம் ஊர்களிலும் தனவந்தர் வீட்டுச் சகோதரிகள் இம்மாதிரி சேவையில் ஈடுபட்டுப் பொழுதைப் பிரயோஜனமுள்ளதாய்க் கழித்தால் எவ்வளவு நன்மை விளையும்!

அக்டோபர் மாதத்தில் பம்பாய் நன்றாக இராதென்று யாவரும் சொன்னார்கள். என்னுடைய சரீரத்துக்கும் அது கேட்டுவிட்டதுபோல் பலதினுசு சில்லறைப்பிணிகள் தோன்ற ஆரம்பித்தன. கடையைக் கட்டிக்கொண்டு இனி வீடு திரும்புவதென்று கிளம்பிவிட்டேன். மதராஸில் ஜனங்கள், முக்யமாய்ப் பெண்கள், நவராத்திரி வைபவத்தில் மூழ்கித் திளைத்திருப்பதைக் கவனித்தேன். நம் பெண்மணிகளின் தாராள சிந்தனையினால் பிளாஸ்டிக் தொழிலுக்கு ஏக கிராக்கி ஏற்பட்டிருக்கும் நிச்சயமாக. சீப்பு, தட்டு, குங்கும பரணி இவைகள் ஆயிரக்கணக்கில் செலவழிந்தன! ஒரு 'வெற்றிலைப் பாக்கின்' பெறுமானம் ரூ 1—4—0 க்குக் குறையாது; ஓர் ஏழை இரண்டு வேளை வயிறு நிரம்ப உண்டு பசி தணித்துக் கொள்ளலாம்.

பிரியமுள்ள ——— இவ்வளவு நாள் கழித்து ஊர் திரும்பும் என் கண்களுக்கு இந்த அக்டோபர் மாதத்துப் பசுமை இன்பம் தந்தது—' 'பரவாயில்லை, நம்ம ஊரிலும் வறட்சி குறைந்து, பசுமை தோன்றி, சுபிட்சம்கூட வரும்போல் இருக்கிறதே' என்று நினைத்து மகிழ்ந்தேன். எங்கள் வீட்டில் உள்ள மரங்கள் முதல் நாள் இரவு பெய்த பெரு மழையினால் கிளைகள் தாழ்ந்து, இலைகள் தொங்கி, குளிர்ந்த நீரை என்மீது வர்ஷித்து,



மகாத்மா காந்தி ஸ்தூபி

வாவாவென்று என்னை வரவேற்றன. இயற்கையின் அன்பு நிறைந்த இவ் வரவேற்புக்கு நன்றி. இத்துடன் நிறுத்திக் கொள்ளட்டுமா?

# இண்டோ கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

மதராஸ்

**ஸர். A. ராமஸ்வாமி முதலியார்,**
K. C. S. I., D. C. L. (Oxon)
**சேர்மன்**

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 18,75,000
ரிஸர்வ் நிதி ரூ. 10,75,000

சென்னையிலுள்ள ஆபீஸ்கள் :

நேதாஜி ஸுபாஷ் சந்திரபோஸ் ரோட், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, தியாகராயநகர் & பெரியமெட்.

தென்னிந்தியாவிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.



# DON'T WORRY!!

Try "KUMARI" (Tablets) to remove your anxieties over difficult days and fear of periodical delays at any stage, under any circumstances and prevent future troubles! Speedy and harmless!! Thousands satisfied!!! Normal potency Rs. 3. Special Rs. 5. Extra Special Rs. 8. (V. P. Extra)



## Mrs. P. DEVEE, F. D. S. (C. M.)

TOLLYGUNGE, CALCUTTA - 33.

**கீழ்க் கண்டவர்களிடமும் கிடைக்கும் :—**

(1) நாதம் & கோ.
மட்டஞ்சேரி
கொச்சின்

(2) இண்டோ மெடிகல் சப்ளைஸ்
29, வைத்யநாத முதலித் தெரு
மதராஸ் - 2

(3) நியூ டவுன் ஏஜன்ஸிஸ்
804-B. "ஹரிநிவாஸ்"
வின்ஸெண்ட் ரோடு
தாதர் - பம்பாய் - 14

(4) ராஜா மெடிகல் ஹால்
31, தர்மராஜா தெரு
பெங்களூர் கண்டோண்மெண்ட்

(5) ஆந்திரா எம்போரியம்
76-78, டுப்ளெக்ஸ் தெரு
புதுச்சேரி

(6) பயனீர் பார்மஸி
183, மெயின் ரோடு
பெட்டா - கொழும்பு
(இலங்கை)

(7) ஓவர்ஸீஸ் ஜெனரல் ஏஜன்ஸி
72, அம்பாங் தெரு
கோலாலம்பூர் (மலேயா)

*Wanted Stockists in Unrepresented Areas on Favourable Terms*

**READ WHAT SATISFIED CUSTOMERS SAY!**

**K. P., Bombay**-"More than four months' overdue was restored to its usual state after using only 2 phials of Special Tablets."
**V. K. East Africa**-"Tried many similar products. None ever worked but only one packet of your Extra-Spl. tabs. brought wonderful results."

**K. L. R., Ceylon**—"Remember. I bought two phs. of your medicine which relieved my patients wonderfully. Send 6 phs. more per return."
Mrs. David Bangalore—'Your **KUMARI** is a miraculous preparation. You have saved my life. I must introduce this to my friends.'

*Almost daily, lot of unsolicited appreciations pouring in our files from differnt parts of the World.*

## பாத்ருடுவின்

# பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

**குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து**

**சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்**

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

**போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்**

## டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

**11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.**

**கும்பகோணம் கிளை :—**
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

**திருச்சி கிளை :—**
15, புகழியபிள்ளை தெரு
தெப்பக்குளம் போஸ்ட்.

# MEHTA'S SPECIALITIES

*Well-known for their efficacy and Medicinal values*

1 *SUNDARI ELIXIR*
**For all kinds of female irregularities in menses and a great uterine tonic.**

2 *PHOSPHORUS OIL*
**A great pain relieving oil ever prepared in annals of medicine.**

3 *MASTANA PILLS*
**Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.**

4 *DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA*
**A great Blood Purifier & digestive & Potential Tonic.**

*Stocked by all important Chemists & Druggists of South India*

# K. S. MEHTA & CO.

**250, China Bazaar, MADRAS.**



# வெடிக்காத பட்டாசு

ஆர். எஸ்.

எங்கேயோ பட்டாசு ஒன்று வெடித்தது. விடிந்தால் தீபாவளி. குழந்தைகளுடைய முகத்திலும் பெரியவர்களுடைய முகத்திலும் சந்தோஷம் தாண்டவமாடியது. ஒவ்வொருவருடைய சந்தோஷத்துக்கு ஒவ்வொரு காரணம். எல்லோருக்கும் தீபாவளி, சந்தோஷத்தைக் கொடுத்தது. ஆனால் அது மீனாக்ஷியைப் பொறுத்தவரையில் துயரங்கலந்த பழைய நினைவுகளையே எழுப்பிவிட்டது.

காவேரிக்கரையோரமாக ஒரு வீடு. இருண்ட நிழல் பரப்பும் இலைகள் செறிந்த கிளைகள் தவழும் மாடியறை. அந்த ஜன்னலருகில் மீனாக்ஷி உட்கார்ந்திருந்தாள். விடியற்காலைச் சந்திரனைப்போல அவள் முகம் ஒளியிழந்து மங்கியிருந்தது. வெடித்த பட்டாசுகளிலிருந்தும் கருகிய வாணங்களிலிருந்தும் கிளம்பிய கரிப்புகை தென்றல் காற்றில் புது நாற்றத்தைக் கிளப்பிவிட்டது. அவள் மனத்திலே சுழல்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் அந்த நினைவுகள் அவிந்துபோவது சாத்தியமா? அப்படி ஒருவேளை ஆனாலும் விசுவத்தைப் பறிகொடுத்த நாள் வரும்போது, அவன் மறைந்துபோன தீபாவளி தினம் வரும்போது, அவளால் அவனை எப்படி மறக்கமுடியும்? சென்றுபோன துக்க சம்பவங்கள் வெளியாருக்குப் பழங்கதை ஆகிவிடலாம். கூடப் பிறந்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும்கூட சாதாரண விஷயம் ஆகிவிடலாம். ஆனால் பெற்றவளுக்கு, பத்து மாதம் உடலில் தங்க இடம் கொடுத்தவளுக்கு அந்த நினைவு வரும்போது நெஞ்சு குமுருமல், உடல் பதருமல், கண்ணீர் சிந்தாமல் எப்படி இருக்கமுடியும்? எவ்வளவு நாட்கள் ஆனாலும் தாயுள்ளத்தில் அந்தச் சம்பவம் ஏற்படுத்திய வடு மறைந்து மங்கிவிட முடியுமா?

நாளைக்குத் தீபாவளி. அதோ அவன் கடைசிப்பிள்ளை மத்தாப்புக் கொளுத்துகிறான். பற்றி எரிந்துகொண்டிருக்கும் மருந்திலிருந்து பால் போலப் பூ கீழே பொழிகிறது. கன்னங்குழிய அவன் சிரிக்கும்போது, அந்தச் சிரிப்பு அவளுக்கு நினைவு வருகிறது. அவனைத் தூக்கிச் சீராட்டிய கைகளை இங்கே விட்டு விட்டு, கனிவாயில் முத்தம் தந்தவளைத் தவிக்கவிட்டுவிட்டு அவன் அந்தப் புனலோடு ஒன்றிவிட்டானே!

கண்ணுக்கெட்டிய தூரம் கரைகளில் நீர் ததும்ப, காவேரி ஓடிக்கொண்டிருக்கிறது. அதன் அழகுக்கு அழகு செய்ய நிலா ஒளி இல்லை. இருந்தாலும் அதன் உருவத்தை இருளால் மறைக்கமுடியவில்லை. காவேரி! உன்னைப் புண்ணிய நதி என்று சொல்கிறார்களே? தாயைப்போன்ற நீயா என் பிள்ளையை உன்னுடன் சேர்த்துக்கொண்டாய்? உனக்கு நான் என்ன கெடுதல் செய்தேன்? என்னைப் பொறுத்தமட்டில் உன்னைப் பாவ நதி என்றுதான் சொல்வேன். வேறு என்ன சொல்வேன்?

2

ஆறு வருஷங்களுக்கு முன்னால் ஒரு தீபாவளி. நாளை விடிந்தால் தீபாவளி. காலேஜிலிருந்து விசுவம் வந்திருக்கிறான். அவர்கள் வீட்டிலேயே இருந்து படித்துக்கொண்டிருந்த சந்துருவும் அகப்பட்டுக்கொண்டான். தீபாவளிக் கொட்டத்துக்குக் கேட்பானேன்!

தீபாவளிக்கு முதல்நாள் எழுந்திருக்கும் போதே அவள் மனம் குதூகலத்தில் ஆழ்ந்து கிடந்தது. பிழைத்துக் கிடந்தால் அடுத்த வருஷம் விசுவத்துக்குத் தலைத் தீபாவளி. விசுவம்தானே முதற்பிள்ளை? முன்னே இவர் தீபா




வளிக்கு வந்தபோது, கூட மாமியார் வந்திருந்தாள். மாமியாருக்கெதிரே இவரோடு பேசக்கூடமுடியவில்லை, அம்பியோடு சண்டை போட்டு வாங்கி வைத்திருந்த பட்டாசுகளில் ஒன்றுகூடக் கொளுத்த முடியவில்லை. தான் விசுவத்துடன் கூடப்போனுல் அப்படியெல்லாம் இடைஞ்சலாக இருக்கும்படி அவன் ஒரு நாளும் நடந்துகொள்ளமாட்டாள், அடுத்த வருஷம் அடுத்த தீபாவளி - தலைத் தீபாவளி - பிழைத்துக்கிடந்தால்?

பத்தரை மணி இருக்கும். உள்ளே பாதாம் அல்வா கிளறிக் கொண்டிருந்தாள். விசுவத்துக்கு ரொம்ப பிடித்த பக்ஷணம். காவேரிக்குப் போய் அரைமணி ஆகியிருக்குமே? அவனும் வரும் சமயம்தான். வாசலில் ஏதோ சத்தம் கேட்டது. எழுந்து போனுள். அங்கே அவர் பேயறைந்த மாதிரி நின்றுகொண்டிருந்தார். தலையிலிருந்து ஜலம் சொட்ட, துடைக்காத உடம்புடன், சேறு நிறைந்த வேஷ்டியுடன் சந்துரு நின்றுகொண்டிருந்தான். அவனுேடு கூட நிற்கவேண்டிய விசுவம் எங்கே? அவனுேடு ஆற்றுக்குப்போன விசுவம் எங்கே? யாருக்காகப் பக்ஷணம் செய்து வைத்திருந்தாளோ அதை ருசி பார்க்கவேண்டியவன்

எங்கே? அவன் திரும்பவில்.... காவேரி அவனைத் தன்னோடு அணைத்துக்கொண்டுவிட்டாள்.

விசுவம் வரவில்லையா? விசுவம் உயிரோடு இல்லையா? அவள் தலை சுற்றியது. உணர் விழந்து மூர்ச்சையானாள்.

ஒரு தடவை குழந்தை கையில் மத்தாப்புக் கொளுத்தும்போது கையில் சுட்டுக்கொண்டது அவள் துடித்துப்போனாள். கையில் தேனைத் தடவினாள். மருந்து போட்டாள். இன்னும் என்னவெல்லாமோ செய்தாள். இருந்தாலும் அந்தச் சுட்ட காயம் ஆறும் வரையில் அவள் மனமும் ஆறவில்லை. அந்த உடலில் நெருப்பைக் கொட்டியபோது அவள் எப்படிப் பொறுத்துக்கொண்டிருந்தாள்? அவள் உயிர் எப்படிப் பிரியாமல் இருந்தது?

அடி காவேரி! ஐப்பசி மாதம் ஒவ்வொரு நாளும் உன் மடியில் பூவையும் மஞ்சளையும் பாலையும் கொட்டினேனே! அதற்குப் பிரதி பலன் இதுதானா? உன்னுடைய குளிர்ச்சியிலே எவ்வளவோபேருக்கு ஆதரவு இருந்ததே? நீயா என் வயிற்றில் இப்படி அணையாத நெருப்பைக் கொட்டிவிட்டாய்?

பிழைத்துக் கிடந்தால்—தலைத் தீபாவளி? அவள் பிழைத்துக் கிடக்கலாம். ஆனால் விசுவம் எங்கே? யாருக்குத் தலைத் தீபாவளி! அடுத்த வருஷம் போகட்டும். நாளைத் தீபாவளிக்கு அவன் இல்லையே? விடிவதற்கு முன்னால் கை நிறைய எண்ணெயை நிறைந்த மனத்துடன் யார் தலையில் அவள் வைப்பாள்?

3

"மீனாக்ஷி!" என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தார். ராமநாத ஐயர்.

"இங்கே இருட்டிலே உட்கார்ந்துகொண்டு என்ன செய்யறே?" என்று கேட்டுக்கொண்டே வந்தவர் ஒரு நிமிஷம் அவள் முகத்தையும் கண்களையும் பார்த்தார். அவருடைய குரல் கம்மியது. எதையோ மறைத்துக்கொண்டு "அசடு" என்றார். மேலே பேச முடியவில்லை.

"நீயெல்லாம் மனசு கலங்கினால் குழந்தைகள் ஏதானும் நினைச்சுக்கும்" என்று தடுமாறிக்கொண்டே சொன்னார். "கோவில்வரைக்கும் போய்விட்டு வரலாம் எழுந்திரு. தையற்காரன் கவுனைக் கொண்டுவந்து கொடுத்தானா?" என்று பேச்சை மாற்றினார்,

கோவிலுக்குப் போகிற வழியெல்லாம் பட்டாசும் லாணங்களும்தான். காது செவிடுபடும்படியாசு வெடிகள் வெடித்துக்கொண்டிருந்தன. நாளைக்குக் காலையில் மூன்று மணிக்கோ நான்கு மணிக்கோ வரப்போகும் தீபாவளியைப்பற்றிக் குழந்தைகளுக்குத்தான் என்ன உத்ஸாகம்? புதுப் பாவாடையும் சட்டையும் போட்டுக்கொண்டு ஒரு கையில் மத்தாப்பும் ஒரு கையில் பக்ஷணமுமாய் — அதைவிட வேறு என்ன வேண்டியிருக்கிறது!

தினமும் விடிந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால் அன்றைக்கு மட்டும் அந்த உஷக்காலத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம்? ஒரு பெரிய கொம்புவாணம் எரிந்தது. அந்தச் சிறிய மண் சட்டிக்குள் வைத்திருந்த மருந்து இப்போது பூவாகவும் நட்சத்திரமாகவும் வெளிப்பட தெறித்தது. மனசில் தேங்கி நின்றுவிடும் துயரங்கலந்த நினைவுகளும்கூடத் தான் வழி கிடைக்கும்போது எத்தனை உருவங்களாக எத்தனை விதங்களில் வெளிப்படுகின்றன.?

"விசுவம்!" என்று யாரோ கூப்பிட்டார்கள். தெருவில் நின்றுகொண்டிருந்த பையன் யாரோ "என்ன அம்மா?" என்று கேட்டான். மனதில் ஒரு பிரமை. தன்னை மீறித் திரும்பிப் பார்த்தாள், தலையில் குடுமியோடு கறுப்பாய் —அவளுடைய விசுவம் இப்படியா இருப்பான்? சிவப்பாய் ஒல்லியாய் — ராஜாமாதிரி ஐயோ! அவன் அப்படி இருந்ததனால்தான் எல்லோர் கண்களும் பட்டுவிட்டதோ? "நீ பெண்ணாய்ப் பிறந்திருந்தால் கவலையே இல்லை விசு!" என்று அவள் சொன்னதுண்டு. அப்போது ஏற்கனவே சிவப்பான அவன் முகம் குங்குமம்போல் சிவந்துவிடும்.

கோவிலில் குங்குமம் கொடுத்தார்கள். துடிக்கின்ற மனதில் அடக்கமுடியாமல் எழுகின்ற பழைய நினைவுகள்...

"பிரசாதம் கொண்டுவந்திருக்கிறேன் அம்மா! கொஞ்சம்தான் இருக்கு. அப்படியே இட்டு விடுகிறேனே?"

"அசடு! நீ இடக்கூடாது. நான் உன் அம்மா இல்லையா? சின்னவாள் இடலாமா?"

"அப்படியானால் அப்பாவைக் கூப்பிடுகிறேன்" என்று உள்ளே போனான். அவள் காத்துக்கொண்டே இருந்தாள். "மறந்துட்டான்போலிருக்கு" என்று நினைத்துக்கொண்டு உள்ளே போய்விட்டாள்.

இலையில் சாதம் பரிமாறினாள். பிசைந்து கொள்ளும்போது சாதம் சிவப்பாக ஆகிவிட்டது.

"அம்மா! அம்மா! இங்கே பார்த்தாயா? நீ இட்டுக்கொண்டிருக்கவேண்டிய பிரசாதம்?"

"கையைச் சாப்பிடுகிறதுக்கு முன்னாலே அலம்புகிறதில்லையோ?" என்றார் ராமநாத ஐயர்,




டிருக்கும் தகப்பனுர் தூங்கி விட்டாலும் அவளால் தூங்க முடியுமா? கண்ணை மூடினாலும் காவேரியில் சேர்ந்துவிட்ட அவள் கண்மணியின் உருவம் தானே அவள் மனத்தில் பிரதி பலிக்கும்?

4

வீட்டு வாசலில் குழந்தைகள் இன்னும் உள்ளே போக வில்லை. லலிதா நாளைக்குப் பாக்கி வைத்திருக்கிற பட்டாசு களையும் மத்தாப்புகளையும் எண் ணிப் பார்த்துக் கொண்டிருந் தாள். கடைசிப்பிள்ளை கோபு ஓடிவந்து அவள் காலைக் கட்டிக் கொண்டான்.

"எங்கேம்மா போயிருந்தே?"

"கோவிலுக்கு?"

"எதுக்கு?"

"சாமி பார்த்துட்டுவர"

மனமறிந்து சொன்ன பொய் அது. கோவிலுக்குள் கமழ்ந்து கொண்டிருந்த சாம்பிராணியின் நறுமணப் புகைபோல அவளுடைய நெஞ்சில் மீண்டும் மீண்டும் சூழ்ந்துகொண்டிருந்தது அவனுடைய நினைவுகள் அல்லவா? ஸ்வாமியைப்பற்றி அவளால் எங்கே நினைக்கமுடிந்தது?

கோபு பின்னுடி வந்துகொண்டே கேட் டான்: "ஏம்மா! பாதாம் அல்வா பண்ணி வச்சிருக்கியோல்லியோ? நாளைக்குக் காலம்பற தருவியோன்னோ?"

முன் ஒருதடவை ஏறெடுத்துப் பார்க்காமலே அனுதையாய் விட்டுவிட்ட ஒரு பாத்திரம் பாதாம் அல்வாவைப்பற்றிய எண்ணம் நெஞ்சை அடைக்க "ஆகட்டும்!" என்ருள். அவள் என்ன பண்ணிவைத்தாலும் எதைச் செய்துவைத்தாலும் முதலில் வந்து ருசிபார்க் கும் விசுவம் எங்கே? அப்பாவுக்குப் பக்கத்தில் அந்த முதலிடம் காலியாகத்தான் இருந்தது. லலிதா அந்த இடத்தில் உட்காரும்போது வெயிற்காலத்தில் வற்றிவிட்ட கிணற்றில் பெயருக்கு ஏதோ ஜலம் இருப்பதுபோல அந்த இடம் நிறையாமல் காட்சி அளித்தது.

லலிதா எதையோ வாசலில் வைத்துக் கொளுத்தினுள். திரியின் நுனியிலிருந்து பட் டாசின் நுனிவரையிலும் வந்த நெருப்பு அவிந்து போய்விட்டது. "பட்டாசு வெடிக் கலையே!"

வாழ்வின் ஆரம்பம் வரைக்கும் வந்து அத னுள் பிரவேசிக்காமலே மறைந்துபோய்விட்ட அவன்—அவள் குழந்தை விசுவம்கூட—அதோ தெருவில் அனுதையாகக் கிடக்கும் வெடியைப் போல ஒரு வெடிக்காத பட்டாசுதான்.

"அவனைக் கோவிச்சுக்காதிங்கோ! நான் அப்பவே இட்டுண்டு இருக்கணும்." என்று அவள் சமாதானம் சொன்னுள்.

"பிரசாதத்தை இட்டுக்கோ! போகலாமா?" என்று அவர் குரல் அவளை எழுப்பியது. அவள் கை இடது உள்ளங்கையிலிருந்தபிரசாதத்தைத் தொட்டுத் துழாவியது.

அமாவாசை கிட்ட வந்துவிட்டது. அவள் மனதைப்போல ஆகாயமும் இருண்டு கிடந்தது. மணி எட்டரை இருக்கும். தெரு வெல்லாம் வெடித்த பட்டாசுகளாக இறைந்து கிடந்தன. எரிந்த கொம்பு வாணங்கள் மல்லாந்துகிடந்தன. பயத்தோடு தூர எறிந்துவிட்ட கம்பியிலிருந்து இன்னும் பூ சிதறிக் கொட்டிக்கொண்டிருந்தது. அதைப் பயத்தோடு பார்த்துக்கொண்டு நின்றது ஒரு குழந்தை.

தெருவில் அதிகக் கூட்டம் இல்லை. இவ் வளவு நேரம் பட்டாசு சுட்டுக்கொண்டிருந்த குழந்தைகள் வீட்டுக்குள்ளே போய்விட்டன. இருக்கிறதைச் சுட்டுவிட்டால் நாளைக்கு விடிய எதைக் கொளுத்தமுடியும்? தூங்கும் வேளை நெருங்க நெருங்க அந்தக் குழந்தைகளுடைய மனம் சந்தோஷத்தில் கனத்துக்கொண்டே போகும். எப்போது விழித்துக்கொள்ளப் போகிருேம் என்ற நினைப்பில் தூக்கமே வராதோ? குழந்தைகள் தூங்கினுலும், வீட் டில் முதலில் எழுந்து வெந்நீர் போடவேண் டிய தாயார் தூங்கினுலும், தீபாவளிச் செல வைப்பற்றிக் கணக்குப் போட்டுக்கொண்



துணிகள்
வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
துணிகள்
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன...
ஸன்லைட்
சோப்பினால்
தான்
துணிகளை அடித்துத்துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!
SUNLIGHT SOAP
S. 125-50 TM

# லண்டன் கடிதம்

**லீலா கோபாலன்**

மாதந்தோறும் ஒரு விசேஷ தலையங்கத்தைக்கொண்டு எழுதி வந்த நான், இந்த மாதம் முதல் நேயர்கள் யாவருக்கும் லண்டன் கடிதம் என்று எழுதப் போகிறேன். லண்டனில் என்ன புதிய சமாசாரம் இருக்கிறது, ஏதாவது அதிசயம் நடக்கிறதா, என்றெல்லாம் பத்திரிகையில்தான் அன்றாடம் படித்து விடுகிறோமே என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் எது உங்களுக்கு அதிக உற்சாகத்தைக் கொடுக்கும், எல்லோருமே தினம் காலையில் பத்திரிகை படிக்கிறார்களா, அல்லது அப்படி படித்தால்தான் ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் ஆராய்ந்து சிரத்தையாகப் படிக்கிறார்களா? உங்களுக்கு இந்தக் கடிதம் பிடிக்குமென்று நினைக்கிறேன்.

"தேன் மதுரத் தமிழ் ஓசை உலகமெல்லாம் பரவும்வழி செய்தல் வேண்டும்" என்று பாரதியார் சொல்லியது எவ்வளவு உண்மை என்பதை லண்டன் பி. பி. ஸியின் கிழ்நாட்டு ஒலிபரப்பில் "தமிழோசை" என்ற தலைப்புடன் நடத்தப்பட்டுவரும் நிகழ்ச்சி நன்கு விளம்பரப்படுத்துகிறது. தமிழோசை வளம் ஒருமுறை அதாவது பிரதி வியாழக்கிழமைதோறும் இந்திய கடிகாரப்படி இரவு 7–30 மணிமுதல் 8 மணிவரை சிற்றலை 13–19 மீட்டர் வரிசைகளில் ஒலிபரப்பப்படுகிறது. இந்தத் தமிழோசை ஆரம்பிக்கப்பட்டு $1\frac{1}{2}$ வருஷ காலம் ஆகின்றது. இதன் முக்ய நோக்கம் லண்டனிலும், இங்கிலாந்தின் மற்றச் சுற்றுப்புறங்களில் வசித்துவரும்எல்லாத்தமிழர்களையும்—தமிழர்கள் என்றால் இந்தியர் மட்டும் அல்லர், சிலோன், மலேயா, ஆப்பிரிக்கா, இன்னும் மற்ற எந்தநாட்டிலிருந்தும் வந்திருக்கும் தமிழ் நன்கு பேசத் தெரிந்த அன்பர்களை—அழைத்து அவரவர்கள் நன்கு கண்டறிந்த விசேஷ சமாசாரங்களைக் கீழ் நாட்டினருக்கு எடுத்துச் சொல்வதற்குத்தான். ஒலிபரப்பு வாரம் ஒரு முறை அரைமணி நேரத்திற்கு நடத்தப்பட்டு வந்தால்கூட, இதில் பங்கெடுத்துக்கொள்ளும் தமிழர்கள் எண்ணற்றவர்.

இந்தத் தமிழோசை நிகழ்ச்சியைச் சுமார் 6 மாத காலமாக நடத்தி வருபவர் ஸ்ரீ மாத்ருபூதம். இவர் நம் சென்னை ராஜதானியைச் சேர்ந்தவர்தான். மாயவரத்தில் பிறந்து, திருச்சியில் வளர்ந்து, சென்னையில் கல்லூரிப் படிப்பு முடித்து, யுத்த காலத்தில் Y. M. C. A. காரியதரிசியாக நியமிக்கப்பட்டு இத்தாலி, ஆஸ்திரியா, பிரான்ஸ், இன்னம் பல நாடுகளிலும் வாசம் செய்து, கடைசியாக லண்டனில் வாசம் செய்துவருகிறார். தமிழோசைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு 6 மாதமே ஆயினும் அதை ஒரு பெரிய குடும்பமாகச் செய்துவிட்டார். தமிழ் அன்பர்கள் எந்நாட்டிலிருந்தும் லண்டனுக்கு விஜயம் செய்தால், இவர் கண்ணுக்கு மட்டும் தப்ப முடியாது. தமிழ் தெரியுமோ, தெரியாதோ, நான்கு வார்த்தையாவது பேசித்தான் ஆகவேண்டும் என்று ஒவ்வொருவரையும் கேட்பார். கடைசியில் ஜயமும் பெற்றுவிடுகிறார். இந்தப் படம் உங்களுக்கு எல்லாவற்றையும் தெளிவாக எடுத்துக் காட்டும் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை. நம் நாட்டுப் பிரமுகர்களைச் சந்தியுங்கள்.

இந்த ஒலிப்பரப்பை வாரம் தவறாது கேட்கும் நபர்கள், கேட்டதுடன் நில்லாமல், கடிதக் குவியல் மூலம் தங்கள் தங்கள் அபிப்ராயத்தையும் வெளியிடுகிறார்கள். மாதர் பகுதி, சிறுவர் பகுதி, பெரியோர் பகுதி, ரசாயனம், மின்சாரம், நவீனம், செய்திக் கடிதம், அதிசயம் சகலமும் கொண்ட இந்தத்தமிழோசையை நீங்களும் கேட்டுப்பாருங்கள். உங்கள் அபிப்ராயத்தைத் தபால்பெட்டி 109, பி. பி. ஸி, புதுடெல்லி அல்லது பி. பி. ஸி ரேடியோ சிலோன் கொழும்பு என்றோ கடிதம் எழுதுங்கள் என்று தமிழோசை ஆசிரியர் ஸ்ரீ மாத்ருபூதம் என்னைவிட்டு உங்களுக்கு எல்லாம் எழுதச் சொல்கிறார்.

பாரதியாரின் ஞாபகதினக் கொண்டாட்டம் இந்தத் தமிழோசையின் ஆதரவில் செப்டம்பர் மாதம் 14ஆம் தேதி நடத்தப்பட்டது. இந்தியாவிலும், சிலோனிலும் மற்றத்தமிழ் நாட்டிலும் மட்டும் கவி பாரதியைப்பற்றி நினைக்கவில்லை; லண்டனில் நாங்களும் நடத்துவோம் என்று தமிழோசை கர்ஜிக்கிறது. இதை ஒட்டியே செப்டம்பர் 30ஆம் தேதி லண்டனில் பிரசித்திபெற்ற **Waldorf** என்ற ஹோட்டலில் ஒரு விருந்தும் ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் சுமார் 50 தமிழ் அன்பர்கள் கலந்து கொண்டாடியதும் அல்லாமல் இந்தியப் பிரமுகர் சர் சி. பி. ராமசுவாமி



லண்டன் பி. பி. ஸி. தமிழ் ஓசை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக்கொள்பவர்களும் அவர்கள் நண்பர்களும்.

பின் வரிசை நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) ஸி. டி. அளகப்பன், பி. நரஸிம்மன், (ஹிந்து பத்திரிகையின் ஜனரல் மானேஜர்), ஏ. கே. ஸி. செட்டியார் (திருவாங்கூர் டெக்ஸ்டைல் முதலாளி). எஸ். வித்யானந்தன், மார்மோர்ஸ்டீன்.

இரண்டாம் வரிசை (நிற்பவர்கள்) என். ஜே. மாதுர்பூதம் (படம் உற்பத்தியாளர்), மிஸ். ரோஹிணி, மிஸ். பாலா, மிஸஸ். யூ. செட்டியார் (ராஜா ஸர். அண்ணாமலை செட்டியாரின் புதல்வி), எம். யூ. தேசாய் (பம்பாய் ஹைகோர்ட் மாஜி நீதிபதி), மிஸஸ். ஸுசீலா ஸாமி, மிஸஸ். லீலா கோபாலன்.

முதல் வரிசை (வீற்றிருப்பவர்கள்) மிஸஸ். எஸ். நரஸிம்மன், ஸர், எஸ். பி. ராஜகோபாலாச்சாரியார் (மாஜி மைசூர் பிரதம மந்திரி), மிஸஸ். எம். வி. தெசாய், டாக்டர் பி. வி. செரியன் (சென்னை மேயர்).

அய்யர் தலைமை வகித்தார். சாப்பாடு மட்டும் இல்லாமல் சங்கீதம், சொற்பொழிவுகள் எல்லாம் நடைபெற்றன. ஸ்ரீமான் ராமசுவாமி அய்யர் பேசுகிறார் என்றால் கேட்க வேண்டுமா? திரு ராமசுவாமி அய்யரும் தமிழ் ஓசைக்காகப் பல பேச்சுகள் ஒலிப்பதிவு செய்து இருக்கிறார். எல்லோரும் மிகவும் மகிழ்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த இரண்டு வாரமாக ஏன் ஒரு மாதமாகவே "இந்தியாவின் கணக்குப் புலி," "எண்ணிக்கைகளை நிமிஷ நேரத்தில் வகுத்துத் தள்ளும் கணக்கு இயந்திரம்" என்றெல்லாம் லண்டன் பத்திரிகைகள் புகழ்ந்து எழுதுவது ஸ்ரீமதி சகுந்தலா தேவியைத்தான். இவர் பெங்களூரைச் சேர்ந்தவராம். வயது 19 ஆகியிருந்தும் கணக்கில் இவர் மிகவும் கெட்டிக்காரர் என்பது நன்கு தெரிகிறது. ரேடியோ, டெலிவிஷன் அதிகாரிகள் சமயத்தைக் கைவிடாமல் இந்தப் பெண்மணியைப் பேட்டி கண்டு லண்டன் வாசிகளுக்கு அறிமுகப்படுத்தி வைத்தனர். எல்லாம் வல்ல ஈச்வரன் இவருக்கு மேன் மேலும் புகழைக் கொடுப்பார் என்பதில் சந்தேகமில்லை.

கலியுகம் நடக்கிறது. எவ்வளவோ விசித்திரமான விஷயங்கள் நடக்கின்றன, நடக்கவும் போகின்றன என்று பெரியோர்கள் பேசிக்கொள்வதை நம்பத்தான் வேண்டும்போல் இருக்கிறது. 15, 20 நாளுக்குமுன் இங்கிலாந்தில் Dorcet-Shire என்னும் இடத்தில் நீல நிற மழை பெய்ததாம். வண்டிகள் மேலும் சாமான்கள் அடுக்கப்பட்டிருக்கும் லாரிகள் மேலும் இந்த மழை விழுந்து, நீலக் கறையை அடையாளமாக விட்டுப்போய் இருந்ததாம். இதை நான் சொல்லும் முன்பே நீங்கள் பத்திரிகையில் படித்து இருக்கலாம். படிக்காத அன்பர்கள் இதைத் தெரிந்துகொள்ளுங்கள்.

லண்டனில் இப்பொழுது குளிர்கால ஆரம்பம். மெள்ள மெள்ளச் சூர்ய பகவான் தம் கடாக்ஷத்தைக் குறைத்துக் கொள்கிறார். ஏன் சிலநாள் வெளி வருவதே இல்லை. நாங்களும் கம்பளித் துணிகளை எல்லாம் தட்டி எடுத்து ஒவ்வொன்றாக அணிய ஆரம்பிக்கின்றோம். கோடைக் காலத்தில் எப்பொழுதும் ஒரு மணிநேரம் கடிகாரம் முந்தி வைக்கப்பட்டிருப்பது உங்களுக்கு எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தானே. அந்தக் கோடைக்கால மணி அளவு குறைக்கப்பட்டுவரும் ஞாயிற்றுக் கிழமை அதாவது அக்டோபர் 22ஆம் தேதி நள்ளிரவிலிருந்து க்ரீன்விச் கடிகார மணிக்குத் திரும்பிச் செல்கிறோம். கோடைக்காலம் முடிந்துவிட்டதே!

கீழ்நாட்டு என் சகோதரிகளுக்கு ஒரு சமாசாரம் எழுதாமல் நான் இந்தக் கடிதத்தை முடிக்க முடியாது. என் அன் பார்ந்த சினேகிதி ஒருத்தி லண்டனிலிருந்து போனமாதம் இந்தியா திரும்பிச் சென்றாள். பத்துத் தினங்களுக்குப் பின் எனக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதில் "லீலா! நான் ஊர் திரும்பியதற்காக என் உறவினர் யாவரும் சந்தோஷமடைந்தனர். ஆனால் யாவரும் லண்டன் வாழ்க்கை எவ்வளவோ ஆனந்தமயமானது. கஷ்டம் என்பது லண்டன் வாசிகள் வாயாறவும் கூறமுடியாது என்றெல்லாம் ஒரேயடியாய் என் எதிரே புகழ ஆரம்பிக்கிறார்கள். நானோ லண்டன் அழகான ரோஜாப்பூ தான்; ஆனால் அதில் உள்ள முள், அப்பப்பா! ஒரே கூர்மை என்று தடுத்துக் கூறவேண்டி இருக்கிறது" என்று எழுதினாள். இதை நீங்கள் ஏன் எங்களுக்குச் சொல்லவேண்டும் என்றுகேட்கிறீர்களோ, மேலே எழுதுகிறேன் படித்துப்பாருங்கள்.

போன மாதம் லண்டனில் நடந்த Gas ஸ்ட்ரைக் பற்றி நீங்கள் கேட்டிருக்கலாம். இருபது தினங்கள் தொடர்ந்து நடத்தப்பட்டது இந்த வேலை நிறுத்தம். காரணம் 1 மணி நேரத்திற்கு 1 பென்னி சம்பள அதிகம் கேட்டுத்தான். இந்த வேலை நிறுத்தத்தால் நாங்கள் பட்ட கஷ்டம் அப்பப்பா என்றால் எழுதக்கூடச் சாத்யமில்லை. குத்துவிளக்கு எரிந்தால்கூடக் கொஞ்சம் சூடுவரும். எங்கள் அடுப்பில் சூடு இல்லை. காலையில் காப்பி தயார் செய்ய ஒரு மணி நேரம். காலை டிபன் 15 நாட்களுக்குக் கிடையாது. இரவு சாப்பாடு தயார்செய்யப் பகல் 2 மணிக்கு அடுப்புப் பற்றவைத்தால் 8 மணிக்குச் சாப்பாடு தயார் ஆகும். சில பகுதிகளில் இந்த அற்ப Gas கூட இல்லாமல் ஒரேயடியாய் நின்றுவிட்டது. நான் ஒருத்தர் வீட்டுக்குச் சாப்பிடச் சென்றேன். அழைப்பின் மேல்தான்! பாதி சமையல் செய்து

கொண்டிருக்கும்போது திடீரென்று அடுப்பு நின்றுவிட்டது. அந்தப் பெண் பாவம், நான் என்ன செய்வேன் என்று தவித்தாள். முன் அறையில் கணப்பு கரி போடப்பட்டுத் தகதகவென்று எரிந்து கொண்டிருந்தது. அதில் பாக்கி சமையலை முடிக்கலாம் என்று நான் யோசனை கொடுத்தேன். சாப்பாடு நிறைவேறியது. ஆனால் அந்தப் பாத்திரங்களைத் தேய்த்து அலம்ப, சரியாய் 2 மணி பிடித்தது. பிடிக்காதா என்ன! முகம் அலம்பிக் குளிப்பதற்கோ வெந்நீர் ஒரு சொட்டுக் கூடக் கிடையாது. சில்லென்ற பச்சைத் தண்ணீரில் முகம் அலம்பி லண்டனில் உள்ள பாதிப் பேருக்கு ஜலதோஷம். அப்பப்பா! கஷ்டத்தைச் சகிக்கமுடியவில்லை. சில தொழிலாளிகளின் பணத் தேவைக்காகப் பொதுஜனங்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. பிரமுகர்கள் யாவரும் தொழில் அரசாங்கத்தை வாயார வைதனர். 20 நாள் கூத்திற்குபின் எல்லா அமளியும் அடக்கப்பட்டுச் சாந்தி நிலவுகிறது. சகோதரிகளே! லண்டன் ரோஜா எப்படி!

இங்கிலாந்து இளவரசி எலிசபெத்தின் இரண்டாவது குழந்தைக்குச் சனிக்கிழமை Oct 21ஆம் தேதி பெயர் இடப்பட்டது. இளவரசி Anne என்று அழைக்கப் படுவள். ஜனங்களுக்கு ஒரே மகிழ்ச்சி. படம் பிடிப்பவர்கள் போட்ட போட்டி தாங்க முடியவில்லையாம் பக்கிங்காம் அரண்மனையில். அங்கேதான் இந்த வைபவம் நடைபெற்றது.

மற்றவை அடுத்த மாதக் கடிதத்தில்.●






தொடர் கதை

கே. எம். முன்ஷி — ஸுரேந்திரநாத் சாஸ்திரி

மொழி பெயர்ப்பு — இளையூர் தி. சேஷாத்திரி

3

இங்க சர்வக்ஞர் பிராணயாமம் செய்ய உட்கார்ந்தார். ஆனல் என்றும் அமைதி கொள்ளும் மனது அன்று கலக்கம் கொண்டது. தியானத்தில் ஈடுபட முயலும் அவருடைய மனம் தன்னுடைய போக்குகளை நிறுத்த முடியாமல் தவித்தது.

அவர் கண்கள் புரண்டன. மூச்சுப் புயலடித்தது. நர்த்தகிகளின் இருப்பிடம் விரைந்தார். கோயிலின் எதிரில் அந்த வேகத்துடன் செல்லும் குருதேவரைப் பார்த்த அனேகர் அதிசயத்துடன் அவரைத் தொடர்ந்தனர்.

சர்வக்ஞர் நேராகக் கங்காவின் வீட்டிற்கு வந்தார். அங்கே கதவு வெளியிலிருந்து சாத்தப்பட்டிருப்பதைப் பார்த்தார். அவர் திரும்பினர். அதே சமயம் உள்ளிருந்து கங்கா தேவி அழும் சப்தம் கேட்டது. அவர் வேகமாய்ச் சென்று கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார். "கங்கா ஏன் அழுகிருய்?"

"குருதேவா! அந்தப் பைத்தியங்கொள்ளிப் பெண்ணை ராசி திரிபுரசுந்தரி கோயிலுக்கு இழுத்துச் சென்றுவிட்டான். ஐயோ என் பெண்ணை என்ன செய்வார்களோ, தெரியவில்லையே!" என்று அழுதாள் கங்கா.

கங்கசர்வக்ஞர் ஒரு கணம் அமைதியிழந்தார். அனேக வருஷங்கள் தவம் செய்து அவர் உண்மைக் கண்ணை அடைந்திருந்தார். சிறு வயதிலிருந்தே அவருக்கு இந்த வாமமார்க்க விதிகளில் வெறுப்பு உண்டு. இதனல் மிகவும் இழிந்த கெடுதல்தான் என்று எண்ணினர். அநேக வருஷங்களாக அவர் அதைச் சுத்தமாக்கி நன்னிலைக்குக் கொண்டுவர முயன்று கொண்டிருந்தார். அதிகரித்துவரும் வெற்றியையும் பெற்றுக்கொண்டிருந்தார். முற்றிலும் விரும்பினல் ஒழிய ஒருவரும் அந்த விரதத்தை



ஏற்றுக்கொள்ளக்கூடாது. தீக்ஷை எடுக்காதவர்கள் அவர்களைப் பார்க்கக்கூடாது. சிவராசியையாவது தம்மையாவது கேட்காமல் ஒரு வரும் இந்த உற்சவத்தைக் கொண்டாடக்கூடாது, என்றெல்லாம் திட்டம் வகுத்து நிறைவேற்றிக் கொண்டிருந்தார். தாமே இந்த மாதிரி உற்சவங்களைக் குறைத்தும் அதில் தாமே பங்கு எடுத்துக்கொள்வதை நிறுத்தியும் வந்துகொண்டிருந்தார். சிவராசி அங்கே ஆசாரியபதவி எடுத்துக்கொள்ளப் போனாலும் எச்சரிப்பார். மெதுவாக அவர் அந்தக் கோயிலைச் சுற்றி அருவருப்பை மறைக்க ஒரு மதிள் சுவரையும் எழுப்பியிருந்தார். அவர் அந்த இடத்தை ஸோமநாதரிருப்பிடத்துக்கே ஒரு மாசாக நம்ப ஆரம்பித்துவிட்டார், ஆனால் அந்த விதிகளில் பழகி நம்பியிருக்கும் கிழப் பூசாரிகள் அற்றுப்போகும்வரை அதை ஒரே யடியாக நிறுத்தவும் இயலவில்லை. சர்வக்ஞர் தம் பண்பாடமைந்த புத்தியின் உதவியால் லகுலேச மதத்தின் விதிகளிலேயே காணப்படும் குறைபாடுகளைக் கவனித்துச் சீர்திருத்திக் கொண்டு வந்தார். அவருடைய இந்த முயற்சிகள் அறிவு குறைந்து உணர்ச்சி நிறைந்திருந்த சிஷ்யர்களுக்கு வேண்டாதனவாகப்பட்டன. அதை அவரும் அறிவார்.

" சரி, வெகு நாட்களாக எண்ணியிருந்த எண்ணத்தை இன்று நிறைவேற்ற வேண்டியது தான் " என்று அவர் கோப ஒளியில் முடிவைச் சங்கல்பத்தில் எழுதிவைத்துக்கொண்டார்,

" ஓகோ. எனக்குத் தெரியும்!" என்று ஆரம்பித்த அவர் "சரி. எடுத்துக்கொள் இந்தத் தீவட்டியை. வா என்னுடன்" என்றார்.

கங்கா கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தீவட்டியைக் கையில் எடுத்துக்கொண்டாள். சர்வக்ஞர் அவளையும் அழைத்துக்கொண்டு திரிபுரசுந்தரி கோவிலின் ரஹசியக் கதவைத் தட்டினார். அங்கே காவல் காத்துநின்ற பாபா கதவைத் திறந்து எதிரே குருதேவரைப் பார்த்து அப்படியே, "கைப் பறவையைப் பறக்கவிட்டு" நின்றான்.

'இங்கேயே நில்.' என்று உத்தரவிட்டு குருதேவர் முன்னேறினார். பாபா அசந்து நின்றுவிட்டான். உள்ளே வந்த குருதேவர் கங்காவின் தீவட்டி வெளிச்சத்தில் கட்டப்பட்டு நின்ற சாமந்தனைப் பார்த்தார்.

"ஆ! சாமந்தனா! நீ இங்கே எப்படியப்பா வந்தாய்?"

"குருதேவா! அவர்கள் என்னை இங்கே கொண்டுவந்துவிட்டனர்." என்று சாமந்தன் பதிலிறுத்தான். அவன் குரலில் கோபமும் சிரிப்பும் பின்னி நின்றன. "குருதேவா, நான் தீக்ஷை பெற மறுத்தேன். அதற்குப் பலன் இது. ஒரு பாபா என்னுடைய உயிரையே எடுத்துவிட முடிவு செய்திருக்கிறார். நானும் அதை வரவேற்கத்தான் நின்றுகொண்டிருக்கிறேன்."

"அப்படியா? பிரபாசி முழுவதும் இன்று உன்னை எதிர்நோக்கி நிற்கிறது. உன்னை இங்கு கட்டிவிட்டார்களாக்கும் கெட்டிக்காரர்கள்! ஆம். அப்பொழுதுதானே நாசம் தானாகவே சீக்கிரம் வரும்! ஓ, பகவானே, பினாகபாணி! இது என்ன லீலை புரிகிறாய்!" என்று சொல்லிவிட்டு, 'வா இங்கே' என்று ஒரு சாதுவைக் கூப்பிட்டார். 'அவிழ்த்து விடு இவனை' என்று உத்தரவிட்டார்.

அந்தப் பாபாவும் அவசர அவசரமாக அவிழ்த்துவிட்டான்.

"சௌளாவைப் பார்த்தாயா?"

"ஓ, சற்று நேரம் முன்னமே அவள் இங்கே வந்தாள். கோயிலுக்குள் போனாள்."

சர்வக்ஞர் 'தன் இஷ்டம் கொண்டா?' என்று கேட்டார்.

"ஆம், ஆடிப்பாடிக்கொண்டு போனாள்."

கங்கா துடித்தாள். "இஷ்டப்பட்டா? ராசி சிவன் எதிர்பார்த்து நிற்கிறார் என்று சொன்னான். ஏமாந்த அந்தப் பைத்தியங் கொள்ளிமகள் ஓடிவந்துவிட்டாள். இன்றுதான் அவள் நிலையில் இல்லையே!"

"சந்தோஷமாகவா போனாள்?" என்று கேட்ட குருதேவர் குரலில், 'அந்த நிலையில் என்ன செய்வது?' என்ற ஏக்கம் தொனித்தது.

கங்கா படபடத்தாள்.

"இல்லை இல்லை. சௌளா இந்தமாதிரி தீக்ஷை எடுக்க ஒருகாலும் சம்மதிக்கமாட்டாள். குருதேவா, காக்கமாட்டீர்களா?" என்றாள்.

சாமந்தனுக்குக் குண்டலா ஞாபகம் வந்தது. "அட, இந்த ஜனங்களே ஒருமாதிரிதான!" என்றான். குண்டலா எதிரே வந்தாள். அவளும் இதைக்கண்டு நடுங்க ஆரம்பித்தாள்.

'ஊம்' என்று சொல்லிக்கொண்டே கங்க சர்வக்ஞர் உள்ளே சென்றார். விடுபட்ட சாமந்தனும் கங்காவும் உடன் சென்றனர். அவர்கள் மூவரும் முற்றம் தாண்டி, திரிபுரசுந்தரியின் கோயில் எதிரே வந்தனர். அங்கே சாமந்தன் பார்வையை அங்கு நின்ற பூத வரிசைகள் தடுத்து நிறுத்தின. அவன் கண்களை மூடிக்கொண்டான். ஒரே ஒரு தீவட்டி எரிந்துகொண்டிருந்தது. இருட்டுடன் கைகோத்துச் சண்டையிடும் அந்த வெளிச்சத்தில் அனேக ஆண் பெண்கள் துதி பாடிக்கொண்டு தாளம் போட்டு ஆடிக்கொண்டிருந்தனர். இவைகள் மனித உருவங்களா அல்லது அவைகளின் கரு உருவங்களா என்றே புரியவில்லை. தன் தந்தை தாய் முதலியவர்களின் பிணத்தின் மேல் பறந்த கழுகைக் கண்டுகூட அழுங்காத சாமந்தனுடைய உள்ளம் இந்தக் காட்சியைக் கண்டு அலறி எழுந்தது. வாமமார்க்கத்தில் சேர்ந்திருந்த இந்தச் சாதுக்களின் அருவருப்புச் சேஷ்டைகளைக் கண்டு அவன் கண்கள் இருண்டு வந்தன.

அவர்கள் எல்லாரும் மூன்று நான்கு மனிதர்களைச் சுற்றி வந்துகொண்டிருந்தனர். அந்த மூவர்களுள் ஒருவர் கையில்தான் தீவட்டி இருந்தது. பாடியவர்கள் திடீரென்று நிறுத்தினர். பாட்டையும் காலடியையும் தாண்டி அலறும் குரல் ஒன்று காதுகளைத் திகைக்கவைத்தது. அது யாருடைய அலறல் என்று கங்காவும் சர்வக்ஞரும் உடனே புரிந்துகொண்டனர். சாமந்தனும் ஊகித்துக்கொண்டான். சர்வக்ஞர் வேகமாய் நெருங்கினார். கங்கா சங்கடப்பட்டாள். சாமந்தன் மனமிழந்தான். அவன் வாளை உருவிப் புலிபோல் பாய்ந்தான். கையில் கத்தியுடன் வரும் அந்தக் கால பைரவரைப் பார்த்து ஆண்—பெண்கள் வழிவிட்டு ஒதுங்கினர், நடுவே கிழப் பூசாரி கையில் தீவட்டி தாங்கி

நின்றுகொண்டிருந்தான். ஒரு பலம் பொருந்திய ஸ்திரீ விடுவித்துக்கொள்ள முயலும் சௌளாவை அமுக்கிப் பிடித்துக்கொண்டிருந்தாள். சௌளாவுக்கு மூர்ச்சை தெளிந்து கொஞ்ச நேரமே ஆகியிருந்தது. அவள் தன் எதிரே நின்று ஆடும் இந்த மனிதப் பேய் உருவங்களைக் காணச் சகிக்காமல் அலற ஆரம்பித்து விட்டாள். சிவராசி அவள் எதிரே நின்று ஆரத்தி எடுத்துக்கொண்டிருந்தான்,

சாமந்தன் ஒரே பாய்ச்சலில் அருகே வந்து சேர்ந்தான், அந்தப் பலம்வாய்ந்த பெண் பக்தையை நெட்டித் தள்ளிவிட்டு, சௌளாவுக்குக் கை கொடுத்துப் பிடித்துக்கொண்டான். அவன் வலது கையில் சுழன்ற வாள் ராசி தந்த ஆரத்தி ஒளியில் மின்னி எல்லாரையும் பயமுறுத்த ஆரம்பித்தது.

சர்வக்ஞர்—"ராசி, இது என்ன இது?" என்று கேட்டார்.

ராசியின் கண்கள் வெடித்து வெளியேற முயன்றன. ஒருபுறம் காலபைரவர்போல் கத்தி சுழற்றும் சாமந்தன்; மற்றொருபுறம் நெருப்புச் சொரியும் கண்கள் கொண்ட குருதேவர். சிவராசியின் கைகள் நடுங்க ஆரம்பித்தன. ஆரத்தியும் அவன் கையை விட்டு வெளியேறிப் பூமியில் மோதிச் சுருண்டது.

ஆண் பெண் அடங்கலும் குருதேவர், குருதேவர் என்று ஜபம் செய்ய ஆரம்பித்தனர்.

"ராசி! நீ இன்று மகாமாயாவின் பூசைக் கயிற்றை அறுத்துவிட்டாய்; நீ சௌளாவை அவள் எண்ணத்துக்கு விரோதமாய் இங்கே கொணர்ந்து விட்டாய்" என்ற சர்வக்ஞர் குரலில் கோபத்தைவிடத் துக்கமே அதிகமாக இருந்தது.

சித்தேசுவரன் சிவராசிக்கு உதவி செய்ய வந்தான். "இல்லை, அவள் தன் இஷ்டத்துடன்தான் வந்தாள். அவளாகத்தான் வந்தாள்."

"அதனால்தானே அவள் இப்படி அலறித் தவிக்கிறாள், இல்லையா! ராசி, போ, இவ்விடத்தைவிட்டு. நாளை உனக்குத் தகுந்த பிராயச்சித்தம் தருகிறேன்."

"இல்லை குருதேவா, அவள் தானாகவேதான் வந்தாள்." என்று ராசியும் சொன்னான்.

"நீங்கள் எல்லோரும் சேர்ந்து இன்று இந்தக் கோவிலின் பெருமையைக் குறைத்து விட்டீர்கள்." என்றார் அவர்.

"கண்ணுள்ளவர்கள் அதை உபயோகிக்கத் தெரிந்தால் பாருங்கள், சௌளா எவ்வளவு பயத்துடன் உங்களைப் பார்க்கிறாள் என்று. இது மஹாமாயையின் கோவில்; வேஷக்காரர்களுடைய இடமில்லை. மோசக்காரர்களுடைய சூதாட்ட வீடல்ல. வேட்கை கொண்டலையும் வீணர்கள் இடமல்ல. நீங்கள் இதற்கான பிராயச்சித்தம் செய்து முடிக்கும்வரை இந்தக் கோயில் பூட்டித்தான் இருக்கும்."

"எது? மூடியிருக்குமா? யார் மூடுவது?" என்று கிழ பாபா மிகவும்உரத்த அச்சுறுத்தும் குரலில் கேட்டார்.

அவர் கொறடாவைத் தூக்கவும் முயலுகிறார் என்று தெரியவந்தது. குருதேவர் கடகட என்று நகைத்தார். "யார் மூடுவதா? நான்... பகவான் லகுலேசருடைய மதத்தை ஸ்தாபித்தவன் என்ற அதிகாரத்தில் மூடிவிட்டேன்" என்றார்.

"உனக்கு அவ்வளவு வலிவு உண்டா?" என்று கேட்ட கிழபாபா கையைத் தூக்கினார். சாமந்தன் ஒரே பாய்ச்சலில் பாய்ந்து அவர் கையைப் பிடித்துக்கொண்டான்.

குருதேவர் மிகவும் அமைதியாய், "சாமந்தா! நகர்ந்துகொள். ஹரதத்தா! என்ன என்னைக் கொல்ல வேண்டுமா? கொல். என் தலையை வாங்கிவிடு. உன்னுடைய வீழ்ச்சிக்கும் ஒரு எல்லை வேண்டுமே." என்றார். அவர் தலை குனிந்தது.

கிழபாபாவின் கண்கள் கதறின. அவர் கையின் கொறடு கீழே விழுந்தது. பிறகு சர்வக்ஞர் மெதுவாகத் திரும்பினார், நூற்றுண்டுகளாக மூடப்படாது திறந்திருந்த திரிபுர சுந்தரியின் கர்ப்பத்வாரத்தை அவர் இன்று மூடித் தாழிட்டார்.

"உங்கள் பாபத்தின் பலத்தினால் இன்று திரிபுரம் எரித்தவனுடைய மூன்றாவது கண் திறந்து விட்டது. கஜினி அமீர் தானவனைப் போல் இந்தக் கோயிலை உடைக்கும் எண்ணம் கொண்டு முன்னேறி வருகிறான். உங்கள் பிராயச்சித்தம் உங்கள் பாபத்தைக் கழுவி இந்த ஆபத்தும் தீரும் வரையில் என்னைத் தவிர வேறு ஒருவரும் செய்யக்கூடாது."

அதற்குப் பிறகு அவருடைய ஆத்ம பலத்திற்கு எதிரே எல்லாரும் தோல்வியை ஒத்துக்கொண்டு அங்குமிங்கும் சிதறி நின்றனர்.

4

கோயிலின் முற்றத்தில் வந்த சர்வக்ஞர் சற்றுநேரம் நின்றார். சௌளா தன் தாயின்மேல் தலையைத் தாங்கி, தன் சீர்குலைந்த நிலையை எண்ணிப் பெருமூச்சு விட்டுக்

கொண்டிருந்தாள். சாமந்தன் சுவரோரமாய் உட்கார்ந்து கொண்டான்.

சர்வக்ஞர் கங்காவை விளித்தார். "சௌளாவை வீட்டுக்கு அழைத்துச் செல். இந்தப் பரமனிருப்பிடத்துக்கு என்ன நடக்கப் போகிறதோ, தெரியவில்லை!"

"குருதேவா"

"குழந்தாய் சாமந்தா. நீயும் போ. இரவு மிகக் கழிந்துவிட்டது கிளம்பத் தயாராகு."

"உத்தரவுப்படியே."

"கங்கா! இந்தச் சௌஹான் வீரனை அடையாளம் புரிந்து கொண்டாயா? இவனுக்கும் இவன் தந்தைக்கும் சௌளா விபூதி பூசினாளே தெரியுமா? நினைவிலிருக்கிறதா?"

சௌளாவும் தன் நிலையடைந்திருந்தபடியால் சாமந்தனை அடையாளம் புரிந்து கொண்டாள்,

சாமந்தனும் நெருங்கி வந்தான். சௌளாவும் சாமந்தனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"கங்கா, சௌஹான் சாமந்தன் பெரிய வீரன். கடந்த பதினைந்து நாட்களாகத் தேவகோபத்துக்கு இலக்காகியிருக்கிறான். இவனுடைய பெரிய ஒரு குலத்தில் இவன் ஒருவனே ஸோமநாதருக்கு ஊழியம் செய்ய உயிர் தப்பி யிருக்கிறான். இவனை உன் வீட்டுக்கு அழைத்துச்சென்று சாப்பாடு போடு. பாவம்! இந்தப் பையன் இன்னும் சாப்பிடவேயில்லை. இவனைத்தான் எல்லாக் காரியங்களும் நம்பியிருக்கின்றன" என்று சொல்லிவிட்டுக் கங்க சர்வக்ஞர் வருத்தம் சுமந்த தலையைக் கீழே தாழ்த்திப் பார்த்துக்கொண்டே மெதுவாக நடந்து சென்று விட்டார்.

சௌளா வெட்கத்தில் மூழ்கி நின்றிருந்தாள். தன்னைச் சாமந்தன் சற்றுமுன் பார்த்த நிலையை எண்ணி அவள் பூமிக்குள் எப்படி மறையலாம் என்று ஏங்கிக்கொண்டிருந்தாள்.

கங்கா சாமந்தனை உடனழைத்தாள், உள்ளம் குளிர்ந்து.

"சௌஹான் வீரா, வா. போகும்போதே நடந்ததையெல்லாம் சொல்லுகிறாயா, கேட்கலாம்!"

அநேக நாட்களுக்குப் பிறகு இன்று சாமந்தன் தன் கதையைச் சொல்லிக்கொண்டு முதல் முறையாக ஆனந்த மயமான இரவைக் கழித்தான். சௌளாவும் இந்த வீரயுவனுடைய கதையைக்கேட்டு ஓர் புது உற்சாகம் கொண்டாள்.

# பதினோராம் அத்தியாயம்

## அன்ஹில்வாட் பாட்டண்

இருநூறு வருஷங்களுக்கு முன் அன்ஹில்வாட் என்பது காட்டுக்குள் இருந்த ஓர் கோட்டைதான். அங்கே சாவடா வம்சத்து அரசர்கள் இருந்த காலத்தில் அவர்கள் தொழில் திடீரென்று வெளியேறி அருகேயுள்ள கோட்டைகளில் பாய்ந்து திருடுவது தான். கிராமங்கள் எல்லாம் அவர்களைக் கண்டு நடுங்கிக்கொண்டிருந்தன. பீலர்கள் எல்லாம் அவர்களைக் கண்டு அலறி ஓடி, காட்டுக்குள் புகுந்துகொண்டனர். பாட்டணுடைய எல்லை சில சமயம் அதிகரிக்கும், சில சமயம் குன்றிவிடும். சிலசமயம் பாட்டண் அதிபதி தன் கோட்டைக்குள் பதுங்கி உட்கார்ந்துகொள்வான். சிலசமயம் சௌராஷ்டிர பிரதேசம் பூராவும் அவன் கொடி பறக்கும்.

ஆனாலும் இந்தக் கோட்டையின் விதியைப் பிர்ம்மா பொன் எழுத்துக்களால் பொறித்திருந்தான். விக்ரம சம்வத்ஸரம் 1017ல் சளுக்க வம்சத்தின் மூலராஜ தேவன் இந்தச் சிம்மாசனத்தில் அமர்ந்தான். அந்த நேரத்திலிருந்து அந்தக் கோட்டையின் நிலையும் நிறமும் மாற ஆரம்பித்துவிட்டன. அருகே உள்ள காடுகள் அழிக்கப்பட்டு அந்த இடத்தில் அழகிய ஊர்கள் இடம்பெற ஆரம்பித்தன. அரசனின் வீரம் அந்தக் கிராமங்களைக் காத்து நின்றது. பிறகு, ஸ்ரீமால், கனோசி, உஜ்ஜயினி, பிருகுகச்சம் முதலிய பெயர் பெற்ற ஊர்கள் தாமாகவே வந்து அங்கு எழ ஆரம்பித்தன, முன்னேறி மேலோங்கும் கூர்ஜர பூமியின் வீர ஜாதிகளும் அங்கே வந்து தங்கி, பட்டண் அரசனுடைய பக்கத்தைப் பலப் படுத்த ஆரம்பித்தன. மூலராஜ தேவனுடைய முயற்சிப் பலம், மூளைப் பலம் இரண்டும் சேர்ந்து அன்ஹில்வாடியினுடைய பரப்பும் பலமும் சேர்ந்து அதிகரிக்கத் தொடங்கின, ஒரு சிறிய கோட்டை இருந்த இடத்தில் இன்று கம்பாதம், பருசம், மாங்கரோலம் முதலிய தேசத்தின் வியாபாரிகள் அந்த ஊரை லக்ஷ்மிவாழ் நகரமாக்க முயன்றுகொண்டிருந்தனர். தேச தேசாந்தரங்களிலிருந்து பிராமணர்கள் அங்கே பண்பாடு, கலை கல்வி கேள்விகளுக்குக் கோயில் நாட்டத் தொடங்கினர். சிறிய சிறிய மண் வீடுகள் பெரிய பெரிய மாளிகைகளாக மாறின. அழகிய

கோயில்களின் ஆகாயமளாவும் கோபுரங்களும் விமானங்களும் தர்மம், செழிப்பு இரண்டுக்கும் சாட்சி கூறத் தொடங்கின. இவைகளுக்கு அருகே ஒரு பெரிய கோட்டையும் உருக்கொண்டு எழுந்தது. அன்ஹில்வாட் ஒரு கோட்டையாயிருந்தது. இப்பொது அது பெரிய தலைநகராயிற்று; ராஜபட்டணமாயிற்று.

மூலராஜதேவனின் அதிகாரம் எங்கணும் பரவ ஆரம்பித்தது. ஜூனுர் கோட்டையின் வீர அதிபதி அவனுடைய ஆட்சிக்குத் தலை குனிந்தான். கச்ச தேசம், லாட் தேசம் எல்லாம் பணிந்தன. அந்தப் பிராந்தியத்து அரசர்களுக்கெல்லாம் பட்டண் முதன்மை இடம் ஏற்றுக் கொண்டது. ஜாலோர், மார்வார், ஸதானகம் முதலிய அரசர்கள் அவனிடம் தோழமை வேண்டினர். உஜ்ஜயினி சக்கரவர்த்தி எழும் இந்த அரசனை வீழ்த்த எவ்வளவோ முயன்ருன். ஆனுல் ஒன்றும் பலிக்கவில்லை. மூலராஜதேவன் சாகும் சமயம் அன்ஹில்வாட் மேற்கிந்தியாவின் முக்கிய நகரமாகியிருந்தது.

மூலராஜனுடைய குலதேவதை பகவான் ஸோமநாததேவராவார். அவனுடைய வம்சத்தவர்களிடமும் தேவன் நன்கு அருள் புரிந்து வந்தார். மூலராஜனுடைய புத்திரன் சாமுண்டன், அவன் புத்திரன் துர்லபசேனன். இருவரும் கயவர்கள். அவர்களுடைய கீழ்த்தரமான புத்தியின் காரணமாக நாடு அலங்கோலமுற்றிருந்தபோது லகுலேச மதத்தின் ஸ்தாபகர், ஸோமநாதருடைய மடத்தின் அதிபதி கங்கசர்வக்ஞர் பீமதேவனைப் பட்டம் ஏற்றுக்கொள்ளும்படி ஆசீர்வாதம் செய்தார். அந்த ஆசீர்வாதத்தின் பலம்கொண்டு அவனும் சிம்மாசனம் ஏறினுன்.

## 2

இன்று பகவானுடைய புனித இடத்தைக் கஜினி அமீர் பாழ்செய்ய வந்துகொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அவனுடைய கிருபையால் வில்வல்லோன் பீமன் பட்டணுடைய சிம்மாஸனத்தை அலங்கரித்துக் கொண்டிருந்தான். அவன் யவனர்களைஒழித்துக் கட்டுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான். லோகக்கோட்டை அரசன் செய்யாத ஓர் காரியத்தை, வீரபாலமதேவனுல் முடியாத ஓர் காரியத்தை, செய்வதற்குப் பட்டண் அரசன் பீமதேவன் துடித்துக்கொண்டிருந்தான். அவனுடைய வீரமொழிகளை ஒவ்வொரு கிராமமும் கேட்டது. கச்சம் சௌராஷ்டிரா, ஸ்ரீமால், குஜராத், லாட், கொங்கண வீரர்கள் உள்ளத்தில் அவை எதிரொலித்தன. தேசங்கள் எல்லாம் பிராந்தியங்களாக மாறின. பட்டண்மேல் எல்லோருடைய பார்வையும் விழுந்து திரண்டது. பல்வேறு நாட்டரசர்கள் ஓர் கொடியின்கீழ்ச்சேர ஆவல் கொண்டனர், விரோதி அரசர்கள்கூடப் பட்டண் அரசனுக்குக் கீழ்ப்படிதல் மேன்மை என எண்ண ஆரம்பித்தனர். பிருகு கச்சத்திலிருந்து தத்தாசளுக்கியன் வந்தான். வம்ச பரம்பரையாக வந்த விரோதத்தை மறந்து ஜூனுர் கோட்டை அதிபதி ரத்னுதித்தியன் வந்தான். கச்சதேசத்திலிருந்து கமாலாக்ஷிணி வந்தான். ஆபூவிலிருந்து திரிலோசனபால பரமாரனும் வந்துசேர்ந்தான். துவாரிகாவிலிருந்து பாரவாடா வரை, தமனிலிருந்து ஆபூ வரை ஒவ்வொருவனும் ஸோமநாதராலயத்தைக் காப்பாற்றுவதை விரதமாக எடுத்துக்கொண்டனர். வில்வீரன் பீமதேவனை அதற்கேற்ற கருவியாகவும் நம்பினர். பட்டண் அவர்கள் தர்மத்தையும் பெருமையையும் காப்பாற்றும் தெய்வமாகத் தோற்றம் அளித்தது. ஒரு வீரனுடைய தலைமை, ஒரு பட்டணத்துடைய அன்பு, வரும் இன்னலைத் தகர்க்கவேண்டிய ஓர் பொறுப்பு இவை மூன்றும் ஒன்றுசேர்ந்து குஜராத்தின் ஒற்றுமையையும் பட்டணுடைய பெருமையையும் ஏற்படுத்தி வைத்தன.

பீமதேவனும் எல்லோருக்கும் இடையே மின்னல்போல் சுழன்று நின்ருன். அவசியமான இடத்தில் அன்பு வார்த்து ஊக்கம் கொடுத்தான். கோபிக்கவேண்டிய இடத்தில் நெருப்பைக் கக்கி, கோழைத்தனத்தைப் பொசுக்கினுன். அவன் பெரிய கண்களில் யுத்த உத்வேகம் பொங்கிப் பொலிந்துகொண்டிருந்தது. குதிரைமேல் ஏறிப்போவான்; அங்கங்கே திரும்பிவரும் வீரர்களுக்கு உற்சாக வார்த்தைகள் சொல்வான்; சிலசமயம் தானேசென்று அணிவகுப்புச் சொல்லிக்கொடுப்பான். 'ஒவ்வொரு இளைஞனும் முன் வரவேண்டும்' என்ற அவனுடைய அழைப்பு எங்கணும் சென்று விட்டது. இந்த அழைப்பை ஏந்தி அனேக யோசனை தூரத்துக்கப்பாலிருந்தெல்லாம் வீர இளைஞர்கள் அன்றன்று வந்து திரண்டுகொண்டிருந்தனர். இவர்களுக்கெல்லாம் ஆயுதம் தந்து அவர்களை அக்கலையில் பழக்கவேண்டியிருந்தது. பீமதேவன் அவர்களைச் சேர்த்து, அவர்களை வகுத்து வேண்டியவைகளைத் தந்து ஏற்பாடுகள் செய்வதிலேயே தன் காலத்தைக் கழித்தான். மந்திரி விமலரும் அவனுக்கு உதவி புரிந்துவந்தார்.

## 3

இன்று மூன்று நாட்களாக ஒரு விஷயம் எல்லா வீரர்களுடைய நாக்குகளையும் காதுகளையும் சேர்த்துக்கொண்டிருந்தது. பாலைவனத்தின் அரசனுன கோகாபாபாவை அமீர்

கொன்றுவிட்டானும். அவருடைய பூதம் ஸோமநாதரைக் காப்பாற்ற, குஜராத் பக்கம் வந்துகொண்டிருக்கிறதாம்.

இந்தப் பேச்சுப் பரவப் பரவ அது மக்களிடையே தன்னுடைய பயணைக் காட்ட ஆரம்பித்தது. வீரர்கள் இது பொய்யல்ல என்று எண்ணினார்கள். அர்ஜுனனே நேரில் வந்து பீமதேவனிடம் சொல்லிப் போயிருக்கும்போது எப்படி நம்பாமலிருப்பது? அர்ஜுனன் நேரில் பூதத்தினிடம் பேசியவனல்லவா? பீமதேவன் அதைக் கேட்டுச் சிரித்தான் என்றும் மக்களுக்குத் தெரியும். அவன் சிரித்துவிட்டதனால் மட்டும் என்ன? உண்மை பொய்யாகிவிடுமா? ஜனங்கள் உள்ளத்தில் நம்பிக்கையும் சந்தேகமும் உரசிக்கொண்டு அவர்கள் தலையை ஆட்டிவைத்தன.

எங்கே பார்த்தாலும் அதே பேச்சுத்தான். கோகாபாபாவின் ஆவி அவருடைய சிறுவயதில் அவர் எப்படி இருந்தாரோ அதைப்போலவே இருந்ததாம். கண்களோ! பார்க்கவே முடியாது, போ. அவருடைய தோலை என்ன சொல்கிறது? சிதையிலிருந்து இறங்கி வந்தவர்போலவே இருந்தார். அவருடைய கழுத்திலே இன்னமும் ஒரு புண் இருந்ததென்றால்............! அதிலிருந்து ரத்தம் கூட வழிந்துகொண்டிருந்ததாம். திரும்பத் திருப்ப ஒரு உருவத்தை வர்ணித்து அதை மனதில் நிறுத்தி ஜபம் செய்தால் பிறகு கேட்பானேன்! ஒவ்வொருவரும் நேரில் பார்த்தவர்போலவே பேச ஆரம்பித்தனர்.

பாட்டணுக்கு நாலு பக்கமும் மைல் கணக்காக, வந்துசேரும் சேனைகளுடைய கூட்டங்கள் அடைத்துக்கொண்டன. ஒருநாள் அதனுடைய எல்லையில் சில காவலாளிகள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். பேச்சும் கோகாபாபாவினுடைய பூதத்தைத் தவிர வேறு என்ன இருக்கமுடியும்? அந்தச் சமயத்திலே தொலைவிலிருந்து எழுந்துவந்த தூசி அவர்கள் பேச்சைத் தடைப்படுத்திற்று. அவர்கள் பேச்சை நிறுத்தி ஆயுதங்களை எடுத்துக்கொண்டு உஷாரானார்கள். ஸௌராஷ்டிரா பக்கத்திலிருந்து நான்கு ஒட்டகங்கள் மிகவும் வேகமாக வந்துகொண்டிருந்தன. ஒரு காவலாளி 'ஹோ' என்று சத்தமிட்டு மற்றவர்களையும் உஷார் படுத்தினான். இப்படியே சத்தம் மூலமே எங்கணும் பரவி, தயாராயிருக்கும் உணர்ச்சி வீரர்களை எழுப்பி நிறுத்திற்று. காவலாளி முதல் ஒட்டகத்தின் மேலிருக்கும் வீரனைச் சந்திக்க முன்னேறினான். அந்த ஒட்டகத்தின்மேல் ஒரு பையன் உட்கார்ந்திருந்தான். அய்யோ அம்மாடீ! காவலாளி பதைபதைத்துவிட்டான். அந்தப் பயங்கரமான கண்கள்: சிதையிலிருந்து எழுந்தவனைப்போல் தோல்......கழுத்திலே காயம்!

'யார் நீ' என்ற கேள்வி, 'ஸக்ரு' வின் இரும்புபோல நடுக்கத்திலே வளைந்து வந்தது.

"நான் சௌஹான்; ஸோமநாதபுரத்திலிருந்து வருகிறேன். நான் பீமதேவ மஹாராஜாவைப் பார்க்க விரும்புகிறேன்."

"கோகாபாபா!" காவலாளி அலறினான். அந்த இளைஞன் சிரிக்கவில்லை; பூதம் சிரிக்குமா என்ன? அது அதை மறக்கவுமில்லை. ஒட்டகை வீரன் மேலேறினான்.

மற்றொரு காவலாளியும் கோகாபாபாவினுடைய பூதம், என்று கட்டியம் கூறினான். அவனும் பூதத்தை அறிந்துகொண்டான். மூன்றாவது காவலாளியின் நிலையும் அதுவே. ஒருவன் பின் மற்றொருவனுக்குக் கட்டியம் கூறவே பூதம் பேசாமல் முன்னேறிச் சென்றது!

வந்தவர்களுடைய ஒட்டகங்கள் அரண்மனைக் கோட்டையை அடைந்தது. அங்கே வாயிலில் சேனை வீரர்கள் பெருங் குழுவாகக் குழுமியிருந்தனர். மாலை மயங்கும் நேரம். இளைஞன் ஒட்டகையை உடகாரவைத்துக் கீழே இறங்கினான். பிறகு அதிலிருந்து ஒரு கிழப் பிராமணனும் இறங்கினார். இந்தப் புது ஆட்களை வீரர்கள் வந்து சூழ்ந்துகொண்டனர்,

"பீமதேவ மகாராஜாவைப் பார்க்கவேண்டும். ஸோமநாத் பட்டணத்திலிருந்து தூது கொண்டு வந்திருக்கிறேன்."

அங்கே வாயிலில் உட்கார்ந்திருந்த கிழக் கோட்டைக் காவலன் குதித்து இறங்கிக் கூட்டத்தைப் பிரித்து வழிசெய்தான். அவன் கையில் ஒரு தீவட்டியும் இருந்தது, எல்லோரும் வழிவிட்டு ஒதுங்க அந்தக் கிழவன் இளைஞனுக்கெதிரே வந்து நின்றான். அவன் இளைஞனை ஊன்றிக் கவனித்தான். அவன் உள்ளம் திருகி நின்றது. எப்படியோ தன்னைச் சமாளித்துக்கொண்டான். தலைப்பாகையைச் சீர் திருத்தினான்.

"ஐயையோ! கோகாபாபா என்னப்பா!" என்றலறிக்கொண்டே அர்ஜுனன் உள்ளே ஓடினான். வீரர்களும் அங்கேயே தண்ணீரானார்கள்.

"அர்ஜுனா' சொல் பீமதேவரிடம் அவசியமான காரியம் என்று."

# சுதேசி டைப் பவுண்டரி

(ஸ்தாபிதம் 1906)

தந்தி : புவரூ　　　　　　　　போன் : 8291

## 51, குருவப்ப செட்டி தெரு,
## சிந்தாதிரிபேட்டை, மதராஸ்

ஆதரவாளர்களுக்கும், நண்பர்களுக்கும் மகிழ்ச்சிகரமான தீபாவளி வைபவத்துக்குத் தமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றனர்.

பதினொரு பாஷைகளில் டைப் தயாரிப்போர்.

பெர்பரேடர்கள், லெட் கட்டர்கள், மைட்டரிங் மெஷின்கள், பஞ்சிங் மெஷின்கள் முதலியன தயாரிப்பவர்கள்.

எல்லாவிதமான பிரிண்டிங் மெஷினரி, அவற்றின் பாகங்கள் முதலியவற்றிலும் வியாபாரம் செய்பவர்கள்.

ஐக்கிய நாடுகள், யு. எஸ். ஏ. யிலிருந்து புதியதும், மீண்டும் புதுப்பிக்கப்பட்டதுமான பிரிண்டிங் மெஷின்களை நேரில் இறக்குமதி செய்பவர்கள்,

வார்படேல் முதல் ப்ளாடன் வரை எல்லாவித மெஷின்களையும் ரோலர் காம்பொஸிஷன் உள்பட எல்லாப் பிரிண்டிங் சாமான்களையும் ஏராளமான அளவில் ஸ்டாக் வைத்திருப்பவர்கள்.

புதிதாக ஆப்டோன் & லைன் பிளாக்குகள் தயாரிக்கத் தனி டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

வியாபார கடிதங்கள் கோரப்படுகின்றன..

**தொ. ஆ. சுப்ரமண்ய முதலியார்,**
பூரண உரிமையாளர்



அர்ஜுனனுடன் தீவட்டி தூக்குபவனும் ஓடினுன். இருவரும் உள்ளே ஓட ஆரம்பித்தனர். சற்று நேரத்தில் அங்கே நின்ற வீரர்கள் எல்லாரும் காற்ருேடு காற்ருய்ப் பறந்துவிட்டனர். கோகா பாபாவின் பூதத்துக்கெதிரே யார் நிற்பது? பையனும் உள்ளே செல்ல ஆரம்பித்தான்.

ராஜகோட்டையின் சபா மண்டபத்தில் எல்லோரும் ஆலோசனை புரிய ஒருங்கு சேர்ந்திருந்தனர். நடுவிலே சிம்மாசனத்தில் "பாணுவளி பீமதேவன்" அமர்ந்திருந்தான். அவனுக்கு வலது புறத்தில் ஜூனுகட்டின் ராஜா ரத்னுதித்திய ராய் அமர்ந்திருந்தார்; நடுத்தர வயதுடையவர்; நீண்ட கைகளையும் பருத்த தோள்களையும் உடைய சிம்மம் போன்ற அவர் தம் வெகுநாளைய விரோதத்தை மறந்து இன்று மூலராஜனுடைய வம்சத் தோன்றலின் வலது கைப்பக்கம் அமர்ந்திருந்தார். அவருக்கு அருகே கச்சதேசத்து வீரர் 'கமாலாக்ஷிணி' இருந்தார். அடர்ந்த தாடிக்குள் கோடுகள் கொண்டு விளங்கிய அவருடைய முகம் தாதியர்களை எல்லாம் பயப்பட வைத்துக் கொண்டிருந்தது. அவருக்கு ஒரு கண் கிடையாது. ஆனல் மற்ருெரு கண் மிகவும் ஒளி கொண்டு கூர்மையுடன் அதிகதூரம் பார்க்க வல்லதாய் விளங்கிற்று. பீமதேவராஜனுடைய இடது பக்கத்தில் பரூச்சத்தின் ராஜா தத்தாஜீ உட்கார்ந்திருந்தார். பட்டணுடைய பெருமையின் காரணமாக அவருக்கு அங்கே வரவேண்டியதாயிற்று. எப்பொழுது திரும்புவோம் என்ற கவலை அவரைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தது. அவருக்குப் பக்கத்திலே திரிலோசனபால் பரமார் உட்கார்ந்திருந்தான். பதினெட்டு வயதுகொண்ட அந்த இளைஞனுக்குப் பீமதேவராஜனிடம் அளக்கரிய பக்தி. அவன் அந்த அரசனையே நன்கு விரிந்த கண்களுடன் பார்த்து உட்கார்ந்து கொண்டிருந்தான். பீமதேவனுடைய இரண்டு மந்திரிகளும் சற்று விலகி அமர்ந்திருந்தனர். ஒருவர் தாமோதர மேத்தா; மற்ருெருவர் மந்திரி



விமலர். மற்ற மந்திரிகளும் சேனைத்தலைவர்களும்கூட அந்தச் சபையில் இருந்தனர்.

அவர்களுக்கு இடையே ஒரே பிரச்னைதான் சர்ச்சை செய்யப்பட்டுக் கொண்டு இருந்தது. கஜினி அரசனை எதிர்த்துச் சென்று சண்டையிடுவதா? அல்லது அவன் இங்கே வரும்வரை காத்திருந்து எதிர்ப்பதா?

பீமதேவன்: "நான் மேலேறிச்சென்றே அவனை அடிக்கவேண்டும் என்று நிச்சயம் செய்து விட்டேன். முதல் அடி ராஜாவினுடையதாகத்தான் இருக்கவேண்டும். நம்முடைய இந்தப் பரந்த சேனைகளுக்கு எதிரே அவன் எந்த மூலைக்கு?" என்று சொன்னான்.

தாமோதரமேத்தா தலையை அசைத்தார். அவர் வாய் முறுவலித்தது. 'இவ்வளவு சேனைகளைச் செயித்துவரும் அவனை எளிதாக எப்படி எண்ணுவது?' என்று ஒரு சந்தேகத்தைக் கிளப்பி வைத்தார்.

"நம் சைன்யத்தைப் பாரேன். அவன் வருவதற்குள் இது இன்னம் பெரிதாகிவிடும். அவனோ களைத்து வருகிறான். நம்முடைய வீரர்கள் புது உற்சாகம் கொண்டவர்கள், இல்லையா?"

ஜுனகட் ராஜா, "ஆம். அவனுக்குத் தேசமும் புதிது!" என்று ஆமோதித்து வைத்தான்.

"ஆம். பாலைவனம்கூட அவனுக்குப் புதிதுதான். மேலேறி எங்கேயாவது நாம் சண்டைபோடப் போய் தோல்வி அடைந்து விட்டால் பட்டண் வழி திறந்து விடும். அதைவிடப் பட்டணிலேயே அவனை எதிர்த்தால் குறைந்தது ஆறு மாதங்களாவது அலைக்கழிக்கலாம். திரிலோசன்பாலன் அவனை 'அப்பொழுது நன்றாக வாட்டிவிட்டால் அவன் பலமும் குன்றிப் போகும்' என்று தாமோதர மேத்தாவுக்குப் பரிந்து பேசினான்.

பீமதேவன், "இல்லை இல்லை" என்று கர்ஜித்தான், அதெல்லாம் நடவாது. என் சேனையுடன் கோட்டையிலே ஒளிந்து இருப்பதா? அது என்னால் முடியாத காரியம். என் பெருமைக்குக் களங்கம் ஏற்பட்டுவிடும். இடிபோல் அவன்மேல் விழுவேன். அவனையும் அவனுடைய சேனையையும் தொலைத்துவிடுவேன். திரிபுராசுரனுடைய அந்த அவதாரத்தை அழிக்கத்தான் மகாதேவன் என்னைப் பிறப்பித்திருக்கிறார். மேத்தாஜீ! நாம் எதிர்த்துத்தான் செல்வோம். நம்மை ஒருவரும் தடுக்க முடியாது. குஜராத்தியர்களுடைய புயவலி யவனர்களுக்குப் புயலாய் உரு எடுக்கும், கோழைகள் தங்கிவிடட்டும். நாம் மேலேறி அவனை அழித்து நம்முடைய பெயரை நிலைநாட்டுவோம்."

பீமதேவன் கண்களும் பேசிப் பெருமைக் கண்ணீர் உகுத்தன.

அங்கிருந்த எல்லோரும் சபாஷ் சபாஷ் என்று கூவினர். அவர்களுடைய நரம்பிலேயும் புத்துணர்ச்சியின் சூடு எழுந்து பரவிற்று. ராய் ரத்னாதித்யன் மீண்டும் தாமோதர மேத்தாவை விளித்தான். "பாலைவனத்தில் களைத்துப்போய் வரும் அவன் இங்கே என்ன செய்வான்?" எல்லோருமே 'இந்த மந்திரி வீண் பயம் கொள்கிறான்' என்று எண்ணத்தொடங்கினர்.

"பாலைவனம் முழுவதையும் தாண்டிக் களைக்காதவன் இந்தப் பசும் பிரதேசத்தில் வந்து களைப்படையப் போகிறானா?"

"அவன் தானே களைப்படையாவிட்டால் நாம் களைப்படையச் செய்வோம். மேத்தாஜி! நீங்கள் பட்டணிலேயே இருந்து எங்களுக்கு உதவுங்கள், போதும், என் உள்ளத்துணிவை அசைக்க முடியாது. அந்தக் கடவுள் விரோதியை ஒழித்துக்கட்டி கூர்ஜரதேசத்தைப்புனிதமாக்கவேண்டும். பகவான் ஸோமநாதருடைய அருள் இருந்தால் பிறகு இந்த யவனன் எந்த மூலைக்கு?" என்று பீமதேவன் அருகிலுள்ளவர்களிடம் பதிலை எதிர்பார்த்தான்.

எல்லோரும், "ஆம் உண்மைதான், முற்றிலும் சரி" என்று ஆமோதித்தனர்.

கிழவனார் கமாலாக்காணியுடைய ஒற்றைக் கண்ணும் நெருப்புத் துண்டம்போல் ஆயிற்று. "நாம் என்ன வளையலணிந்து உள்ளேயே உட்கார்ந்திருப்போமா?" என்று கர்ஜனை செய்தார்.

பீமதேவனும், 'இப்படி யாருக்குச் சொல்லத் தைரியம் வரும்?' என்று குதித்துக் கூறினான்

பீமதேவனுக்கே பதில் சொல்பவன்போல் வந்தான் அர்ஜுனன் அலறிப் புடைத்துக் கொண்டு. "அன்னதாதா...! கோகாபாபா...!" அவன் தோற்றமே மாறியிருந்தது. தலைப்பாகை நிலை மாறி இருந்தது. அவன் கண்களில் பயம். கைகள் கடகட என்று நடுங்கிக் கொண்டிருந்தன. அவனைப் பார்த்து எல்லோரும் திடுக்கிட்டனர்.

பீமதேவன் ஆத்திரத்துடன் 'இது என்ன அர்ஜுனா? என்ன சமாசாரம்?' என்று அதட்டினான்.

"ஐயனே, கோகாபாபா வந்திருக்கிறார்" என்று சொல்லிய அர்ஜுனன் கைகளால் கண்களை மூடிக்கொண்டான். எல்லோரும் சொல்ல இயலாதபடி திகில் கொண்டனர். பீமதேவன் மட்டும் அர்ஜுனனைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

Estd. 1913 Phone No. 3547

# A. Bashyam & Co.

PAINT MERCHANTS

11, Venkatachala Mudaly St. - P. T. MADRAS

House for

**PAINTS, OILS, VARNISHES, ENAMELS, BRUSHES ETC.**

Noted for

DURABILITY, RELIABILITY & MODERATE RATES.

Stockists of

**SUPERIOR PAINTS, ENAMELS, JHILMIL & OTHER SPECIALITIES.**




எம். சி. அப்பாசாமி செட்டி அண்டு கோ.,
14, ஜோன்ஸ் தெரு,
மண்ணடி, - - - - - மதருஸ்.



"அர்ஜுனு' உள்ளே வரச்சொல் அவனை. காலபைரவனே இங்கே வந்தாலும் சரி."

பின்னாலேயே சாமந்தனும் வந்துகொண்டிருந்தான். மிகவும் அழுத்தமும் கடோரமும் கொண்டு, நிறம் வெளுத்து எல்லோரையும் ஊடுருவிப்பாயும் கண்களால் சபையையே அளந்துகொண்டு வரும் அவனே! அதே கண்கள்—அதே புண்.

"மகாராஜா! நான் கோகாபாபாவுடைய பேரன் சாமந்தன்" என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டான் சாமந்தன். பிறகு பீமதேவனைச் சாஷ்டங்கமாக நமஸ்கரித்து, "பீமதேவனுக்கு ஜயம் கூறினுன்.' மந்திரி விமலன் அவனை உடனே அறிந்துகொண்டான். 'ஓ' சௌஹான் வீரரல்லவா! வாரும் சௌஹான் வீரா! வாரும்' என்று அழைத்து எல்லார் உள்ளத்திலும் தைரியம் ஊட்டினுர்.

பீமன் எழுந்து எதிர்சென்று அழைத்து அவனை இழுத்துக் கழுத்துடன் கட்டிக்கொண்டான். "சௌஹான் வீரா! உன் குடும்பம் ராஜபுத்திரர்களுடைய 71 தலைமுறைகளைத் தூக்கிவிட்டது. வா. வா."

சாமந்தன் மெதுவாக அவனுடைய நீண்டு பருத்த புயப் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டான். சற்று நகர்ந்து தன்னை மறந்தவன்போல் ஒரு மாதிரியான கடோரமான தோற்றம் கொண்டு நின்றுகொண்டான். மெதுவாக அங்கிருந்தவர்களும், சரி, இவன் உயிருள்ளவன்தான் என்று நிச்சயம் செய்துகொண்டனர். அர்ஜுனன் ஒருவனுக்கு மட்டும் அவன் சந்தேகம் போகவில்லை,

பீமதேவன் சாமந்தனைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்று தனக்கெதிரே, 'உட்கார் சௌஹான்!' என்று மிகவும் ஆதரவுடன் அமர்த்திக்கொண்டான். சாமந்தனும் பெருமையுடன் அமர்ந்துகொண்டான்.

'என்ன சமாசாரம் கொண்டுவந்திருக்கிறுய்?"

"நான் குருதேவர் கங்கசர்வக்ஞரிடமிருந்து வருகிறேன்."

"பிரபாசியிலிருந்தா? தாங்கள் அங்கே எப்பொழுது போனீர்கள்?" என்று தாமோதர மேத்தா கேட்டார்.

"கஜினி சேனையிலிருந்து விடுபட்டவுடன் நேராகப் பிரபாசி சென்றேன். ஆம். மறந்துவிட்டேனே, வாசலில் நந்திதத்தர் நிற்கிருர்."

"யார் நந்திதத்தரா? எதற்காக அவர் அங்கேயே-நிற்கவேண்டும்? இதோ சென்று அழைத்துவருகிறேன்." என்று சொல்லிக்கொண்டு பீமதேவனுடைய ராஜகுரு வெளியேறி, கோகாதுர்க்கத்தின் ராஜகுருவுக்குத் தகுந்த மரியாதையுடன் உள்ளே அழைத்து வந்தார். உள்ளே வரும்போதே நந்திதத்தன் கண்கள் கரைந்தன. இனி இந்த மரியாதை எல்லாம் புண்ணைக் கிளறிவிடும் ஆடம்பரங்களாகிவிட்டன? எல்லோரும் எழுந்து நின்று அவரை வரவேற்றனர். பிறகு எல்லோரும் அமர்ந்தனர். பிறகு பீமதேவன் ஆவலைப் பூர்த்தி செய்ய நந்திதத்தர் கோகாகுல அழிவைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தார்.



மேத்தா மெஹ்வாகப்பேச்சை விஷயத்துக்குக் கொண்டு வந்தார். "நீங்கள் கஜினி சேனையை எப்பொழுது விட்டீர்கள்?"

"மார்வார் எல்லையிலிருந்து கொஞ்ச தூரத்தில்—பாலைவனத்தில். நான் அங்கிருந்து நேரே சென்று குருதேவரிடம் அறிவிக்கச் சென்றேன். அங்கிருந்து பிறகு இங்கே வந்து சேர்ந்தோம்."

'அமீர் இப்பொழுது இங்கிருந்து எவ்வளவு தூரத்தில் இருப்பான்?'

"கிட்டத்தட்ட, பதினைந்து நாள் பிரயாண தூரத்தில் இருப்பான்."

பீமதேவன்: "நீங்கள் அமீர் சேனையை நேரிலேயே பார்த்தீர்களா?"

'பார்த்தேனா?' என்றூர்த்த சாமந்தனுடைய முகம் கறுத்தது. நான் அதனிடையே சுற்றினேன். அதன் வலிவை அளந்து எடை போட்டுப் பார்த்தேன். அதைச் சொல்லத்தான் குருதேவரிடம் சென்றேன். அவரோ இதைச் சென்று 'பீமதேவனிடம் சொல்லு' என்று ஆக்ஞாபித்துவிட்டார். தாங்கள்தானே பகவான் ஸோமநாதருடைய வலது கை."

பீமதேவன் கண்களில் பெருமை பெருக, சிரம் குருதேவருக்கு மரியாதை காட்டிக்குனிய, "சௌஹான் வீரா. குருதேவர் கட்டளை என் தலைமேல். சொல்லும். எதையும் சந்தோஷமாய்ச் சொல்லும்!" என்றான்.

"அவசியம் சொல்லுங்கள். சரியான நேரத்தில் வந்திருக்கிறீர்கள்."

"முதன் முதலிலே, உங்களுக்கு மேலேறி எதிர்த்துச் சென்று அமீருடன் சண்டையிடுவது என்ற எண்ணமிருந்தால் அதை விட்டு விடவேண்டும்" என்று ஆரம்பித்தான் சாமந்தன். அவன் நிறுத்தி நன்றாய்ப் புரியும்படி சொன்ன வார்த்தைகள் சபையைக் காது நிமிரும்படி செய்தன. எல்லோரும் நிமிர்ந்து அமர்ந்தனர். அவர்கள் இதற்கு மாறான சங்கல்பம் செய்து இன்னம் அதிகநேரம் ஆகவில்லை.

பீமதேவன் பொசுக்கும் கண்களுடன் "என்ன சாளுக்ய வம்சத்தரசனை நான் எதிர்த்துச் சென்று மடக்கக் கூடாதா?" என்றாரம்பித்தான்,

சாமந்தன் அமைதியுடன் இருந்தான். அவன் முகத்தில் விளையாடிக்கொண்டிருந்த ஒரு சிரிப்பு திரஸ்காரத்தின் நிழலைப் பிரதிபிம்பித்தது. மிகக்குறைந்த நாட்களிலேயே பல ஜன்மங்களுக்குக் கிடைக்காத அனுபவங்களை எல்லாம் ஏற்று அவன் பெருங்கிழவனாகி விட்டான்,

"மகாராஜா மன்னியுங்கள். இப்படிப்பட்ட பெருமை வார்த்தைகளைக் கேட்டுக்கேட்டு என் காதுகள் சலித்துவிட்டன. சாளுக்ய ராஜரே, கடைப்புத்தியும் ஒற்றுமை தெரியாத வீண் கர்வமும் கொண்டு குதிக்கும் ராஜ புத்திரர்களை அழிக்கவே பினாகபாணி இந்த அமீரைச் சிருஷ்டித்து அனுப்பினார் போலிருக்கிறது."

அரசர்கள் வெகுண்டனர். மற்றவர் சிரித்தனர். சிறுவன் சொன்ன வார்த்தைகள் பயங்கரமானவைகள். பீமதேவனுடைய கை

அவனையறியாமலேயே வாள்பிடியைச் சென்றடைந்தது. சாமந்தன் அதை அறிந்துகொண்டான் என்று கண்டதும் அவன் கையை எடுத்துக்கொண்டான். அவன் முகத்திலே கொஞ்சம் வெட்கம் தோன்றி மறைந்தது.

ராய் ரத்தினுதித்யன் கிண்டலாகப் பேசினன்: "அப்படியானல் நாம் எல்லோரும் வீட்டுக்குத் திரும்பிவிடலாம் என்று உபதேசம் செய்கிறீர்!"

"இல்லை அரசே, அதைச் சொல்லவில்லை 'கருதித்துணிக கருமம்' என்றுதான் சொல்லுகிறேன். நான் சொல்வது கசப்பாகத்தான் இருக்கும். நீங்கள் சேர்த்திருக்கிற சேனை எல்லாம் சோர்ந்து அமீருக்கெதிரே அரை மணி நேரம் நிற்காது.

ராய் ரத்னுதித்யன், "என்ன பட்டண் ஜமுனகட், லாட்......" என்று அடுக்கினன். பீமதேவன் மீசையை முறுக்கிக்கொண்டே சாமந்தனைப் பார்த்துக்கொண்டிருந்தான். இவன் என்ன சினேகிதன் தானு, அல்லது எதிரியா? அவன் ஒரே வார்த்தையில் அவனை நடுவிலேயே அடக்கியிருப்பான். ஆனல் தாமோதர மேத்தா சாமந்தனுடைய வார்த்தையை ரசிப்பதைக் கண்டு கொஞ்சம் அடக்கிக்கொண்டான்.

"மகாராஜா. அமீருடைய சக்தியையும் அதன் அமைப்பையும் பற்றித் தாங்கள் கொஞ்சமாவது அறிந்திருந்தீர்களானல் நீங்கள் நான் சொல்வதைச் சரி என்று செய்வீர்கள். உங்களிடமிருப்பதைப்போல் பத்து மடங்கு சேனையைக் கொண்டும்கூட நீங்கள் அவனைத் தோல்வியடையச் செய்ய முடியாது, தெரியுமா?"

பீமதேவன் "நாம் இப்படி எல்லாம் பயப்படுகிறவர்கள் அல்ல. நாம் கொஞ்சம், எதிரி அதிகம், என்று கோழையல்லவா சொல்வான்?" அவன் குரலில் கொதிப்பைத் தூண்டிவிடும் திரஸ்காரம் புயலடித்தது.

சாமந்தன் முகம் சிவந்தது, உதட்டைக் கடித்து உருண்டு வரும் கோபத்தை அடக்கினன். மீண்டும் அவன் முகம் பயங்கரமாக மாறிற்று, கண்கள் மனித உலருக்கு மீறின ஒளியைக் கக்கிற்று. நமஸ்காரம் செய்து எழுந்து நின்ருன். சூரியன் கோபமடைந்து கக்க ஆரம்பித்தான்.

"சாளுக்ய அரசே, பலனறியாத பீமதேவன் மட்டும் அன்றி வேறு யாராவது என்னைக் கோழை என்றழைத்திருந்தால் இந்நேரம் அவன் உயிர் உடலைவிட்டுப் பிரிந்திருக்கும். ஆனல் நான் இன்று உங்களிடம் சண்டையிட வரவில்லை. பகவான் ஸோமநாதரைக் காப்பாற்ற ஆனதைச் செய்ய முயன்றுகொண்டிருக்கிறேன். உங்களுக்கோ ராஜாவின் பதவி மோகம், எனக்கோ அமீரை நசுக்குவதைத் தவிர வேறு ஒரு ஆசையும் கிடையாது. நீங்கள் அமீர் பெயரை மட்டும்தான் அறிவீர்கள். கோகாபாபாவோ அவனைத் தடுக்கத் தன் குலம் முழுவதையுமே அழித்திருக்கிருர். என் தந்தை அவனைப் பாலைவனத்தில் வறுத்தெடுத்துத் தோலைப் பறக்கவிட இதுவரை கேட்டிராத பெரிய வீரத்தைக் காட்டியிருக்கிருர். அவன் உயிரை மாய்க்க நான் சிங்கத்தின் குகையிலேயே சென்று அவனுடைய வீரர்களுக்கிடையிலேயே அவன் கழுத்தில் கத்தி வைத்தேன்......" என்று சொல்லிவந்த சாமந்தன் குரல் தழுதழுத்தது. அழுகை நிறைந்தது... அவன் தொடர்ந்தான்.

"ஆகா" நான் எண்ணியபடி அன்று நடந்திருந்தால் இன்று லக்ஷக்கணக்கான ராஜபுத்திரர்கள் செய்ய இயலாத ஓர் காரியத்தைச் செய்துமுடித்திருப்பேன்... ...ஆனல் ஸோமநாதரே அவனைக் காப்பாற்றுவது என்று எண்ணிவிட்டார். பீமதேவ மஹாராஜரே! நானும் என் குலமும் செய்த அவ்வளவே நீங்கள் செய்தால் போதுமே. உலகம் உங்களை வாழ்த்துமே" என்று சொல்லிவிட்டு, சாமந்தன் வருத்தத்தால் குனிந்த தலையுடன் வெளியேற ஆரம்பித்தான்.

தாமோதர மேத்தா எதிரே வந்து தடுத்து நின்றுகொண்டார். மிகவும் தணிந்த குரலில் சௌஹான் வீரா! கோகா துர்க்கத்தின் சௌஹான் ஒருவனைக் கோழை என்று சொன்ன நாக்கைப் பீமதேவன் அறுத்துக் கொள்ளட்டும். கோகாபாபாவின் வழித் தோன்றலுடைய ஆசனம் என்றும் சூரியனை விட ஒளி வீசி நிற்கும்."

பீமதேவனும் எழுந்து சாமந்தனை இறுக அணைத்துகொண்டான். அவன் தான் செய்த பிசகுக்குப் பிராயச்சித்தம் செய்ய ஆரம்பித்தான், "சௌஹான்! மன்னித்துவிடு. வாயிலிருந்து வார்த்தை வெளியேறிவிட்டது; கொஞ்சம் அவசரக்காரன். நாம் வீரத்தனத்தை இனி தான் காட்டப்போகிருேம். நீங்களோ எப்பொழுதோ, எவ்வளவு முன்னமேயோ உங்கள் முன்னேர்கள் பெயரைக் காப்பாற்றிவிட்டு இருக்கிறீர்கள்! என்னை மன்னித்துவிடும்!" என்றவாறு மீண்டும் ஒரு முறை அவனை இறுகப் பிடித்துக்கொண்டான்.

சாமந்தன் பீமதேவனுடைய மயங்காத உள்ளத் தூய்மையைப் பார்த்தான். உடனே எழுந்தவன் அங்கேயே உட்கார்ந்துகொண்டான்.



# நரஸஸ்

## காபிதூள்

உங்கள் பிரியமுள்ள பானம்

# இப்பொழுது எங்கும் கிடைக்கும்



உயர்ந்த ரக பிளாண்டேஷன் பீபெரி
எக்ஸ்ட்ரா போல்ட் காபிக் கொட்டைகளும்

7 பவுண்டு, 3 பவுணடு, 1½ பவுண்டு,
½ பவுண்டு ஸீல்வைத்த துணிப்
பைகளில் கிடைக்கும்.

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட், சேலம்.

5

தாமோதர் மேத்தா 'உட்காரும் சௌஹான் வீரா' என்று அமர்த்திவிட்டு நீங்கள் சொல்வதைத்தான் நானும் மகாராஜனிடம் சொல்லிக்கொண்டிருந்தேன். அமீரை இப்படி எதிர்ப்பதால் லாபம் ஒன்றும்இல்லை."

சாமந்தன் வருத்தத்துடன் சொன்னான். "இதை எல்லாம் சொல்லும்போது என் உயிரே போகிறது. நானும் பெருமைக்கு உயிரை விடும் குலத்திலே பிறந்தவன்தான். நம் பெருமை இழிவடையுமுன்னமே உயிர் ஒழியட்டும் என்று விரும்புபவன்தான் நானும். ஆனால் கடந்த ஒன்றரை மாதமாகக் கிடைத்த அனுபவ ஞானத்தினால்தான் நான் தங்களைப் போன்ற உண்மை அன்பர்களுக்கு இந்தமாதிரியான புத்திமதியைக் கொடுக்க முன் வந்தேன்."

பீமதேவன்: "சௌஹான் வீர, சொல். எதையும் சொல்," என்று வரவேற்றான்.

"மகாராஜா" அமீருடையதை சேனையென்றால் போதாது, அது சேனைக் கடல். தங்களிடம் அதிகமிருந்தால் இருபதாயிரம் காலாட்படையும் ஐயாயிரம் குதிரைப் படையும்......"

"இல்லை எட்டாயிரம் குதிரை......"

"சரி எட்டாயிரமே இருக்கட்டும், இரண்டாயிரம் யானை ஒட்டகங்கள் இருக்கும். அமீரிடம் 30,000 குதிரை வீரர்கள் இருக்கின்றனர். அவர்கள் குதிரைகளோ இறகுபடைத்த காட்டுக் குதிரைகள்! 10,000 யானைகள்; எண்ணமுடியாத காலாட்படை வீரர்கள். குறைந்தது முப்பதினாயிரம் ஒட்டகத்தின்மேல் தண்ணீர் ஏற்றிக்கொண்டு அவன் பாலைவனத்தைக் கடந்திருக்கிறான். கோட்டைகளை உடைக்க அவன் பெரிய பெரிய யந்திரங்கள் வைத்திருக்கிறான். அதன் எதிரே நாம் ஒரு பொருளே அல்ல. நகர் கோட்டையிலிருந்து மார்வார்வரை வழியிலே அங்கங்கே தனியாய் வந்து உயிரைக் கொடுத்தார்களே லக்ஷக்கணக்கான ராஜ புத்திர வீரர்கள், அவர்கள் எல்லோரும் ஒருங்குசேர்ந்து ஒரே சமயத்தில் எதிர்த்திருந்தால் ஒரு கால் பலன் வேறு விதமாயிருந்தாலும் இருக்கும்."

சாமந்தன் நிறுத்தினதைக்கூட அறியாமல் ஜனங்கள் கேட்டுக் கொண்டிருந்தனர், காதுகளாலும் வாயாலும்கூட!

தாமோதர் மேத்தா, 'பிறகு?' என்று தூண்டினார்.

'இது சேனைப் பலம். அமீர் ஒரு தனிச் சக்தி என்றே சொல்லவேண்டும், இவ்வளவு பெரிய சேனையை அடக்கி ஆளவும் அவன் தெரிந்து வைத்திருக்கிறான். அவனுக்குச் சந்தித்தவர்களைவசம் செய்யவும் நன்கு தெரிகிறது. மனமிழந்தவனுக்கு உயிரூட்டவும் அவன் நன்கு பயின்றிருக்கிறான். அவன் அணிவகுக்கும் திறனை மீறியவர் கிடையாது. அவனுடனா சண்டையிட முடியும்?'

"பிறகு என்னதான் செய்வது?. பசு பிராமணர்களைப் பிரதிதினமும் காப்பற்றும் கடமை பெற்ற நாம் நம் தேசம் அழிக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டு சும்மாவிருக்க முடியுமா? நம் பெண்களும் அந்தணர்களும் பெருமை குலைவதைப் பார்த்துச் சகித்துக் கொண்டு இருக்க முடியுமா? நம் குலதேவதையைக் காப்பாற்ற உயிரையாவது விடவேண்டாமா!

"மகாராஜா! நான் இதெல்லாம் வேண்டாம் என்று எங்கே சொல்கிறேன். நாம் மனம் இழக்காமல் சண்டையிட வேண்டியதுதான். உயிரைக் கொடுத்தாவது பிரபாசியையும் பட்டணையும் காப்பாற்றித்தான் ஆகவேண்டும்."

"அது எப்படி?"

"எதிர்க்காமல் அமீரை ஸௌராஷ்டிரத்துக்குள் வரச்சொல்லிவிடுங்கள். எவ்வளவு குறைவாக மனிதர்களை இழக்கிறோமோ அவ்வளவு நல்லது. ஏனென்றால் அவனைப் பின்னாலிருந்து சீர்குலைக்கவேண்டும்."

தாமோதர் மேத்தா சொன்னார்: "ஆம், அமீரை நேரே சென்று அறைகூவுவது சரியல்லதான். ஆனால் பட்டணிலிருந்தே அவனை எதிர்க்கலாம் என்று எனக்குப் பட்டது."

சாமந்தன்: "இவ்வளவு கோட்டைகளைப் பொடியாக்கியவனுக்கு இதுவும் ஒரு பொம்மைதான்."

தாமோதர்: "ஆம், அதுவும் உண்மைதான்."

ராய்: "அப்படியானால் வேறு வழி?"

பீமதேவன்: "பட்டணைவிட்டுக் காட்டில் ஒளிந்து கொண்டால் என் முகத்தில் கரி பூச வேண்டியதுதான்."

திரிலோசனபால் பரமார்: "சேனையின் உற்சாகம் குலைந்துவிடும்."

பீமதேவன், "எதானாலும் சரி, நடக்கட்டும்; நான் இதைவிட்டு அசையமாட்டேன். இது என்னுடைய பட்டணம். என் தந்தைமார்களுடைய தலைநகரம். கஜினியைத் திரும்பச் செய்வது என்ற என் பிரதிக்ஞை வீணாவதற்கு முன் குதிரை காலின் கீழ் நசுங்கியாவது உயிரை விடுவேன்,"

சாமந்தன்: "ஆம், இங்கிருந்து நீங்கள் பகவான் ஸோமநாதரை எப்படிக் காப்பாற்றுவீர்கள்?" அவனுடைய மெதுவான குரல் அவர்களுக்குக் கசையடி கொடுத்துக் கொண்டிருந்தது.

(தொடரும்)

# பெண்மை

தி. சேஷாதிரி



[ஓர் அழகிய பங்களாவின் முன் பக்க ஹால்; மூன்று பக்கச் சுவர்களின் அருகேயும் மெத்தையுள்ள சோபாக்கள் வா, வா என்று அழைக்கின்றன. நடுவேயுள்ள மேஜைமேலுள்ள டைம்பீஸ் மணி ஒன்பதாகிவிட்டது என்று காட்டிக் கொண்டிருக்கிறது. ஒரு சோபாவில் அமர்ந்து கோமதி படித்துக்கொண்டிருக்கிருள். வயது பதினெட்டு இருக்கும் கொடி

போன்ற உடல். விளைந்த கோதுமை மணியின் நிறம். மேதாவிலாஸத்தைக் காட்டும் முகம். அவளை அணுகியவனே பாக்கியவான் என்று எண்ணம்கொள்ளச்செய்யும் மேனி அமைப்பு. ஹால் கதவு தாளிடாமல் சார்த்தியிருக்கிறது. திறக்கும் சத்தம் கேட்டது.]

**கோமதி**: [படித்துக்கொண்டே, தலையைத் தூக்காமல்] யாரது?

**சந்திரஹாஸன்**: ஏது? மிகவும் ஜாக்கிரதையுடன்தான் இருக்கிறாய்போலிருக்கிறது! அட, இது என்ன? காண்டேகர் இன்னம் உன்னை விட்டபாடில்லையா? சாப்பிடவில்லை இன்னம்?

**கோமதி**: ஏன் பொறுமையாய் இருக்கிறதா, என்ன?...அது போகட்டும்...(அவனை உற்றுப் பார்த்துக்கொண்டே) இது என்ன புது முறையாக அல்லவா இருக்கிறது நீங்கள்......

**சந்திர**: நான்?...சொல்லு...எது நான் உடுத்தியிருப்பதையா சொல்கிறாய்...? ஏன் "உலன்" கோட் பிடிக்கவில்லையா?

**கோமதி**: (எழுந்துகொண்டே) இல்லை இல்லை...நீங்கள் கேள்வி கேட்கும் முறையைப் பற்றிச் சொன்னேன். (மூடிய புஸ்தகத்தை மேஜைமேல் வைத்துவிட்டு, அவன் கோட்டைக் கழற்றிவிட நெருங்குகிறாள்)

**சந்**: இந்தா, இந்தா, வேண்டாம். நீ கழற்றிவிடவேண்டாம்.

**கோமதி**: ஏன்? காண்டேகர் எழுத்து அவ்வளவு அழுக்குப் படிந்ததா என்ன? தொட்டவள் கை விரல்கள் கூட அழுக்காவதற்கு? அல்லது என்மேல் ஏதாவது கோபமா?

**சந்**: அதெல்லாம் ஒன்றுமில்லை. எங்கேயாவது மலரைப் பறித்து இதழ்களை வாளின் மேல் வைத்து......!

**கோமதி**: ஓகோ! மான் முதுகைத் தடவிக் கொடுத்துச் சகுந்தலையின் விரல் புண்பட்டதாகக் காளிதாசன் வருணித்திருக்கிறானே, என்ன? அல்லது ஷேக்ஸ்பியர் கற்பனையா இது?

**சந்**: இல்லை. அகற்றப்பட்ட ஆட்டு ரோமமும் உயிருள்ள மான் மயிரும் ஒன்றாய்விடுமோ? தவிர சகுந்தலைக்குப் பிறகு எவ்வளவு காலம் ஆகிவிட்டது? பெண்மையின் மென்மை எவ்வளவு வளர்ந்திருக்கும்!

**கோ**: ஐயோ, பாவம். அந்த அக்கரையிலுல்தான் அன்று......(சொல்லாமல் நாணிச் சிரிக்கிறாள்...)

**சந்திர**: (அந்த நாணலில் குழிந்த சிரிப்பின் அன்பு நீரில் அலர முழுகிக்கொண்டே) போக்கிரி; சும்மா உதட்டிடுக்கில் வைத்ததற்கே இவ்வளவு குற்றம் சாட்டுகிறாயே!...போகட்டும் என்னவோ சொன்னாய்! அதை விவரிக்காமல் பேச்சை மாற்றுகிறாயே...

**கோமதி**: அதுவா? கேள்வி கேட்டுவிட்டுப் பதில் சொல்லுவதுகூட உண்டு. ஆனால் பதிலை முதலில் சொல்லிவிட்டுப் பிறகு கேள்வி கேட்பது புது முறையாயிருக்கிறதே, என்று கேட்கவந்தேன்........

**சந்**: அப்படியா?... அதிருக்கட்டும். காண்டேகர் சாப்பிடக்கூட வேண்டாம் என்றா சொல்கிறார்?

**கோ**: நீங்கள் கேட்பது நன்றாயிருக்கிறதே. ஓடிவரும் மானிடம் சங்கீதமா, 'வந்து வேடனடியில் விழு!' என்று சொல்கிறது! தாமரை மலர் வண்டை வேண்டும் என்றா சிறையிடுகிறது! அது சரி. என்ன இப்படி பார்க்கிறீர்கள் என் முகத்தை! என் பொட்டு ஏதாவது அழிந்து இருக்கிறதா? (கை விரலால் நெற்றியைத் தடவிக்கொள்கிறாள்.)

**சந்**: இல்லை, இல்லை. இப்பொழுதுதான் நீ அழித்துவிட்டாய்? நான் அதைப் பார்க்கவில்லை. சந்திரனைச் சுற்றி வண்டுகள் ஏன் அலைகின்றன? என்று பார்க்கிறேன்.

**கோ**: ஏது. உங்கள் அன்பு இன்று என் பரந்திருக்கும் மயிர்மேல்கூட......

**சந்**: ஆம். கேட்டதில்லையா நீ, கம்பன் விட்டுக் கட்டுத் தறியும்......

**கோ**: கவி பாடும், அதானே! இங்கே யார் தறி, யார் கம்பன், கவிதை எது?

**சந்**: இல்லை. அன்பின் 'தேய்வுறு மதி விளங்கித் தேசுற உவகை அளக்கர் ஆர்த்தெழுகிறது.........'

**கோ**: இது எவ்வளவு நாளாக, கம்பர் ஷேக்ஸ்பியருடன் போட்டியிடுகிறார் தங்கள் காதலைப் பெற......!

**சந்**: என் காதலையா? சே, அது ஒருவருக்குத்தான் சொந்தம் இந்த உலகில். அதை அந்த ஜீவனிடம் அன்றே ஒப்படைத்துவிட்டேன். என்ன குறும்பாகச் சிரிக்கிறாய்?

**கோ**: ஒன்றுமில்லை. இந்தக் கடிகாரம் தன் எஜமானுடைய சித்தத்தை அறியாமல் நான் படிக்கும்போது ஓடியதுபோலவே நீங்கள்......பேசும்போதும்......!'

**சந்**: ஆம், மறந்துவிட்டேன் வா, போகலாம் சாப்பிட. பாவம், நீ பட்டினியாயிருப்பதைக்

கூட மறந்து நான் அள்ளி அள்ளிப் பருகிக் கொண்டேயிருக்கிறேன்! [சொல்லிக்கொண்டே வாயிற் கதவைத் தாளிட நகர்கிருள்......!]

**கோ :** வேண்டாம், வேண்டாம் வாருங்கள். இங்கே யார் வரப்போகிருர்கள்?

**சந் :** அதுவும் சரிதான் ... அதிருக்கட்டும். சொல்ல மறந்துவிட்டேனே. நீ யார் வரப் போகிருர்கள் என்றுதானே கேட்டாய்? நாளை நம் வீட்டுக்கு ஒருவர் வரப்போகிருர்கள்...!

**கோ :** அது யார் அந்த ஒருவரில் பலர்! இப்படிப் பிரயோகம் ஷேக்ஸ்பியரில் உண்டோ!

**சந் :** ரிரம்பக் கிண்டல் செய்யாதே, என் காலேஜுக்குப் புதிதாக வந்திருக்கும் இங்கிலீஷ் ட்யூட்டர் ... ...

**கோ :** பெயர்?

**சந் :** பெயரில் என்ன இருக்கிறது? காந்தா ...

**கோ :** காந்தா என்று பெயரா? அப்படி ஆண்பிள்ளைக்குக்கூட வைப்பார்களா என்ன?

**சந் :** ஆண் பிள்ளை என்று யார் சொன்ஞர்கள்? அவள் ஒரு பெரிய மனிதரின் பெண். M. A. படித்திருக்கிருள். பொழுது போக வில்லையாம்; இந்த வேலையை எடுத்துக்கொண்டிருக்கிருள். அவளுடன் அவள் தங்கையும் வருகிருள். நாளை காலை 11 மணிக்கு வருவார்கள், இங்கேயேதான் சாப்பாடு.

**கோ :** சரி வரட்டும்... ... நாம் இப்பொழுது சாப்பிடப் போகலாம் வாருங்கள்.

(இருவரும் போகின்றனர் ஸீன் விழுகிறது)

## 2

காலை பதினெரு மணி. மேல் ஸீனிலுள்ள அதே அறை. கோமதி நாவலைப் படித்துக் கொண்டிருக்கிருள்' சந்திரஹாஸன் ஹாலின் மூலையில் உள்ள, நாம் முன்னே கவனிக்காத, மாடிப் படிகளில், இருபத்திரண்டாம் நூற்ருண்டு கனவுலகத்திலிருந்து இறங்கும் ஓர் தேவயுவன் போல் இறங்கி வருகிருன். அறையிலே ஒரு ஒளி கிளம்பி, கோமதியை அவள் வேலையிலிருந்து கலைக்க முயலுகிறது. பிறகு ஒரு மணம் கிளம்பி அறையைச் சூழ்ந்து அதே வேலையைச் செய்ய, தோல்வியுற்றுக் குமுறுகிறது. மீண்டும் ஓசையும் அதே வழியைப் பின்பற்றி அதே தோல்வியை அடைந்து ஆரவாரிக்கிறது. கோமதி நிமிர்ந்து பார்க்கவில்லை — தன்ஞல் தோல்வி தரப்பட்ட பிரயத்தனங்களின் வீழ்ச்சியைப் பார்க்கக்கூட! சந்திரஹாஸன் அருகில் வந்து நிற்கிருன். இதயத்துள்ளே எழுந்த குன்ற அன்பிலே வேகம் குன்றி, புன்சிரிப்பிலே நனைந்து பெருமூச்சு உரு எடுத்து அவள் அங்கத்தைத் தடவி இதயத்தின் கதவை மெல்லத் தட்டுகிறது. கோமதி கண்களை, புத்தகத்தின் கருத்துக்கள், தங்கள் எடுத்துக் காட்டுகளிலிருந்து அவிழ்த்து விடுகின்றன. அவள் நிமிர்கிருள்.

**கோமதி :** ஓகோ. நீங்களா? அதுதானே மாடிப்படி ஓசைப் பட்டால்போலிருந்ததே என்று பார்த்தேன்! (ஒரு முறை மேலும் கீழும் அவனைப்பார்த்து) அதற்குள் எங்கே கிளம்பிவிட்டீர்கள்? எங்கே போனுலும் அதிக ஜனநடமாட்டம் உள்ள இடமாகமட்டும் போகவேண்டாம்.

**சந் :** அடி, குறும்புத் தேவதையே! ஏன் உன் கணவன்மேல் கல்லை எறிவார்களே என்ற பயமா?

**கோ :** சை, சை, அதுதான் தேவலையே, பொறுக்கி வந்தாலும் மதில் சுவருக்கு உதவியாயிருக்குமே. நீங்கள், பெண்கள்— அதிலும் இளம் பெண்கள்—முக்கியமாக மணமாகாத மங்கையர்கள் நடமாடும் வழியைமட்டும் விழித்துக்கூடப் பார்க்காதிர்கள்..... !

**சந் :** உன் குறும்பு இருக்கட்டும். நான் எங்கேயும் போகவில்லையே!

**கோ :** எங்கேயும் போகவில்லையா? பிறகு என்னை வேட்டையாடவா இந்தக் கோலம்! என்னிடம் அம்பு எதற்கு? அன்பின் குரலில் அடிப்பட்டுத்தான் வந்து விழுந்தே விட்டேனே வேடனிடம்!

**சந் :** இதோ பார் கோமா! காண்டேகர்களையும் காளிதாஸர்களையும் படிக்கவேண்டியதுதான். ஆனுல் மூளைமட்டும் குழம்பக்கூடாது. மணி பதினென்ருகிறது; இப்படியே உட்கார்ந்திருந்தால்.........?

**கோ :** மன்னிக்கவேண்டும். நீங்கள். உத்தரவு போட்டதால்தானே எழுந்து நின்று மரியாதை செய்யும் வழக்கம்.........

**சந் :** நீ ரொம்ப அதிகப்ரசங்கியாகி விட்டாய், கோமதி! நீ நிசமாகவே மறந்து விட்டாயா, என்ன?.........அவர்கள் வரும்நேரம் மிகவும் நெருங்கிவிட்டதே......!

**கோ :** (திடீர் என்று ஞாபகம் வரவே) ஓகோ. காந்தா வருவாள் என்று சொன்னீர்களே, அதுவா? நிச்சயமாகவே மறந்து விட்டேன். சமையற்காரியிடம் கூடச் சொல்லவேயில்லையே.........



சந் : நீ ஏன் சொல்லப் போகிறாய்? நானே சொல்லிவிட்டேன்.

கோ : அப்படியானால்சரி, இதோ இன்னும் பத்துப் பக்கங்கள்தான் பாக்கி; படித்துவிடுகிறேனே.

சந் : (புருவம் சுளித்து) பார்த்தாயா கோமதி. அதெல்லாம் கூடாது. அவர்கள் இதோ வந்துவிடுவார்கள். பிறகு படித்துக் கொள்ளலாம். தயாராகு.

கோ : (கணவன் கண்டிப்புக்கும், காண்டேகரின் இலக்கிய இன்ப இழுப்புக்கும் ஏற்பட்ட போராட்டத்தில் தோற்ற புத்தகத்துக்குத் தன் பார்வையால் ஒரு அனுதாபத்தைத் தெரிவித்துவிட்டு உள்ளே போகும் தருணத்தில் வேலைக்காரன் வர......) என்ன ராமசாமி? என்ன சமாசாரம்?

ராமசாமி : ஐயா, யாரோ இரண்டு அம்மா வந்திருக்கிறாங்க. உங்களையும் அம்மாவையும் பார்க்க வேண்டுமாம். (அவனிடம்) சரி, போய் வரச்சொல். (கோமதி பக்கம் திரும்பி)

சந் : பார்த்தாயா! உன் புத்தகப்பித்து ... கசங்கிய புடவை, ரத்தம் ஏறிச்சிவந்த கண்கள், பொட்டுக்கலைந்த நெற்றி, இப்படியா அவர்களை வரவேற்பது? போய்ப் பார்த்துக்கொள் உன் முகத்தை ...

கோமதி : கோபித்துக்கொள்ளாதீர்கள்; இதோ தயாராகி விடுகிறேன்; என்று திரும்புவதற்குள் "ஹலோ சந்திரன்" என்று காற்றிலேவரும் கீதம்போன்ற சத்தத்தைக்கேட்டுக் கண்கள் சத்தத்தின் மூலஸ்தானமாகிய இரு பெண்களையும் பார்த்துவிட கையைக்கூப்பி— நமஸ்தே. வாருங்கள் வாருங்கள். இதோ, பேசிக் கொண்டிருங்கள். ஒரே நிமிஷத்தில் வந்துவிடுகிறேன், மன்னிக்கவேண்டும்.

( உள்ளே போகிறாள் )

[ வந்த இருவரும் சோபாவில் அமர்கிறார்கள். காந்தாவுக்குச் சுமார் இருபத்திரண்டு வயதிருக்கும். அவள் தங்கை பானுமதிக்கு வயது பத்தொன்பது. காந்தா பேச்சு, நடை, உடை, எல்லாவற்றிலும் அமைதி. அதனடியில் சஞ்சலம். பானுமதியின் பேச்சு, நடை, உடை எல்லாவற்றிலும் ஒரு படபடப்பு. அக்கா தன்னிடம் வந்த பிறகு வெற்றிகொள்ளும் சுபாவமுள்ளவள். பானுமதி தானே வலைவீசி வெற்றிகொள்ளும் இயற்கையுடையவள். கொஞ்ச நேரம் மூவரும் எங்கே பேச்சைத் தொடங்குவது என்று தெரியாமல் வாளாவிருக்கின்றனர். பிறகு,

பானுமதி : என்ன, மிஸ்டர் சந்திரன்; இது உங்கள் சொந்த வீடுதானே!

சந் : ஆம், என் தந்தை கண்டிராக்டராயிருந்தபோது கட்டிய வீடு.

**பானு**: நன்றாகத்தான் திட்டமிட்டுக் கட்டியிருக்கிறார். உங்கள் மனைவி படித்திருக்கிறார்களா?

**சந்**: ஓ, நன்றாய்ப் படித்திருக்கிறாள். தவிர நல்ல கற்பனையும் கலைத்திறனும் உடையவள், சிறு கதை கவிதைகள் பல எழுதியிருக்கிறாள். பிரசுரமும் ஆகியிருக்கின்றன.

**காந்தா**: (மேஜைமேலிருந்த புத்தகத்தைப் புரட்டிப் பார்த்துவிட்டு) இது என்ன ஹிந்தியா? மிஸஸ் சந்திரஹாஸனுக்கு ஹிந்தி கூடத் தெரியுமா?

**சந்**: ஓ, நன்றாகத் தெரியும். ஆனால் இது மராட்டிப் புத்தகம். காண்டேகர் எழுதியது. அவளுக்குக் காண்டேகர் என்றாலே உயிர்.

**பானுமதி**: (மேலே உள்ள படத்தைப் பார்த்துவிட்டு) அதோ யார்? ஸ்ரீமதிதானா? வீணையுடன் அமர்ந்திருக்கிறார்களே, சரஸ்வதியைப்போல.

**சந்**: ஆம். அவள் வீணையும் நன்றாக வாசிப்பாள்.

**பானு**: நீங்கள் எல்லாவிதத்திலும் அதிர்ஷ்டசாலிதான்.

**காந்தா**: என்ன அவரைக்கண்டு பொறாமைப் படுகிறாயா என்ன?

**கோமதி**: (வந்துகொண்டே) அவரிடம் பொறாமைப்பட்டு என்ன செய்கிறது? என்னிடம் அல்லவா பொறாமைப்படவேண்டும்.

**பானுமதி**: (உள்ளேயே அவளிடம் பொறாமை ஒன்று அவள் உள்ளத்தை நண்டு போல் கவ்வி எழ, அதை உதறியவாறே) உண்மை, முற்றிலும் உண்மை. ஆனால்... அவரிடம் அனுதாபப்படவேண்டும்...சரிதானா!

**கோமதி**: ஆம். அதுவும் சரிதான். என்னைப்போல் சதா சர்வகாலமும் ஆடிப்பாடி, குளவியைப்போல் திரியும் மனைவியைக் காட்டிக்கொண்டவரிடம்......

**சந்**: என்ன கோமதி? பிறர் எதிரேயும் என்னைக் கொட்டிவிடுவாய்போலிருக்கிறதே!

**கோமதி**: ஆம். உங்களை இப்பொழுது கொட்டினால் பாய்வது எல்லாம் இங்கிலீஷ் இலக்கியப் பாலாக இருக்கும். அது போகட்டும். என்ன கொஞ்ச நேரம் பிரிட்ஜ் ஆடலாமா? அல்லது சாப்பிடப் போவோமா?

**பானு**: வேண்டாம் இன்று லீவு நாளானதால் நன்றாய் மூக்குவரை டிபன் சாப்பிட்டுவிட்டு வந்திருக்கிறோம்......

**சந்**: அப்படியானால் சரி. சீட்டுக்கட்டு கொண்டுவருகிறேன். (எழுந்து போகிறான்)



**கோமதி** : லீவு நாளாயிற்றே என்று டிபன் சாப்பிட்டீர்களா? அல்லது நண்பர் வீட்டுக்குப் போகிறோமே என்றா? [மூவரும் சிரிக்கின்றனர். பானுமதி பதில் சொல்லத் தெரியாமல் மழுப்புகிறாள். சந்திரஹாஸன் சிட்டுக் கட்டுகளுடன் வருகிறான். முதலில் பானுமதி கலைத்துப் போடுகிறாள். ஸீன் விழுகிறது.]

## 3

இரவு மணி பதினொன்று. கோமதி வாசல் வராண்டாவில் நாற்காலியைப் போட்டு அமர்ந்து வாசித்துக் கொண்டிருக்கிறாள். காண்டேகர்கூட அவள் கவனத்தை ஈர்க்கமுடியவில்லை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அதனால் தைரியம் கொண்ட நித்ராதேவி கொட்டாவிகளைத் தூது விடுகிறாள். கோமதி தலையை அசைத்து வாய்வழி அவைகளை வெளியேற்றி விடுகிறாள் அவள் கண்கள் வாசல்கேட்டை வட்டமிடுகின்றன. சந்திரனை அருகே அழைக்க எம்பி எம்பி எழுந்து ஏமாறும் அலைகள்போல அவள் உள்ளக் கிளர்ச்சி பொங்கி எழுந்து எழுந்து அடங்குகிறது. அந்தப் போராட்டத்தில் பசி பயந்து வயிறு மூலையில் அடங்கிக் கிடக்கிறது. கடைசியில் சந்திரஹாஸன் களைத்துக் களைத்து வருகிறான்.

**சந்** : என்ன கோமு! இன்னும் தூங்கவில்லை—சாப்பிடக்கூடவில்லையா என்ன? புத்தகப் பித்துக்கும் ஒரு எல்லை வேண்டாம்?

**கோமதி** : பசி, சரிதான்! குற்றவாளி மற்றொருவன்மேல் பழிபோடுவது இயற்கைதானே.

**சந்** : ஆமாம், நான்தான் குற்றவாளி. அதற்காக நீ காத்திருக்க வேண்டுமா என்ன? தூங்க நாழியாகவில்லையா?

**கோமதி** : தூக்கத்துக்கு என்ன? நேற்றுப் பத்து மணி வரை வெற்றி பெறாத தூக்கத்தை இன்று பதினொரு மணிவரை விரட்டியடிப்பது கஷ்டமா என்ன?

**சந்** : கோபித்துக்கொள்ளாதே. கோமதி! இந்த யுனிவர்சிட்டியில் டாக்டர் பட்டம் வாங்குவது என்றால் என்ன சுலபமாகவா இருக்கிறது......? (சொல்லிக்கொண்டே நாற்காலியில் உட்காருகிறான்.)

**கோமதி** : உண்மை, உண்மை! அது போகட்டும். அதைப்பற்றிப் பிறகு பேசிக்கொள்ளலாம். சாப்பிட வாருங்களேன், நேரமாகவில்லையா?

**சந்** : நான் வரும் வழியிலே ஹோட்டலில் சாப்பிட்டு விட்டேன், நீ போய்ச் சாப்பிட்டு வா. இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாம்,

**கோமதி** : நீங்கள் ஹோட்டலிலா சாப்பிட்டீர்கள்? சரிதான் எனக்கும் பசிக்கவில்லை. நீங்கள் களைத்திருக்கிறீர்கள், தூங்கலாம் வாருங்கள்.

**சந்** : ஆற்றங்கரைக்கு ஸ்நானம் செய்ய வந்தவன் களைப்பாற மரத்தடியில் அமர்வானா என்ன? பறந்து வந்த வண்டு பூ வாயில் அமர்ந்து தேன் அருந்துமா களைப்பாறுமா?

**கோமதி** : ஓகோ! பூக்களிலே தேனருந்தும் வண்டாக என்றிலிருந்து ஆனீர்கள்? ஆம்... அது இருக்கட்டும் வண்டுக்கு ஒவ்வொரு பூவிடமும் பாடும் குணம் உண்டு என்பது எனக்கும் தெரியுமே!

**சந்** : (சுழலாலும் தடங்கலாலும் தடைப்பட்டாலும் கருத்தின் வேகத்தையும் ஆழத்தையும் ஒருவாறு புரிந்துகொண்டு) என்ன சொல்கிறாய். கோமதி, ஏதாவது கெட்ட கற்பனை செய்கிறாயா என்ன?

**கோமதி** : இல்லை, கற்பனை செய்யவில்லை, உண்மையை உங்கள் வார்த்தையைக்கொண்டே ஊகித்தறிகிறேன்.

**சந்** ; இல்லை, இவை எல்லாம் சாதுரியம், நீ ஏதோ ஒளித்துப் பேசுகிறாய்! "சந்தேகாத்மா விநச்யதி"

**கோமதி** : ஆம், ஆரம்பமும் முடிவும் தெரியாத அசடன் நாசமடைவான். எதிரே விழுங்க வரும் விபத்தின் சக்தி அறிந்தவனுக்கு அந்த வாக்கியத்தால் பயமில்லை. அதுசரி, அதோ டெலிபோன் மணி அடிக்கிறது. போய்க் கேளுங்கள். காந்தாதான் பத்திரமாய் வீடு சேர்ந்தீர்களா என்று கேட்கிறாள்.

சந்திரஹாஸன் பதில் சொல்ல முடியாமல் துடித்த உள்ளக் கிடக்கையுடன் போகிறான். கோமதி நாற்காலியில் அமர்ந்து உதட்டைக் கடிக்கிறாள். ஒரு காலை எடுத்து மற்றொரு காலின் மேல் போட்டு முழங்காலை கட்டிக் கொள்கிறாள். அவள் முகம் படர்ந்து கவிந்து பிறகு மறையும் ஒரு பாவ விலாசத்தைக் காட்டுகிறது. சந்திரஹாஸன் வருகிறான்.

**கோமதி** : என்ன, காந்தா தூங்கச் சென்று விட்டாளா?

**சந்** : [மென்று விழுங்கிக்கொண்டே] என் நீ கேட்டுக் கொண்டிருந்தாயா என்ன?

**கோமதி** : இல்லை ஏதோ ஒளிக்கிறாய் என்று கேட்டீர்களல்லவா? திறந்து சொல்லி விடு

கிறேன் கேளுங்கள். விபத்தைத் தூரத்திலே கற்பனை செய்யும் கோழை மனம்தான் அதன் புகையிலே திக்குமுக்காடும். ஆனால் பாம்பின் வாய் வரை நீளம் தெரிந்த ஒருவன் பயப்பட மாட்டான்.

சந் : என்ன பார்த்துவிட்டாய் நீ ?

கோமதி : நானா ? மூன்று பூதங்களின் உருவங்களை நிச்சயமாய்ப் பார்க்கிறேன். அவைகள் நெருங்கிவிட்டன,

சந் : நான் நினைத்தது சரியாய்த்தான் போயிற்று ... ...

கோமதி : வீணில் பேச்சில் தட்டிக்கழிக்க வேண்டாம். உங்கள் வீழ்ச்சி, காந்தாவின் வெற்றி, என் அழிவு மூன்றும் படிப்படியே நெருங்கிவிட்டன.

சந் : அவள் கையைப்பிடித்துத் தூக்கியவாறே—அசடே கண் மூடிக்கொண்ட குதிரை போல் கற்பனையும் சென்ற இடமேதான் செல்லும். இதெல்லாம் வீண் பிரமை. வா சாப்பிடப் போகலாம்......

கோமதி : [எழுந்தவாறே] அதுவும் சரிதான். இந்த வீட்டில் இதுவே தற்காலத்துக் கடைசி வேளைச் சாப்பாடாயிருக்கும். ஆகவே சாப்பிடலாம் வாருங்கள்.

சந் : அதெல்லாம் தூங்கி எழுந்தால் சரியாய்ப் போய்விடும்......[இருவரும் போகின்றனர். வாசற் கதவு உள்ளேயிருந்து சாத்தப்படுகிறது. வாசல் விளக்கும் அணைகிறது. ஸீன் விழுகிறது.]

## 4

ஆறு மாதங்களுக்குப்பின் காந்தாமணியின் வீடு, காந்தா யாரையோ எதிர் பார்த்துப் படபடக்கிறாள். கடைசியில் அவள் எதிர்பார்த்த சந்திரஹாஸன் வருகிறான்.

சந் : [தன்னை மிகவும் சிரமத்துடன் அடக்கிக்கொண்டு] ஹலோ My dear! இன்னும் படுத்துக்கொள்ளப் போகவில்லை? மணி பத்தாய்விட்டது. ஒன்பது மணிக்கே தூங்கிவிடுவாயே ?

காந்தா : என் இயற்கைதான் ரொம்ப மாறி விட்டதே !

சந் : என்ன புதிர் போடுகிறாய் ? நீ என்ன மாறிவிட்டாய் ?

காந்தா : இதைக் கேட்டா தெரிந்துகொள்ள வேண்டும் ! அன்று இருந்த 'காந்தா டிபராகவா இன்று இருக்கிறேன் ! அன்று அன்பமுதம் பொழிந்த என் சந்திர வதனம் இன்றுதான் அக்னி வர்ஷம் செய்யும் சூரியனாகிவிட்டதே ! இன்பத்தைப் பத்தி வீசும் வாசனை போல் பரப்பித் தெளித்த என் சகவாசம்தான் இன்று ஒளியிழந்துவிட்டதே ! இளமையின் வசந்தத்திலே பூம்பொழிலில் சந்திரகாந்தக் கல்லாலான மேடையில் படுத்துக் கண்ட கற்பனையிலிருந்த நான்தான் இன்று......

சந் : இது என்ன காந்தா ! இன்று இப்படி வீணில்......

காந்தா : வேண்டாம் மிஸ்டர். நீரே உம்மை ஏன் ஏமாற்றிக் கொள்கிறீர். ஒரு தடவை ஏமாற்றிக்கொண்டது போதாதோ ?

சந் : அப்படியானால் உன்னை என்ன ஏமாற்றிவிட்டேன் நான் ?

காந்தா : குற்றம் உம்முடையதில்லை. கடவுள் உம்மை அப்படிப் பெண்களின் இதயத்தைச் சாவிவிட்டு முடுக்கிக் கஷ்டப் படாமலே திறக்கும் மந்திரத்தைத் தந்திருக்கிறான்......

சந் : சரி காந்தா. நீயே இவ்விதம் பேச ஆரம்பித்துவிட்டாய். நான் இனி மறைப்பதால் பயனில்லை. நானே என் பிசகை உணர்ந்துகொண்டு விட்டேன். நல்ல வேளையாக உன் தங்கை என்னைச் சினிமா அழைத்துப் போனது நல்லதாயிற்று......

காந் : என் தங்கையா ? அவள் ஊருக்குப் போகவில்லை ? அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று தெரிந்துமா......உம்முடன் சுற்றிக் கொண்டிருந்தாள் ?

சந் : சுற்றவில்லை, ஏதோ ஒரு மாதிரியாக இருக்கிறதென்றாள். எனக்கும்......!

காந் : மனம் ஒருமாதிரியாகி இருந்தது ! பாவம் ! அவள் என் தங்கைதானே !

சந் : காந்தா, நீ வீணில் கலங்கவேண்டாம். என் மனைவி என் கண்ணைத் திறந்துவிட்டாள்.

காந் : கோமதியா ? இது என்ன புதிர்மேல் புதிர்......?

சந் : புதிர் ஒன்றும் இல்லை. அவள் போகும் போதே வரப்போகும் மூன்று தீங்குகளைப் பற்றிச் சொல்லிப் போனாள். அம்மூன்றில் உன் வெற்றியும் என் வீழ்ச்சியும் ஒருவாறு நிறைவேறிவிட்டன. அந்த மூன்றாவது நடப்பதற்குமுன் அவளை அடைந்து விட்டேனானால் கெட்ட இரண்டும்கூடச் சீர்திருந்திவிடலாம்,

காந் : இந்த ஞானேதயத்துக்குக் காரணம்?

சந் : அதற்கும் அவள்தான். இன்று நாங்கள் பார்த்த சினிமாக்கதை அவள் எழுதியது. அதிலே நம்முடைய வாழ்க்கையைத்தான் சித்திரித்திருக்கிருள் ... நீ போய்ப் பார் தெரியும்... உனக்கும் வாழ்க்கையைத் திருத்திக்கொள்ள...

காந் : வழி கிடைக்கலாம். அதுதானே... சென்று பார்க்கிறேன். இதோ இரண்டாம் ஷோவுக்கே போகிறேன்...நீங்கள் சென்ருல் அவள் ஏற்றுக்கொள்வாளா? அதை யோசித்திர்களா?

சந் : அசடே. அதைப்பற்றிச் சந்தேகப்பட வேண்டாம், நீ. இதோ பானுமதியுடன் ஒரு வேளை சினிமாவுக்குப் போய் வந்ததற்கே......

காந் : நான் இவ்விதம் பேசுகிறேன். அவளோ உங்களை என்னிடம் ஒப்புவித்து விட்டு வாயைக்கூடத் திறக்கவில்லை. அதுதானே சொல்கிறீர். ஆக என்னை அவமானப் படுத்தவும் துணிந்து விட்டீர்! ஆனல் ஒன்று, வழுக்கிவிழும் கணவனை ஆற்றிலே விட்டு விட்டு, வீடு நோக்கி ஓடினளே ஒரு கொண்ட மனைவி அவனைப் புகழ......

சந் : ஏன் வீண் பேச்சு. என் மனைவியைப் பற்றி உன்னிடம் பேச எனக்கு உரிமையில்லை; உனக்கும் அவசியமில்லை. ஆனலும் உனக்குச் சிரமம் கொடுத்துவிட்டேன், தெரிந்தோ, தெரியாமலோ, மன்னித்துவிடு. உன் தங்கைக்கும் என் நன்றியைத் தெரிவி. நான் வருகிறேன்,

போகிருன் —

காந்தா கண்களில் நீர் மல்க, உடம்பு தள்ளாடப் பார்த்துக்கொண்டே நிற்கிருள்.

## 5

[**கோ**மதியின் தந்தை வீடு. அவள் மட்டும் தனியே இருக்கிருள் வழக்கம்போல் படித்துக்கொண்டு.]

வேலைக்காரன் : [ஓடி வந்து] அம்மணி, வாசலில் யாரோ ஐயா வந்திருக்கிருர். உள்ளே வரவேண்டும் என்று பிடிவாதம் செய்கிருர்.

கோமதி : யாரது? ஏதாவது விலாசம் சொன்ஞரா? கார்டு ஏதாவது கொடுத்தாரா?

வேலை : இல்லிங்களே. அவர் என்னங்க காட்டுமிராண்டித்தனமா ...

கோமதி : [சிரித்துக்கொண்டே] ஆள் எப்படி இருக்கிருர்? சிவப்பாக, உயரமாக இருக்கிருரா?

வேலை : ஆமாமுங்க அப்படித்தானுங்க ...

கோமதி : சரி வரச்சொல் ... [வேலைக்காரன் போகிருன்] [தனக்குள்] அவர்தான். நானே செல்கிறேன் ... [இரண்டடி எடுத்து வைக்கிருள். அதற்குள் சந்திரஹாஸனே வந்துவிடுகிருன்] ஓகோ நீங்கள்தானு? லீவு எடுத்துக்கொண்டு வந்தீர்களா? வாருங்கள்,

சந் : கோமதி! முதலில் என்னை மன்னித்தேன் என்று சொல்? எனக்கு ஒரு வரம் தா...

கோமதி : ஓ, திடீர் பக்தரே! சிக்கிரம் கேளும். எனக்கு என் கணவரிடம் போக வேண்டும். எவ்வளவு நேரம் பக்தருக்கு வரம் கொடுத்துக்கொண்டு நிற்பது ... ?

சந் : உன் குறும்பு அப்படியேதான் இருக்கிறது. அது இருக்கட்டும் நீ சொன்ன முதல் இரண்டும் ஒருவாறு நிறைவேறிவிட்டன. மூன்ருவது நடக்காது என்று தைரியம் சொல்லு.

கோமதி : யாராவது தானே தன் அழிவைத் தேடிக்கொள்வார்களா? தவிர ...

சந் : உண்மையாகவே நான் உன்னை மீண்டும் அடைந்துவிட்டேனு?

இதனிடையே கோமியின் தந்தை—சுமார் 60 வயதிருக்கும்—வாக்கிங் ஸ்டிக்குடன் வெளியே 'வாக்கிங் போகும் காலத்தில் தென்படுகிருர்.

கோ-தந் : யாராது மாப்பிள்ளையா? இது என்ன இப்படி சொல்லாமல் கொள்ளாமல்...

சந் : ஒன்றும் சொல்லாமல் நமஸ்கரிக்கிருன்.

கோ-தந் : எழுந்திரப்பா! என்ன? தீஸிஸ் எழுதியாய்விட்டதா?

சந்திரஹாஸன் விழிக்கிருன். ஏதாவது உளற ஆரம்பிப்பதற்குள்,

கோ : அனேகமாகத் தயார் செய்துவிட்டாராம். இனிப் பார்த்து ஒழுங்காகத் எழுத வேண்டியதுதான் பாக்கி.

கோ-தந் : அப்படியானல் அந்தக் காரியத்துக்கு நீ மிகவும் உதவியாயிருக்கலாமே......

கோ : அதற்குத்தான் அழைக்க வந்திருக்கிருர்.........

கோ-தந் : சரிதான், உடனே கிளம்பிவிட வேண்டாம், மாப்பிள்ளை! நான் வாக்கிங்

போய்விட்டு வந்துவிடுகிறேன், என்ன? இரண்டுநாள் கழித்துப் போகலாம்...என்ன? [அவர் போகிருர்]

**சந் :** கோமதி பக்கம் திரும்பி, நன்றி கண்களில் பொங்க—இது என்ன புதிதாகத் தீஸிஸ் கதை கட்டிவிட்டாய்!

**கோம :** புதிதல்ல. நீங்கள் சொல்லியது தான்.

**சந் :** நான் சொன்னதா? அதுதான் பொய் என்று தெரியுமே உனக்கு?

**கோம ;** நீங்கள் சொன்ன பொய்யும் பயன் பட்டது. உங்கள் **பெருமை** என் **பெண்மை** அப்பாவின் **மனம்** இந்த மூன்றையும் காப் பாற்ற உங்கள் பொய்க்கு மெய்யுரு கிடைத்தது.

**சந் :** சரி. என் வீழ்ச்சியை ஏற்படாமல் தடுக்கவேண்டியது இனி உன் பொறுப்பு.

**கோம :** அந்த வேலே கிடைத்தால் அதற்குத் தக்க அதிகாரமும் வேண்டும்.

**சந் :** என்ன வேண்டும், சொல்...

**கோம :** நான் சொன்னபடி எல்லாம் கேட்கவேண்டும். இரண்டாவது பெண்களிடத்தில் இவ்வளவு ஆசை வைக்கக்கூடாது.

**சந் :** அது உன்னுடைய குற்றம்...!

**கோம :** உண்மை. அதுமட்டுமா குற்றம்... மற்ரெரு குற்றமும் செய்தேன்.

**சந் :** என்ன செய்தாய்?

**கோம :** கர்ம க்ஷேத்திரத்தை விட்டுப் பயந்து ஓடியது மற்ரெரு குற்றமில்லேயா?

**சந் :** உன் குற்றமே வெற்றிபெற்றது என்ருல்......

**கோம :** இல்லே. உங்கள் பெருந்தன்மை தான் என் குற்றத்தையும் காப்பாற்றிற்று.

**சந் :** கோமதி!

**கோம :** என்ன...!

**சந் :** உலகம் பல பிரளயங்கள் வந்தும் மீண்டும் மீண்டும் புத்தழகுடன் ஒளிர்வதற்குக் காரணம் என்ன தெரியுமா?

**கோம :** என்ன காரணம்?

**சந் :** பெண்மையைச் சூழ்ந்து நிற்கும் அழிவு கரைக்கமுடியாத காரணத்தால்தான்...!

**கோம** [அன்பு பொங்கும் பார்வையால் அவனேக் கட்டுப்படுத்திக்கொண்டே] சரிதான்!

இருவரிடையேயும் உள்ள இடம் குறைகிறது. ஸீனும் விழுகிறது!



## மாதவிடாய்:

சகோதரிகளே! எமது "சும்பகி—ரேசனி" என்ற மருந்தை உபயோகித்தால், மாத வெளியீட்டை ஒழுங்குபடுத்துவதுடன் எவ்வளவு நாட்பட்ட தொந்தரவாக இருப்பினும் நிவர்த்திசெய்யும். தீங்கற்றது. 100-க்கு 100 பலன் நிச்சயம்.

விலை ரூ. 6/- தபாற்செலவு ரூ. 0-14-0.

## கர்ப்பத்தடை:

"**தம்பதி—சகா**" நீங்கள் விரும்புகிறபடி கர்ப்பத்தடைக்கு உதவுகிறது. தீமை கிடையாது. 30 வருடங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்படுகிறது. பலர் நன்மை அடைந்திருக்கின்றனர்.

பூரண கர்ப்பத் தடைக்கு. ரூ. 6-0-0

6 மாத காலத் தடைக்கு ரூ. 3-0-0

(தபாற் செலவு ரூ. 0-14-0)

## வீரியம், யௌவனம்:

உடல், மனம் இரண்டிற்கும் "**மதன விலாஸ ரஸாயனம்**" சிறந்த டானிக். மயக்கம், சோர்வு, நரம்புத் தளர்ச்சி, மறதி, அஜீரணம் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து, சோர்வடைந்த மாணவர்கள், மூளை வேலையில் ஈடுபடும் கவிஞர்கள், மண வாழ்க்கை தொடங்கிய காதலர்கள் இவர்களுக்கு இந்த டானிக் ஓர் வரப் பிரஸாதம்.

விலை ரூ. 3-0-0

## விரைவாதம்

குடல் இறக்கம், யானைக்கால், இல் வாதம், வீக்கம் வலியுடன் கூடியதாயினும், எத்தனை நாட்பட்டதாயினும் ஒரு வாரத்தில் நிச்சயம் குணமளிக்கும் எமது ஆயுர்வேத முறைப்படி தயார் செய்த "**ஸம்ஸந்தி**". ஓர் முறை உபயோகித்துப் பாருங்கள்!

விலை ரூ. 4-8-0 தபாற்செலவு ரூ. 0-14-0

KAVIRAJ M· KAVYATIRTHA (C. M.)
**70, Cornwallis Street, CALCUTTA-6.**



## இந்திய மூலதனம்
## இந்திய முயற்சி
## இயந்திர உற்பத்தி

# ★ சங்கர் பிராண்ட் ★
# ★ சூலம் மார்க் ★
# ★ போர்ட்லண்ட் ★
# ★ ஸிமெண்ட் ★

## திடத்திலும்
## தரத்திலும்
## தேர்ந்தது

## இந்தியா ஸிமெண்ட்ஸ்
லிமிடெட்

தொழிற்சாலை:
**சங்கர் நகர்**
(திருநெல்வேலி ஜில்லா)

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
**11-12 ஸெகண்ட் லைன் பீச்,**
**மதராஸ்—1**

தென்னிந்தியா முழுவதும்
**இந்தியா ஸிமெண்ட்ஸ்**
ஸ்டாக்கிஸ்டுகள் உள்ளனர்

# தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

**கல்கத்தா**

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | .... | ரூ. 8,00,00,000 |
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | .... | ரூ. 4,00,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | .... | ரூ. 2,00,00,000 |
| ரிஸர்வ் நிதி | .... | ரூ. 52,50,000 |

*டைரக்டர்கள்*

**G. D. பிர்லா—சேர்மன்**

*ஈஸ்வரி ப்ரஸாத் கோயென்கா*
*(வைஸ்-சேர்மன்)*

*ரமண்லால் ஜி. ஸரையா*
*(வைஸ்-சேர்மன்)*

ஆநந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோவிந்த்லால் பங்கூர்
மதன்மோகன் R. ரூயியா
மஹாதேவ் L. தஹானுகார்

மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபூரியா
நவீன் சந்த்ர மபட்லால்
P. D. ஹிமத்சிங்கா
R. L. நோபனி

*ஜெனரல் மானேஜர்*

**B. T. தாகூர்**

**இந்தியாவிலும் பர்மாவிலும் உள்ள முக்கிய நகரங்களில் 70 பிராஞ்சுகளுக்கு மேலும், உலகெங்கும் சேவை செய்யத் திறமை மிக்க ஏஜன்ஸி வசதிகளும் உள்ளன.**



# பரிசு ரூ. 1000

(ஒரு நூதன கண்டு பிடிப்பு)

## மாய மோதிரம்

இந்த மோதிரம் அபூர்வ மந்திர சக்தியுடன் தயாரிக்கப்பட்டது. இது ஆச்சரியகரமான வேலைகளைச் செய்கிறது. எவரேனும் இம்மோதிரத்தை அணிந்துகொண்டால் எவ்வளவு கஷ்டமான காரியமாக இருந்தாலும் அல்லது தடுக்க முடியாத விபத்தாகஇருந்தாலும் வெற்றி பெறுவர். அது உங்களை எல்லாவிதமான ஆபத்துகளினின்றும் வியாதிகளிலிருந்தும் காப்பாற்றும். துர்கிரஹங்களின் தொந்தரவு நீங்கும். இம்மோதிரத்தை அணிபவர் தம் காதலரை (அவரானாலும் அவளானாலும் சரி) சுலபமாக வசப்படுத்தலாம். அவரானாலும் அவளானாலும் உங்களுக்குக் கட்டுப்பட்டு, தம் செய்கைக்காகப் பச்சாதாபப்படுவார். நீங்கள் காதல் உத்தியோகத்தில் வெற்றிபெற்று ஏராளமான சம்பத்தையும் அடைவீர்கள். இம்மோதிரம் உங்களுக்கு ஒரு மெய்க்காப்பாளனாக உதவும். இதை ஒரு முறை பரீட்சித்து இதன் ஆச்சரியகரமான பலன்களை முதல்இரவே காணுங்கள். விலை ரூ. *1—15—0* ஸ்பெஷல் ரூ. *3—0—0* மிக்க சக்தி வாய்ந்தது ரூ. *3—15—0*, போஸ்டேஜ் தனி. பலனளிக்காவிடில் விலை திருப்பியளிக்கப்படும்.

Principal,

**SHINING MESMERISM HOUSE (C. K.)**

**Kartarpur (E. P.)**

# காம சாஸ்திரம்

உலகத்தில் மிக்க அத்தியாவசியமான ஆண்—பெண் சேர்க்கையைப் பற்றிய 84 ஆசனங்களை உடைய, ரகசியக் குறிப்புகளுடன் கூடிய மிகவும் உயர்ந்த புத்தகம். 84 ஆசனங்களின் 200 வகை நிற போட்டோ படங்கள், தனித்தும், சேர்ந்தும் பல்வகை முறையில் போகம் துய்ப்பது போன்ற நீங்கள் இதுவரை அறிந்திராத பல ரகசியங்களை யெல்லாம் இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது. கல்யாணமாகாதவர்கள் இப்புத்தகத்திற்கு எழுதற்க. 1 புத்தகம் விலை ரூ. 2–12–0. ரகசிய போட்டோ பலவகை தோற்றத்தில் கிடைக்கும். 25 கார்டுகள் தனித்திருப்பது ரூ. 2—12—0. 50 கார்டுகள் சேர்ந்திருப்பது விலை ரூ. 5—0—0. ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

**M|s. French Photo Supply Company**

**(C. K.) JULLUNDUR CITY**



நீங்கள் உங்கள் பற்களை
இன்று மக்ளீன் செய்தீர்களா?
வருஷக் கணக்காக நான் மக்ளீன்ஸ் உபயோகித்து வருகிறேன். என் பற்கள் அழகாகவும் வெண்மையாகவும் இருக்கின்றன. நான் வேறு எந்த டூத்பேஸ்டும் உபயோகிக்கமாட்டேன்.
வாயைச் சுத்திகரித்து
மூச்சின் நாற்றத்தை
போக்குகிறது
உமிழ்நீர்
கெடுதலைத் தடுத்து
ஈறுகளைப் பாதுகாக்கிறது.
மேலே உள்ள கறைகளை அகற்றி
பற்களுக்கு
வெண்மை
தருகிறது
பளபளப்பாகவும் கவர்ச்சிகரமாகவும் தோன்றும் பற்களை அளிக்கவல்லதும், அத்துடன் அதிகமான சுத்தமும் பாதுகாப்பும் தரத் தக்கதுமான டூத்பேஸ்ட் உங்களுக்கு வேண்டுமானால் மக்ளீன்ஸ் போராக்ஸைட் டூத்பேஸ்டையே உபயோகியுங்கள்.
பிரத்யேகமானதும் பிறர் பின்பற்ற முடியாததுமான தயாரிப்பு இது. வாயில் ஊறும் உமிழ்நீர் மூலம் பல் சொத்தை பிடிப்பதையும் பல்மேல் பாசி படருவதையும் மக்ளீன் தடுத்து உதவுகிறது. பல்லின்மீது விகாரமான கறை படிந்திருந்தால் அதை அகற்றி விடும். பற்களை வெண்மையாக்கி; பளபளக்கச் செய்து சுவாசத்தை சுகந்தமுடையதாக்குகிறது.
இன்றே மக்ளீன்ஸ் வாங்குங்கள்!
MACLEANS
PEROXIDE
TOOTH PASTE
MTX-1-TM



## ரொக்கப்பரிசு ரூ. 1000

(அபூர்வ சக்தியுடையது)

# மாய மோதிரம்

இந்த மோதிரம் மாயா ஜாலத்தாலும் மெஸ்மரிஸ சக்தியாலும் தயாரிக்கப்பட்டது. யாராவதொருவர் இம்மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்; உங்கள் காரியங்களில் வெற்றியோ, அல்லது உங்களிடம் பணிவோ ஏற்படச் செய்யும். உங்களை எல்லாவித ஆபத்துக்களிலிருந்தும் இது காப்பாற்றும். துர்த்தேவதைகள் உங்களிடம் அணுகா. இந்த மாய மோதிரத்தை அணிந்து கொண்டவர்களிடம் ஆண், பெண் அடங்கி நடப்பார்கள், இவர் பெயரைக்கேட்டாலே நடுங்குவர். காணுமற்போனவர்களைக் கண்டறியலாம். நீங்கள் காதலில் வெற்றியும், கோர்ட்டு வழக்குகளிலும் உத்தியோக உயர்விலும், அதிகப் பணம் சம்பாதிப்பதிலும் வெற்றியடைவீர்கள். சுருங்கச்சொன்னால் இம்மோதிரம் ஒரு பாதுகாப்பாளரைப் போன்றது. ஒருமுறை பரீக்ஷியுங்கள். முதல் இரவிலேயே பலன் காண்பீர்கள். இதன் விலை ரூ. 1—15—0. ஸ்பெஷல் ரூ. 3—0—0. ஸ்பெஷல் அதிக சக்திவாய்ந்தது ரூ. 3—15—0. தபாற்செலவு தனி. பலனில்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

**Principal, Bengal Mesmerism House (C. K.)**

**JULLUNDUR CITY. Pb.**



## பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல, டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானும் உங்களைப்போல் ஓர் குடித்தனப் பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப் பின் துர்ப்பாக்கியத்தினால் லிகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் ஏற்பட்டு விட்டது. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொற்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளி வருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக் கொண்டு வந்தது. முகம் வெளுத்து விட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறுகிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டு விட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒரு நாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சை போட வெளியில் வந்ததும் அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சு போன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்து விட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்தும் வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2—14—0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு] தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையால் மருந்து தயாரிக்கப்பட்டு வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத்தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதற்க.

**Shrimati. BIBI CHARAN PIARI**

**Sant Nagar (C. K.)** **Jullundur City.**



Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangas[illegible]
at the Cauvery Colour Press, Besant Road, Kumbakonam.


SUCCESSFUL BUSINESS
CREATIVE DESIGNS
NEAT BLOCKS
FINE PRINTING
From a
Visiting Card
to a
Souvenir
RING 4037 OR WRITE TO:
COMMERCIAL PRINTING
& PUBLISHING HOUSE.,
(PRINTERS & BLOCKMAKERS)
46, ARMENIAN ST... MADRAS




The Cauveri Colour Press, Kumbakonam.